# காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை




பொங்கல் மலர் 1966

விலை
1-50
ரூ

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

அன்றும், இன்றும், என்றும்
நீங்கள் விரும்பி வாங்கும்

சங்கு மார்க்

இதுதான்

கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள், சோளிகள் மற்றும் புடவைகள்



முகம்மது அபுபக்கர் & கம்பெனி
95, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1
கிளைகள் : மதுரை — கல்கத்தா — கொல்லம்
பம்பாய்

Criterion-MAB-684

சினிமா தியேட்டர், டூரிங் டாகீஸ் உரிமையாளர்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும்

## எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்து!

### எமது அடுத்து வரும் படங்கள்




மக்கள் திலகம் எம். ஜி. ஆர். சரோஜாதேவி,

ராஜசுலோசனா, அசோகன், நாகேஷ், மனோகர் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்

## புரொடக்ஷன் நெ. 14.

(ஈஸ்ட்மென் கலர்)

கதை-வசனம்: சக்தி கிருஷ்ணசாமி — டைரக்ஷன்: ராமண்ணா

ரவிசந்தர், ஜெயலலிதா, நாகேஷ், ரங்காராவ்,
ஜி. சகுந்தலா நடித்த

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்

## "குமரிப் பெண்"

டைரக்ஷன்:

ராமண்ணா



வட, தென்னாற்காடு, (பாண்டிச்சேரி) செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லாக்களுக்கு:

**அம்பிகா பிக்சர்ஸ், போஸ்டுபாக்ஸ் நெ. 21, வேலூர். (வ.ஆ.)**

PHONE: 775

Insure all your

Vehicles &
Motor Car
Bus
Lorries
Bullack Carts
Pedal Cycles
Cycle Rickshows
Etc.,

For North Arcot at:

# Howrah Insurance Co., Ltd.

Branch office:

I/I-A, G. P. H. Road,
VELLORE (N. A.)

ஜெமினி ஸ்டுடியோஸ்
அளிக்கும்



# மோட்டார் சுந்தரம் பிள்ளை

கதையமைப்பிலே ஒரு புதுமை!
கருத்திலே ஒரு இனிமை!

காலமெல்லாம் கருத்தில் நிலைத்து நிற்கும்
இனியதொரு குடும்பச் சித்திரம்

சிவாஜி கணேசன் · சௌகார் ஜானகி · ரவிச்சந்திரன் · ஜெயலலிதா
சிவகுமார் · காஞ்சனா · சூர்யகுமார் · ஆஷா · நாகேஷ் · குமாரி சரஸ்வதி
மற்றும் நாகையா · சுந்தரராஜன் · ராமராவ் · பண்டரிபாய் · பேபி பத்மினி

எ தி ர் பா ரு ங் க ள்

Telegram: "ARENCOY" Phone: 25065

Resi: 43161

# R. NARAYAN & CO.,

**Dealers in Electrical Mechinaries and Agricultural Pumpsets.**

Agents for M/s. SUBBAIAH FOUNDRY,

COIMBATORE.

★

**21, Lingi Chetty Street,**

**MADRAS-1**

★

Branch: **5, Town Hall Road, Madurai.**

Phone: 2339

**Please Consult us for all your requirements of Electric motors of all makers and H. P. Agricultural motor Pumpsets, Domestic motor pumpsets, everything in Electricals & Hardware materials, Lister Engines etc. etc.**

கூட்டுறவு முறையில்
கைதேர்ந்த
நெசவாளர்களைக்கொண்டு
தயாரித்த
காஞ்சிபுரம்
பட்டு சேலைகள்,
பாவாடைகள்
குறைந்த விலையில் கிடைக்குமிடம்

காஞ்சிபுரம்
திருவள்ளுவர்
பட்டு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச்
சங்கம் லிமிடெட் G. 2054

207-B, காந்தி ரோடு,
(தேரடி அருகில்)
காஞ்சிபுரம்.

★

தொலைபேசி எண்: 222

தொலைபேசி எண்: 64382

சுத்தமான மளிகை சாமான்களும்,
பீடி, சிகரெட்டுகளும்,
மொத்தமாகவும்,
சில்லரையாகவும்

கிடைக்குமிடம்

பாண்டியன்
புரோவிஷன் ஸ்டோர்ஸ்
(ஜெனரல் மர்ச்செண்ட்ஸ்)

உரிமையாளர்:

D. பெருமாள்

மாதவரம் நெடுஞ்சாலை,
மூலக்கடை, சென்னை-51.

**NEAT EXECUTION!** **PROMPT DELIVERY!!**



MAIN GATE

**Phone: 51273**

**C/o Phone: 51899**

**Regd. No. 1681**

**SSI/PR/504/093/04**

# GEMINI
# IRON WORKS,

**Manufacturers of:**

**Trusses, Rolling shutters, Iron Main gates, Collapsible gates, Fancy Grills, Water Tanks & Iron furniture Etc.**

*Proprietor:*

## M. ELUMALAI,




COLLAPSIBLE GATE

**No. 8-A, Maniganda Mudali 3rd Lane,**

*Washermanpet,*

*MADRAS-21.*

# ஆர்வீஸ்

## காபி

38. நெல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்.

தந்தி: ஆர்வீஸ் தொலைபேசி எண்: 212

உயர்ந்த ரக

**காப்பிக் கொட்டையும்,**

மணமிக்க

**காப்பித்தூளும்**

மொத்தமாகவும், சில்லரையாகவும்

மலிவாகவும் கிடைக்கும்.

# மலரில் மணப்பவை

## அண்ணா

அளித்திடும்

அகமும் புறமும் (தம்பிக்கு மடல்)
கண்ணாயிரத்தின் உலகம்
உடையார் உள்ளம்
பொங்கல் பரிசு
மொழியும் வாழ்க்கை வழியும்

மற்றும்,

சீரழித்தச் சிரிப்பு!
பூக்குடலை
பொங்கல் வாழ்த்து
செல்வத்தைத் தேடி
கலைஞர் பெயர்களைப் பெற்ற ஊர்கள்
சிறை வாழ்வைத் திருத்திய சேல்விழியாள்
மன்னித்துவிடுங்கள்—மறந்துவிடுங்கள்!
இருட்டில் மறைந்த கீதம்
குதிரை
கள்வன் மகன்
நட்சத்திரம்
ஆமர்ஷீல்டு
மனோரஞ்சிதம்
உழவன் சிரிப்பே உலகின் சிரிப்பு
ஒன்றாக நல்லது
பெரியார் யார்?
அறிவிலே பிறந்த அன்பொளி
அடிமைகள்
ஆள் மாறாட்டம்.

# பூக்குடலை!




## விரட்டுங்கள் இவனை!

ஜெர்மன் பேரரசர் பிரடரிக் வில்லியம், ஒரு நாள் போஸ்டாம் நகரிலிருந்த சிறைகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்.

அப்பொழுது அங்கிருந்த கைதிகள் எல்லாம், "எங்கள் மீது கருணை காட்டுங்கள்; எங்களை விடுதலை செய்யுங்கள்; நாங்கள் நிரபராதிகள்" என்று முறையிட்டுக்கொண்டார்கள்.

ஒரே ஒரு கைதி மட்டும் பேசாமலிருந்தான்.

அரசர், அவனைப்பார்த்து, "நீ நிரபராதி இல்லையா?" என்று கேட்டார்.

"இல்லை; நான் குற்றவாளிதான். நான் செய்த குற்றத்துக்குத்தான் தண்டனையை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன்" என்றான் அந்தக் கைதி!

அரசருக்குக் கோபம் வந்துவிட்டது. "இந்த அயோக்கியனை உடனே துரத்துங்கள்; இவன் இங்கிருந்தால் மற்ற நல்லவர்களையும் கெடுத்துவிடுவான்" என்று உத்திரவிட்டார் சிறை அதிகாரிகளுக்கு!

## கொஞ்சம்தான்!



நீதிபதி ஒரு பெண்ணிடம், "நீ சத்தியம் செய்திருக்கிறாய் என்பதை மறவாமல், உன் வயதைச் சொல்" என்றார்.

"இருபத்தொரு ஆண்டுகளும், சில மாதங்களும்" என்றாள் அந்தப் பெண்.

"எத்தனை மாதங்கள்?" என்றார் நீதிபதி.

"தொண்ணூற்று ஒன்பது!" என்றாள் அவள், புன்னகையோடு!

## தனிக் கணக்கு



மேலை நாட்டிலுள்ள கலையரங்க நிர்வாகியொருவர், ஐரோப்பிய நடிகை ஒருத்திக்கு, 'தன் அரங்கிற்கு வந்து, ஒரு நாடகத்தில் நடிக்க எவ்வளவு தொகை தேவை'யெனக் கேட்டு தந்தியொன்று கொடுத்தார்.

அதற்கு அந்த நடிகை, 1000 டாலர் கேட்டு பதில்தந்திஅனுப்பினாள்.

அரங்க நிர்வாகியிடமிருந்து.."1000 டாலருக்கு ஒப்புக்கொள்கிறேன், களிப்புடன்" என்ற பதில் தந்தி கிடைத்தது.

அதைக்கண்ட நடிகை பதில் தந்தி அனுப்பினாள்: 1000 டாலர் நடிப்பதற்கு மட்டுமே; களிப்புக்குத் தனி."



## அட கடவுளே!

இரண்டாவது உலகப் போர் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, நேச நாட்டுத் தலைவர்களான ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகிய மூவரும் முக்கியமான விஷயம் பற்றிப் பேசுவதற்கு யால்டா நகரில் கூடி இருந்தார்கள்.

"தெரியுமா உங்களுக்கு? இன்றிரவு நான் ஒரு கனவு கண்டேன்; அதில் கடவுளே தோன்றினார். உன்னை, உலகத்தின் பிரதம மந்திரியாக ஆக்குகிறேன்' என்று வாக்களித்தார்"-என்று ரூஸ்வெல்டைப் பார்த்து சொல்லிக்கொண்டே வந்து அமர்ந்தார்.

இதைக் கேட்டதும், "பார்த்தீர்களா, மறந்தே போய்விட்டேன்; இன்றிரவு இதேபோல நானும் ஒரு கனவு கண்டேன்; அதில் கடவுள் தோன்றினார். என்னைப் பார்த்து அவர், 'உன்னை உலக ஜனாதிபதியாக ஆக்குகிறேன்' என்றார்" எனக் கூறினார் ரூஸ்வெல்ட்.

இருவரும்அமைதியாக அமர்ந்துகொண்டிருந்த ஸ்டாலினைப் பார்த்தனர். "நேற்றிரவு உங்கள் இருவருக்கும் அப்படியொரு வாக்குக் கொடுத்ததாகவே எனக்கு நினைவில்லையே!'! என்றார், சாவதானமாக!

# ஷா-அப்பாசுக்கு ஒரு சபாஷ்!



மகிழ்ச்சிகரமான, அல்லது மெச்சத்தக்க ஒரு செய்தியைக் கேள்விப் படும்போது, அச்செய்தியைச் சொன்னவரின் கைகளைப் பிடித்துக் குலுக்கி "சபாஷ்!" என்கிறோம்!

இந்த சபாஷ், எங்கிருந்து எப்படி வந்தது தெரியுமா?

1587-ல் பாரசீகத்தை ஷா-அப்பாஸ் என்ெருரு மன்னன் ஆண்டு வந்தான். அப்போது பாரசீகத்தைத் தாக்கிக் கைப்பற்ற இப்போதைய சீனு-பாகிஸ்தான் போல, துருக்கியும், உஸ்பெக்கும் முயன்றன. ஆனால், இக்கொடியவர்களை எதிர்த்து முறியடித்து வெற்றி வாகை சூடினுன் ஷா-அப்பாஸ்!

மீண்டும், 1607-ல் ஷா-அப்பாஸ் இந்தியாமீது படையெடுத்தான். அப்போது இங்கே ஆண்டுகொண்டிருந்த ஜஹாங்கீர், ஷா-அப்பாஸை வெற்றி கண்டார்.

தோற்ற ஷா-அப்பாஸ், தன் தோல்வியை மறைக்கப் புதிய தந்திரம் ஒன்றைக் கையாண்டான். ஜஹாங்கீருடன் நட்புறவு காட்டுவதாக ஓலையொன்றை அனுப்பி, தனக்குத் தெரியாமல் படையெடுப்பு நடந்துவிட்டதாகவும், தன் வீரர்கள் ஜஹாங்கீர் மீது படையெடுத்ததை தான் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், இஸ்லாமியர்களாகிய நாமிருவரும் ஒற்றுமையாக இருக்கவே விரும்புவதாகவும் அறிவித்தான்!

இதைக் கண்ட ஜஹாங்கீர், ஷா-அப்பாஸின் புத்திகூர்மையை மெச்சினுர். தோல்வி, தன்னைத் தழுவி இழிவுண்டாக்கக் கூடாது என்பதற்காக ஷா-அப்பாஸ் கையாண்ட முறையைப் பாராட்டினுர்.

இதுமுதல், மெச்சத்தக்க செயல்களை யார் செய்தாலும் ஷா-அப்பாஸ்....ஷ--பாஸ்...சபாஷ்! என்று பாராட்டும் வழக்கம், பழக்கமாகி விட்டது!



# அதுதான் வழி!

விமானப் படைப் பிரிவில், புதிதாகச் சேர்ந்த ஒருவர், பயிற்சியின்போது விமானத்தைக் கீழே இறக்குகையில் அதன் ஒரு 'இறக்கை' சேதமாகிவிட்டது.

அந்த விபத்தைப் பற்றி, ஒரு அதிகாரி விசாரணை நடத்தினுர். துருவித் துருவிப் பல கேள்விகளைக் கேட்டுவிட்டுக் கடைசியாக "இந்த விபத்தை எப்படித் தடுக்கமுடியும் என்று நினைக்கிறீர்கள்?"--என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பயிற்சியாளர் கீழ்க்கண்டபடி பதிலிறுத்தார்:

"நான் விமானத்தை ஓட்டாமலிருந்திருந்தால், விபத்தைத் தடுத்திருக்கலாம்."




# பரிமாற்றம்!

ஒரு வீட்டின் முன்புறம் "பழைய (1918) ரூபாய்க்கு ஐந்து ரூபாய் தரப்படும்" என்று ஒரு விளம்பரம் மாட்டப்பட்டிருந்தது.

அதைக் கண்ட ஒருவர், வேகமாகத் தன் வீட்டுக்கு ஓடி 1918-ஆம் வருடத்து ரூபாய் ஒன்றைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து, அந்த வீட்டுக்குள் நுழைந்தார் மலர்ந்த முகத்தோடு.

சில விஞடிகளில் கூம்பிய முகத்தோடு திரும்பி வந்த அவரை அவர் நண்பர் ஒருவர் என்ன, ஐந்து ரூபாய் கிடைத்ததா? எனக் கேட்டார்.

தாழ்ந்த குரலில் அவர் "இவன் ஒரு பேராசைக்காரன் ஐயா! ஆயிரத்து தொளாயிரத்து பதினெட்டு ரூபாய்கள் நாம் கொடுத்தால், அவன் ஐந்து ரூபாய் கொடுப்பானும்!"-என்ருர் வருத்தத்தோடு!

# பொங்கல் வாழ்த்து!

(கவிஞர் குடியரசு)

★

வடிகின்ற தேனுறிஞ்ச பறக்கின்ற வண்டு வந்து
படிகின்ற பாட்டினிலே பொங்கல் வாழ்த்து!
செடிநின்று வண்ணத்தைச் சொரிகின்ற பூக்கோடிச்
சிரிக்கின்ற சிரிப்பெல்லாம் பொங்கல் வாழ்த்து!

மடிநின்று வழிகின்ற படிகோடி அளவான
பசும்பாலின் முகமெல்லாம் பொங்கல் வாழ்த்து!
முடிநின்று தவழ்கின்ற முகிலோடி விளையாடும்
அடிவானப் பிழம்பெல்லாம் பொங்கல் வாழ்த்து!

கொதிக்கின்ற பகல்வேளைக் குளிர்கின்ற நிலைமாறி
கடக்கின்ற பொழுதெல்லாம் பொங்கல் வாழ்த்து!
நதியோரம் தலைசீவி கடலோரம் விளையாடி
நடமாடும் சிறுகாலில் பொங்கல் வாழ்த்து!

கதிர்மீது கருவாகி கடல்முத்தின் உருவாகி
குறளான பனியெல்லாம் பொங்கல் வாழ்த்து!
மதியாலே நிறமாகி புதிதானப் பொலிவெய்தி
வளைவான வானெல்லாம் பொங்கல் வாழ்த்து!

மணலோரம் புரண்டோடும் புனலாடி குடந்தூக்கி
மயில்மாதர் விழியெல்லாம் பொங்கல் வாழ்த்து!
வணங்காத குழலூதி வருகின்ற குயில்நெஞ்சை
வளைப்போனின் திறனுய்வில் பொங்கல் வாழ்த்து!

கிணற்றோரப் படிக்கட்டில் கழிகன்னல் கடிக்கின்ற
சிறுவர்கள் கூட்டத்தில் பொங்கல் வாழ்த்து!
தணல்போன்ற உழைப்புக்கு புனல்போன்ற பயன்வந்து
தழைக்கின்ற இடமெல்லாம் பொங்கல் வாழ்த்தே!

காஞ்சிபுரம்
14—1—66

# அகமும் புறமும்

நள்ளிரவு நேரந்தன்னில், உள அமைதி கெடுத்திடும் நோக்குடனே என்றெவரும் கேட்கும் வண்ணம், மேகக்கூட்டம், கருத்துப் பெருத்து ஒன்றோடொன்று போரிட்டு குருதியினைக் கொட்டுதல்போல மழையைப் பொழிந்திட, கருங்காற்று வீசி தருக்களைச் சாய்த்தது எவரையும் வெளியே தலைகாட்டாதிருந்திடச் செய்திட, ஓயுமோ இன்றேல் ஊர் அழியும் வரையில் பெய்ந்தே தீருமோ என்று பெரியோர் கவலை கொள, வேண்டும்போது எங்கோ சென்று ஒளிந்துகொண்டு வேண்டா வேளையில் வந்து எமை அலைக்கழிப்பதனையே ஓர் விளையாட்டு ஆக்கிக்கொண்டதோ விண்ணுலவும் மேகக்கூட்டம் என்று உழவர் உளம் நொந்து பேசிட, பெருமழை! பெருமழை! எதை நீவிர் தடுக்கவல்லீரெனினும் இதனைத் தடுத்திட இயலாது உம்மால்! முடியுமெனில் முயன்று பாரீர்!! என்று மாந்தரை அறை கூவிடும் முரசொலி போன்ற இடியோசையும், வருவாரின் தலைதனைக் கொய்திடும் வாள் காண்பீர் எனறதனை வீசுதல்போல் மின்னல்வெட்டும் மிகுந்திருக்கும் வேளை! வயலுக்கும் வாவிக்கும், ஆறுக்கும் கரைக்கும், ஊருக்கும் ஏரிக்கும் வித்தியாசம் இல்லை என்றெண்ணத்தக்க விதமாக எங்கும் வெள்ளக்காடாகிக் கிடந்திடும் நிலைமை! படல்கொண்டு பக்குவமாப் பாதுகாத்துக்கொண்டதனால் அணையாமல் சிறு விளக்கொன்று ஒளியினைச் சிந்திடும் ஓர் இல்லம். ஆங்கு முற்றத்தில் அகமும் முகமும் கவலை தோய்ந்திட குனிந்த தலையுடன் குமுறிடும் ஆடவன், எதையோ எண்ணி எங்கோ பார்த்து, ஏதோ கூறி எதையோ விரட்டிட துணைதனைத் தேடி இங்கும் அங்கும் உலவுகின்றான் என்னடா! மகனே! ஏதுக்கித்தனை வேதனை கொள்கிறாய்! எல்லாம் நல்லபடியாய்த்தானே நடந்திடுமப்பா! கலக்கம் விட்டொழி! கவலையை விரட்டு! என்றெல்லாம் கூறிட எண்ணிடும்முதியவர் ஏனோ முயன்று பார்க்கிறார் இயலவேயில்லை! அன்று நானும் இவன போல்தானே நெஞ்சில் நெருப்புடன் நினறேன், உழன்றேன்! இனறு நான் எப்படி இவனைப் பார்த்து, ஏனடா மகனே! இத்தனைத் திகிலென எங்ஙனம் உரைத்திடுவேன், எவ்விதம அவன் கவலை துடைத்திடுவேன், இயலாது என்றால் என்றெண்ணி பேச்சுக்காக எனப்பிறந்த ஓசையினைப் பெருமூச்சு தாக்கி இருந்தார் ஓர் பக்கம். உள்ளேயோ, ஓ! அப்பா! அம்மம்மா! உயிர் போனால் போதும் இனித்தாளேன் வேதனையை! ஆயிரம்தேள எந்தன் அடிவயிற்றிலே தங்கி, எல்லாம் ஒனறாகிக் கொட்டினால் நான என் செய்வேன்! பல்லைக்கடித்துக்கொள் பருவதம்! என்று பாட்டி சொல்கின்றாள், பல்லுடைப்பேன் என்று கூடப்பதறி நான் கூறிவிட்டேன், பல்போன பருவத்தாள் என்பதனை மறந்து. எல்லாம் இருண்டு கிடக்கிறதே! ஊரிலுள்ள நெருப்பெல்லாம் ஒன்றாக என் வயிற்றில்கொண்டு வந்து கொட்டினரோ கொடியோர்!—என்று பல எண்ணி, அத்தனையையும் சேர்த்து அம்மம்மா! அப்பப்பா! அய்யய்யோ! என்ற சொற்களாக்கி, அலறுகிறாள். 'அம்மா' ஆகின்றாள்! 'அவன்' அவளை அவ்வாறாக்கிவிட்டு, அவதிப்படுகின்றான், அனைவரையும் பாக்கின்றான். அந்த 'அவதி'யிலே உருவாகி வளர்ந்ததுவே அவனி முழுதும் என்பது அறிவான் அவன், நம்போல; ஆனால் அறிந்ததத்தனையும் பறந்திடுது 'அவள்' எழுப்பும் 'அம்மம்மா! ஒலி கிளம்பி அவன் செவி வீழ்வதாலே. செச்சே! இது என்ன பிழைப்பு! பெண்ணாகப் பிறந்தாலே இதுதானே



'எழுத்து' எனப்பெற்றவர்கள், பேசுகின்றனர், பிஞ்சுகள் புரியாமல், "கத்தாதிருக்க மருந்திலேயோ?" என்கின்றனர். இந்நிலையில், ஓ! ஓ! என்ற பேரொலி வெளிக்கிளம்பி, மறுகணம் விந்தை அமைதிக்கு இடங்கொடுத்து விரண்டிட, உள்ளே இருந்தோர் 'இசை' மெள்ளக் கிளம்பிடுது; உலவியவன் செவியினிலே ஓராயிரம் பண் ஒரே நொடியில்!! ஆண் பிள்ளை! ஆண் பிள்ளை! என் பாரும்; எல்லாம் 'அவன்போலே!'' என்றுஅடையாளம் கூறுவாரும், "தாத்தா வாயினிலே கொட்டுங்கள் கற்கண்டு என்பாரும், 'கற்கண்டா! அவருக்கா!! எனக்கேட்டுச் சிரிப்பாரும் நடமாட ஒரே நொடியில், வேதனை சூழ்ந்த இல்லம் மகிழ்வெய்தித் துள்ளி நிற்கிறது! "எனக்குத் தெரியும் அப்போதே, இன்று இரவுக்குள் குழந்தை பிறந்திடும் என்பது" எனச் செப்புகிறார் ஒருவர்: 'அவன்' அவரைக்கண்டு சிரிக்கின்றான்!-அடடா! நீ இத்தனைக் கோழையாகிவிடுவாய் என்று நான் எண்ணிடவேயில்லை! எத்தனைப் பதறி விட்டாய்! எதை எண்ணிக் கதறினின்றாய்! என்று கேட்கின்றார் முதியவர், தந்தை ஆகிவிட்ட தன்தனயன்தனை நோக்கி. "என்னினும் பெரியோர்கள் இருந்த நிலை கண்டே நான் என்ன ஆகிடுமோ என்றஞ்சி இருந்திட்டேன்; எனக்குத் தெரியாதா, மருத்துவரே கூறினாரே!!" என்றுரைத்தபடி 'அவனும்' இன்னும் அனுமதியை வழங்கிடலாகாதா! இத்தனைக்கும் காரணமாம் என் 'மன்னவனை' நான் காண!!-என்றெண்ணி உலவுகின்றான்- முன்பு உலவியது நெருப்பின் மீது; இப்போதுலாவுவது பூங்காற்றின் மீது! ஏன்? வாழ்வின் பயன கண்டான்! காதற்கனி பெற்றான்! இனபப் பெருக்கதுவும் கண்மூக்கு வாய்பெற்று, காலுதைத்து கை அசைதது, "வந்துள்ளேன்! வாழ்வதற்கு! தந்திடுவேன் வாழ்வு உனக்கு" என்று கூறுகினறான், பெற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் புரியாத பேரின்ப மொழியாலே!

பிள்ளைக் கனியமுதைப் பெற்றிடும் வேளையிலே, மற்ற நிலையத்தனையும் மறைந்திடுதல் போல, எத்தனையோ இன்னலுக்கு ஆளாகியுள்ள இந்த நம் தமிழகத்தில், விந்தையாம் ஓர் மாற்றம் விரைந்திடுதல் காணகின்றோம், பொங்கற் புதுநாள் பூத்திடும் நந்நாளன்று!

களத்தினிலே கடும் போரிட்டு, ஆற்றல் மறவரவர் விரட்டினர் மாற்றாரை எனினும் பகை ஒழிந்தபாடில்லை, புகை நின்று போகவில்லை, எப்போது எனன விபரீதம் வெடித்திடுமோ என்ற நிலையதுவும் கப்பிக்கொண்டே உளது; காரிருள் போலே! போர் கிளம்பிபொல்லாங்கை விளைவிக்கும் முன்பே, பொன்னுடாய் இந்த நாட்டை ஆக்குதற்கே பொறுப்பேற்றோம் என்று கூறி, எந்நாட்டிலும் இல்லை எமக்கு நிகா நல்லோர்கள் என்று அறைந்து, இறுமாந்து கிடந்திடுவோர், இல்லாமைதனை விரட்ட இயலாத தன்மையினால், இதனை இவன் முடிப்பான் எனறறிந்து அதனை அவன கண்விடல் எனும் நெறி மறந்த காரணத்தால்,

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

❀

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

❀

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

எனும் குறள், ஏட்டிலே இருந்திட மட்டுமன்று, நாட்டிலே நடைமுறையாகிடவே என்பதனை மனதிற் கொள்ளாத போக்கதனால், பொன் விளையும் பூமியென்றும் புவிக்கே ஓர் பூங்காவென்றும் பொய்யாமொழிப்புலவர் புகழ்ந்திட்ட திருநாட்டில் "திரு ஓட்டுத்" திட்டத்தால் தீர்த்திடுவோம் 'போதாமை' என்று கூறிடுவார் விழிநீர் அடக்கிடும் வழி வகுத்துள்ளார். அவர் படிக்க ஆன்றோர்கள் விட்டுச்சென்ற அருமைமிகு நூற்களிலே உள்ளந் தனைத்தொடும் ஓவியம் காண்கின்றார், நாட்டின் கோலம் நனிசிறந்திருந்ததென உணர்கின்றார். இன்றோ இன்னலும் இழிவும் இடரும் படர்ந்துள்ள பாழ்நிலை காண்கின்றார்; இந்நிலை காண்பதற்கோ மூவாருண்டாக முடிதரியா மன்னரென இருந்தீர் ஐயா! என்று கேட்டிடினோ, ஆளவந்தார், அறியாச்சிறுவ! அன்று இருந்தவர் தம் தொகை என்ன, வகை என்ன? இன்றுள்ள மாந்தர் தொகை பெருகியதை அறியாயோ!" என்றுரைத்து, அந்த ஓர் விளக்கத்தில் அவனியின் அறிவத்தனையும் அடக்கித்தந்துள்ளோம் என்றெண்ணிக் களித்துக் கிடக்கின்றார்.

காலம் மாறுவதும், அதற்கேற்ப கோலம் புதிதாகுவதும், புரியாத புதிரன்று; காலம் மாற்றுவது கோலத்தை மட்டுமன்று, முறைபலவும் மாறிடுதல் காண்கின்றோம்; அம்மாற்றம் அனைவருக்கும நல்வாழ்வு கிடைத்திடும் ஓர் வழியை எத்தனையோ நாடுகளில் ஏற்றமுடன் தந்திருக்க இந்த நாட்டினிலே மட்டும் ஏன் இந்த நிலை? என்பதே கேள்வி—இதற்கு யாது பதில்? குற்றம் கூறுதீர்! குறை கிளறிக்காட்டாதீர்! கொற்றம் நடத்திடுவோர் அறிந்துள்ளார் அவ்வளவும்! மெள்ள மெள்ளத்தான் மலர்ந்திடும் நல்வாழ்வு! என்கின்றார். இந்த ஒரு பதிலை ஐயன்மீர்! எத்தனை முறை நீர் கூறிடுவீர்! ஏழை நாஙகள் எத்தனை முறை இதனை ஏற்றிடுவோம்; என்று கூறுகின்றார் சில பேர்கள்; மற்றையோர் அச்சம் கொண்டு குமுறுகின்றார், நலிவாலே.

உண்ண உணவின்றி ஒரு ஆளும் சாகவிடேன்! உறுதி! உறுதி இது! என்று உரைக்கின்றார் — நமை ஆளும் நல்லோர் அல்ல; எங்கோ நெடுந்தொலைவில் இருக்கும் அமெரிக்க அதிபர்! இந்தத் திருநாடு உழவர் தம் பெருநாடு!! இங்கு அனுப்புகிறார் விந்தை தொழில் புரியும் நாட்டினராம் அமெரிக்கர், உணவுப் பொருள் குவியல்!!

காருலாவ, ஏருலாவ, சீருலாவும் நாடு இது என்கின்றார் கவிஞர் இங்கு; இந்நாட்டில் போதும் என்று கூறத்தக்க அளவு விளைவு இல்லை என்கின்றார். ஏனெனிலோ, மெத்த ஆராய்ந்து கண்டறிந்து விட்டோம்! விளைவு மிகுந்திடாத காரணம் விளங்கியது, விளைவு மிகுந்திட வழி கண்டுகொண்டோம் யாம்! என்னை என்பீரேல், கூறிடுவோம், கேட்டிடுவீர், வயலில் வளம்காண உரம் இடுவீர் வகையாக! உரமிடுதல் வயலுக்கு வலிவிடுதல்! வலிவு பெறும் வயல், வழங்கிடும செந்நெற் குவியல்! என்று உரைக்கின்றார் உணவமைச்சர். இத்தனைநாள் ஈதறியாது இடர்ப்பட்டு வந்தோமே! உரமிடுதல் வேண்டுமாம் வயலுக்கு!! உரைக்கின்றார் அமைச்சர் என நாடே வாழ்த்திடும் என்று எண்ணுவரோ அமைச்சர்! இருக்கும்! அந்த நம்பிக்கை மிகுதியுடன் பேசுகிறார்; தெரிகிறது. இதற்கு இவரை வாழ்த்திட வேண்டுமெனின் வள்ளுவரை அடியோடு நாம் மறந்திட இசைதல் வேண்டும்! அப்போதுதான் இவர் கூறிடும் முறை

# இலக்கணம் இழந்த இதுவா வாழ்க்கை?

'கண்டுபிடிப்பு' எனும் நிலைபெற்றிட இயலும். வள்ளுவரோ; ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இயம்பியுள்ளார்

ஏரினும் நன்றால் எரு இடுதல்
நீரினும்நன்று அதன் காப்பு!

என்பதாக! இதனையே இவர் கூறுகின்றார் இன்று எனில் எவர் இதனைப் புத்தறிவு என்றோ புதுமைமுறை என்றோ கொள்ள இயலும். ஒரு குறள்தன்னைப் பெறுகிறோம் பெருநிதி கொடுத்து என்றன்றோ எண்ணத் தோன்றும்.

உழவுநிலை இஃதெனில், தொழில்நிலையோ, ஒரு சிலரின் ஆதிக்கத்தில் சிக்கி 'ஓடப்பர்' மிகுந்துள்ள கேடுமிகு நாடாக்கிவிட்டதின்று.

சட்டம் எதுவெனினும் சாய்த்துவிடும் வல்லமை மிகப் பெற்றோர், சாயாத போக்கினரும் சாய்ந்திடும் விதமான சல்லாபப் பொருள் தந்து அவரைத் தம் 'சரக்காக்கிக்'கொள்வோர்கள், மூதறிஞர் பற்பலரும் மூக்கின்மேல் விரல்வைத்து அடடாவோ! இப்படியோ!! என வியக்கும் விதமாக, பொதுப் பணத்தைத் தமதாக்கிக்கொண்டிடும் மூந்த்ராக்கள், ஆழ்கடலைத் தாண்டியும் எமது அரசு உண்டு அறிந்திடுக! அரசு நடத்திடுவோர் எமது ஆதாயம்தன்னைத் தடுத்திடவோ இயலாது, அவர் அரசின் அடிப்படைக்கே பொற்கட்டி தந்துள்ளோம் எனப்புகலும் டாட்டாக்கள், பிர்லாக்கள்; டால்மியாக்கள்; பஞ்சையாய்ப் பாமரரை ஆக்கிவிட்டுப் பருத்தி ஆலையிலே பெரும் பொருள் ஈட்டிடுவோர், குடைந்தெடுத்து வந்திடுவீர், குவலயம் தழைத்திடவே என்றுரைத்து எளியோரை அமர்த்தி, அவர் குவிக்கும் இரும்பாலும் கரியாலும் பொற்கோட்டை கட்டிடுவோர், பொருளாதாரக் கயிற்றில் அரசைப் பிணைத்திடுவோர், பொல்லாத போக்கினராம் முதலாளிகட்கே எல்லாம் என்றாகிவிட்ட இழிநிலையைக் காண்கின்றோம். சோஷியலிசம் பேசுங்கள், சுவை உண்டு சூடுண்டு, ஆயினும் தனியார் துறை உண்டு மறவாதீர்! என்றுரைத்து, பன்னாள் பாடுபட்டுப் பல பெரியோர் வகுத்தளித்த பாகுபாடு அகற்றும் முறையாம் சமதர்மமதைக் குலைத்திட்ட வன்கணாளர், கொலுவீற்றிருக்கும் நம் குடியாட்சிக் கோமான்கள் தமக்கு 'கொஞ்சும் பொருளாளர்கள்! உழைக்கின்றான், உருக்குலைந்து உழல்கின்றான், ஓராயிரம் நோய்க் கிருமி உடலை அரிக்கிறது,உற்பத்திப்பெருக்கிடுக!உற்பத்திப்பெருக்கிடுக! என்று ஊராள்வோர் உரைக்கின்றார்; உற்பத்திப் பெருகுவதும் உழைப்பாளி நொறுங்குவதும் காண்கின்றோம். இந்நிலையில் உள்ளதந்தோ தொழிலுலகம்!

விந்தைத் திட்டம் இதோ, விரட்டிடுவோம் வறுமைதனை, ஐந்து ஆண்டினிலே அமைத்திடுவோம் நல்வாழ்வு என்று அறிவித்து ஆளவந்தார், மூன்று திட்டங்கள் முடித்துவிட்டார்; மக்கள் முதுகெலும்பை நொறுக்கிவிட்டார். திட்டங்கள் நடாத்திப் பின்திரும்பிப் பார்க்கின்றார், தேனாறு எங்கே! பாலாறுதானெங்கே!! என்று கேட்கின்றார்!! ஓடுவதோ உழைப்பாளி உகுத்திட்ட கண்ணீரும் செந்நீரும்! காணுகின்றார்! கண்டு பின்னர் கூறுகின்றார், பெருகிய செல்வமது சென்ற இடம் தெரியவில்லை? ஏழைக்கு அச்செல்வம் வாராத காரணமும் எள்ளளவும் புரியவில்லை! எங்கோ ஓர் 'மர்மம்' இருக்கிறது. கண்டறிவோம்; எம்மிடம் அவ்வேலைதனை விட்டுவிட்டு, நாட்டினரே! உழைத்திடுவீர்! இந்நாடு பொன்னாடு ஆகிடும் உம் திறத்தாலே!! என்று ஊக்குவிக்கும் பேச்சினை ஊற்றித் தருகின்றார்.

மூன்றடுக்குக்காரனவன் எட்டடுக்கு ஏறிவிட்டான்! மூட்டை சுமப்பவனோ, குப்பை அள்ளுகின்றான். செல்வச் சுமைதாங்கி செருக்குடன் உலவுகிறான், சிவனே! உன் பாதம் சேர்த்துக்கொள்! எனை என்று செபிக்கின்றான் உழைப்பாளி. மாளிகையின் மணம் பரவி மயக்கமளிக்கிறது, பாட்டாளி விடுதியிலே வறுமை பாம்பாய்ப் படமெடுக்கிறது. இந்நிலையில் சமுதாயம், இருந்திடின் என்னாகும் என்பதனை எத்தனையோ வித்தகர்கள் எடுத்துரைத்துச் சென்றுள்ளார். அத்தனைக்கும் மாற்று மருந்துண்டு, பெற்றிடப் பொருள் உண்டு என்று இறுமாந்து கிடக்கின்றார் செல்வரானோர். எமக்கு அவர்! அவர்க்குயாம்!! என்றே உள்ள ஓர் எழுதாத ஒப்பந்தம் இயக்கி வருகிறது ஆட்சி முறைதன்னை. இந்நிலையில், இல்லாமை போவதெங்கே! இடுப்பொடிந்ததும் இருமிக்கிடப்பதும், ஓட்டைச்சட்டியும் ஓலமிடுவதும் குப்பைக்கூளமும் எலும்புருவங்களும், இதோ! ஐந்தாண்டுத் திட்டம் பெற்றெடுத்த அழகரசர்யாம்! என்று அறிவிக்கக் காண்கின்றோம்.

தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்
தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்
நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சிகொள்வர்
நிதிபடைத்த சீமான்கள்; என்றும் எங்கள்
கைதொட்டு வாய்பட்டதுண்டோ பொங்கல்?
கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!
தெய்வங்கள் திருநாட்கள் எங்கட் கில்லை;
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

வெட்கமாகக்கூட இருக்கிறது, வேதனை சூழ் நிலையினிலே விழாக் கொண்டாடுக என்று கூறுகிறோமே என்று கவிஞர் இராஜேந்திரன் கவிதையைப் படித்திடும் போது.

ஆயினும் தமிழர்தம் விழாவாம் பொங்கற் புதுநாள் விழாவினைக்கொண்டாடுதல் முறையே என்று கூறிட முற்படல் ஏனோவென்றால், இவ்விழா உண்டு உருசி கண்டு மயங்கிக்கிடந்திடவுமல்ல. பழய கணக்கினைத் துடைத்திடு, படையலிட்டேன்! பரமனே! புதுக் கணக்குப்போட்டிட முனைகின்றேன் நான்!! என வேண்டிடும் வகைக்கும் அன்று; சமுதாய நிலைதன்னை உணர்ந்திடவும் திருத்திடவும், உழைப்போர்க்கே இவ்வுலகம் எனும் உயர்நெறி வெற்றிபெற நாம் நம்மாலான அளவு பாடுபடுதல் வேண்டும் என்ற உறுதி பெறவும், நல்லெண்ணம் உள்ளமதில் பொங்கிடுதல் வேண்டும் என்பதற்கே. இது விழா மட்டுமன்று விழி திறந்திட ஓர் அழைப்பு என்று கொண்டிடவேண்டும். அக்காரணம் பற்றியே நமது கழகத்தினரும் நற்றமிழை நாடு வாழத்தந்திடும் புலவர் பெருமக்களும், இவ்விழாவினை தமிழ்; தமிழகம், தமிழ்நெறி என்பன

# கொட்டிய செல்வம் குவிந்த இடமெங்கே?

பற்றிய விளக்கம் அளித்திடும் விரிவுரையாற்றுதற்கும், பண்பு மிகுந்திடும் முறைபற்றிய விளக்க உரை தந்திடுவதற்கும் வாய்ப்பாக்கிக்கொள்கின்றனர். கண்ணுக்கு விருந்து இல்லம் தந்திட, கருத்துக்கு விருந்து கற்றோர் அளித்திட, இவ்விழா பாற்பொங்கலாக மட்டுமின்றி தூய எண்ணப் பொங்கலாகவும் இருந்திடக் காண்கின்றோம். இந்த நற்பயன் பெறவே இந்நாளை விழா நாள் என்கின்றோம்; மெய்யான விழாவோ, எல்லார்க்கும் எல்லாம் இனிது உளது என்ற நெறி வெற்றியுடன் அரசோச்சும் நன்னாளே; இன்றல்ல!

இந்நாள், இஞ்சியும் மஞ்சளும், கதலியும் கரும்பும், செந்நெலும் பிறவும் கொஞ்சுமொழி பேசிடும் கோலம் தனைத் தந்திடும் திருநாள்; உழைப்பால் கண்டிடும் 'விளைவு'தனைக் கண்டிடச் செய்திடும் உன்னதமிகு நாள்!! விதைத்தவர் அறுப்பர்! எனுமொழி தன்னில், தொக்கியுள்ளதத்தனையும் அறிந்துகொள்ளும் நல் வாய்ப்பு அளித்திடும் ஓர் அறுவடைத் திருநாள். இங்கு நாம் வாழப்பிறந்தோம், வாழ்வின் வகை நமது உழைப்பின் வகையையும், உழைப்பின் விளைவைப் பயன்படுத்தும் முறையையும், அம்முறையினைச் சீராக வகுத்திடும் அரசின் திறத்தையும், அந்தத் திறத்தினைப் பெற்றுள்ளோரையே அரசோச்சிடச் செய்திடும் உரிமை பெற்ற மக்களின் அறிவாற்றலையும் பொறுத்துளது.

துள்ளிடும் புள்ளிமான்களுக்குத் தேழன் வேங்கை என்று கண்டிடின், காடும் கெடும்! நாட்டினிலேயே இதுபோன்ற முறை ஒன்று நீடிக்கவிட்டிடின் என்னாகும்? இப்போதுள்ள நிலையே என்னாகும் என்பதற்குப் பதில், வேறு எதற்கு?

எனவே, தம்பி! வாழ்வின் விளக்கம் பெற்றிடவும், வாழ்வினைச் செம்மையாக்கிடத்தக்க முறைபற்றி அறிந்திடவும், அந்த முறைக்கேற்ற அரசு அமைத்திடவும், உறுதி தேடிப் பெற்றிடவும் இந்நாள் பயன்படுதல் வேண்டும்.

இவ்வாண்டு அரசாள்வோரே, பொங்கற் புதுநாளை, ஏர்முனைத் திருநாள் என்று கொண்டாட முன்வந்துள்ளனர்!! இது மெத்தவும் பாராட்டி வரவேற்கத்தக்க மாற்றம் ஏர்முனையின் வெற்றியே போர்முனை வெற்றிக்கும் அடிப்படை! ஒரு நாட்டு வாழ்க்கையின் அச்சாணியே உழவு; அதிலும் விரிந்து பரந்துள்ள இந்நாட்டில் இன்றும் நூற்றுக்கு எண்பதின்மர் என்ற அளவுள்ள மக்கள் உழவுத் தொழிலிலேயே ஈடுபட்டவர்கள்; இன்று நேற்றல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக!

நிலத்திடை
நீரிடை
கானிடை
மலையிடை

என்று எங்கெங்கு விளைவுபெற முடியுமோ அத்தனையும் பெற்று வாழ்ந்தவர் முன்னோர். அவர்கள் நேர்த்திமிகு உழவுமுறை வகுத்து நடாத்தி வந்த அந்த நாட்களில், இன்றைய நாகரீக நாடுகள் பல, காடும் மேடும் கொண்டதாக, கண்டதைத் தின்றிடும் விலங்குப் போக்கினரின் உறைவிடமாக இருந்து வந்திருக்கின்றன. இன்று இத்திருநாடு, அமெரிக்க உணவுபெற 'ஆள்' அனுப்பும் நிலைக்கு முன்னேறிவிட்டிருக்கிறது. பெற்றோம பெருவெற்றி! என்கிறார்கள் அரசாள்வோர், ஐயமிட்டிட அயலவர் ஒப்புக்கொண்டது கேட்டு, உளம் பூரித்து.

இந்நாடு தன்னிறைவு பெறவும், இந்நாட்டில் கிடைப்பது இந்நாட்டவரிடையே வஞ்சனையின்றி பகிர்ந்தளிக்கப்படவுமான முறை கண்டிட வேண்டும். அதிலே நாம்பெறும வெற்றியைப் பொறுத்தே எதிர்காலம் வடிவமெடுத்திடும்.

மணமற்ற மலர், சுவையற்ற கனி, வெந்திட மறுத்திடும காய்கறி, இவைகளைக்கொண்டு விழா கொண்டாடிட முடியுமோ? அஃதே போலத்தான், வாழ்வு விழாவாக அமையவேண்டிடின், பொருள்கள் பயன் தருவனவாக இருந்திடல்வேண்டும், பெற்றிடும் பயன் அனைவர்க்கும் என்ற நெறி நிலைத்திடவேண்டும்.

பொங்கற் புதுநாள், புத்தாடை அணிந்த பூவையின் புன்னகையைப் பெற்றுக் களித்திட மட்டுமன்று; இன்றுபோல் இன்பம் என்றும் இருந்திடவும், நமக்குக் கிடைத்ததுபோல் இன்பம் எல்லோருக்கும் கிடைத்திடவும் வழியாது, அதற்கு நாம் எங்ஙனம் பாடுபடவேண்டும் என்பதுபற்றி எண்ணிப் பார்த்திடவும், உறுதி பூண்டிடவும் பயன்படுதல் வேண்டும்.

கண்ணே! கனியமுதே! கற்கண்டே! செந்தேனே! என்று கொஞ்சினால் மட்டும் போதுமா, குழந்தை, மகிழ்ச்சி ஒன்றினாலேயே குமரனாகிட முடியுமா? இயலாதல்லவா? அதுபோலவே, இந்நாடு எந்நாடு, பொன்னாடு புலவர் போற்றிய திருநாடு, வீரம் பொங்கிடும் ஆற்றல் மறவர் நாடு, என்றெல்லாம் புகழ்பாடுவதால் மட்டும், நாட்டினை நன்னிலைக்குக் கொண்டுவந்துவிட முடியுமா? நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவர்திடும் பொறுப்பினை நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும். புதிதாக நாம் எதனையும் ஆக்கக்கூடத் தேவையில்லை; நாட்டிலே உள்ளது என்ன என்று கண்டறிந்து பெற்றாலே போதும்.

எரிமலையும் பாலைநிலமும், சதுப்பும் நிலநடுக்கமும், கடற்கொந்தளிப்பும் பிறவுமான இயற்கையின் கோபம இந்நாட்டின்மீது அதிக அளவு வீசப்படவில்லை. மாறாக இயற்கை இங்கு பசுமையையும் வளத்தையும் பாங்குடன் அளித்திருக்கக் காண்கின்றோம். வாழ்ந்தே அறியாத மக்களாகவும் இந்நாட்டவர் இல்லை; 'மகஞ்சதாரோ, அரப்பா' எனும் நிலைகளை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே பெற்றிருந்த சீர்மிகு வாழ்க்கை நடாத்திய மக்கள் என்று வரலாறு காட்டுகின்றது. இந்நிலையில், இங்கு சிலர் நச்சுக்காற்றினைப் பரவவிடும் போக்கினைமட்டும் நீக்கிடும் ஆற்றல் நமக்கு இருந்திடின், எக்குறையும் இங்கு இல்லை என்று உலகினை நோக்கித் தலைநிமிர்ந்து கூறிட இயலும். இன்று நிலைமை அதுவோ? இல்லையே! வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி!

பொங்கற் புதுநாள்! அதோ உன் அங்கயற்கண்ணி அழகுக்கு அழகளிக்கும் புத்தாடை பூண்டு

# புள்ளி மானுக்கு வேங்கையா தோழன் ?

நடக்கின்ருள்; உன் இதய மேடையில்! உன் செல்வங்கள் பழத்தைக் குழைத்துக்கொண்டிருக்கக்கண்டு, அடிக்கிறேன்பார்! என்று மிரட்டியபடி அருகே சென்றிடும் அணிமயில், அடிக்கின்ருளா, பார்! இல்லையே! அணைத்துக்கொள்கின்ருள்! முத்தம் அளிக்கின்ருள்! ஏன்? அந்தச் சுட்டிப்பயல், பழம் குழைத்த விரலை தாயின் உதட்டருகே கொண்டுசென்று, அம்மா! அம்மா!! என்று கொஞ்சிவிட்டான்; அவ்வளவுதான்! ஒரு பழமா, உள்ள பழம் அத்தனையும், கையாலா, காலால் அவன் குழைத்துப் போட்டால்கூட அந்தக் காரிகையின் கண்களுக்கு விருந்தாகத்தான் தோன்றும். காணுகின்ருய், கண்கள் களிநடம் புரிந்திடுகின்றன. ஆனுல், இந்தப் புத்தெழில் இல்லத்தரசி பெற்றிட கடன்பட்டிருப்பாயேல், அந்தக் கண்கள் கவலைக்குறிகளாக அல்லவா மாறிவிடும்.

"ராஜாபோல இல்லே! இந்தப் பட்டுச்சட்டை?" என்று கேட்கிருள், உன்னை வென்ருள். ஆம்! என்கிருய் இழுத்தார்ப்போல, பட்ட கடனை நினைவுபடுத்திக்கொண்டு; அவள் புரிந்துகொள்கிருள்; பூத்த மலர் வாடுகிறதே! கண்டனையா?

அந்தக் குடும்பத்தை விட்டுவிடு, பொங்கற் புதுநாள் இன்னின்னது வேண்டும் என்று கேட்டு, ஆகட்டும் என்று தலை அசைத்து, கடைசியில் இல்லை என்று கைவிரித்துவிட்ட நிலையில் எத்தனை எத்தனை குடும்பங்கள்? ஆங்கு விழாவின் காரணமாக மகிழ்ச்சியா பிறந்திடும்? விம்மல்; குமுறல், வேதனை.

விழா முழுச்சுவை தந்திடுவதாக இருந்திடவேண்டுமெனில் அது எல்லோர்க்கும் விழாவாக இருத்தல் வேண்டும். அந்த நிலை கண்டிட உழைப்பதிலேயே ஓர் தனி மகிழ்ச்சி பெற்றிடலாம்.

எல்லோரும் ஒன்று நான், எல்லோரும் வாழப்பிறந்தவர்களே என்று கவிதை மேற்கோள்கள் காட்டி எத்தனை நாளைக்கு நமக்கு நாமே மயக்கமூட்டிக்கொள்வது.

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மானிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ

பொருட்சுவை மிகுந்திருக்கிறது ஏடளிக்கும் இப்பாடல்! குரல் இனிமையும் இசை அறிவும் பெற்றவரிடம் சிக்கிக்கொண்டால் போதும், இப்பாடலைக்கொண்டு 'ஒருமணிநேர சொற்சிலம்பம்' நடத்திடுவார்; அவர் நாவிலே சரஸ்வதி தாண்டவமாடுவதாகப் பாராட்டப் பெறுவார். ஆனுல் தம்பி! இல்லாமை எனும் கேடு பீடித்துக்கொள்வாரை, மாரி மாய்த்துவிடுகிறது, காற்று பியத்தெறிகிறது, கதிரவன் சுட்டுப் பொசுக்குகிருன. மானிலம் மட்டும் சுமக்க மறுப்பதில்லை, ஏனெனில் வறியவன் உடல் தேய்ந்து தேய்ந்து வெறும் எலும்புக் கூடாகிப் போய்விடுவதால், அவன் இருப்பது மானிலத்துக்குத் தெரிவதுகூட இல்லை!

அறநெறிதனை எடுத்தியம்பிடின், நல்லொழுக்கந்தனை உணரச் செய்திடின், மக்களை நன் மக்களாக்கிடின், சமூகத்தில் உள்ள கேடுகள் மாய்ந்தொழிந்து போகும், என்கின்றனர். அதுபோல் அறநெறி கூறிடல் கூடாது என்று கூறுவேன் என்று எண்ணத் தேவையில்லை, தம்பி! ஆனுல் அவையாவும், எரியும் கொப்பரைமீது தெளிக்கப்படும் பன்னீர்த் துளிகளெனப் பொறிந்துபோகின்றன.

செய்ந்நன்றி கொல்லன்மின்
தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகல்மின்
பொருள்மொழி நீங்கல்மின்
அறவோர் அவைக்களம்
அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்

என்று சிலம்பு ஒலித்திருக்கிறது! புதிதாக நன்னெறி பற்றி நாம் ஆராய்ந்தறிந்து கூறிடத் தேவையில்லை. சிலப்பதிகாரத்திலேயே 'பொய்க்கரி'யால் விளைந்த பொல்லாங்கும் விளக்கப்பட்டுமிருக்கிறது. எனினும் சிலப்பதிகார காலத்து இளங்கோ அடிகள் காலமுதற்கொண்டு இன்றளவும் செய்யப்பட்டுவரும் நன்னெறி, சமூகத்தின் போக்கை மாற்றி அமைத்திடக்காணுமே என்செய்வது.

'தனி மனித வாழ்க்கை' என்பதே தம்பி! இப்போது மிகமிக அரிதாகிக்கொண்டு வருகிறது. சுற்றுச்சார்பின் வேகமும் நெறுக்கமும், 'தனிமனித வாழ்க்கை'யை இயலாததாக்கி விட்டிருக்கிறது.

கேடு சூழ் இவ் உலகில் நடமாடிடின் கெட்டுப் போவேன் என்று கருதி கிரேக்க ஞானி ஒருவர், பீப்பாய்க்குள் ஒளிந்து கொண்டார் என்று கதை கூறுவார்கள்.

இன்று எந்தத்தனிமனிதரும் தம்மை சமூகத்தைக் கப்பிக்கொண்டுள்ள சூழ்நிலையினின்றும்வேறுபடுத்திக்கொள்ள முடிவதில்லை. நோய் தாக்காதிருக்கத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது போல, சூழ்நிலை தம்மைத் தாக்கிடாதபடி சில தடுப்பு முறைகளை வேண்டுமானுல் தேடிப் பெற்றிடலாமேயன்றி, பண்டை நாட்களைப் போல தங்கு தடையற்ற தனிமனித வாழ்க்கையைப் பெற்றிடுதல் இதுபோது இயலாது.

மக்கட் தொகைப் பெருக்கம் மட்டுமல்ல மக்களுக்குள் ஏற்பட்டுவிட்டுள்ள தொடர்புகள், அவர்கள் ஈடுபடும் அலுவல்கள், அந்த அலுவல்களினபோது கிளம்பிடும் வேகம், புதியதோர் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது.

பண்டை நாட்களைக் காட்டிலும் அதிக அளவிலும் வேகத்திலும் தனிமனிதன், சமுதாயத்திலே ஈடுபட வேண்டியிருக்கிறது.

தம்பி! வேடிக்கையாகவே இருக்கும், நான் கூறுவதனை ஆராய்ந்துபார்த்திடின்; ஒரு ஐம்பது ஆண்டு

# எனக்குக் கிடைத்ததை உனக்குத் தருகிறேன்!

களுக்குமுன்பு நகர்களில், இத்தனை மக்கள் 'நடமாட்டம்' கண்டதில்லை; இன்றோ எந்த ஒரு காலைப் போதினைக் கணக்குக்காக எடுத்துக் கொண்டாலும், வீட்டினில் உள்ளவர்களைக்காட்டிலும் வெளியே உள்ளவர்களின் தொகையே அதிகம். எந்த நகரத்து நெடுஞ்சாலையினையும் கூர்ந்து பார்த்திடு தம்பி! சாரை சாரையாக மக்கள், ஆடவர் பெண்டிர், இளைஞர் முதியோர், சென்றவண்ணம் உள்ளனர்! எத்தனை வேகம் கவனித்தனையா!! ஓர் வலிவுமிக்கவன் வீசிடும் சவுக்கடிக்குப் பயந்து, இதோ செல்கிறோம்! செல்கிறோம்! தாமதிக்கமாட்டோம்!! என்று கூறிக்கொண்டே செல்பவர்போலத் தோற்றமளிக்கிறது, நடை, வேகம், பரபரப்பு. நண்பர்கள் தொலைவிலே இருந்துகொண்டே, புன்னகையைஉதிர்த்துவிட்டுச் செல்கின்றனர். வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! கடிகார முள் வேலாகிக் குத்துகிறது, விழி! எழு! நட! என்று; சங்கொலி காதைத் துளைக்கிறது கிளம்பு! கிளம்பு! உருளைகள் அழைக்கின்றன! உடனே வந்திடு! என்று. இத்தனைப் பரபரப்புக்கு இடையில், சமுதாயப் பின்னலுக்கு இடையில், தனிமனித வாழ்க்கை எப்படித் தப்பிப்பிழைத்துத் தழைத்திடமுடியும்?

தம்பி! இந்தப் பிரச்சினைபற்றி அறிவாளர்கள் மேலும் நல்லமுறையில் தமது கருத்தினைச் செலுத்திட வேண்டும்.

இங்கிலையில், தனிவாழ்க்கை என்பது, அவரவர் தமக்கென அமைத்துக்கொள்ளும் வாழ்க்கை என்ற இலக்கணத்தை இழந்து விடுகிறது. வாழ்க்கையே இன்று பெரிதும், சமூகத்தில் ஏற்படும் பிணைப்பினாலும், பரவிவிடும் சூழ்நிலையினாலும், இவைகளை முறைப்படுத்தும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசினாலும், அமைத்து அளிக்கப்படுகிறது.

அரசு இன்று மேற்கொண்டுவிட்டுள்ள பொறுப்பின் அளவும் அதிகம்; வகையும் பலப்பல.

இது, பண்டை நாட்கட்கும் இன்றுள்ள நிலைக்கும் இடையில் முளைத்து படர்ந்துவிட்டுள்ள மிகப்பெரிய வேறுபாடு. இதன் காரணமாக 'தனி மனித வாழ்க்கை' யில் அரசின் வலிவுமிக்க நீண்ட கரம் வெகுவாகப் புகுந்துவிட்டது. அரங்கு அமைப்பதும், ஆடும் முறை வகுப்பதும் மட்டுமல்ல அரசு மேற்கொண்டுவிட்டுள்ள அலுவல்; ஆட முற்படுவோருக்குக் கயிறு பூட்டி இயக்குவிக்கும் அலுவலையும் அரசு மேற்கொண்டு விட்டிருக்கிறது.

எனவேதான் தம்பி! இன்று வாழ்வு செம்மைப்பட வேண்டுமெனில், அது அவரவர்கள் தத்தமது அறிவாற்றலுக்கேற்றபடி செய்துகொண்டிட இயலும் என்பதிலிருந்து வெகுதூரம் விலகிவிட்டதுடன், வாழ்வின் வகையை ஆக்கித் தந்திடும் பொறுப்பினை அரசு மேற்கொண்டுவிட்ட நிலை உறுதிப்பட்டுப் போய்விட்டிருக்கிறது.

எனவே, சீர்கேடுகள், முறைகேடுகள் நீக்கப்படுவதற்கான பணியினைத் தனிமனிதர்கள் மேற்கொண்டு வெற்றிபெற்றிட வாய்ப்பு பெரிதும் கிடைப்பதில்லை — ஒருசிலர் அத்தகைய தூய தொண்டாற்றி வருகின்றனர், நன்றி, மகிழ்ச்சி — அரசு மேற்கொண்டிட வேண்டிய அளவுக்குப் பிரச்சினை பெரிதாகிவிட்டிருக்கிறது; சிக்கல் மிகுந்ததாகி விட்டிருக்கிறது.

அத்தனைப் பொறுப்பினை மேற்கொண்டுவிட்டுள்ள அரசு இருக்கிறதே அதன் பொருள் என்ன? வகை என்ன? தனி மனிதர்கள் தமது வாழ்வை வகைப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பையும் இழந்திட வேண்டிய விதமாகப் படை எடுத்துள்ள அரசு எனும் அமைப்பின் இலக்கணம் என்ன? விந்தை, தம்பி! மிக விந்தையானது!! அதே தனி மனிதர்கள் ஆக்கித் தந்திடும் அமைப்பே அந்த அரசு!! அதற்கா அத்தனை ஆற்றல்? ஆம்! அதற்கே!! உலைக்கூடத்தான் அமைத்துத் தருவதே வாள்! ஆயின் அந்த வாள் அவன் சிரத்தினையே கொய்திடும் வலிவு பெற்றுக்கொள்கிறதல்லவா? மனிதன் வெட்டுவதே குளம்! ஆயின் இடறிவீழ்ந்திடின் அவன் உயிரையே குடித்துவிடுகிறதல்லவா. பருகிடும் தேன், துளி சில உடலிலே தங்கிடின், சிற்றெறும்பு மொய்த்துக் கடித்திடுகிறதல்லவா, உடலை.

ஆகவே தம்பி! இற்றை நாட்களில், தனி மனிதர்கள் பெற்றுவிட்ட வேகம் நிறைந்த வாழ்க்கை காரணமாக, சமுதாயப் பின்னலை அரசிடம் ஒப்படைத்துவிட்டிருப்பதாலும், அந்த அரசு தனிமனித வாழ்க்கையின் வடிவத்தையும் வகையையும் உருவாக்கிடும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருப்பதாலும், அத்தகைய அரசு எவ்விதமாக அமைகிறதோ அதைப்பொறுத்தே, தனி மனித வாழ்வின் செம்மையும், சமுதாய வாழ்வின் மாண்பும் இருக்கிறது.

தனிமனித வாழ்க்கை மங்கி மடிந்துகொண்டிருக்கும் இந்த நாளிலேயே இன்னமும் போதுமான தெளிவுடன் உணரப்படாமலிருக்கிற இந்தப் பேருண்மையைத் தமிழர் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே உணர்ந்து நெல்லும் நீரும் அல்ல, மன்னனே நாட்டுக்கு உயிர் அளித்திடுவோன் என்று அரசுக்கு உள்ள வலிமையினை முதன்மையானதாக்கிக் காட்டினர்.

அன்று அது எந்த அளவுக்கு உண்மையாக இருந்ததோ அதனினும் பன்மடங்கு அதிக அளவுள்ள உண்மை அது இன்று.

மன்னன் – என்பது அரசு முறையிலே ஒருவகை; எனவே இன்று மன்னன் என்ற சொல்லுக்கு ஈடாக அரசு என்ற சொல்லினைக் கொண்டிடல், முறையேயாகும்.

தம்பி! மன்னன் பிறக்கிறான்; 'அரசு' அமைக்கிறோம். இருவேறு நிலைகள்! இந்த இருவேறு நிலைகளுக்கிடையில், இரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடியிருக்கின்றன என்பதனை விளக்கிக்காட்டுகிறது வரலாற்றுச் சுவடி.

'அரசு' அமைத்திடும் பொறுப்பு, தனி மனிதரின் உரிமை. அதனை நிறைவேற்றுவதிலே தனி மனிதர் எத்தனைத் திறமை கொள்கின்றனரோ, அதனைப் பொறுத்தே அரசு அமைகிறது; அதன் தொடர்பாக தனி மனித வாழ்க்கையின் வாழ்வும் இருக்கிறது.

எனவே, இன்று அரசியல் என்பது, தீண்டத்தகாத ஒன்றுஎன்று எண்ணுவோர், ஏற்பட்டுவிட்டுள்ள மாறுதலை அறிந்துகொள்ளாதவர்கள் என்றுதான் கூறவேண்டும். அரசு அமைத்திடும் உரிமையைச் செவ்வனே நிறைவேற்ற வழிவகுத்திடும் கலையே, அரசியல். பாமர மக்கள் பாராளும் காலமிது என்றும், சிட்டுக்குருவிகள் வல்லூறை விரட்டும் காலமிது என்றும், எடுத்துரைத்துவிட்டு, அரசியல் அத்துணை இன்றியமையாத அலுவலல்ல என்றும் பேசுவது நாம் எவரிடம் எதைப் பறித்துக்கொண்டோம், எவர் நம்மிடம் உள்ளதைப் பறித்துக்கொள்வர் என்று எண்ணிக்கொண்டு, பொருள் எடுத்துக்கொண்டு நெடுவழி போவதற்கு ஒப்பாகும்.

தம்பி! இதனை உணர்ந்தே நாம் அரசியல் பணியினை மேற்கொண்டுள்ளோம்; இந்தப்பணியின் வகை, திறம், இதிலே கிடைத்திடும் வெற்றி என்பதனைப் பொறுத்தே, சமூக இயல், பொருளாதார இயல், கலை இயல், பண்பாட்டு இயல், நெறி இயல் என்பவை அனைத்தும் சீர்பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே, நாம் ஓர் விடுதலைப் போரினில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதனை மறந்திடலாகாது.

விடுதலை என்றால், ஒரு நாட்டைப் பிறிதோர் நாட்டார் பற்றிக்கொண்டுள்ளதனை நீக்கிடுவது மட்டுமே என்போர் குறையறிவினர்.

நமது நாட்டிலேயே, நமது நாட்டவராலேயே மூட்டிவிடப்படுபவை, பூட்டிவிடப்படுபவை ஆகிய தளைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் போரும் விடுதலைப் போரே.

அந்தப் போரினில் ஈடுபட்டுள்ளோருக்கு, மற்றைய விழாக்களைக் காட்டிலும் இவ்விழா, கருத்துக்கு விருந்தளிக்கும் தன்மையது என்பதுபற்றியே, கழகத்தவர் பொங்கற் புதுநாளைப் போற்றுகின்றனர், அதன் பொலிவுபற்றி மகிழ்ந்துரைத்து விழா நடத்துகின்றனர்.

பொங்கற் புதுநாளின் பொலிவு தம்பி! உன் இல்லத்திலும் இதயத்திலும் ஒளி தந்திடுவதாக! என்ற என் நல்வாழ்த்தை அளிக்கின்றேன். இவ்வளவுதானா என்கின்றாயா?

தம்பி! வில்லியம் கல்லன் பிரயான்ட் எனும் அமெரிக்கக் கவிஞரொருவர் (1794-1878) 'விடுதலை' பற்றித் தீட்டிய கவிதையினைப் படித்திடும் பேறு, மொழிக் கிளர்ச்சியின்போது சிறைப்பட்டிருந்தபோது கிடைத்தது.

இத்தனை கூறுகிறானே அண்ணன் பொங்கற் புதுநாள்பற்றி, என்ன தருகின்றான் என்று எண்ணிக் கொள்வாய், தம்பி! உனக்கு நான் என்ன தந்திட இயலும், பொன்னும் பொருளுமா! சே! உன் வியர்வைத் துளியிலே அஃது விளைந்திடும்! எனவே எனக்குக் கிடைத்ததை உனக்களிப்பது என்ற முறையிலே அந்தக் கவிதையைத் தந்திடுகின்றேன்;

விடுதலையே! இருண்ட மொய்குழல்
சுருண்டு அழகு தரும்
கொடிபோன்றாள்!
இளமங்கை!
என்று உன்னைக் கூறுகின்றார்.
உண்மை அல்ல அது.
கவிஞர் கனவில் உருவானது.
வாளொடு கரம்!
வந்திடு கேடு தடுத்திடும்,
கேடயம் மறுகரம், படைக்கலன் பலஉள
போரிடும் வீரன் நீ!
களம் பல கண்ட கட்டுடலோன் நீ!
நெறித்த புருவம் நேர்த்தி அளித்திடும்
முகமெலாம் வடுக்கள் போர்ப்புகழ்க் குறிகள்!
இடிதனை ஏவினர் உனை அழித்திட
இலைஅதற்கு ஆற்றல் உனை வீழ்த்திட!
உலைபல தனிலே உருக்கி வடித்தனர்
உனைப் பிணைத்திட தளை பலப்பல
கட்டி அடக்கினோம் என்றவர் களித்தனர்.
பட்டுத் தெறித்திட பல்மதை ஏவினாய்!
உனை அடைத்திட அமைத்தனர் ஆழ்சிறை
உதைத்து எழுந்தனை சிறை பொடியாகிட
கொழுந்துவிட்டெறி தீயென, நீயுமே
எழுந்தனை! எழுப்பினை! எங்குள பேரையும்.
உன்குரல் கேட்டதும் பற்பல நாட்டவர்,
இங்குளோம்! இங்குளோம்!
என்று உடன் முழக்கினர்.
அடக்கிடும் சழக்கர்கள் அரண்டு ஓடிட!

கன்னல் மொழிச் சுவையில், விழி விருந்தில், விழா மகிழ்வில் உள்ள உனக்கு இந்தக் கவிதையைத் தானா நான் அனுப்பித் தருவது என்று எண்ணிக் கொள்ளமாட்டாய்; அறிவாயே தம்பி! நீ, துறை இரண்டு, அகம்; புறம்.

அண்ணன்,

விற்பனையாகிறது!

அண்ணாவின்

கருத்தோவியங்கள்

| | |
|---|---|
| பாவையின் பயணம் | ரூ. 1-50 |
| அரசாண்ட ஆண்டி | ரூ. 1-50 |
| மதுரைக்கு டிக்கட் இல்லை | ரூ. 2-00 |

விவரங்களுக்கு:

பரிமளம் பதிப்பகம்

சின்ன காஞ்சிபுரம்.

# உழவன் சிரிப்பே உலகின் சிரிப்பு!

[ என். வி. என். ]

காடுவெட்டி, கழனிதிருத்தி, நாடு செழிக்கப் பாடு படும் விவசாயப் பெருங்குடி மக்கள், ஆண்டுக்கு ஒரு நாள்—தை முதல்நாள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத் திருக்கும் திருநாளே பொங்கல் விழாவாகும்.

உழவர் பெருமக்கள், உலகத்தின் அச்சாணி என்பதை உணர்ந்த மேலைநாட்டாரும், ஆண்டுக்கு ஒரு நாள் அறுவடை விழா (Harvest Festival) என்று கொண்டாடுகின்றனர்!

அறுவடை விழா! அறிவு விழா! அன்பு விழா!

என்ற வகையிலே மட்டுமல்லாமல், உலகை உய்விக்கப் பாடுபடும் உழவர் பெருமக்களை மகிழ்ந்து பாராட்டும் மகிழ்ச்சி விழாவாகவும் நன்றி செலுத்தும் விழாவாக வும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்றார் வள்ளுவர். உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கிறது. ஆகவே உழவுத் தொழிலே சிறந்தது என்கிறார் அவர்!

அந்த உழவன் சிரித்து மகிழ்ந்தால்தான் உலகம் சிரித்து மகிழமுடியும்! அவன் உள்ளம் குளிர்ந்தால் தான் உலகம் நிம்மதியுடன் இருக்கமுடியும்! எனவே உழவர் பெருமக்களைப் போற்றிப் பாதுகாத்தல் நாட்டு மக்களின் கடமை!

அவர்களைத் தொல்லையும் துயரும் தாக்காத வண்ணம் பாதுகாக்கவேண்டியது அரசின் கடமை!

நாட்டு மக்களின் பேரணியான கழகம், உழவர் பெருமக்கள் நல்வாழ்வு பெறவேண்டி தன்னாலியன்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது.

அண்மையில்கூட விவசாயப் பெருங்குடி மக்க ளின் வேதனையை அதிகரிக்கச் செய்யும் நிலவரி—நீர்வரி உயர்வை எதிர்த்து முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத்தில் முழக்கமிட்டது.

**குறைந்தது ஐந்து ஏக்கர்வரை நிலமுள்ள வர்களுக்காவது நிலவரியே இருத்தல் கூடாது என்பதுதான் கழகத்தின் திட்டவட்டமான கொள்கை!**

ஆனால் தமிழ் நாட்டை ஆள்கின்ற காங்கிரஸ் அரசினர் நிலவரியைக் குறைக்கும் மனவளத்தைக் கூடப் பெற்றார்களில்லை!

இந்தியப் பிரதமர் லால்பகதூர் அவர்கள், நாள் தோறும் "ஜெய் கிசான்! ஜெய் ஜவான்!" என்று முழக்கமிடுகிறார்.

விவசாயி வெல்க! வீரன் வெல்க!

என்பதே அவரது முழக்கம்! ஆனால் விவசாயி வடிக் கின்ற வேதனைக் கண்ணீரைத் துடைக்க அரசாங்கம் முன்வரவில்லை! உழவுத் தொழிலுக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களின் விலையேற்றம்!

நீரின்மை! நிதியின்மை விஞ்ஞானக் கருவிகள் வாங்குவதற்கு வேண்டிய வாய்ப்பின்மை!

இவ்வளவு வேதனைகளைச் சுமந்துகொண்டு சேறும் சகதியும் நிரம்பிய காட்டிலே செந்நெல் குலுங்கும் வயலாக, செங்கரும்புத் தோட்டமாக, சந்தனம் மணக் கும் பூக்காடாக மாற்றி செழிப்பைத் தரும் உழவன் வாழ்வில் செழிப்பில்லை — சிரிப்புமில்லை

சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்கள் உழவர் களுக்காகப் பரிந்துரைக்கும்போது, அதனை ஏற்றிடும் மனவளம் அரசுக்கு இல்லை!

அரசு செழிக்க வேண்டுமானால் உழவு செழித்திட வேண்டும். அதிலும் நெருக்கடியான நிலையில் நாடு சிக்குண்டுகிடக்கும் வேளையில் உழவனின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்! இதனை உணர்ந்தே இந்தியப் பிரத மர் விவசாயி வெல்க! வீரன் வெல்க என்று முழக்கமிடு கிறார். ஏர்முனையின் வெற்றியே போர்முனையின் வெற்றி!

கழகம் இதனை—இப்போதல்ல, பல்லாண்டுகளாக வலியுறுத்தி வருகிறது. ஏர் முனை செழித்தாலதான் பார் செழிக்கும், பஞ்சம் பறந்தோடும் என்ற கருத்தை அண்ணா அவர்கள் நீண்ட பல ஆண்டுகளாக வலி யுறுத்தி வருகிறார்கள்.

தமிழக அரசினரும் இவ்வாண்டு பொங்கல் திரு நாளை ஏர்முனைத் திருநாளாகக் கொண்டாட வேண்டும் என அறிவித்திருக்கின்றனர்!

ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற சர்க்கார், இதை மட்டும் அறிவித்தால் போதாது. உழவர் பெருமக்கள் மகிழக்கூடிய நல்ல திட்டங்களை வகுத்து, அவைகளை நடைமுறையிலும் கொண்டுவர வேண்டும்.

இப்போது மட்டுமென்ன, உழவர் கூட்டுறவு சங்கங்கள் இல்லையா—உர உற்பத்திக்கான திட்டங் களுக்குப் பஞ்சமா? நீர்ப்பாசனத் திட்டங்கள், நீண்ட காலக் கடன் திட்டங்கள் இன்ன பிற வசதிகள் இல் லையா என அரசினர் கேட்கக்கூடும்!

பல ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இத்திட்டங்கள் சரிவர செயல்படுத்தப்படாத காரணத் தால் உழவர்களின் வாழ்வில் ஒளிவீசவில்லை.

இதைச் சுட்டிக் காட்டுதல் எதிர்க் கட்சியின் உரிமை! திருத்திக் கொள்ளுதல் ஆளுங் கட்சியின் கடமை!

ஏர்முனைத் திருநாளாகப் பொங்கல் விழாவைக் கொண்டாட முனையும் அரசினர், கழகம் பல்லாண்டுக ளாக வலியுறுத்திவரும் திட்டங்களை ஏற்று ஆவன செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

உழவர்களுக்கு உற்சாகம் குன்றி உழவுத்தொழில் நசிந்துவிடுமானால் முற்றும் துறந்த முனிவர்களுக்கும், பற்றற்ற துறவிகளுக்குங்கூட வாழ்வில்லை என்கிறார் வள்ளுவர்.

"உழவினார் கைம்மடங்கின் இல்லை
விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை."

எனவே உலகம் சிரித்திட வேண்டுமானால் உழ வன் சிரிக்கவேண்டும்! அதற்கு அவர்களது வாழ்வு செழிக்க வேண்டும்! இதனை அரசு சிந்திக்க வேண்டும்!

சிந்தனையற்ற சொல்லும் செயலும் எதற்கும் பயன்படாது என்பதை மீண்டும் தமிழக அரசுக்கு வலியுறுத்திக் கூறுகிறோம்.

உலகை வாழவைக்கும் உழவர் பெருமக்கள் வாழ்க! அந்த உரிமைத் திருநாளான பொங்கல் திரு நாள் வாழ்க!

✽

# மனோரஞ்சிதம்



'கொக்கரக்கோ...' எங்கேயோ, ஒரு சேவல் கூவியது! சேவல் கூவியதா; இல்லை; கதிரவன் வருகைக்குக் கட்டியும் கூறியது.

படுக்கையை விட்டு எழுந்த ரஞ்சிதம், மனோரஞ்சித மரத்தை நாடிச் சென்றாள். அவளது நித்திய பணிகளில் இது ஒன்று. மிக முக்கியமான பணியும் கூட.

மரத்தின் நிழலில் அமர்ந்த அவள் "ஆண்டவனே! என் அத்தானைப் பத்திரமாக என்னிடம் விரைவில் சேர்ப்பித்துவிடு" என்று வேண்டிக் கொண்டாள்.

அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைக்கின்ற ஆண்டவன், காதில், இந்த அபலையின் புலம்பலும் விழும் என்ற அபார நம்பிக்கை அவளுக்கு.

கடந்த மூன்று மாத காலமாக, அவளுக்கு ஒரே சிந்தனை, ஒரே வேண்டுகோள்தான். அது, 'என் அத்தான் பத்திரமாகத் திரும்பி வரவேண்டும்' என்பதுதான்! அத்தான் திரும்பி வந்துவிட்டால், திருப்பதிக்கு வந்து முடி இறக்கம் செய்வதாகக்கூட அவள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

கவலை இருக்காதா, அவளுக்கு? அவளது அத்தான் மனோகரன், போர் முனைக்கல்லவா சென்றிருக்கிறான். களத்திற்குச் சென்றுள்ள காதலனைப்பற்றிக் காதலிக்குக் கவலை இருக்காதா!

*

மனோகரனும், ரஞ்சிதமும். யார்யாரோ அல்ல; எங்கோயோ பிறந்து, வளர்ந்து காதல் கடலில் விழுந்தவர்களுமல்ல; ரஞ்சிதம் மனோகரனின் அத்தைப் பெண்; முறைப்பெண். சிறுவயதில் ஒன்றாக ஓடி ஆடியவர்கள்! வாழ்க்கையிலும் ஒன்றாக வேண்டும் என்று அவர்களின் பெற்றோர்கள் தீர்மானித்தார்கள். அவர்கள் தீர்மானிப்பதற்கு முன்னமேயே மனோகரனும், ரஞ்சிதமும், மனோரஞ்சித மரத்தடியில், தீர்மானித்துவிட்டது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

அவர்கள் காதல் அரும்பியதே மனோரஞ்சித மரத்தடியில்தான்! ரஞ்சிதம், மேலாடை அணிய ஆரம்பித்த நேரம். அவ்வூர் கோயிலில் உள்ள மனோரஞ்சித மரத்தில் அரும்புகள் நிரம்பி இருந்தன. பூவையரின் உடன் பிறப்புகள்தானே, பூக்களும். அந்த உடன் பிறப்புகளைத் தேடி ஒருநாள் சென்றாள், ரஞ்சிதம். அவளுக்கு முன்னாலேயே, மனோகரன், மலர்களைச் சேகரித்துக்கொண்டிருந்தான்.

"அத்தான் எனக்குத்தானே!"

"உம் ஆசையை பாரு! இவ்வளவு கஷ்டப்பட்டுசேகரித்தது உனக்குக் கொடுக்கவா?"

"பின்னே, யாருக்கு?"

"எனக்குத் தான்..."

"உங்களுக்கா கிராப்புத் தலையை எப்படிப் பின்னி வச்சிக்கப் போறீங்க!" கல, கல வென்றுஅவள் சிரித்தாள், குவிந்திருந்த மலர்களுக்குப் போட்டியாக!

முல்லை சக்தி

"மிகஹஸ்யமாகப்பேசிவிட்டதாக நினைப்போ," உங்களுக்கு இம்மலர்களின் அருமை என்ன தெரியும்? இவைகளைக்கயிற்ருல் இறுக்கி கூந்தலில் சிறைவைக்கத்தான் தெரியும், உங்களுக்கு. நான் இவைகளை அப்படியே என் அறையில் மேஜையில் குவிப்பேன். இதனின் மணம் அறை முழுவதும் நிரம்பி வழியும், உள்ளத்திற்கு ஒரு புத்துணர்ச்சியை அளிக்கும். ஒரே இன்ப பிரவாகம்...எரிய எரியதான் ஊதுவத்தி மணம் வீசும்; அறைக்க, அறைக்கத்தான் சந்தனம் மணம் வீசும். ஆனுல் மனேரஞ்சிதமோ உயிரோடு இருக்கும்போதும் மணம் வீசும்; வாடி, கருகி, செத்தாலும், மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

"சரி.........சரி..............மலரைக் கொடுங்கள்"

"உம் உம்...முடியாது..."

"அத்தான்! இம்மலர் பேரே ரஞ்சிதம்; என் பெயரும் ரஞ்சிதம் எவ்வளவு பொருத்தம் பாருங்கள்... ஆகவே இது எனக்குத்தான் சேர வேண்டும்."

ஐயே! ஆசை, அறிவை அடகு வைத்து விட்டதோ? இம் மலரின் பெயர் வெறும் ரஞ்சிதமல்ல மனேரஞ்சிதம்; என் பெயர்தான் முதலில் இருக்கிறது."

"அடடே! நம்ம ரெண்டு பேர் பெயரும் சேர்ந்ததுதான் இம்மலரின் பெயரும்! எவ்வளவு பொருத்தம்!"

"நம்ம ரெண்டுபேர் பெயரும் சேர்ந்திருக்கிறது; ரெண்டு பேருக்கும் பிடித்திருக்கிறது. அதேபோல் நாம் ரெண்டு பேரும்......" மனேகரன் முடிக்காமல், அவளைப் பார்த்தான். அவளது மனேரஞ்சித கன்னங்கள் ரோஜாக்களாயின; அவளது விழிகள் முல்லைகளாயின!

பெயர்கள் சேர்ந்ததுபோல், அவர்கள் உள்ளமும் சேர்ந்தன. அன்றே, அந்த மரத்தடியிலேயே முடிவு எடுத்தனர், சேர்ந்து வாழ்வது என்று!

ஒருநாள் மாலை, அதே மரத்தடியில் மனேகரன் கூறினுன், "ரஞ்சிதம்! நான் விமானப்படையில் சேர்ந்து விட்டேன் என்று!"

அவள் திடுக்கிட்டாள், திகைத்தாள். "அத்தான்" என்ருள். அதற்குமேல் அவளால் பேச இயலவில்லை. பேசும் விழிகளோ, குளங்களாயின!

"என்ன ரஞ்சிதம், கலங்குகிருயே?"

"ஏன் கதறவில்லை என்று கேளுங்கள், அத்தான், விமானப் படை ஆபத்து நிறைந்ததல்லவா?

"ஆபத்தா? எதில் ஆபத்து இல்லை! ஆபத்து என்பது எல்லாத் துறையிலும், எல்லா இடத்திலும், நீக்கமற நிறைந்திருக்கிறது. அது எப்போது வேண்டுமானுலும், எங்கு வேண்டுமானுலும், வரலாம் விமானப்படையில் மட்டுமல்ல..."

"என்ன இருந்தாலும் நீங்கள் சேர தேவைக்கூட இல்லை......"

"தேவைக்கு, ஒருவரையறை, எல்லையை, வகுக்க முடியாது—தேவை என்பது அவரவர்கள் மன நிலையைப் பொறுத்தது."

"என்ருலும், நீங்கள் சேர்ந்திருக்கக்கூடாது, அத்தான்!"

"ரஞ்சிதம்! நீ என்னை சேர்ந்திருக்கக்கூடாது என்கிருய்? நானும் சேரவில்லை என்று வைத்துக்கொள்... என்னைப் போலவே, எல்லோரும், முடிவெடுத்து சேரவில்லை என்ருல், போர்ப்படையே இருக்காதே!

"நாம் செய்யாவிட்டால் வேறு யார் செய்வது? ஒன்று ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயல்பட்டால் தான், நாடு முன்னேறும். நாடு முன்னேறினுல், வீடும் முன்னேறும். பல வீடுகள் சேர்ந்ததுதானே நாடு. ஆக நாட்டுக்குச் சேவை செய்வது வீட்டிற்குச் சேவை செய்வது போல் தான்! இந்த சேவையினுல் கை நிறைய ஊதியம்.... நாட்டுக்குச் சேவை செய்கிரேம் என்ற ஆத்ம திருப்தி..."

"அத்தான்...வாதத்தில் உங்களை வெல்ல முடியுமா?......... நமது திருமணம்..."

"விமானப் படையில் ஒரு கால வரை இருக்கிறது; அது முடிந்தவுடன் நமது திருமணம்தான்...... எனக்கு மகிழ்ச்சியாக விடை கொடு நானை, நான் புறப்படுகிறேன்."

நீர் மல்க அவள் விடை கொடுத்தாள். மனேரஞ்சித மரமும் நாட்டுக்குச் சேவை செய்யப் போகும் அந்த நல்லவனை, மலர்களால் அர்ச்சித்தது.

தூரம் என்ற பெரும்பாவி அவர்களைப் பிரித்தபோதிலும் கடிதங்கள் அவர்களை அடிக்கடி சந்திக்கச் செய்தன. மனேகரனின் தேன் சொட்டும் கடிதங்களை, அவர்களை ஒன்ருக இணைத்த மனேரஞ்சித மரத்தடியில் அயர்ந்து, பலமுறை திரும்பத் திரும்பப் படிப்பான்...'...தம்' கூடத்தருவாள். அவள் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும், தவருது அவனுக்குப் பிரியமான மனேரஞ்சித மலர்களை வைத்து அனுப்புவாள்.

அவன் எழுதுவான், "ரஞ்சிதம்! நீ அனுப்பும் மனேரஞ்சித மலர்கள் மணத்தை மட்டுமல்ல, உனது அன்பையும் சுமந்து வருகிறது. அவைகளையெல்லாம் உன் அன்பின் சின்னமாக நினைவின் காணிக்கையாக எப்போதும் எனது இடது ஜேபியில் வைத்திருக்கிறேன். இடது ஜேபியில் ஏன் வைத்திருக்கிறேன், தெரியுமா? அதுதானே என்இதயத்திற்கு அருகிலிருக்கிறது என்று. இதனைப் படிக்கப் படிக்க ரஞ்சிதத்தின் இதயம் மலர்போல் விரியும். அவள் எழுதுவாள். "அத்தான்! என் உடல்தான் இங்கே? உயிர் அங்கே! நாம் ஆடிப்பாடி மகிழ்வோமே, மனேரஞ்சித மரம், அதன் நிழலில்தான் நான் நிம்மதி பெறுகிறேன். அம்மரத்தடியில் அமரும் போதெல்லாம், உங்கள் அருகில் அமருவதுபோல ஒரு பிரமை! நான் கேட்பேன், "மலர்களே! என் அத்தானின் பிரியமான மலர்களே! நீங்களாவது பாக்கியசாலிகள்! எங்கேயோ இருக்கும் என் அத்தானைத் தேடிச் செல்கிறீர்கள். அவரின் பரந்த மார்பில் புரளுகிறீர்கள். ஆனுல் நானே... அவரைக் காணக்கூட இயலாதவளாகி இருக்கிறேன்"— என்று. அம்மரம் பேசாது, ஆனுல் மலர்களைத் தூவி என்னைப் பரவசப் படுத்தும். ஆறுதல் கூறிவிட்டதாக நினைப்பு அதற்கு! அத்தான், நீங்கள் வருவது எப்போது? உங்கள் மார்புக் குளத்தில் தெப்பமாகமிதப்பது எப்போது?" என்று.

ஒருநாள் அவனும் வந்தான், ஒரு மாத விடுமுறையில், பயிற்சி கெடுவையும் முடித்துக்கொண்டு. இஷ்டஜன பந்துமித்திரர்களும் அவர்களின் திருமணத்தை முடித்து விட முடிவெடுத்தனர். 'அந்நாளும் வந்திடாதோ?' என்று ஏங்கிக் கொண்டிருந்த காதலர்கள் அந்நாள் வந்துவிட்டதை எண்ணி எண்ணி, மகிழ்ந்தனர்.

விடிந்தால் திருமணம். அன்றிரவு மாப்பிள்ளை அழைப்பு. சம்பிரதாயச் சடங்கு. ஊர்வலம் வீட்டை நெருங்கிக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் வந்துசேர்ந்தது ஒரு தந்தி! அதனை அவசர அவசரமாகப் பிரித்தான் மனேகரன். "பாகிஸ்தான் திடீர் தாக்குதல்—உடன் புறப்படவும்...நாளை இரவுக்குள்......நெம்பர் பட்டாலியனுக்கு வந்து ஆஜர்

படுத்திக்கொள்ளவும்'' என்ற வாசகத்தைப்படித்த மனோகரன் திகைத்தான். ஒருகணம்தான்! அடுத்த கணம் அவனது கடமை விழித்துக் கொண்டது.

செய்தி அறிந்து, எல்லோரும் திடுக்கிட்டனர்; திகைத்தனர். மணமகள் தேம்பினாள்......வெண்ணெய் திரண்டுவரும் நேரத்தில் தாழி உடைந்துவிட்டதே என்று. 'தட்டிப் பறித்துக் கொண்டார்களே என் வாழ்வை' என்று விம்மினாள்.

"ரஞ்சிதம்...... நாட்டை நோக்கி வந்துள்ள ஆபத்தைத் தடுக்கப் போகும் என்னை வாழ்த்தி அல்லவா, வழி அனுப்பவேண்டும்? விழியில் நீர் வரலாமா? களம்நோக்கிச் செல்லும் எனக்கு மகிழ்ச்சியாக விடை கொடு; இதோ.........நான் அணிந்துள்ள மாலை......நான் உனக்குச் சூட்டுகிறேன...இந்த விநாடி முதல் நீ என் மனைவி......மகிழ்ச்சிதானே! மனோகரன் கூறினான் இப்படி.

"அத்தான்'' என்று அவள் அவன் காலடியில் பூமாலையாக விழுந்தாள். அவளை வாரி எடுத்து, கன்னத்தைத் துடைத்து அவன் விடை பெற்றான்.

"போர் முனையில் இருக்கிறேன்... இனி அடிக்கடி கடிதம் எழுத இயலாது. எதிரிகளின் விமானங்கள் இரண்டை இதுவரை வீழ்த்தியிருக்கிறேன். உன் அத்தானை பேரும் புகழும் தேடிக்கொண்டு வருகின்றது...மகிழ்ச்சிதானே? நான் விமானத்தில் என் எதிரிகளைத் தாக்கப் போகும்போதெல்லாம் 'நீ அனுப்பிய மனோரஞ்சித மலர்களை என் ஜேபியில் வைததுக்கொண்டு போகிறேன், அவைகள் என் இதயத்திற்கு அருகிலிருக்கும்போது, நீ அருகிலிருப்பதைப் போல, உணர்வுகள் உண்டாகிறது, எனக்கு!'' இப்படி ஒருநாள் கடிதம் வந்தது!

பின் நீண்ட நாட்களாக அவனிடமிருந்து, கடிதம் இல்லை. போர்முனையில் பணியாற்றுபவருக்கு, நேரம் கிடைக்காது கடிதம் எழுத என்று ரஞ்சிதம் தனக்குத் தானே, சமாதானமும், தைரியமும் கூறிக் கொண்டாள்.

அவள் காலையில் கண்விழித்ததும் மனோரஞ்சித மரத்தடிக்குச் செல்வாள். அதன் நிழலில், மனத்தில், லயித்து, "ஆண்டவனே! என் அத்தானை விரைவில் அனுப்பிவை'' எனறு பிரார்த்தித்துக் கொள்வாள், வேறு என்னதான் செய்ய முடியும், அவளால்.

இன்றும் அவ்வாறுதான் மரத்தடிக்குச் சென்றாள். அப்போது தான நல்ல செய்தி ஒன்று வந்தது. 'போர் நின்றுவிட்டது; போர் வீரர்களெல்லாம் வீடுநோக்கித் திரும்புகின்றனர். இப்பக்கத்திய போர் வீரர்கள் ஒரு தனி இரயிலில் இன்று மாலை வருகிறார்களென்று!'

ரஞ்சிதத்தின் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. "தன் பிரார்த்தனைக்கு ஆண்டவன் செவி சாய்த்துவிட்டான்'' என்ற மனத் திருப்தி அவளுக்கு. அத்தான் வந்ததும் முறைப்படி திருமணத்தை முடித்துக்கொண்டு, திருப்பதிக்குச் சென்று தனது காணிக்கையை அளித்துவிட்டு வரவேண்டுமென்று அவள் தீர்மானித்துக்கொண்டாள்.

ஓடோடியும் சென்றாள் மனோரஞ்சித மரத்தடிக்கு. அதனைக் கட்டிப் பிடித்து, ஆனந்தக் கண்ணீரால், அபிஷேகம் செய்தாள், அம்மரமும், மகிழ்ச்சியால் கலகலவென்று சிரிப்பதுபோல் மலர்களைக் கொட்டியது!

சிதறிய மலர்களைத் திரட்டிக் கொண்டாள். புகைவண்டி நிலையத்தில் புன்னகை தவழ இறங்கும் அத்தானை, வெற்றிவாகையோடு வரும் அத்தானை, இம்மலர்களால் அர்ச்சித்து வரவேற்க வேண்டுமென்று முடிவுக் கட்டிக் கொண்டாள்.

பிரியும்போது, அவளது அத்தான் சூட்டிய மாலையை எடுத்து, கண்ணில் ஒற்றிக் கொண்டாள். வாடிய அந்த மனோரஞ்சித மாலை



மணம் வீசி அவனைப் பரவசப் படுத்தியது!

புகைவண்டி நிலையத்தில், கூட்டம் நிரம்பிவழிந்தது. மனோரஞ்சித மலர்களுடன், ரஞ்சிதம், இருப்புக் கொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தாள்.

"கூ......"

புகைவண்டியின் வெற்றிக் கீதம் ......

வண்டி வந்துவிட்டது!

வெற்றி வீரர்கள் இறங்கினர்...

அம்மா! அப்பா! தம்பி! அண்ணா! அத்தான்!

தழுவல்கள் — அணைப்புகள்...... இப்படிப் பல காட்சிகள்! எல்லாவற்றிற்கும் மேலாக, கண்ணீர் வெள்ளத்தின் சங்கமம்!

எமபுரிக்குச் சென்று உயிரோடு திரும்பியவர்கள் அல்லவா?

ஆகவேதான், அங்கே, ஆனந்த பிரவாகம், இன்ப வெள்ளம்.

ரஞ்சிதத்தின் கண்கள் கூட்டத்தைத் துழாவின........."எங்கே அவர்? எங்கே என் அத்தான்?" என்ற புலம்பல் அவள் உள்ளத்தில்!

ஓடினாள்......கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு, கடலைக் கிழித்துக் ஓடும் நாவாய் போல! ஓடினாள்...... பைத்தியம் பிடித்தவள்போல் ஓடினாள்......ஒவ்வொரு வண்டியையும் பார்த்தாள்......ஆனால்... அவன்.... அவள் அத்தான்.........மனோகரன் இல்லை...இல்லவே இல்லை...

பூக்கூடையுடன் ஒரு பூவை ஓடுவதையும், யாரையோ தேடுவதையும் கண்ட ஒரு அதிகாரி அவளை நெருங்கி "தங்கையே! யாரைத் தேடுகிறாய்?" என்று அமைதியாக, அன்பாகக் கேட்டார். போர் வீரர்களும் அவர்களைக் சூழ்ந்துக் கொண்டனர்.

"என் அத்தானை...மனோகரனை! அவர் இந்த வண்டியில் வரவில்லையா? எந்தவண்டியில் வருகிறார்?" ஆத்திரம், அவசரம், அன்பு, ஆர்வம் எல்லாம் கலந்துவந்தது, அவளது பதிலில்!

"அம்மா! உங்கள்பெயர் ரஞ்சிதம் தானே!"

"ஆம் ஐயா! என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்? எனது அத்தான கூறினாரா?" இதைக் கேட்கும்போதே அவளது கன்னங்கள் சிவந்தன.

"ஆமாம், சகோதரி!" என்று கூறியபடியே ஒரு அழகான பையைக் கொடுத்தார். அதில் வாடிய மனோரஞ்சித மலர்கள் நிரம்பி இருந்தன. வாடியிருந்தாலும், வாசம் இருந்தது. ஒரு குறிப்பும் இருந்தது, 'இன்று எதிரிகளைத் தாக்கச் செல்கிறேன். நான் திரும்பிவராவிட்டால், இதனை எனது ரஞ்சிதத்திடம் சேர்ப்பித்துவிடவும்' என்று.

அதைக் கண்டாள். அடுத்த கணம் 'அத்தான்' என்ற குரல் அப் புகைவண்டி நிலையத்தையே அதிர வைத்தது.

"சகோதரி. உங்கள் அத்தான் செய்துள்ள தியாகம் மகத்தானது. உங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் அவரின் பிரிவு ஈடுசெய்ய முடியாத இழப்புதான். இந்த நாட்டை, இந்த நாட்டில் வாழும் கோடானுக் கோடிப் பேரை வாழவைக்க அவர் தன்னைத்தானே பலியாக்கிக் கொண்டார். எதிரியிடமுள்ள சக்தி வாய்ந்த ராடார் சாதனத்தை அழித்து ஒழித்தாலல்லாது நமக்கு வெற்றியில்லையென்ற முடிவில், மனோகரன், தன்னைத்தானே 'தியாகம்' செய்துகொண்டார். ராடார் அழிந்தது. ஆனால் மனோகரனின் புகழ் அழியவில்லை சகோதரி! தாங்கிக்கொள்ளுங்கள் இந்தத் துக்கத்தை. இமயமலை இருக்கும் வரை அவரது புகழ்க்கொடி பறந்து கொண்டிருக்கும். கங்கையும், காவேரியும் ஓடும்வரை, அவர் புகழ்ப் பாடிக்கொண்டிருக்கும்..."

ரஞ்சிதம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால்அவளது நயனங்களோ நீர்வீழ்ச்சிகளாயின!

என் அத்தானை நான் இழந்தேன். என் வாழ்க்கையின் தீபம் அணைந்தாலும், பல்லாயிரக் கணக்கானோர் வாழ்வில் தீபம் ஏற்றினாரே என்று நான மகிழ்கிறேன். "நாம் செய்யாவிட்டால், வேறு யார் செய்வது?" என்ற நினைவோடு பணியாற்ற வேண்டும் என்பார். சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் செய்து காண்பித்துவிட்டார்! இதோ! மனோரஞ்சித மலர்கள்! அவருக்குப் பிரியமானமலர்கள்! அவருககு அளிக்கக் கொண்டுவந்தேன். எனககு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள், அவரின் நினைவுச் சின்னமாக. இம்மலர் வாடினாலும், மணம் வீசிக்கொண்டே இருக்கும். அதுபோல என் அததான மறைந்தாலும், அவர் புகழ் மணம் வீசிக்கொணடே இருக்கும்." ரஞ்சிதம், தனது ஆற்றொணாத்துயரை அடக்கிககொண்டு, பேசியது எல்லோரையும் உருகச் செய்தது மட்டுமல்ல, அவர்களின் எண்ணத்தில் அவளை உயரச்செய்தது. அன்றொருநாள் கணவன் சுடப்பட்ட மறுகணம் கடமை ஆற்றிய ஜாக்குவிலியன்போல ரஞ்சிதமும் கடமை ஆற்றியது, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

மிக பவித்திரமாக, புனிதமாக, ஒவ்வொருவரும் அவளிடமிருந்து மலரைப் பெற்றுக்கொண்டனர். அத்தானுக்கு மட்டும் உரித்தான இம்மலர்களை எல்லோருக்கும் உரிமையாக்கியதைப்போல், தனக்குமட்டும் எல்லோருக்கும் உரிமை அத்தான், எல்லோருக்கும் உரிமையாகிவிட்டார் என்று எண்ணினாள் ரஞ்சிதம்.

அவளது கால்கள் மனோரஞ்சித மரத்தடியை நாடிச்சென்றன. அம் மரம், அடியோடு சாய்ந்திருந்தது. ஊழிக்கூத்தின் கைங்கரியம் அது. தனது அத்தானே அங்கு நெடுமரமாகச் சாய்ந்திருப்பது போன்ற பிரமை அவளுக்கு. அடைப்பட்டுக் கிடந்த, அவளது கண்ணீர்க்குளம், உடைப்பட்டு, வெள்ளம் புரண்டது. அழுதாள். ஓயாமல் அழுதாள்.

வீட்டிற்குச் சென்றாள். வெள்ளை உடை அணிந்துகொண்டாள். அவளது அத்தான் சூடிய மாலையை, அவன் படத்திற்குச் சூடினாள்.

அத்தான்! என் கழுத்தில் தாலிக் கயிறு ஏறுவதற்குமுன்பே நான்விதவையாகிவிட்டேன். ஒன்றுபட்டஇரு உள்ளங்களைவிட அக் கயிறு சக்தி வாய்ந்ததா? நான் உங்கள் மனைவி; நீங்கள் என் கணவர். உடலால் பிரிந்திருந்தாலும், உள்ளத்தால் சேர்ந்து வாழவோம், என்ற திருப்தி எனக்குப் பரிபூர்ணமாக இருக்கிறது அத்தான்! ஆண்டவன் நம்மை ஒன்றுசேர்க்கவில்லை. ஆனால் சாவு நம்மை ஒன்றுசேர்க்கும் அத்தான். ஒன்றுசேர்க்கிறது" என்றுக் கூறிக் கொண்டே சுருண்டு விழுந்தாள். அவளது ஆவியும், அத்தானைத் தேடிப் புறப்பட்டது. அத்தான் செத்ததிற்குச் செத்தாள் இத்தென்னாட்டு அன்னம்.

மனோகரனின் படத்தை அலங்கரித்த அந்த மனோரஞ்சித மாலை அவள்மீது விழுந்தது. மனோகரனும் அவளதுவருகையைஎதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறானோ?

இந்த மனோ-ரஞ்சிதம் காலமெல்லாம் — நாட்கள் தேய்ந்தாலும் ஆண்டுகள் உருண்டோடினாலும் மணம் வீசிக்கொண்டுதானே இருக்கும்?

●

# செல்வத்தைத் தேடி

[ கருணாநந்தம் ]

ஆங்கிலம் பேசும் அழகுத் திரைப்படத்தைப்
பாங்குடன் கண்டு, பரிந்துரைத்தார் நண்பர்.
விருப்போடு வேண்டியதால், சின்னாள்முன் சென்றேன்;
சிரிப்பினை மூட்டியே, சிந்தனைக்கும் நல்விருந்தாய்
நேர்ந்தது. மேனாட்டார் நேர்த்திமிகு வாழ்வுரைக்கத்
தேர்ந்த சிறந்தகதை! சீராம் கருத்துக்கள்!
பெண்டிர் பலமணம் பெற்றிடும் கொள்கையங்கு
உண்டென்ப தால்அஃது உணர்த்தும் கதையெனினும்
வெற்று நகைச்சுவை வீணும் எனக்கருதி,
மற்றொரு நற்கருத்தும் மாண்போடு தந்தனரே!
செல்வங் குவித்தும் திருப்தி யடை யாமல்
பல்வகை யாற்பாடு பட்டிடுவர், எப்போதும்
மென்மேலுஞ் சேர்க்க விழையும் அமெரிக்கர்,
நன்முறையில் இல்வாழ்வை நாடி அனுபவியார்;
காதலெனும் பேரின்பங் காணா இயந்திரமாய்
மோதிடுவர், என்று மொழியுந் திரைப்படமாம்!

எத்தனையோ மாநிதியை ஈட்டித் திரட்டிடினும்
சித்தங் களிப்படையச் செய்யாது போமாகில்,
எற்றுக்குச் செல்வம், எதிரி மதித்திடவோ?
வெற்றுத்தாள் தாமே, விலைவென்ன? என்பதெலாம்
காட்சிகள் வாயிலாய்க் காட்டித் தெளிவுறுத்தும்
மாட்சிமை வாய்ந்த மகத்தான வாய்ப்பாம்!
எளிய குடும்பத்தின் ஏழையாம் தந்தை,
துளியும் விரும்பார் தூய்மையற்ற செல்வத்தை;
பாதகத்தின் வேராயும், பாவத்தின் தூராயும்
தீதளிக்கும், நல்ல திறனழிக்கும் நாணயங்கள்
தேடி அலையாமல் சிந்தை நிறைபவராம்!

நாடுபோற்றும் அந்த நற்குணத் தந்தையின்
தத்துவம் அத்தனையும் தாங்கும் திடசித்தம்
மொத்தமாய்ப் பெற்றவொரு மோகனப் பெண்மடவாள்
இன்பக் களஞ்சியமாய், ஏழ்மை நிலைவிரும்பி,
அன்பின் உருவாய், அழகியாய் வந்தவளைக்
கண்டான் எழில்காளை! காதல் உருவாக்கிக்
கொண்டாட எண்ணினான்! கூடுதற்கும் என்ன தடை?
ஓர்நாள் இருவருமாய் உந்துவண்டி மீதேறி
ஊர்சுற்றி வந்தார்; ஒருவன் எதிர்ப்பட்டான்!
தோற்றத்தில் நல்ல துணிவுடைமை, தூய்மை,யறிவு,
ஆற்றல், எளிமை, அடக்கம் மிகுசான்றோன்!
அன்னவன் மீதே, அவர் சென்ற உந்துவண்டி
தண்ணீரைச், சேற்றைத் தவறி இறைத்துமே—
ஆத்திரங் கொள்ளான்; அமைதியாய் நின்றிருந்தான்!
பார்த்திருந்தாள் நங்கை; அவன்பண்பிற் கடிமையாய்
ஏற்ற மணவாளன் இவ்வாய்மை யாளன்எனப்
போற்றிப் புகழ்ந்து, புதியவனைக் கைப்பிடித்தாள்!
இல்லாதான் இல்லாளாய் ஏகினையே என்றவள்தாய்
பொல்லாச் சினங்கொண்டு பொங்கி வசைமொழிந்தாள்!
"அம்மா! பணந்தான் அநீதியின் தோற்றுவாய்!
இம்மா நிலத்தில் எனக்குப் பொருள்வேண்டா!
செம்மையுற வாழ்வேன், சிறப்பான ஏழ்மையிலே!
எம்மைவாழ்த்" தென்றவள் ஏகிவிட்டாள், தாய்மறுத்தும்!

நீரோடை ஓரத்தில் நீண்ட பழங்காலக்
கூரைவீ டொன்றில் குடியேறி, இன்பமுடன்,
ஆடம் பரமின்றி, அன்பால் அகமொன்றித்
தேடரிய வாழ்வில் திளைத்தார் இருவருமே!
ஒன்றாய்ப் பணியாற்றி, உள்ளதைக் கொண்டுமனம்
நன்றாய் மகிழ்ச்சியுற, நல்லறம் பேணிவந்தார்!

உந்துவண்டி ஏற்றி,முன் ஊர்சுற்றிக் காட்டியவன்
வந்திட்டான், இங்கிருவர் வாழ்வதனைக் கண்டறிய—
தன்னை மணக்காமல், தன்போக்கில் ஏழையின்
பின்னே நடந்திட்ட பெண்ணைப் படம்பிடிக்கக்—
கந்தலுடைக் கோலம் கண்டான்; வறுமையிலும்
சிந்தை தளராமல் சிற்றெறும்பாய்ச் சுற்றிவந்தாள்!
சேர்ந்து சமையல்கள் செய்திட்டாள்; பெய்மழையால்
நேர்ந்த ஒழுக்கினையே நேர்செய்தாள்; மேல்நனைந்தாள்!
"தாக்குந் துயரெல்லாம் தான்செய் பிழையென்று
நோக்கமாட் டாளோ? நொடியும் உணராளோ?"
என்றேங்கி நின்றான், ஏமாந்த வாலிபனும்!
சென்றதை எண்ணினதால் சீற்றம் பிறந்ததுவே!

அன்று மறுநாள், அகன்றமண வாளனை
நின்றெதிர் பார்த்தனள்; நேரந்தான் சென்றது!





மீண்டிட வில்லை! விழிநீர் பெருகிடவே—
“மாண்டிட என்னைவிட்டு மற்றெங்கே சென்றிட்டார்.
கண்டுவரு வேன்”எனக் கண்ணீர்க் கனலடக்கிக்
கொண்டு, புறப்பட்டாள்; கூடுகின்ற சந்தைக்கு!
மக்கள், பெருவெள்ளம் மண்டியெதிர் பாய்ந்ததுபோல்
மிக்கவிரை வாகவொரு திக்கிற்செலக் கண்டாள்.
ஆங்கொருவன் கூவும் அமுதக் குரல்கேட்டாள்;
“வாங்கிடவே வாரீரோ, வண்ணப் பொருட்களையே!
இப்பெரிய வாய்ப்பினிமேல் எப்போதும் கிட்டாது!
தப்பினால் மிக்க தவறாகும், செப்பிடுவேன்!”
கேட்டார்ப் பிணிக்குங் குரல்கேட்டு, மக்களின்
கூட்டம் விரைந்து குவித்தது வாணிபத்தை!
மங்கை திகைத்து மயங்கி விழுமுன்னர்—
தன்கணவன் தான்வணிகன் என்ப துணர்ந்தாளே!

தன்னையவன் நோக்கித் தலைகுனிந்த ஓர்கணத்தில்
புன்னகை பூத்துப் புகுந்திட்டான் வாணிபத்தில்!
ஏக்கம் பெருகிடவே ஏந்திழையாள் தானெருங்கி
நோக்கினாள்; “நேரம் நொடிப்பொழுதும் வீணாக்கேன்!
பார்த்தனையா, மாமலைபோல் பண்டம் குவிகிறதை!
தீர்த்திடுவேன் நம்வறுமை செல்கநீ நிம்மதியாய்!”
என்றான், முழுகினான் ஈடற்ற வாணிபத்தில்!
ஒன்றல்ல பற்பலவாய் ஓங்கியதே பல்கி
‘குருதி குடித்திடும் கொல்புலியின் நாவிற்
பிறிதோர் சுவையும் பிடிக்காதாம்! மாந்தரையே
கொன்று சிவப்பிரத்தம் கொள்ள வெறியாகும்’—
என்றுரைப்பர் காட்டு விலங்கின் இலக்கணமாய்!
பொன்னாசை கொண்டோரும் போதுமென எண்ணாமல்,
எந்நாளும் பித்தமிக ஏறி அலைவாராம்!

இந்நிலையில் ஆயினான் இன்பவல்லி காதலனும்;
தன்னிலையை மற்றவன் தாழ்வாகப் பேசியதால்—
சூடு பிறந்ததும், சூறைப் பெருங்காற்றால்
ஆடும் மரம்போல ஆசை அலைக்கழிக்க,
வெற்றி பெறுமட்டும் வேறெதையும் காணாமல்
உற்ற மனையாளின் உண்மையன்புந் தான்துறந்து,
பூந்தோட்டம், மாடு, மனை, பொன், மணிகள், புத்தாடை
நீந்தியெழும் செல்வ நிலைக்களனாய் ஆள்அம்பும்—
எங்கும் பளபளப்பும், ஏற்ற மிகுவாழ்வும்,
தங்கியிவை தான்துய்க்கத் தக்கதாய் ஓய்வில்லை!
பின்னும் பொருள் குவிக்கப் பித்தாய் அலைகின்றான்!
பொன்னாள்தனியாய்ப் பொசுங்குகின்றாள் வெம்மையினால்
ஓடுகின்றான்; போர்போராய் ஓங்கியெழும் செல்வத்தைத்
தேடுகின்றான், அவ்வழியில் தேய்ந்து மடிந்தானே!!
காதலித்து வாழவந்தாள் கைம்பெண்ணாய் மாறித்
தீதளிக்கும் செல்வத் திரளையே மேல்சுமந்து,
“விந்தை மிகுபணமே, வீணாய் உனைத்தேட
அந்தோ,என் அன்பர் அரியஉயிர் நீத்தாரே!”
விம்மினாள்! எண்ணியே வெய்துயிர்த்தாள், பாழானாள்!
அம்மவோ! ஆரணங்கு கைம்மைக் சுறுப்புடையில்
கண்ணாளன் இன்னுயிரைக் கவ்வுங் கடும்பாம்பாம்
மண்ணாகும் செல்வத்தை வைதாள், சபித்திட்டாள்;
கொட்டிக் கிடக்கின்ற கோடுயர்ந்த மாமலைபோல்
கிட்டியுள்ள செல்வத்தால், கெட்டுவிட்ட இல்வாழ்வும்,
மன்னவனும் மீண்டு வரவகையும் இல்லையன்றோ?
‘என்னே,என் ஆவலெல்லாம் ஏகியதே; ஆவியில்லாக்
கூடாகி ஏன்நான்இக் கோடிபொருள் தானடைந்தேன்.
வாடா மணவாழ்வு வாய்ப்பதற்கு யாதுசெய்வேன்?
என்பதெலாம் வாய்விட் டியம்பவில்லை; நெஞ்சத்துத்
துன்பமெலாம் ஒண்முகத்தில் தோய உணர்த்திட்டாள்
இங்கே இனிமேலுந் தங்கினால் முன்நினைவால்
சங்கடங்கள் மேவிவரும்; சாவே சிறப்பென்னும்
எண்ணம் மிகும்,எனவே ஏக்கம் மறைப்பதற்கு—
விண்ணூர்தி ஏறி வெளியூர் புறப்பட்டாள்;

வானிற் பறக்கையிலும் வற்றாச் சுறுசுறுப்பாய்த்
தேனின் இனியாளின் சிந்தை கவர்ந்திட்டான்,
சீமான் மகனொருவன்; செல்வத்தின் மேற்புரண்டும்
சாமான்ய மாகச் சகியின் மனம்புகுந்தான்!
மீண்டும் புதுவாழ்வு மேவியது மங்கைக்கு!
தூண்டிடும் அன்பால் துவங்கினாள் இல்லறத்தை!
சொத்து மிக உண்டு. சுகந்தானே தேவையெனச்—
சத்தான காதலிலே சார்ந்திருக்க முந்தினாள்!
ஆடலும், பாடலும், ஆரவா ரத்தோடு
கூடலும், கும்மாளம் போடலும், கோலமுடன்
ஒப்பனை செய்தே உலகம் பின்பற்றச்
செப்பனிட்டாள் வாழ்வைத் திருப்திதான் பெற்றாளோ?
அல்லவே! எல்லாம் அவட்காகவே அன்று!
நல்ல விளம்பரத்தால் நானிலம் கொண்டாட
சூழல் அலுத்தது சுற்றிச் சலித்திட்டாள்!

“வாழ விரும்பினால், வாணிபத்தைக் கைவிட்டுக்
கொஞ்சுமெழில் கூடிக் குலவும் இயற்கையுடன்
தஞ்சம் அடைந்திடுவோம், சாந்தம் நிலவுமென்றாள்,
சம்மதித்தான்; வேளாண்மை, சார்புள்ள மாடு,கன்று!
நிம்மதிதான் ஓரளவு நீள நிலைத்ததோ?
“எம்பசுக்கு ஈடில்லை” என்றே மகிழ்ந்தவனைக்
கொம்பினால் குத்திக் கொலையில் முடித்திடவே
அய்யகோ! மீண்டும் அருவியாய்க் கண்ணீரைப்
பெய்தனளே! யாதொன்றும் செய்வ தறியாளே!
கைம்மைநிலை யுற்றாளைக் கண்டு, வழக்கறிஞர்,
கைம்முதல் கோடி கணவன் விடுத்ததெனத்
தந்து திரும்பினார்! சிந்தைமிக நொந்தனளே!
“வந்துவந்து வெள்ளமாய் வற்றாமல் சேர்கின்ற
செல்வத்தால் யாதுபயன், சீரழிந்து போனபின்னே?
நல்வழியில் வந்ததன்றே! நாதர் இருவரையும்
வாரிக் கொடுத்திட்டு வாழ்வை இழந்திட்டேன்.

கூரிய கண்ணைவிற்றுக் கோடிபொன் வாங்கியென்ன?
கெட்டவளே! கீழ்மகளே? காதற் கிழத்தியெனத்
தொட்டார் பிணமாவர்! துன்பச் சுரங்கமிவள்!
என்று பலவாறாய் ஏசுமன்றோ இவ்வுலகம்?”
அன்றவள் நெஞ்சுபடும் அல்லல் அறியாதே!
நாடுவிட்டு, நாடுசென்று நலிந்த உளந்தேற
நாடுகின்றாள், பாரிசெனும் நாகரிகப் பேரூர்!

ஓவியந் தீட்டிவரும் ஊதியம் போதாமல்—
ஆவிவண்டி ஓட்டி அதனைச் சரிக்கட்டும்
கள்ளமிலா வெள்ளைமனப் பிள்ளை ஒருவனது
உள்ளம் பிடித்ததால் ஒப்பிவிட்டாள் வாழவே!
செல்வமில்லை; ஆகச் சிறப்பான ஏழ்மையிலே
நல்விதமாய் இல்லம் நடத்தி மகிழ்ந்தனளே!

தோழன் குரங்கொன்று தூரிகையால் தீட்டுவதை
ஆளன் திருத்தி, அழகாய் மெருகூட்டி
விற்பனை செய்வான், விலையும் அதிகமில்லை!
அற்புதமாய் ஓர்ஆள் அதிகப் பொருள்தந்தே
ஒப்பற்ற ஓவியம் என்றே உயர்த்திவிட—
அப்பொழுதே ஆபத்தும் ஆரம்ப மாகியதாம்!
கோடுகளே காவியமாய்க் கொட்டியதே ஓவியமாய்!
நாடு புகழ்ந்தது, நாடிவந்து செல்வம்
குவிந்தது; கோல மயிலனையாள் கொள்கை
அவிந்தது! மாய்ந்தது அவள்வேண்டும் ஏழ்மை!
விழாஎடுத்தார், ஓவியனும் வெற்றி உலாவந்தான்!
அழாக்குறையாய்ப் பெண்ணழகி அங்கே குமைந்திட்டாள்
தேவை மிகுதியினால் தேர்ந்த பொறியமைத்தான்!
ஓவியங்கள் ஏராளம் உற்பத்தி செய்துவிற்றான்!
கண்டு பிடித்த கருவியே காலனாய்
உண்டதே ஆவி; உடன்விதவை ஆயினளே!
ஓவியன் ஈட்டிவைத்த ஒப்பரிய பொற்காசும்
பாவியவள் மாநிதியின் பண்டாரஞ் சேர்ந்தனவே!
கல்நெஞ் சுருகும் கறுப்புடையிற் கண்டவர்க்கே;
உள்நெகிழும் உல்லாச வல்லி உயிர்வாதை!
சோர்ந்தடங்குஞ் சித்தத்தின் தொய்வு நிறைவதற்குள்
தீர்ந்தது சின்னாளே! சீமாட்டி ஓர்தினத்தில்
சிற்றுண்டி மாளிகை சென்றாள், அமர்ந்திருந்தாள்.
உற்றவர் உள்ளம் உவகைக் களிகொள்ள,
ஆடினான் கோமாளி ஆங்கொருவன்; எக்களிப்பால்
பாடினான்; யாவரும் பல்தெரியத் தாம்சிரித்தார்!
“ஏழையாய் உள்ளான்; எனக்கும் நகைப்பூட்டி
வாழவழி காட்டுவான் வாராது துன்பமெனக்—”
கண்மணி நான்காம் கணவனாய்க் கல்யாணம்
பண்ணினள், நல்ல பயனடைவோம் என்றுநம்பி!
வேடம் பலபூண்டு வேடிக்கை காட்டிடுவான்;
ஆடம் பரமில்லை; ஆர்ப்பரிப்பு தானுமில்லை;
தொல்லையில்லை, தூயோன், துளியும் பணத்தாசை
இல்லையில்லை, என்றும் எனைப்பிரியான், போதுமே!
கிட்டிவந்த சொற்பத்தில் கிள்ளை மகிழ்வுடனே
எட்டிவிட்டோம் இன்பத்தின் எல்லைஎன இருந்தாள்.
பேரிடி தாக்கியது பேதைப் பசுமரத்தில்!
ஆரிடம் கூவி அரற்றுவாள் இந்நிலையை?
கும்பி கழுவமட்டும் கோமாளி வேடத்தை
நம்பியிருந்த அவள் நாயகனைச் சூழ்ந்துகொண்டார்.
“என்னே உனதழகுக்கு எங்கள் திரைப்படத்தில்
முன்னேற்றங் காண முயல்வோம்; விரைவாக
உச்சிக்குச் செல்வாய்; உயர்வாய்,” எனக்கூறி
மெச்சினார். இச்சையுற்றான், மேனிலைக்கும் சென்றிட்டான்!
மன்னன் அரண்மனைபோல் மாளிகை, வாகனம்,
பின்னே அடிவருடப், பேச்சைச் செயலாக்கப்



பல்லோர் நிறைந்திட்டார்! பம்பரமாய்ச் சுற்றியே
அல்லும் பகலும் அயராப் படப்பிடிப்பாம்!
ஒய்யாரம், உல்லாசம், உற்சாகம் உண்டெனினும்—
அய்யோதன் அன்பிற் கரசியிடம் இன்பமாய்
வாய்ச்சொல்லும் பேச வகையில்லை; நேரமில்லை!
காய்ச்சிய நெய்யாகக் கண்ணாள் உருகுகின்றாள்!
பண்பட்ட வீரனைப் பாராட்டிப் போற்றிட
நண்பர்கள் கூட்டம் நடத்திய ஓர்விழாவில்—
பல்லாயிரம் பேர்கள் பார்த்த நெருக்கடியில்
கொல்லாமல் செத்தான். குவலயம் மோதியழ!
மீண்டும் கறுப்புடையும்; மீண்டுமந்தக் கண்ணீரும்;
மாண்டவனின் செல்வமும் வேண்டாது வந்தனவே!
சோதனையோ என்று சோகக் கடல்மூழ்கி
வேதனைச் செல்வம் வெறுத்தாள் விடம்போல!
பட்டதெலாம் போதுமிந்தப் பாழான செல்வத்தால்
விட்டுவிட வந்தும் விடாமல் துரத்துமே!

திட்டமொன்று தீட்டித்—திரளான என்சொத்தைக்
கெட்டழிந்து போனவரின் கீழ்மை அகற்றுதற்கு
நன்கொடையாய், நாடாளும் நல்லவர்பால் நல்குவேன்!
என்கையிற் காசுகளும் ஏனிருக்க வேண்டுமென
எண்ணி, அரசாங்கம் ஈந்த அலுவலர்பால்
நண்ணிஅவள் திட்டம் நவின்றதுதான் தாமதம்!
சொப்பனத்திற்கூடச் சுவைத்தறியா மாநிதியை
எப்படித்தான் ஈந்திடுவாள் ஏதோ மனப்பிரமை
என்றவரும் அஞ்சி, ’ எடுத்துச்செல் வைத்தியர்பால்!
சென்றிவளின் சித்தம் திடுமென்று பேதலித்த
செய்திசொல்!” என்றார். சீமாட்டி அங்ஙனமே
எய்தி, மருத்துவர்க்கு யாவும் விரித்துரைத்தாள்:
கேட்ட நிபுணருமே கீழே மயங்கிவிழப்—
பாட்டாளி ஆடையிற் பண்டைய ஆள்வந்தான்!

உந்துவண்டி ஏற்றிமுன் ஊர்சுற்றி வந்தானே—
முந்திப் படமெடுக்க முன்வந்து தோற்றானே—
அன்னோன் வளங்குன்றி, ஆளாய்ப் பணிபுரிந்தான்!
‘முன்னாளில் நம்மை முதன்முதலாய்க் காதலித்தோன்,
வாழ்வுநலங் கெட்டு வறுமையில் வாடுகின்றான்,

வாழ்வளிக்க வல்லான், வளரா எளிமையினுல்
என்றுந் துணையிருப்பான், இன்பந் தனிமையுடன்
குன்றுதென் றெண்ணிக் குறித்தாள் கணவனுக!
ஆண்டுகள் சிற்சில ஆயின மேன்மையாக!
தீண்டுங்கால் மெய்க்கின்பஞ் சேர்க்கும் மழலைகள்
மூன்று பிறந்தன; மோகம் குறையவில்லை!
ஈன்றவள் நெஞ்சறிந்தே ஏழை உழவனும்
ஏர்முனையிற் பாடுபட்டான், ஏற்றமுடன் வாழ்ந்தானே!

ஓர்நாள் உழுகையிலே நற்கழனி உள்ளிருந்து
பீறிட்டு மேற்கிளம்பிப் பேருருவி போற்பாய்ந்தே!
ஆருய்ப் பெருகியதே; அத்தனையும் மண்ணெண்ணெய்!
துள்ளிக் குதித்தான் துணைவனவன் கள்வெறிபோல்!
உள்ளந் துணுக்குற்ருள்-'உற்றதே தீமையினி;
ஏராளத் தங்கமும் எண்ணெய் வயல்மூலம்
சேரத் துவங்கிடுமே, தீர்ந்திடுமே இல்வாழ்க்கை!
எம்மவர் சாவாரோ! ஏனிந்தச் செல்வநிலை?
அம்மவோ, மீண்டும் அகலாக் கறுப்புடையோ?'
என்று புலம்பி இதயங் குமுறுகையில்—
"அன்றுநீ ஏர்முனையில் ஆழத் துளைத்தது,
நீளப் புதைத்தளம் நெய்செல் குழாயாகும்!
பாழாக்கிப் போட்டனையே பாவியென அண்டையுள்ளார்
கூவியது கேட்டாள், குதூகலித்தாள்! கோவையிதழ்ப்
பாவை தவிர்த்தாள் பதற்றமும்! "தேவையில்லா
ஆபத்துச் சூழ்ந்ததென அஞ்சினேன், அம்மம்மா!
பாபத்தைத் தூண்டிவிடும் பண்பற்ற செல்வமே!
இல்லறத்தால் ஏற்படும் ஈடற்ற இன்பத்தைக்
கொல்லவரும் நச்சரவே! கோடி கொடுத்தாலும்,
எத்தனையோ தோல்வி இடையூறு நேர்ந்தபின்னர்க்
கொத்து மலராய்க் குவிந்திட்ட பேரின்பம்
வாய்த்திடுமோ?" என்ருள், மனமகிழ வாழ்ந்திட்டாள்!

பார்த்துவந்த பின்புநான் பாடம் மறக்கவில்லை!
"செல்வத்தைத் தேடித் திரிவதால், ஓடுவதால்,
பல்விபத்தும், பாழும், பயனில்லா வாழ்வுமே
சித்திக்கும்; என்று சிரிப்பூட்டும் நற்படத்தில்
தித்திக்கும் நன்மருந்து சிந்தனைக்கும் தந்தாரே!
ஆளுந் திறமென்ன அற்புதமாய்!" என்றெண்ணி
நாளும் மகிழ்ந் திருந்தேன், நன்கு!

# கோரஸ்!

இன்று நாடெங்கிலும், நாடகத்திற்குப் புதிய பொலிவும் வலிவும் ஏற்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் உச்சியிலிருந்து உலகாண்டநாடகம், இடைக்காலத்தில் தாழ்ந்து, தரங்குன்றி, நசுங்கிக்கிடந்து, இப்போது மீண்டும் தலையெடுக்கத் தொடங்கி இருக்கிறது.

தற்காலத்தில், நாடகக் காட்சியின் தொடக்கத்தில், நாடகத்தில் பங்குபெறும் கதாபாத்திரங்கள் அனைவரும் ஒருங்குகூடி நின்று ஏதோ ஒரு வாழ்த்துப் பாடலைப் பாடிவிட்டுப் போதல் மரபாகி இருக்கிறது. இப்படிப் பாடிப்போதலுக்குக் கோரஸ் என்றும் பெயரிட்டு வழங்கப்படுகிறது.

ஆனுல், இந்தக் "கோரஸின்" கதையைக் கேட்டால் வியக்கத்தோன்றும்!

உலகின் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு காலத்திலும் நாடகங்கள் பற்பல காரணங்களுக்காக நடத்தப்பட்டுக்கொண்டுவந்தன.

இந்த நாடகங்களில் 50-பேருக்குக் குறையாத ஒரு குழுதோன்றி நாடகத்தோடு ஒட்டியோ, ஒட்டாமலோ, அரசாங்கத்தின் கருத்துக்களையோ, அரசனின் கட்டளையையோ, இவையேயன்றி வெறும் நகைச்சுவையை மாத்திரமோ உதிர்த்துச் செல்லுமாம்! இக்குழுவிற்குத்தான் கோரஸ் என்று பெயராம்!

இன்றைக்குத் திரைப்படங்களுடன் அரசாங்கச் செய்திப் படங்கள் காட்டப்படுவதைப்போல், அந்தக் காலத்தில் 'கோரஸ்' குழுவை, அரசாங்கமேகூட அமைத்து நாடகங்களில் தோன்றச் செய்தும் வந்திருக்கிறதாம்!

கி. மு. 526-ல் கிரேக்கத்தைச் சேர்ந்த அல் சிலியஸ் என்ற நாடகாசிரியர்தான் முதன் முதலில் இக்குழு உறுப்பினர்களை 50-லிருந்து 15-ஆகக் குறைத்தாராம்.

ஏனென்ருல் இக்கோரஸ் குழுவினரும், கதாபாத்திரங்களும் ஒரே மேடையில், கதையை நடத்திச் செல்வதில் பெருங்குழப்பம் விளைவித்து பார்ப்பவர்களைத் திக்கு முக்காடச் செய்துவிடுவார்களாம்!

இதன்பின், பல்வேறு நாடுகளில் இக்குழு உறுப்பினர்கள் 15-முதல் 50-வரை இருந்திருக்கிருர்கள். இதன் உயர்ந்தபட்ச அளவு 50-தானும்!

காலமாறுபாட்டில், தன்னையும் ஆட்படுத்திக்கொண்ட 'கோரஸ்' குழு நாளாவட்டத்தில் தன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது.

பிற்காலத்தில் 'கோரஸ்' ஒருமரபுக்காக மட்டுமே வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் ஒரு கதாசிரியர், இக்குழுவை, நாடகத்தின் முன்னுரையைக் கூறுவதற்காகப் பயன்படுத்தி வந்தாராம்!

19-ஆம் நூற்ருண்டின் மையகாலத்தில் இசைநாடக வடிவில் தன்னை உயர்ப்பித்துக்கொண்ட கோரஸை, தற்கால நாடகத்தில், அது தொழில் முறையினரால் நடிக்கப்பட்டாலும், பயில்முறையினரால் நடிக்கப்பட்டாலும், நாடகத் தொடக்கத்தில், பாத்திரங்களே திரை மறைவில் நின்று 'கடவுள் வணக்கம்' 'தமிழ்த்தாய் வாழ்த்து' என்பதன்பேரால் நீண்ட நெடும்பாடல் மூலம் நினைவுபடுத்திக்கொண்டு வருகிருர்கள்.



# கலைஞர் பெயர்களைப் பெற்ற ஊர்கள்

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

சங்க காலத்தில் (கி. பி. 300-க்கு முற்பட்ட காலத்தில்) இயல்-இசை-கூத்து எனத் தமிழ் மூவகைப்பட்டு இயங்கியது. இயற்றமிழ் என்பது செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களுமாகும். இசைத் தமிழ் என்பது தாளத்துக்கு இயையப் பண்ணோடு பாடப்படும் தமிழ். பரிபாடல் பாக்கள், பிற்காலத் திருமுறைப் பாடல்கள் முதலியன இதன்கண் அடங்கும். கூத்து என்பது நடனமும் கதை தழுவிவரும் கூத்துமாகும். இயற்றமிழில் வல்லவர் புலவர் எனப்பட்டனர்; இசைத் தமிழில் வல்லுநர் பாணர் எனப்பட்டனர்; கூத்துத் தமிழில் வல்லவர் கூத்தர் எனப்பெயர் பெற்றனர்.

பழந்தமிழ் வேந்தர் இம்முத்தமிழ் வாணர்க்கும் நிலங்களைப் பரிசிலாக அளித்தனர். அந்நிலங்கள் காலப்போக்கில் ஊர்களான பொழுது, அவற்றை முதலிற் பரிசிலாகப்பெற்ற கலைவாணர் பெயர்களையே தாங்கி நிற்கலாயின போலும்! அவை இன்றளவும் அப்பெயர்களோடு இருத்தலைக் கீழே காண்க:



## புலவர் பெயர் பெற்ற ஊர்கள்

| எண்: | ஊரின் பெயர் | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|---|
| 1 | புல்வனூர் | தென்னார்க்காடு | கூடலூர் |
| 2 | புலவன் குறிச்சி | தஞ்சாவூர் | அறந்தாங்கி |
| 3 | புலவ(ன்) நல்லூர் | ” | நன்னிலம் |
| 4 | புலவ(ன்) நத்தம் | ” | பாபநாசம் |
| 5 | புலவ(ன்) நத்தம் | ” | ” |
| 6 | புலவன்காடு | ” | பட்டுக்கோட்டை |
| 7 | வெண்பாவூர் | திருச்சிராப்பள்ளி | பெரம்பலூர் |

| | | | |
|---|---|---|---|
| 8 | புலவன் ஏந்தல் | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் |
| 9 | புலவன் குட்டம் | ” | பரமக்குடி |
| 10 | புலவர் வேலங்குடி | ” | ” |
| 11 | பொய்யாமொழி ஏந்தல் | ” | சிவகங்கை |
| 12 | புலவன் ஏந்தல் | ” | ” |
| 13 | புலவன் ஏரி | ” | ” |
| 14 | புலவன் வயல் | ” | ” |
| 15 | புலவர் மருதங்குடி | ” | ” |
| 16 | புலவன்பட்டி | ” | திருப்புத்தூர் |
| 17 | இலக்கணி வயல் | ” | திருவாடானை |
| 18 | புலவன் வயல் | ” | ” |
| 19 | புலவன் பாளையம் | கோவை | ஈரோடு |




| எண்: | ஊரின் பெயர் | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|---|
| 1 | பாணம் பாக்கம் (பாணன் பாக்கம்) | செங்கற்பட்டு | திருவள்ளூர் |
| 2 | பாச்சேரி (பாண் சேரி) | தென்னார்க்காடு | கள்ளக்குறிச்சி |
| 3 | (கீழ்ப்)பாச்சேரி | ” | ” |
| 4 | இதம் பாடல் | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் |
| 5 | பாடுவான் ஏந்தல் | ” | ” |
| 6 | பாணன்—பரணன் | ” | சிவகங்கை |
| 7 | பெரும்பாச்சேரி (பெரும்பாணர் சேரி) | ” | ” |
| 8 | பாணன் வயல் | ” | திருப்பத்தூர் |
| 9 | பாணன் வயல் | ” | ” |

# கூத்தர்பெயர் பெற்றஊர்கள்



உள்ளக் குறிப்புத் தெரியும்படி 'விறல்' (திறமை)பட நடித்தவள் 'விறலி' எனப்பட்டாள். இப்பெயர் காலப்போக்கில் 'விரலி' எனவும் 'வீரலி' எனவும் பொது மக்களால் வழங்கப்பெறலாயிற்று.

| எண்: | ஊரின் பெயர் | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|---|
| 1 | கூத்தரம்பாக்கம் | செங்கற்பட்டு | காஞ்சிபுரம் |
| 2 | கூத்தவாக்கம் (கூத்தன்பாக்கம்) | ,, | ஸ்ரீ பெரும்புதூர் |
| 3 | கூத்தம்பாக்கம் | வட ஆர்க்காடு | அரக்கோணம் |
| 4 | கூத்தாண்டகுப்பம் | ,, | திருப்பத்தூர் |
| 5 | கூத்தூர் | தென்னார்க்காடு | சிதம்பரம் |
| 6 | கூத்தம்பாக்கம் | ,, | கூடலூர் |
| 7 | (மேல்) கூத்தம்பாக்கம் | ,, | செஞ்சி |
| 8 | கூத்தகுடி | ,, | கள்ளக்குறிச்சி |
| 9 | (ஆதன்வில்லி) கூத்தனூர் | ,, | திண்டிவனம் |
| 10 | கூத்தம்பாக்கம் | ,, | ,, |
| 11 | கூத்தி குளத்தூர் | ,, | ,, |
| 12 | கூத்தனூர் | ,, | திருக்கோவலூர் |
| 13 | (குருவிக்) கூத்தன் ஏந்தல் | தஞ்சாவூர் | அறந்தாங்கி |
| 14 | கூத்தாடிவயல் | ,, | ,, |
| 15 | கூத்தன்குடி | ,, | ,, |
| 16 | கூத்தன்குடி | ,, | ,, |
| 17 | கூத்தனூர் | ,, | ,, |
| 18 | கூத்தனூர் | ,, | குடந்தை |
| 19 | கூத்தாநல்லூர் | ,, | ,, |
| 20 | நட்டுவன்கோயில்பத்து | ,, | ,, |

| | | | |
|---|---|---|---|
| 21 | கூத்தனூர் | ,, | நன்னிலம் |
| 22 | கூத்தனூர் | ,, | நன்னிலம் |
| 23 | நட்டுவக்குடி | ,, | ,, |
| 24 | (கீழ்க்) கூத்தன்குடி | ,, | நாகை |
| 25 | கூத்தூர் | ,, | ,, |
| 26 | கூத்தாடிவயல் | ,, | பட்டுக்கோட்டை |
| 27 | கூத்தியம்பேட்டை | ,, | சீர்காழி |
| 28 | விராலிப்பட்டி | ,, | தஞ்சை |
| 29 | கூத்தூர் | ,, | ,, |
| 30 | கூத்தங்குடி | ,, | திருத்துறைப்பூண்டி |
| 31 | கூத்தூர் | திருச்சிராப்பள்ளி | லால்குடி |
| 32 | கூத்தூர் | ,, | பெரம்பலூர் |
| 33 | கூத்தப்பார் | ,, | திருச்சிராப்பள்ளி |
| 34 | விராலிமலை | ,, | ,, |
| 35 | ஆடலூர் | மதுரை | திண்டுக்கல் |
| 36 | விராலிப்பட்டி (விறலிப்பட்டி) | ,, | ,, |
| 37 | விராலிப்பட்டி | ,, | நிலக்கோட்டை |
| 38 | விராலிப்பட்டி | ,, | ,, |
| 39 | கூத்தம்பூண்டி | ,, | பழநி |
| 40 | விராலிப்பட்டி | ,, | ,, |
| 41 | கூத்தன் ஏந்தல் | இராமநாதபுரம் | அருப்புக்கோட்டை |
| 42 | கூத்திப்பாறை | ,, | ,, |
| 43 | கூத்தாடி ஏந்தல் | ,, | முதுகுளத்தூர் |
| 44 | (சித்தாலங்குடி) கூத்தாடி ஏந்தல் | ,, | சிவகங்கை |
| 45 | கூத்தகுடி | ,, | ,, |
| 46 | கூத்தன்குடி | ,, | ,, |
| 47 | கூத்தகுடி | ,, | திருப்புத்தூர் |
| 48 | கூத்தளூர் (கூத்தனூர்) | ,, | ,, |
| 49 | கட்டியக்கார ஆசிரமம் | ,, | திருவாடானை |
| 50 | கூத்தகுடி | ,, | ,, |

| | | | |
|---|---|---|---|
| 51 | கூத்தன் ஏந்தல் | ,, | ,, |
| 52 | (பெருமாள்) கூத்தன்வயல் | ,, | ,, |
| 53 | (வட) கூத்தம்பாடி | சேலம் | ஆத்தூர் |
| 54 | கூத்தப்பாடி | ,, | தருமபுரி |
| 55 | கூத்தம் பூண்டி | ,, | திருச்செங்கோடு |
| 56 | கூத்தம் பூண்டி | கோவை | பவானி |
| 57 | கூத்தாம்பாளையம் | ,, | ஈரோடு |
| 58 | (சர்க்கார்) கூத்தாங்காணி | ,, | ,, |

கூத்துத் தொடர்பான ஊர்கள் மிக்கிருத்தலைக் காண, தமிழகத்தில் கூத்துக் கலை பெற்றிருந்த பெருஞ் சிறப்பினை நன்குணரலாம்.

## குடியானவனும் குடியரசுக்கோமானும்!

தேர்தல் நெருங்கிக்கொண்டிருந்தது. போட்டியிட விரும்பிய ஒரு இளைஞன் ஆதரவு திரட்டுவதற்காக அலைந்துகொண்டிருந்தான். அறுவடை காலமானதால், குடியானவர்கள், அவனுடைய சொற்பொழிவைக் கேட்க வரமுடியவில்லை. அதனால், அவர்கள் பணிபுரியும் வயல்களுக்கே நேரில் சென்றான். தனித்தனியாகச் சந்தித்து, விளக்கலானான்.

ஒருநாள் ஒரு குடியானவனிடம் பேசிக்கொண்டிருந்தபோது நண்பகலாயிற்று. "என்னோடு வீட்டுக்கு வாங்க! சாப்பிட்டுக்கொண்டே பேசுவோம்" என்று அந்தக் குடியானவர் அழைத்தார்.

"மிக்க நன்றி! நீங்கபோய்ச் சாப்பிட்டு வாங்க. இங்கே உங்க வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, அந்தக் குடியானவரிடமிருந்து, கருக்கரிவாளை வாங்கிக்கொண்டு, வயலில் இறங்கினான், அந்த இளைஞன்.

வீட்டுக்குப்போய் உணவருந்திவிட்டு வந்தபோது, வயலில் ஒரு வரிசை, அழகாக அறுவடை செய்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். கருக்கரிவாள், அந்தக் கோதுமை வயலின் ஒரு ஓரத்தில் வைக்கப்பட்டிருந்தது. இளைஞன் போய்விட்டான்!

பல்லாண்டுகள் பறந்தன. அந்தக் குடியானவனையும் அவன் மனைவியையும் தனது 'வெள்ளை மாளிகை'க்கு விருந்துக்கு அழைத்திருந்தார், குடியரசுத் தலைவர். அழைப்பைக் கண்டபோது அந்த அமெரிக்கத் தம்பதிகள் ஆச்சரியப்பட்டனர். அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் விருந்துக்கு அழைப்பு வருவதென்பது சாதாரண மரியாதையல்ல; இலகுவில் கிடைக்கக்கூடியதுமல்ல.

குடியரசுத் தலைவரின் அறிமுகத்துக்காக விருந்தினர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டார்கள். தலைவரின் மெய்க்காவலன் இந்தக் குடியானவத் தம்பதிகளிடம் வந்தான். எல்லோரும் திகைத்தனர். "உங்களை மட்டும் ஐயா தனியாக அழைத்துவரச் சொன்னார்" என்றான். கணவனும் மனைவியும் சென்றனர்.

குடியரசுத் தலைவர் அவனுடைய பெயரைச் சொல்லி வருக! வருக! என்றதும், அவன் ஆச்சரியம் பன்மடங்காயிற்று. "எவ்வளவோ ஆண்டுகள் ஆனபிறகுகூட இன்னும் எங்கள் பெயர் உங்கள் கவனத்திலிருக்கிறதே!" என்றுசொல்லி அக்குடியானவன், வியந்தான்.

"எப்படி மறக்க முடியும்? ஒருநாள் உன் கழனியை நான் அறுவடை செய்தேனே, கவனமிருக்கிறதா, உனக்கு!" என்று கேட்டார், தலைவர்.

"ஞாபகமிருக்கிறது. ஆனால் உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும் என்று எண்ணம், கேட்கலாமா?"

"தாராளமாய் எது வேண்டுமானாலும் கேட்கலாம்......"

"வீட்டிலிருந்து சாப்பிட்டு வந்ததும் வயற்கரையில் கருக்கரிவாளைப் பார்த்தேன். எடுத்துக்கொண்டேன். ஆனால், அதற்குச் சாணை பிடிக்கும் கல் இருந்ததே, அதை நீங்கள் என்ன செய்தீர்கள்?"

ஜனாதிபதி கொஞ்சம் யோசித்தார். அவர் முகத்தில் இலேசாகப் புன்னகை பரவிற்று.

"அதானே! உன் கழனிக்கு நுழையும் இடத்தில் ஒரு மரவாசல் போட்டிருக்கிறாயல்லவா? அதன்மேல் வைத்துவிட்டு வந்தேன்."

குடியானவன், இலியனாஸ் என்று அழைக்கப்படும், தன் மாகாணத்துக்குச் சென்றதும், நேரே தன் கழனிக்குப் போய்ப் பார்த்தான். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எந்த இடத்தில் ஆபிரகாம் லிங்கன் அந்தச் சாணைக்கல்லை வைத்தாரோ அதே இடத்தில் அந்தக் கல் இருந்தது!

# சிறைவாழ்வைத் திருத்திய செல்வியாள்

மா. இளஞ்செழியன் எம்.ஏ.

“நாடகம் பார்க்கப் போகலாமா எலிசபெத்?”

“வேண்டாம்.”

“நடன அரங்கத்திற்குச் செல்வோமா?”

“தேவையில்லை.”

“இன்னிசை பாடி மகிழ்வோமா?”

“அதுவும் வேண்டாம்.”

“செஸ் ஆடலாமா?”

“எனக்குப் பிடிக்கவில்லை.”

“பூப்பந்து ஆடுவோமா?”

“நான் வரவில்லை. நீங்கள் வேண்டுமானால் ஆடுங்கள்.”

“உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கான எந்தத் திட்டத்தைக் கூறினாலும் வேண்டாம் என்கிறாய். உனக்கு எந்த ஆட்டம்தான் பிடிக்கும்? அதைக் கூறு; அதையே ஆடுவோம்.”

“அன்புகூர்ந்து என்னை மன்னித்துவிடுங்கள். நாடகம்-நடனம், ஆட்டம்—பாட்டம், இன்னிசை--கேளிக்கை எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை.”

ஆண்களும் பெண்களுமாகப் பதினோருபேர் உடன் பிறந்தவர்கள் அந்த மங்கைக்கு. அவர்கள் அத்தனைப் பேரும் ஒன்று திரண்டு, அவள் அருகே நின்று, ஏதேனும் ஒரு பொழுது போக்கில் கலந்துகொள்ளும்படி அவளை அன்போடும் ஆர்வத்தோடும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறார்கள். எலிசபெத் என்னும் அந்த அணங்கோ முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிடுகிறாள்.

அன்றலர்ந்த செந்தாமரைபோல அழகை அள்ளி வீசிக்கொண்டிருக்கும் பருவம் அவளுக்கு. பதினாறு வயதே நிரம்பிய பூங்கொடி அவள். ஆசைக் கனவுகளை அலை அலையாக எழுப்பி, தன் உள்ளம் எனும் படகை அந்த அலைகளின் மீது அசையவிட்டு, அது அசைந்து அசைந்து ஆடுவதைக் கண்டு, எந்தப் பெண்ணும் களிப்பு மிகக் கொண்டு துள்ளி விளையாடும் வயது அது. ஆனால், எலிசபெத்துக்கோ அத்தகைய எண்ணம் துளியும் எழவில்லை. நாளுக்கு ஒரு விதமாக உடை உடுத்துப் பார்க்க வேண்டும்—வேளைக்கு ஒரு வகையாக அணிகலன் பூட்டிக்கொள்ள வேண்டும் — புதிய புதிய முறைகளில் தலையை அழகுபடுத்திக் கொள்ளவேண்டும்—என்றெல்லாம் பெண்கள் இயல்பாகவே ஆசைப்படும் பருவம் அது. ஆனால் எலிசபெத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆசைகளில் எதுவும் அவளைத் தீண்ட முடியவில்லை.



வறுமைத் தேளால் கொட்டப்பட்டு வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கும் பரிதாபக் குடும்பத்தில் பிறந்தவள் அல்ல அவள். செல்வச் செவிலியால் தாலாட்டப்பட்டு, இன்ப வாழ்வு எனும் தொட்டிலில், ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்த பணக்காரக் குடும்பம் அவளுடையது. வீடுவாசல், நிலம் நீர், தோட்டம் துறவு, ஆள் அம்பு— அத்தனை வசதிகளையும் குறைவறப் பெற்று, சித்தம் மிகக் களித்துச் சிங்காரப் பண்பாடிக் கொண்டிருந்த குடும்பத்தின் செல்வ மங்கையாகப் பிறந்தவள் எலிசபெத் என்றபோதிலும், அவளுடைய உள்ளம் உல்லாச வாழ்வை நாடவில்லை.

வில்லியம் சேவரி என்னும் பாதிரியார் ஒருவருடைய சொற்பொழிவை ஒருநாள் அவள் கேட்க நேர்ந்தது. அந்தச் சொற்பொழிவு, அவளுடைய உள்ளத்தை— உள்ளத்து ஆசைகளை— ஆசைகளின் நோக்கத்தை — அத்தனையையும் மாற்றி அமைத்துவிட்டது. எல்லோரையும்போல உல்லாச வாழ்வு வாழ்வதிலோ, ஆடிப் பாடிக் களிப்பதிலோ பயனில்லை; மனித சமுதாயத்திற்கு உண்மையிலேயே பயன்தரத்தக்க உருவான பணி எதையாவதுசெய்தாக வேண்டும் என்கிற உறுதி அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. எந்தப் பணியை மேற்கொண்டால் மக்கட் சமுதாயத்திற்கு மாண்புமிக்க நலன் கிடைக்கும் — அந்தத் தொண்டு தன்னுடைய

அறிவுக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமாக இருக்கும்—எந்த அரும்பணியை எவ்வாறு நடத்துவது என்பனவற்றைப் பற்றியெல்லாம் சிந்திப்பதும் சீர்தூக்கிப் பார்ப்பதுமே அவளுடைய நேரம் முழுவதையும் கவர்ந்துவிட்டது.

அழகுக் கவர்ச்சியும் செல்வச் செழிப்பும் மிகுந்த ஓர் இளமைப் பருவம் இத்தகைய எண்ணங்களில் ஈடுபட்டு வீணாகிவிடுவது முறையாகாது என்று கருதிய அவளுடைய தந்தையும் உடன்பிறந்தோரும், இத்தகைய நோக்கங்களிலிருந்து அவளை விடுதலை செய்யத் தங்களால் இயன்றவரை முயன்று பார்த்தனர். ஆனால் அம் முயற்சி, முழுத்தோல்வி என்னும் முடிவையே தொடர்ச்சியாகப் பெறலாயிற்று.

நிறைந்த செல்வத்தால் சூழப்பட்டிருந்தபோதிலும் உயர்ந்த பண்புகளின் உறைவிடமாகவும் திகழ்ந்த ஜோசப் பிரை என்னும் ஓர் இளைஞர், எலிசபெத்தின் அடக்கமான அழகையும் அறிவார்ந்த வாழ்க்கையையும் கண்டு, தன் உள்ளத்தையும் வாழ்க்கையையும் அவளுக்குப் பரிசாகத் தந்துவிட விரும்பினார். இவர்கள் இருவருக்கும் இடையே காதல் முகிழ்த்துத் திருமணமாக மலர்ந்து, சிறந்த ஒரு குடும்பமாக ஒளிவீசித் திகழ வேண்டும் என்கிற பேராவல், எலிசபெத்தின் தந்தைக்கும் இருந்தது. ஆனால் எலிசபெத்துக்கோ, காதல்-திருமணம்-குடும்பம் என்கிற இந்தக் கட்டுப்பாட்டுக்குள் சிக்கிய கூண்டுக் கிளியாகத் தான் மாறிவிட்டால், சமுதாயத் தொண்டு புரிவதற்கான வாய்ப்பு இல்லாமற் போய்விடும் என்கிற அச்சம் ஏற்பட்டுவிட்டது. அந்த அச்சத்தின் விளைவாக, அச் சேல் விழியாள் நீண்ட நாட்கள், ஜோசப்பின் காதலையும் ஏற்கவில்லை; திருமண ஏற்பாட்டிற்கும் ஒப்புதல் தரவில்லை. பல மாதங்கள் உருண்டு ஓடியபின்னர், தந்தையின் அன்புப் பிடிவாதம்—உடன்பிறந்தாரின் ஆசைக் கெஞ்சல்—உறவினரின் வேண்டுகோள்—இத்தனையையும் புறக்கணித்தல் முறையாகாது என்கிற எண்ணத்தின் பயனாகத் திருமணத்திற்கு அம் மங்கைநல்லாள் இசைவு தந்தாள். ஆனால் அந்த ஒப்புதலும் மிக முக்கியமான ஒரு நிபந்தனையோடுதான் தரப்பட்டது. சமுதாயத் தொண்டு புரிவதில் தனக்கு உள்ள தணியாத ஆர்வத்திற்குக் குறுக்கே, திருமணத்திற்குப் பின்னரும், எத்தகைய தடைச் சுவரும் எழுப்பப்படல் ஆகாது என்பதே அந்த நிபந்தனை. திருமணம் நடைபெற்றபோது எலிசபெத்தின் வயது இருபது.

எலிசபெத் பிறந்த குடும்பத்தைப் போலவே புகுந்த குடும்பமும் செல்வச் செழிப்பில் நீந்தி விளையாடிய குடும்பமாகத் திகழ்ந்தபோதிலும், எலிசபெத்தின் நெஞ்சத்திலும் சரி, வாழ்க்கையிலும்சரி, ஆடம்பரப் போக்கும் பகட்டு உணர்ச்சியும் இடம் பெறமுடியவில்லை. செல்வ மிகுதியால் ஏற்படும் செருக்கும் இறுமாப்பும் அந்த அம்மையாரின் அருகே வரக்கூட அஞ்சி ஒதுங்கி நின்றுவிட்டன. திருமணத்திற்குப் பின்னர், எலிசபெத், அன்னாரின் கணவருடன், இலண்டன் மாநகரில் வாழ்க்கையை நடத்தினார் என்றபோதிலும், அந்தப் பெருநகரத்து உல்லாச வாழ்க்கையிலும் கேளிக்கை விளையாட்டிலும் அவர் சிக்கிவிடவில்லை. அந்த அம்மையாரின் இதயத்தைக் கவர்ந்த இலட்சிய கீதம்-சமுதாயத் தொண்டில் பெரியதொரு பங்கேற்கவேண்டும் என்கிற பேரார்வம், திருமணத்தின் விளைவாக மங்கவில்லை; மறையவில்லை; அதற்கு மாறாக, முன்னிலும் பல மடங்காகப் பெருகி ஒளிவீசலாயிற்று.

எலிசபெத் பிரைக்கு அடுத்தடுத்துப் பல குழந்தைச் செல்வங்கள் பிறந்தன; குடும்பத்தின் அளவு பெருகிற்று. அதன் விளைவாகக் குடும்பப் பொறுப்புகளும் கடமைகளும் வளர்ந்தன. ஆனால் இந்தக் கடமைகளின் சுமையால் உள்ளம் தளர்ந்து, பொதுநல உணர்ச்சியை இழந்து, குடும்பப் பெண் என்கிற அந்த அளவோடு தன்னுடைய வாழ்க்கையைச் சுருக்கிக்கொள்கிற போக்கு எலிசபெத்துக்கு ஏற்படவில்லை. சுற்றிச் சூழும் முகிற் கூட்டங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு முழுமதி பவனி வருவதுபோல, வளர்ந்து பெருகிய குடும்பப் பொறுப்புக்களுக்கு இடையேயும் அந்த அம்மையாரின் பொதுத் தொண்டு, சீரும் சிறப்பும் செறிந்த வகையில் பயனும் பண்பும் மிகுந்த முறையில் தொடர்ந்து நடைபெறலாயிற்று.

காசு கொடுத்துக் கல்வியின் ஒளியைப் பெறமுடியாத காரணத்தால் அறியாமை இருளில் ஆழ்ந்து கிடந்த ஏழைப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவிப்பதற்காக இலவசப் பள்ளிக்கூடங்கள் பலவற்றை நிறுவி நடத்துதல், அங்குள்ள ஆசிரியப் பெருமக்களோடு அவ்வப்போது தானும் கலந்துகொண்டு பாடங்களை நடத்துதல், கொட்டும் பனி, வாட்டும் குளிர் ஆகியவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தேவையான உடைகள்கூட இல்லாமல் அல்லல் உற்றுத் தவிக்கும் ஏழைமக்களுக்கு அவற்றை விலையின்றி அளித்தல், மருந்துப் பொருள்கள் — உணவுப் பண்டங்கள் முதலியவற்றை வறியவர்கட்கு வழங்குதற்கு உரிய நிறுவனங்களை அமைத்தல், அம்மை நோய் பரவாமல் இருப்பதற்காகப் பற்பல வட்டாரங்களுக்கும் சென்று, ஆங்காங்கு உள்ள ஏழை எளியவர்கட்குத் தடுப்பு ஊசி குத்துதல், பாமர மக்களின் கூட்டங்களைக் கூட்டி, அவர்களுடைய வாழ்க்கையில் நெளிந்து கிடக்கிற தீய பழக்க வழக்கங்களை அகற்றிப் பழுதற்ற நல்வாழ்வு வாழவேண்டியதன் இன்றியமையாமையை விளக்கிக் கூறும் சொற்பொழிவுகள் ஆற்றுதல்—இந்த அரிய பணிகளிலும், இவற்றைப்போன்ற பிற உயர்ந்த தொண்டுகளிலும், எலிசபெத் பிரை முழுமூச்சோடு ஈடுபடலானார். பல்வேறு துறைகளிலும் முறைகளிலும் அவர் ஆற்றிய இப்பணிகளின் விளைவாக, அவர் வாழ்ந்துவந்த இலண்டன் நகரில் மட்டுமல்லாமல், அவரைப் பெற்று அவனிக்கு அளித்த இங்கிலாந்து நாடு முழுவதிலும், அவருடைய பெயர், பூரிப்போடும் பெருமையோடும் ஒலிக்கப்



**எண்ண வளர்ச்சிக்கு....?**

ஏற்படும் எண்ணத்தை எடுத்துக்கூற வழியேற்பட வேண்டும்; கூறுவதைக் கேட்டிட தம் போன்றோர் இருக்கவேண்டும்; அவர்கள் அதைக் கேட்டுத் தமது கருத்தினைக் கூறவேண்டும். இரு கருத்துக்களும் ஒன்றையொன்று தழுவியோ, மோதியோ புதுப்புது பொலிவுகள் பெறவேண்டும்.

எண்ண வளர்ச்சி என்பது அப்போதுதான் ஏற்படும்.

படலாயிற்று. ஒருநாளும் புகழை அவர் தேடி ஓடியதில்லை என்ற போதிலும், பெரும் புகழ், தானுகவே அவரை நாடிவந்து அவர் காலடியில் தஞ்சம் புகுந்தது.

எலிசபெத் பிரை ஆற்றிவந்த அரும் பணிகளின் விளைவாகப் பெரும் புகழ் அவருக்குக் கிடைத்தது என்றபோதிலும் அந்த புகழ் ஒளி கண்டு அவர் மயங்கி விடவில்லை. பிறரெல்லாம் அவருடைய பணிகளை ஏற்றிப் போற்றிப் புகழ்ந்தனர் ஆனுல் அவரைப் பொறுத்த வரையில், தான் ஆற்றி வந்த பணிகள் மிக எளியவை என்றே அவர் கருதினுர். இவற்றையெல்லாம் விட மிக முக்கியமான— மிகச் சிறந்த ஒரு பணியைத் தான் செய்தாக வேண்டும் என்கிற பேரார்வம் அவருடைய உள்ளத்தை அல்லும் பகலும் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. அந்த ஆர்வம் நிறைவேறுகிற நன்னுள் —பின்னர் என்றென்றும் எண்ணி மகிழத்தக்க பொன்னுள் என்று வரும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்தார் அவர்.

அந்த நாளும் வந்தது, 1813-ஆம் ஆண்டில்—எலிசபெத்துக்கு வயது 33 நடந்து கொண்டிருந்தபோது.

அந்த ஆண்டில் ஒரு நாள், நியூகேட் என்னும் இடத்தில் இருந்த சிறைச்சாலையைப் பார்வையிட அவர் சென்றுர். அவர் அப்படிச் சென்றது, ஏதோ சென்றுர்—எதையோ கண்டார்—வீட்டிற்குத் திரும்பினுர் என்று சொல்லத்தக்க ஒரு சிறிய வாக்கியத்தோடு முடிந்து விடவில்லை. உலக வரலாற்றில் என்றென்றும் அழிய முடியாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது அந்த நிகழ்ச்சி. சிறைச்சாலைகளைச் சீர்திருத்தி அமைப்பதைப்பற்றி, இனி, உலகத்தில் யார் எங்கே எந்த நூற்ருண்டில் பேசினுலும் அல்லது எழுதினுலும், நியூகேட் சிறைச்சாலைக்கு எலிசபெத் சென்றதையும் அவர் அங்கே நிகழ்த்திக் காட்டிய அற்புதச் செயலையும் குறிப்பிடாவிட்டால் அந்தப் பேச்சு அல்லது எழுத்து முழுமை உடையதாக ஆகாது என்கிற நிலையை, அந்த ஒரு நாள் நிகழ்ச்சி உருவாக்கி விட்டது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில், இங்கிலாந்திலும் சரி, ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் சரி, சிறைச்சாலைகள், குற்றவாளிகளைத் திருத்துவதற்கு உரிய அமைப்புகளாக இருக்கவில்லை; ஈவு இரக்கமற்ற கொடுமையின் கூடாரங்களாக விளங்கின. அந்தக் காலத்தில் சிறைக் கைதிகளை நடத்திய முறையில் இந்தக் காலத்தில் ஆடுமாடுகளை நடத்தினுற்கூட மக்கள் மன்றத்தில் கொதிப்புணர்ச்சியும் கொந்தளிப்பும் தாண்டவம் ஆடும்; அவ்வளவு இதயமற்ற முறையில் கைதிகள் நடத்தப் பட்டார்கள். அந்தக் காலத்துச் சிறைச்சாலைகள் என்று அழைப்பதைவிடச் சித்திரவதைக் கூடங்கள் என்று அழைத்தால் பொருத்தமாக இருக்கும். ஆண்களும், பெண்களும் கொலைகாரர்களும் பைத்தியக்காரர்களும், கொள்ளைக்காரர்களும் கடனைச் செலுத்தத் தவறியவர்களும், பெரியவர்களும் குழந்தைகளும் எத்தகைய பாகுபாடும் இன்றி ஒரே இடத்தில் கும்பல் கும்பலாக அடைத்துவைக்கப்பட்டிருந்தார்கள். காற்ருே ஒளியோ உள்ளே நுழைய முடியாத வகையில் சிறைகள் அமைக்கப்பட்டிருந்தன. இருட் குகைகள் என்று அவற்றைக் குறிப்பிட்டால், அது வெறும் இகழ்ச்சியன்று; எழுத்துக்குஎழுத்து உண்மை. பணம் கொடுக்கக்கூடிய கைதிகளுக்குக் குடிவகைகள் மிகத் தாராளமாக வழங்கப்பட்டன. உணவோ மிகச் சிறு அளவில்தான் தரப்பட்டுவந்தது. போதிய உணவைப் பெறமுடியாத காரணத்தாலும் துப்புரவுஅற்ற சூழ்நிலையின் பயனுக ஏற்பட்ட வெறுக்கத்தக்க பலநோய்களாலும் நூற்றுக்கணக்கான கைதிகள் இறந்துவிட்டார்கள். அயர்லாந்தில் இருந்தசிறை ஒன்றில் ஒருமுறை தீப்பற்றிக் கொண்டபோது, அச்சிறையில் இருந்த ஐம்பத்து நான்கு கைதிகள் நெருப்பின் பிழம்புகளுக்கு இரையாகி அலறித் துடித்தபோது அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்கிற உணர்ச்சி யாருக்குமே ஏற்படவில்லை.

இத்தகைய பயங்கரமான சூழ்நிலையின் விளைவாகச் சிறைக் கைதிகள் மனித உணர்ச்சிகள் அத்தனையையும் இழந்து, ஏறத்தாழ விலங்குகளைப் போல வாழ்ந்து வந்தார்கள். வாழ்ந்து வந்தார்களா — தவறு தவறு — சீறிப் பாயும் சிறுத்தைகளைப் போல் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டும், வெறுக்கத்தக்க பாடல்களைப் பாடிக்கொண்டும் தீய சொற்களை ஒருவர் மீது ஒருவர் வீசிக்கொண்டும், அரை நிர்வாண நிலையில் நாட்களை விழுங்கிக் கொண்டுமிருந்தார்கள்.

தங்களை நெருங்கி வருகிற யாரையும் வெறிகொண்ட விலங்குகளைப் போல் பயந்து தாக்குகிற அளவுக்கு அவர்களுடைய இதயங்கள் இறுகி விட்டிருந்த காரணத்தால், சிறைக் காவலர்கள்கூட எளிதில் அவர்களை நெருங்கத் துணிவதில்லை இத்தகைய சூழ்நிலையில்தான் இத்தகைய பயங்கர மனிதர்களைத்திருத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு, முப்பத்து மூன்று வயது நிரம்பிய எலிசபெத், நியூகேட் சிறைச்சாலைக்குள் நுழைந்தார். சிறைக் காவலர்களும் நெருங்க நடுங்கும் கைதிகளுக்கு இடையே, இங்கு அம்மையார், தன்னந்தனியாகச்செல்கிருரே —எத்தகைய ஆயுதங்களையும் ஏந்தாமல் வெறும் கையோடு போகுருரே—என்ன ஆகுமோ இவருடைய கதி என்று எண்ணி நடுங்கினர் அனைவரும். வேண்டாம் அம்மா இந்த விபரீத ஆசை என்று தங்களால் இயன்றவரை தடுத்தும் பார்த்தனர். கேட்கவில்லை எலிசபெத். தைரியமாக உள்ளே நுழைந்து விட்டார்.

ஏறத்தாழ முன்னூறு கைதிகள் இருந்தார்கள், அங்கே. தங்களை நோக்கி ஓர் அம்மையார், தன்னந்தனியே, புன்முறுவல் பூத்த முகத்தோடு, கம்பீரம் நிறைந்த தோற்றத்தோடு, அன்பு கலந்த அமைதியோடு வருவதைக் கண்டதும், முதலில் சற்றே ஒதுங்கி நின்றனர் கைதிகள். ஆனுல் அடுத்த கணமே தனித்து வரும் ஆட்டின் மீது பாய வரும் வேங்கைகளைப் போல் அவர்கள் அனைவரும் அந்த அம்மையாரை நோக்கி ஓடிவந்தார்கள்.

அஞ்சாத நெஞ்சுபடைத்த அடலேறுகளைக்கூடக் கலங்கவைக்கும் நிலைமை இது. ஆனுல் துளியளவும் அஞ்சவில்லை அம்மையார். ஒரு



## தொத்து நோய்!

அதிகார போதை ஒரு பயங்கரமான தொத்துநோய்; அது யார் யாரை அண்டுகிறதோ, அவர்களையெல்லாம் கெடுத்து விடுகிறது.

—ஷெல்லி

மூலையில் அக்கைதிகளில் ஒருவருடைய குழந்தை அலங்கோலமான நிலையில் மண்ணில் புரண்டுகொண்டிருப்பதைக் கண்டார். உடனே பாய்ந்து சென்று, அன்போடு அந்த அழுக்குக் குழந்தையை எடுத்து, ஆசையோடு அதனை அணைத்துக்கொண்டு, மிகவும் இனிய குரலில், "உங்களிற் பலர் தாய்மார்களாக இருக்கிறீர்கள். நானும் ஒரு தாய்தான், குழந்தைகளைக் காப்பாற்றி வளர்க்கவேண்டியது தாய்மார்களாகிய நம்கடமை அல்லவா? இக் குழந்தைகளும் எதிர்காலத்தில் கைதிகளாக மாறி மடியவேண்டியதுதானா" என்று பேசத்தொடங்கி, அவர்களின் குழந்தைகளுக்கு நல்வாழ்வை அளிக்கவேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டினார். அவருடைய இன்சொற்களைக் கேட்ட அக்கைதிகளின் கல்நெஞ்சங்களும் கரைந்து உருகலாயின. பலர் கண்ணீர்விட்டுக் கதறி அழலாயினர். அனைவரும் அம்மையாரின் அருகே வந்து, முழந்தாள் இட்டு வணங்கிநின்று, தத்தம் சோக வரலாறுகளையெல்லாம் அவரிடம் அடுக்கடுக்காக எடுத்துக் கூறலாயினர். அவர்களுடைய சொற்களையெல்லாம் பொறுமையோடு செவிமடுத்த அம்மையார், அவர்கள் அனைவரும திருந்திய நல்வாழ்வைத் தொடங்கமுடியும் என்கிற புதிய நம்பிக்கையை அவர்களுக்கு அளித்தார். அத்தகைய புதுவாழ்வின் தொடக்கததிற்குத் தன்னால் இயன்ற பணியை ஆற்றுவதற்காகவே தான் வந்திருப்பதாகவும், அத்தகைய பணியாற்றுவதே தன் தலையாய குறிக்கோள் என்பதாகவும் எடுத்து விளக்கினார்.

எலிசபெத்பிரை, அந்தச் சிறைச்சாலைக்குள் நுழைந்தபோது, வெறிகொண்ட விலங்குகளாகக் காட்சி அளித்த கைதிகள், நெடுநேரத்துக்குப் பின்னர் அவர் அங்கிருந்து அகன்றபோது, அன்பும் பண்பும் நிறைந்த புதிய மனிதர்களாக மாறிவிட்டிருந்தார்கள்.

அடுத்த நாள்முதல், அக்கைதிகளின் வாழ்க்கையில் புதிய ஒளியைப் பாய்ச்சுவதற்காக, பன்னிரண்டுபேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துக்கொண்டு, அல்லும் பகலும் அரும்பாடுபட்டார் எலிசபெத். அத்தகைய பணியின் பயனாக, நியூகேட் சிறைச்சாலை, கட்டுப்பாடற்ற வெறியர்களின் கூடாரமாக இருந்தநிலை மாறி, ஒழுங்குமுறையோடு கூடிய ஒரு சிறந்த குடும்பமாகக் காட்சி அளிக்கிற பொன்னான புதுநிலை உருவாகிவிட்டது.

நியூகேட் சிறையில் மட்டுமல்ல, இங்கிலாந்தில் உள்ள எல்லாச் சிறைகளிலும் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதை, எலிசபெத், ஓயாமல் எடுத்துக்காட்டிவந்தார். பல்வேறு சிறைகளுக்கும் சென்று, ஆங்காங்கு உள்ளநிலைமைகளைக்கண்டு, அவற்றின் கொடுமைகளைச் சொற்பொழிவுகள் — நூல்கள் ஆகியவற்றின் வாயிலாக எடுத்தெடுத்துக் கூறி, அவற்றைத் திருத்தி அமைக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பதை அனைவரும் உணருமாறு செய்துவந்தார்.

1813-ஆம் ஆண்டில், அவருடைய 33-ஆம் வயதில் தொடங்கிய இந்த அரும்பெரும் பணியை, 1845-ஆம் ஆண்டில் அன்னாரின் 65-ஆம் வயதில் இறப்பைத் தழுவிய அந்த இறுதி வினாடிவரையில், எலிசபெத், ஓய்வு ஒழிவு இன்றி ஆற்றிவந்தார்.

அந்த அம்மையார் ஆற்றிய அருந்தொண்டின் பயனாக, பிரிட்டிஷ் பாராளுமன்றம் சிறைச்சாலைகளைச் சீர்திருத்துவதற்கான சட்டத்தை நிறைவேற்றியது; பிரிட்டிஷ் பெருநாட்டின் சிறைகளெல்லாம் ஒளியும் காற்றும் மனிதப் பண்பும் நிறைந்த புதிய இடங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. பிரிட்டிஷ் சிறைகள் மட்டுமா— ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் இருந்த சிறைகளும், புதுவாழ்வும் புதுவடிவமும் புது உணர்ச்சியும் பெறலாயின; ஆஸ்டிரேலியா முதலிய பிற கண்டங்களிற் கூடச் சிறைச்சாலைகளின் வாழ்க்கையில் ஒரு புத்தொளி தோன்றலாயிற்று.

சிறைச்சாலைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் அறச்சாலைகளாக விளங்கவேண்டுமே தவிர, தவறு இழைத்தவர்களைப் பழிவாங்கும் பாசறைகளாக இருத்தல் ஆகாது என்னும் கருத்து, இருபதாம் நூற்றாண்டில், நல்லறிவாளர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே, இத்தகைய பகுத்தறிவுக் கருத்தை, எண்ணற்றோரின் எதிர்ப்புக்கு இடையே, துளியும் தயங்காமல் எடுத்துக் கூறிய ஏற்றம் நிறைந்தவர் எலிசபெத். எடுத்துக் கூறியதோடு தன்கடமை முடிந்துவிட்டது என்று எண்ணிச் சாய்வு நாற்காலியில் ஓய்வு பெற்றுவிடாமல், அந்த இலட்சிய கீதத்தை நடைமுறை நாதமாக்குவதற்காக, ஏறத்தாழ முப்பது ஆண்டுகள், ஈடு இணையற்ற முறையில் பணிபுரிந்த பெருமைமிகக வரலாற்றையும் உடையவர் எலிசபெத்.

அவருடைய புகழ் இன்றும் என்றும் நின்று நிலைக்கும் என்பதை, நாம் அல்ல, உலக வரலாறு, என்றென்றும் சொல்லிச் சொல்லிப் பூரித்துக்கொண்டிருக்கும். ○

உழவர் திருநாளில் அனைவர்க்கும் உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

அழகிய ஆடைகளுக்கும் உயர்தர டுவிட் சூட்டிங்ஸ்களுக்கும்

நவீன ஜவுளி ஷோரும்

**சிவராம் டெக்ஸ்டைல்ஸ்,**

கமிசேரி பஜார், :: வேலூர்.




## ப.உ. சண்முகம்

**மங்களம்:**

நாற்பதை எட்டிவிட்ட விதவை. எதையும் நம்பும் வெள்ளை உள்ளம். நம்பியபின் மாற்றிக் கொள்ள மறுக்கும் பிடிவாதகுணம். ஆலயத்தை வலம் வருவதன்றி வேறெங்கும் சென்றறியாத கால்கள்... தருமம் செய்யத் தயங்காத கைகள். திருவாசகத்தை முணுமுணுக்கும் வாய் தன் பிள்ளையின் பெருமையை-பிறர் பேசும்ஒரு வாசகத்தைத் தவிர வேறொன்றையும் கேட்க விரும்பாத காதுகள். நிதம் மகன் கொண்டு வந்துதரும் பணத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரிக்கும் கண்கள்...... இதுவேமங்களம். அவள் மகன் பெரிய டாக்டர். பெயரோ 'மோகன்'. அவன் மங்களத்தின் ஒரே பிள்ளை! வேலூரின் வளர்பிறை!

**டாக்டர் மோகன்:**

இருபத்திநான்கு வயதுடைய இளைஞன். 'கைராசிக்காரன்' இது ஊரார் தந்த சர்டிபிகேட். "எம். பி. பி. எஸ்; எம். டி." இது பல்கலைக் கழகம் தந்த பட்டம். தனியாக மருத்துவம் செய்யும் இவன் ஈட்டும் பொருளைத் தன் தாயிடம் கொட்டிக் கொடுக்கும் பெருமைகாணும் குணம் கொண்டவன். "தாய் சொல் தட்டாதே" இது இவன் கற்றது மட்டுமல்ல, கொண்டுள்ள கொள்கையுங்கூட. அவன் வணங்கும் தெய்வம் தாயுந் தந்தையுந் தான். இளமை அவன் உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் ததும்பி நிற்கும்.

**மாணிக்கமுதலியார்**

பணக்காரர். இதுஊராரின் தீர்ப்பு. அவர்மனைவி அன்னபூரணி. இவர்களின் ஆசைமகள் 'மல்லிகா' அவளின் சிரிப்பே பெற்றோரின் சங்கீதம். விதவிதமாக அவளை அலங்கரித்து தங்கள் கண்குளிரக் காண்பதில் தனி இன்பம். மகளின் எதிர்கால வாழ்வு எப்படி எப்படி இருக்கவேண்டும் என்று பேசுவதில் பெருமகிழ்ச்சி. அந்த பேச்சின் இடையே எழும் சிறுசிறு சச்சரவு. அதன் பின் அதைக் தீர்த்து வைக்க மகளைஅழைத்து அவள் தரும் தீர்ப்பைக் கேட்டுச் சிரிக்கும் குடும்பம் இந்த குடும்பம்.

**மல்லிகா:**

பதினைந்தை எட்டிய பாவை. 'பி.யூ.சி.' வகுப்பில் மாணவி. இளமை எழில் பூத்துக் குலுங்கும் கலைத் தோட்டமவள். அவளுக்கு உயிர்த் தோழி "மங்கையர்க் கரசி!" இருவரும் ஒரே வகுப்பு. இணைபிரியா இவர்களைக் கல்லூரி மாணவிகள் "இரட்டையர்கள்" என்றேஅழைப்பார்கள். இருவரும் ஒரே மாதிரி உடை உடுத்துவது வாடிக்கை. ஏழையான தன் தோழிக்கு எந்தவித குறையும் வராதவாறு மல்லிகா எல்லாவித உதவிகளையும் செய்துவந்தாள். மங்கையர்க்கரசி கல்லூரியில் புகுவதற்குக் காரணமே மல்லிகாதான். கல்லூரிக்குப் பணம் கட்டுவது முதல், ஆடைஆபரணம் வரை மல்லிகாதான். மல்லிகாவின் பெற்றோர்களும் தங்கள் மகள்மனம் நோகக் கூடாதென்பதற்காக இதை ஆட்சேபிப்பதில்லை.

**மங்கையர்க்கரசி:**

விதவை வள்ளியின் ஒரே மகள். பதினாறு வயதான பருவ மங்கை! உயிர்பெற்ற ஓவியம் போன்ற ஒயிலான உருவம் கொண்ட இவள்,

இளமைக்கு இலக்கணம். கலைத் தாயின் கைவண்ணத்திற்கு இவள் எடுத்துக்காட்டு! இயற்கையின் படைப்பில் எப்போதோ இப்படி ஓர் அபூர்வ அழகு இருக்கும் போலும்.

**வள்ளி:**

உழைத்துச் சாப்பிடும் இனம்! இவளுக்கோர் தம்பி இளங்கோ! அவன் பிறவிக் குருடன். ஆயினும் இனிமையாகப் பாடுபவன். வள்ளி வறுமையின் காரணமாக "டி. பி." நோயால் பாதிக்கப் பெற்றாள்.

**வைத்தியரும், காதலும்:**

வள்ளிக்குச் சிகிச்சை செய்ய டாக்டர் மோகனை அழைத்துவந்தாள் மல்லிகா. அடிக்கடி மோகன் வரவேண்டியதாயிற்று. மங்கையர்க்கரசியின் கண்களில் மோகன்—மோகனின்கண்களிலேமங்கையர்க்கரசி! கண்களில் தெரிந்தவர்கள் ஒருவர் மனதில் ஒருவர் முதலில் நிழல்படமாயினர். பின்னர் நிரந்தரமாயினர். கண்களிலே காந்த ஒளி! அவைகள் பேசும் காதல் மொழி! புரிந்துகொண்டனர் இருவரும்! இதை எப்படியோ தெரிந்துகொண்டாள் மல்லிகா! எச்சரித்தாள் டாக்டரை. எடுத்துரைத்தாள் தோழிக்கு. இறுதியில் அவளே துணையானாள்; காதலுக்கு வேலியாகவும் இருந்தாள்.

**தொழில் தரகர்:**

தரகர் தணிகாசலம் வயதுவந்த ஆண், பெண் எங்கிருக்கின்றார்கள் என்று தேடுவதும் அவர்களை முடிச்சுப்போடுவதும் இவர்தொழில். இவரின் கழுகுக் கண்களுக்கு டாக்டர் மோகன்–மல்லிகா தெரிந்துவிட்டது. விடுவாரா! துவக்கினார் தொழிலை. தூது போனார். எடுத்துரைத்தார். இரகசியமாகவே முடித்தும்விட்டார்! இருவருக்கும் திருமணம் என்று மங்களமும், மாணிக்க முதலியாரும் முடிவு செய்துகொண்டனர். தாம்பூலமும் மாற்றிக்கொண்டனர். எல்லாம் தணிகாசலத்தின் திறமையால்தான் நடந்தது. கேள்விப்பட்ட மோகன் நெருப்பில் புழுவானான்! மல்லிகா நீரிலிருந்து எறியப்பட்ட மீன் ஆனாள்!! மங்கையர்க்கரசி புயலில் சிக்கிய சருகானாள்.

**மோகன்:**

தன் தாயிடம் கெஞ்சினான். அவள் தன் பிடிவாதத்தைத் தளர்த்த மறுத்துவிட்டாள். தன் காதலைத் தெரிவித்துவிட்டான். 'டி. பி.' வியாதிக்காரியின் மகள் தனக்கு மருமகளாக வருவதைத் தான் அனுமதிக்க முடியாது என்று மறுத்துவிட்டாள்.

**மல்லிகா:**

தன் பெற்றோர்களிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். பலனில்லை. அழுதாள்! அவர்கள் மனம் இறங்கவில்லை. மங்கையர்க்கரசியின் காதலை எடுத்துச்சொன்னாள். அவர்கள் கோபம் கொண்டனரேயொழிய மனம் மாறவில்லை. "ஆடை ஆபரணம் கொடுக்கச் சொன்னாய். கொடுத்தோம். இன்று புருஷனையே கொடுக்கச் சொல்கிறாயா" என்று சீறினர். கட்டுப்பாடு, கட்டுக்காவல் அதிகமாயிற்று. நாள்குறித்தல், மண அழைப்பு அச்சடித்தல், விநியோகித்தல் முதலிய வேலைகள் துரிதமாக நடந்தன.

**மோகன்:**

முடிவாகத் தன் தாயிடம் மறுத்தான் அவ்வளவுதான்! தன் இடுப்பில் வைத்திருந்த "நஞ்சை" எடுத்தாள். குடித்து விட்டாள்! மோகன் துடித்தான்; தூக்கினான் மாற்று மருந்து கொண்டு வந்து அரும்பாடு பட்டு பிழைக்கச்செய்தான். தாயின் பிடிவாதத்தின் முன்னால் அவன் தலை வணங்கவேண்டியவனானான்!

**மல்லிகா:**

தன் தோழிக்குத் தானே துரோகம் செய்ய நேர்ந்ததை எண்ணி எண்ணி அழுதாள். துடித்தாள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாள். முடியவில்லை.

**மங்கையர்க்கரசி:**

நோயாளி தாயிடம் தன் நிலையுணர்த்த முடியாது தவித்தாள்; உளநோயும், உடல் நோயும், மல்லிகா—மோகன் திருமணத்தோடு—நீங்கியது; ஆம் வள்ளியின் உயிர் பிரிந்தது.

**முதல் இரவு:**

அலங்கரிக்கப்பட்ட மஞ்சம், அடுக்கி வைக்கப்பட்ட பலகாரம், பழத்தட்டுகள், பால் செம்பு—நறுமணம் கமழும் மல்லிச் சரங்கள் இவ்வளவுமிருந்தும் மோகன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு வானத்தை நோக்கி அழுது கொண்டிருந்தான். மல்லிகா மஞ்சத்தின் அருகில் குந்தி அழுது கொண்டிருந்தாள், ஒருவரையொருவர்பார்க்கவில்லை. வெட்கம் — வேதனை இருவரையும் வாட்டியது.

தொழிலை மறந்தான் மோகன்! உணவை மறந்தாள் மல்லிகா! உலகையே மறந்தாள் மங்கை?

கண்ணீர்–கவலை – உணவின்மை இவை போதாதா நோய்க்கு! மல்லிகா மெலிந்தாள்! நோயுற்றாள்!

மல்லிகாவின் நிலை அறிந்த மோகன் மன்னிப்புக் கோரினான். காரணம் கூறினான்! அவள் செவிடாகி நெடுநாளாகிவிட்டதை அவன் அறியான்?

மோகன் தானாக யோசித்தான். அவனுக்குப் புலப்படவில்லை. கடைசியாக மங்கையர்க்கரசியின் வீடு சென்றான்.

அவள் திகைத்தாள். இவன் நிலைமையைச்சொன்னான். மல்லிகாவின் நிலை கேட்டுத் திடுக்கிட்டாள். கதறினாள். "அவளை வாழ வைக்கத்தான் எந்த தியாகமும் செய்து கொள்ளத் தயார்" என்று உறுதி கூறினாள்.

மோகன் மல்லிகாவிடம் சென்றான். எதை எதையோ எடுத்துச் சொன்னான். ஊமையான அவள் எல்லாவற்றையும் கேட்டு விட்டு "அவள் திருமணம்" என்றாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. கதறி அழுதாள், மீண்டும் ஊமையானாள். "மல்லிகாவின் மனக்கவலை தீர்ந்தால் பிழைத்து விடுவாள்" என்றஎண்ணம் வந்தது. அவள் கவலை "மங்கையர்க்கரசியின் திருமணம்". மனோ தத்துவ நிபுணர்களிடம் சென்று கலந்தான். அவர்களும் இதையே வலியுறுத்தினர்.

மங்கையர்க்கரசியிடம் வந்தான்! சொன்னான்! திடுக்குற்றாள் அவள்! "யாரையாவது மணந்துகொள்" என்று வேண்டினான். அவன் மறுத்தாள்!

"உன் நினைவால் செத்துக் கொண்டிருக்கும் உன் தோழியைக் காப்பாற்ற இந்தத்தியாகம் செய்யக் கூடாதா" என்று கெஞ்சினான். அவள் இணங்கவில்லை.

"மல்லிகா சாகட்டும்" என்று கூறிவிட்டுத் திரும்பினாள். அவள் மனம் மாறிவிட்டது; இசைந்தாள். தன் தாய்மாமனை மணக்கச் சம்மதித்தாள்.

அவர்மறுத்தார். மங்கையர்க்கரசி வற்புறுத்தினாள்.

"இரண்டு மாலைவாங்கி வாருங்கள்" என்றாள். மோகன கொண்டு வந்தான். மீண்டும் இளங்கோ மறுத்தான்.

"உடலால் கணவன் மனைவிபோல் வாழாவிட்டாலும் உலகுக்கு நாம் அப்படி வாழலாம்" என்று கூறி—கெஞ்சி தன் தோழியின் உயிரைக்

காப்பாற்ற இந்தத் தியாகம் செய்வ தாய்க் கூறி தன் தாயின் படத்தின் முன் தன் தாய்மாமனை அழைத்து வந்தாள். மாலையை வாங்கினுள். ஒன்றை எடுத்தாள். தன்மாமன் கையில் கொடுத்தாள். மற்றொன்றைத் தானெடுத்தாள். மோகனைப் பார்த்தாள். ஒரே சமயத்தில் இருவம் கண்களில் கண்ணீர்! மாலையைத் தன் மாமன் கழுத்திலிட்டாள். தன்மாமன் கையைப்பிடித்து மாலைக்குள் தன் கழுத்தை விட்டாள்!

மோகன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இருவரையும் தன் காரில் ஏற்றி மல்லிகா வீட்டிற்குச் சென்ருன்.

மல்லிகா கட்டிலில் படுத்திருந்தாள்.

"மல்லிகா......பார் மல்லிகா மங்கையர்க்கரசி மணக்கோலத்தோடு வந்திருக்கிருள் பார்" என்று கூறிக் கொண்டே அருகில் சென்ருன்—அவள் பிணமாகிவிட்டிருந்தாள். கதறினுன்? அவள் கையில் ஓர் கடிதம் இருந்தது. எடுத்தான், பிரித்தான்.

"மன்னித்துவிடுங்கள், மறந்துவிடுங்கள்" என்றிருந்தது.

மங்கையர்க்கரசி 'என்ன?' என்ருள். கடிதத்தை அவள்கையில் கொடுத்துவிட்டு,

"மல்லிகா போய்விட்டாள்" என்று கதறி அழுதான். அவள் சிலையாகிவிட்டாள். கண்ணீர் மழையில் நனைந்தாள்.

"மங்கையர்க்கரசி..... என்னசெய்வேன்?...மல்லிகாவை வாழவைக்க முயற்சித்தேன், கடைசியில் கவலையை என்னிடம் தந்துவிட்டுப்போய் விட்டாள்.........மங்கையர்க்கரசி, என் கவலையைப் போக்க மருந்து நீதான் சொல்லவேண்டும்...மங்கையர்க்கரசி மங்கையர்க்கரசி" என்று கூறி அழுதான்.

அவன் தந்த காகிதத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு "இதோ என் பதில்" என்று கூறி, தன் கணவன் கரம் பிடித்துக்கொண்டு போய்விட்டாள். கடிதத்தைப் பிரித்தான்.

"மன்னித்துவிடுங்கள்
மறந்துவிடுங்கள்"

என்றிருந்தது! ○



# கண்ணாயிரத்தின் உலகம்!



'ஒரே உலகம்' என்பது நேர்த்தியான ஒரு குறிக்கோள்.

பற்பல நாடுகள் கொண்ட பூபாகம் ஒரே அமைப்பாக இருக்கிறது எனபதல்ல 'ஒரே உலகம்' என்ற குறிக்கோளின் பொருள். பற்பல நாடுகள் உள்ளன என்பதாலேயே, பல்வேறு முரண்பாடுகள், வேறுபாடுகள், அவை காரணமாக மாச்சரியங்கள், மோதுதல்கள், ஆதிக்கங்கள், அவதிகள், அழிவுகள் நெளிகின்றன. இதனுல் ஒரே அமைப்பாக உள்ள உலகம், 'ஒரே உலகம்' என்ற நேர்த்தியான நிலை அடையவில்லை.

வெள்ளை உலகம்; கருப்பு உலகம்; மாநிற உலகம்; மஞ்சள் நிற உலகம் என்று நிறம் காரணமாக, ஒரே அமைப்பாக உள்ள பூபாகம், பல்வேறு உலகங்களாக இருந்திடக் காண்கிறோம்.

இஸ்லாமிய உலகம்; கிருத்தவ உலகம்; பௌத்த உலகம்; இந்து உலகம்; ஆதிமத உலகம் என்று மத அடிப்படையில் பல உலகங்கள் உள்ளன என்று உணருகிறோம்,

மேற்குப் பகுதி, கிழக்குப் பகுதி என்று இருபெரும் பிரிவுகளாக உலகம் இருப்பதாகவும், இந்தப் பிரிவு ஒவ்வொன்றும் தனித்தனி உலகம் என்றும் கூறுகின்றனர்; காரணமும் காட்டுகின்றனர்.

படித்தோர் உலகு என்றும், பாமரர் உலகு என்றும் இந்த ஒரே உலகில், இருவேறு உலகம் உள்ளன என்கிறார்கள்; மறுப்பதற்கில்லை.

நாகரிக உலகம், கர்நாடக உலகம் என்ற இரு உலகு கொண்டது

இந்த ஒரே உலகம் என்கிருர்கள்; அதிலும் உண்மை இருந்திடக் காண்கின்ருேம்.

இவற்றினைப்பற்றி எண்ணிடும் போது, உலகம் என்று நாம் நிலப் பரப்பை மட்டுமே கருதிக்கொள்வ திலே முழுப் பொருத்தம் இல்லை என்பதும், நிலைமைகளும் நினைப்பு களும் எவ்வகையிலே உள்ளன என்பதனைக் கொண்டு இந்தப் பெரிய நிலப்பரப்பிலே பலவிதமான உலகம் உள்ளன என்பதைக் கண் டறிவதே பொருத்தமானது என்ப தும் விளக்கமாகிறது.

நிலைமைகளையும் நினைப்புகளையும் கண்டறிந்து பல்வேறு வகையான உலகங்கள் இந்த ஒரே உலகில் இருப்பதனை அறிந்திட முடிகிறது என்பதனை உணரும்போது, ஒவ் வொருவரும் தத்தமது நினைப்பு நிலைமை ஆகியவற்றினுக்கு ஏற்ற விதத்தில், தமக்கு உரிய 'உலகை' உருவாக்கிக்கொள்ளமுடியும் என்ப தும் தெளிவாகிறது.

அதனுல்தான் வள்ளுவர், 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்று கூறி நல்ல உலகை நல்லவர்கள் உருவாக்கிக் கொள்ள லாம் என்ற கருத்தினை வழங்கிச் சென்ருர்.

ஒவ்வொருவரும் தமது உயர்ந்த எண்ணத்தாலும், சீரிய முயற்சி யாலும் ஒரு நல்லுலகம் அமைத்துக் கொள்ளலாம் என்பது போலவே, சிலரோ பலரோ உருவாக்கிடும் உலகம் வேறு சிலருக்கோ பல ருக்கோ 'இடம்' ஆகிவிடுகிறது.

ஆதிக்க வெறிகொண்ட வெள்ளை யர்கள், ஆப்பிரிக்க நாட்டினையே அடிமைகளைப் பிடித்திடும் வேட் டைக் காடு ஆக்கினர்; அதிலே கிடைத்த செல்வத்தைக் கொண்டு தமக்கு பளபளப்பான ஒரு பகட்டு உலகம் அமைத்துக்கொண்டனர்.

வெள்ளையருக்கு ஒரு 'பகட்டு உலகம்' அமைந்ததன் காரண மாகவே, ஆப்பிரிக்கரின் உலகம் 'இருட்டு உலகம்' என்ற நிலையினைப் பெற்றது. பெற்றபிறகு அதனையே சுட்டிக்காட்டி, பகட்டு உலகினர் இருட்டு உலகினரைக் கேலிசெய் திடலாயினர்.

இதுபோல, 'உலகுகளை' உரு வாக்கியுள்ளனர்; இருள் உலகினை மட்டுமல்ல, ஒளி உலகினையும்.

இத்தனை விதமான உலகுகள் இருந்திடின், பகைப்புயல் அவ்வப் போது கிளம்பிப் பாழ்படுத்தும், இந்த நிலை மாற்றப்பட்டு 'ஒரே உலகம்' அமைந்திடவேண்டும் என் ருர் வெண்டல் விஸ்கி எனும் ஒரு அமெரிக்கத் தலைவர்.

'ஒரே உலகம்' அமையவில்லை; அமைந்திடும் என்பதற்கான அறி குறிகளும் பளிச்செனத் தெரிந்திடக் காணுேம். எனினும் 'ஒரே உலகம்' என்பது நேர்த்தியான ஒரு குறிக் கோள் என்பதனை எவரும் மறுத்திட முனையக் காணுேம்; அந்த அளவு நல்லுணர்வு வெற்றி பெற்றிருக் கிறது.

சிலர், தமது உலகினைத் தாமாக அமைத்துக்கொள்கின்றனர்; வேறு சிலர், அமைக்கப்படும் உலகிலே இடம் பெற்றவராகி விடுகின்றனர்; அந்த உலகின் இயல்புகளுக்கேற்ப அவர்தம் வாழ்க்கை அமைந்துவிடு கிறது.

அதிலிருந்து விடுபடவோ, அல் லது அந்த இயல்பினை மாற்றிடவோ முயற்சி மேற்கொள்பவர்களும் உண்டு, அந்த இயல்போடு தம்மை இணைத்துக்கொண்டுவிடுபவர்களும் உண்டு.

கண்ணுயிரம், தன் உலகிலே தன்னை வேறுபடுத்த முடியாத அளவு பிணைத்துக்கொண்டவனும் அல்ல; அந்த உலகின் இயல்பு பிடிக்காமல், எதிர்த்திடக் கிளம்பின வனுமல்ல; அந்த உலகிலே, சுவை கண்டவன், ஆனுல் சுவை போதும் என்ற நிலையில் தன்னை இறுக்கிக் கொண்டவனல்ல. விவரிக்க முடி யாத ஒரு குமுறல் அவன் உள்ளத் தில் அவ்வப்போது எழும்பிற்று; வளரவில்லை; ஆற்றல் பெற்றிட வில்லை.

கண்ணுயிரம் தனக்கென ஏற்பட் டிருந்த உலக இயல்புடன் தன்னை இணைத்துக்கொண்டிருந்தால், மன திலே சிக்கல், சங்கடம் ஏற்பட்டி ருக்காது. வாழ்க்கைஒரு சுவைமிகு விருந்தாகியிருக்கும். அல்லது அவன், தன் உலகின் போக்கிலே வெறுப்படைந்து, அதனைவிட்டு விடுபடவோ, அல்லது அதனை உடைத்திடவோ முயற்சி எடுத்துக் கொண்டிருப்பின், முள்ளும், கல் லும் நிரம்பிய பாதையில் நடந்திட வேண்டிவந்திருக்கும்; முள் தைத் திடும், குருதி கசிந்திடும், ஆனுல் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி மலர்ந் திருக்கும். கண்ணுயிரமோ, இந்த இருமுறைகளில், எந்த ஒன்றிலே யும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வில்லை; இரு முறைகளுக்கு ஏற்ற இருவேறு துறைகளிலும் அவன் இடம் பெற்றிருந்தான்; எதை விடு வது, எதைக் கொள்வது என்ப திலே உறுதி பிறந்திடவில்லை. செல்லுமிடம் எதுவென்ற தெளி வின்றி வட்டமிட்டுக்கொண்டிருந் தான். கரும்பையும் கண்டான்; கசப்பையும் கண்டான். ஆடிப் பாடிடவும் செய்தான்; ஆயாச மடைந்திடவும் செய்தான்.

கண்ணுயிரம் தனக்கென ஒரு உலகினை உருவாக்கிக்கொள்ள வில்லை; தந்தை உருவாக்கிவைத் திருந்த உலகில், 'சுகபோக உல கில்' இடம்பெற்ருன்; ஆனுல் அதிலே இருந்துகொண்டே அவன் வேறு உலகம் பற்றிய நாட்டம் கொண்டிடலானுன். இக்கட்டான நிலை என்பது மட்டுமல்ல கண்ணு யிரம் 'இரு உலக வாசியானுன்'. அதுபற்றிய விளக்கக் கதையே நாடக வடிவில் தரப்படுகிறது.

கண்ணுயிரம் இருவேறு உலகில் உந்தப்பட்டும் உறைவிடம் பெற் றும் அலைந்தது மட்டுமே, இங்கு காணக் கிடைக்கும். கடைசியாக அவன் எந்த உலகுக்குத் தன்னை உரியவனுக்கிக் கொண்டான் என் பது கூறப்படவில்லை.

கண்ணுயிரத்தின் உலகம், ஒரு திட்டவட்டமான நடவடிக்கையை மேற்கொள்ளத் தக்க இயல்பினைப் பெற்றிடத் துணை செய்யவில்லை என்பதும், இதிலிருந்து பெறத்தக்க பாடங்களில் ஒன்று என்று கூற லாம்.

கரத்தில் சிக்கிய யாழின் நரம்பு களை, இசைமுறையும் பயிற்சியும் பெருதவன், தடவிடும்போது, இன் னெலியும் கிடைத்திடும், வெற் ருெலியும் எழும்பிடும், வேதனை தரத்தக்க ஒலியும் பிறந்திடுமல்லவா

கண்ணுயிரத்தின் உலகிலே அது போலத்தான்.

இனி, கண்ணுயிரத்தின் உல கினைக் காணச் செல்வோம்.

### காட்சி 1

இடம்: சீமானின் மாளிகை மாடி அறை

நிலைமை: அறைக்கதவு மூடப் பட்டிருக்கிறது; தாளிடப் படவில்லை, ஏதோ சினி மாப் பாடலொலி வெளி யே உலவுகிறது. இடை யே 'சீட்டி' அடிக்கும் சத்தமும் கேட்கிறது. அறையின் வெளிப் பக்கம் உட்கார்ந்து

கொண்டு ஒரு வேலையாள் பூட்சுகளுக்குப் 'பாலிஷ்' போட்டுக் கொண்டிருக்கிறான். 'பூட்ஸ்' வாலிபர்களுக்கேற்ற நவநாகரிகமானதாகவும் ஏற்கனவே மெருகுள்ளதாகவும்இருக்கிறது.

அறைக் கதவைப் பாதிஅளவு திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்க்கிறான், ஒரு இளைஞன்.

இருபத்தி இரண்டு அல்லது இருபத்தி மூன்று வயதிருக்கலாம் என்று எண்ணத்தக்க தோற்றம்.

பொலிவுள்ள முகம்; 'வாழ்க்கைச் சுவையைப் பருகிடுபவன் என்பதை விளக்கிடும் பார்வை.

இளைஞன்: (வேலையாளைப் பார்த்து அகம்பாவமற்ற, ஆனால் மேல் நிலையில் உள்ளவன் என்பதை நினைவுபடுத்தும் விதமான குரலில் )
டே! இடியட்! வேலை முடிந்ததா...

வேலையாள்: (பழக்கப்பட்டுப் போயுள்ள பணிவுடன்) ஆமாங்க...

இ:- (சிகரட் பற்றவைத்துக் கொண்டே) நல்லா துடைச்சியா

வே:- ஆமாங்க...

இ:- எதை?

வே:- பூட்சை...

இ:- மடயா! முதலிலே உன் அழுக்குக் கையைத் துடைத்துக் கிட்டயா...

வே:- (இளைஞன் வேடிக்கையாகப் பேசுவதை உணர்ந்து ஒரு அசட்டுச் சிரிப்புடன்) ஓ! கைகளைச் சுத்தமாக்கிக்கிட்டு, பிறகு தாங்க இந்த வேலைக்கு வந்தேன்.

[இளைஞன் புன்னகைகாட்டிவிட்டு, அறைக்கு உள்ளே செல்கிறான்; கதவை மூடிக் கொண்டு. அறைக் கதவு சரியாக மூடப்படாததால், உள்ளே இளைஞன், மேனாட்டு உடை அணிந்து கொள்வதும் நிலைக்கண்ணாடி முன்பு நின்று சரிசெய்து கொள்வதும், வேலையாளுக்குத் தெரிகிறது. பலமுறை கண்டிருப்பதாலும், அந்தஸ்த்துக்கு ஏற்ற அலங்காரம் இருக்கும், இருக்க வேண்டியதுதான் என்றஇயல்புள்ளவன் என்பதாலும், வேலையாளின் பார்வையில் வெறுப்போ, அலட்சியமோ தென்படவில்லை.

'கண்ணாயிரம்! கண்ணு!' என்று கூப்பிட்டுக்கொண்டே, நடுத்தர வயதைக் கடந்து மூதாட்டி என்ற கட்டம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் தோற்றமுள்ள மாது அறைய நோக்கிவரக் காண்கிறான். ஓரளவு மூடப்பட்டிருக்கும் கதவைத்தள்ளித்திறந்து கொண்டு மாது உள்ளே நுழைந்தபடி...]

மாது:- கண்ணாயிரம்! டே! கண்ணு!

[இளைஞன், அவசர அவசரமாக, வாயில் இருந்த சிகரட்டை ஒருபுறம் வீசிவிட்டு வெளியே வருகிறான். வேலையாள், 'பாலிஷ்' போட்ட 'பூட்சை' காலருகே கொண்டு செல்கிறான். அதைக்கண்டு...]

புறப்பட்டாச்சா ...... வீடு வந்து அரைமணி நேரம் கூட ஆகல்லே மறுபடியும் வெளியே! ஏண்டா கண்ணாயிரம்! உனக்கு எதுக்காகடப்பா இந்த வீண் அலைச்சல். வீடு இருக்கு அரமனைபோல; தோட்டமிருக்கு நந்தவனம் போல; சொத்து இருக்கு சுகம் தர; நிம்மதியா வீட்டிலே இருக்கக் கூடாதா...

[கண்ணாயிரம் 'பூட்சு' போட்டுக் கொண்டே]

க:- நாம, நம்ம நிம்மதியை மட்டும் கவனித்துக் கொண்டா போதுமா... ஊருக்கு உபகாரம் செய்ய உழைக்கறதுதான் உத்தமர்கள் கடமைன்னு நீயே சொல்லி இருக்கறியே அத்தே! இப்ப நான் என்ன, உல்லாசத்துக்காகவாஊர்சுத்தப்போறேன். ......



மாது:- என்ன வேலேயோ, என்ன கடமையோ! பலபேர் என்னேக் கேட்கருங்க, ஏன் அன்னபூரணி கண்ணுயிரம் இப்படி அலேயறதுன்னு. ஒவ்வொரு நாளுமா வேலே இருக்கும் உனக்கு...

க:- இன்னும் ஒரு பத்துநாள், இப்படி அப்படித் திரும்பக்கூட நேரம் கிடையாது நடனவிழா ஏற்பாடு. விழா எதுக்காக? ஏழைப் பிள்ளேகளேப் படிக்கவைக்க...

அன்னபூரணி:- நல்ல காரியந்தான் ...உங்க அப்பாவிடம் சொல்லி, ஒரு ஆயிரம் ஐநூறு வாங்கிக் கொடுத்துவிடு...தர்ம காரியம்... வேண்டாம்ஞ சொல்வேன்......நீ எதுக்காக அலேயவேணும்...

க:- (சிறிதளவு குறும்புத்தனத்துடன்) யாரிடம்? அப்பாவைக் கேட்டா? நல்லா கொடுப்பாரே... பணம்னு கேட்ட உடனேதான் அப்பா முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்குமே...

அ:- நீ, வீண்செலவு செய்துவிடுவே என்கிற பயந்தான். நல்லகாரியத்துக்குன்னு கேட்டா, தராமலா போவான். நீ, நாட்டியக்காரக் கூட்டத்திலே சேர்ந்து, ஆடிப் பாடிக் கெட்டு, அந்தஸ்த்தைக் கெடுத்துக்கொள்வயோ என்கிற பயந்தான்.

க:- அப்பா பக்கமாத்தானே நீங்க பேசுவிங்க. நான் இப்படி ஊருக்காக உழைக்கறதாலேதான் ஒரு நூறுபேராவது நம்ம குடும்பத்தைப்பத்தி நல்லபடியாப் பேசருங்க. ஏழைப் பிள்ளேகளுக்கு நிதி ஒரு ஐம்பதாயிரமாவது சேர்த்தாகணும்னு நான் படாதபாடுபடறேன்......நீ ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டயே, நான் ஊரைச் சுத்தறேன்னு...

[இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டே வருகிருர் சீமான் சிங்காரவேலர், கண்ணுயிரத்தின் தந்தை. ஐம்பது வயதைக் கடந்தவர் என்றபோதிலும் முடுக்குடன் காணப்படுகிருர். உலகம் தன் காலடியில் இருக்கிறது என்ற நினேப்பைத் தெரிவிக்கும்விதமான பார்வை, நடை. மத விஷயத்தில் அக்கறைகொண்டவர்என்பதைக் காட்டும் குறிகள்.]

சிங்காரவேலர்:- ஏன் ஊர் சுற்றித் திரியமாட்டான். ஏதாவது வித்து விசனம், கவலே கஷ்டம் இருந்தாத்தானே. காளேமாடு போலச் சுத்தருன், கட்டறுந்த காளே போல. இருப்பது பாழாகாமப் பார்த்துக்கொள்ளத்தான் நான் ஒருத்தன் இருக்கறனே, அவனுக்கென்ன! அவன் உண்டு, நண்பர்கள் உண்டு. செலவுக்குக் கொட்டிக்கொடுக்க நான்தான் இருக்கறனே ஒரு மடயன்...

[கண்ணுயிரம் சிறிது கலங்குகிருன்.]

அ:- (சாந்தப்படுத்தும் முறையில்) ஏண்டா தம்பி. இப்படிப் பேசறே. அவன் நல்ல காரியத்துக்காகத்தான் வேலே செய்கிருன், சொன்ஞன்...

சி:- தெரியுமே எனக்கு, இவன் ஈடுபட்டிருக்கிற நல்ல காரியம்...... அக்கா! நாட்டியக்காரி வீட்டிலே இவனுக்கு என்ன வேலே? என்ன வேலேன்னு கேளேன்...

க:- (தைரியத்தைத் தருவித்துக்கொண்டு) அடே அப்பா, பெரிய தப்பு கண்டுபிடித்துவிட்டாரு...... நாட்டியக்காரி வீட்டிலே போனது வேலேயத்து அல்ல. ஏழைப் பிள்ளேகள் உதவிக்காக விழா நடத்தறமே,அதிலே நாட்டியமாட ஏற்பாடு செய்யப் போயிருந்தேன்.

அ:- (அன்பாக) நீ ஏண்டா போகணும்...ஒரு ஆளே அனுப்பி கேட்டனுப்பறது...

க:- (விளக்கம் அளிக்கும் முறையில்) வேறே ஆளே அனுப்பி இருந்தா ரூபா ஆயிரமல்லவா கேட்டிருப்பாங்க. நானே போனதாலேதான், தம்பி! தம்பி! நீ வீடேறி வந்த பிறகு பணத்தைப் பத்தின பேச்சே கிடையாது...... என்ன விருப்பமோ, கொடுன்னு சொல்லி இருக்காங்க......

அன்: பார்த்தயடா தம்பி! அதஞலேதான் போயிருக்கான் கண்ணுயிரம்...

சி:- (குத்தலாக) இவன் முகத்தைப் பார்த்ததும்பணமே வாண்டாப்னு சொல்லிவிட்டாங்க...ஏன்டாப்பா அப்படித்தானே.

க:- (விளக்கம் தருகிற முறையில்) எனக்காகன்னு சொன்னஞ எல்லாம் அப்பா பேரைச்சொனனதும், சரி சரின்னு ஒத்துக்கொண்டாங்க (குத்தலாக) நாட்டியமாடற பொண்ணேட அம்மா, நான் அப்பாபேரைச் சொன்னதும் அவர் மகஞ நீ! அவரோட மகஞ! என்று கேட்டுப் பூரித்துப் போஞங்க...

[சிங்காரவேலர் கூச்சமடைகிருர். முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்கிருர்.]

அ:- அவளுக்கென்ன, அவ்வளவு உருக்கம் உங்க அப்பன்பேரைக் கேட்டதும்...

க:- (குத்தலாக) என்னேக் கேட்டா? அப்பாவை அல்லவா கேட்கவேணும். அப்பா முன்னே எல்லாம் வருஷா வருஷம் நவராத்திரி உற்சவம் நடத்துவாராமே, அந்த அம்மாவோட கச்சேரிதான் ஏற்பாடு செய்வாராம்...

சி:- (சலிப்படைவது போலாகி சரிடா போதும் உன்ஞேட விளக்கம், விவரம், வியாக்யானம்...

க:- அந்த் அம்மாக்கூடச் சொன்ஞங்க...உங்க அப்பா உற்சவம்தான் நடத்தி வந்தாரு, பலபேர் செய்ததுபோல. நீ பரவாயில்லே ஊருக்கு உபகாரம் செய்கிறேன்னு சொல்லி சந்தோஷப்பட்டாங்க...

சி:- படுவா, படுவா......பேராசைக்காரக் கழுதே...

அ:- யாருடா தம்பி! அவ.

சி:- அட, என்னத்துக்காக அக்கா!

நீவேறே விஷயம் தெரியாமக் கிளறிக் கிளறிக் கேட்கறே...

[கண்ணுயிரத்தைக் கோபமாகப் பார்த்தபடி]

சரி, இந்தத் தடவையோட நிறுத்திக்கொள்ளு உன்ஞேட நாட்டிய ஏற்பாட்டை எல்லாம்... தெரியும் எனக்கு...நானும் நவராத்திரி உற்சவத்துக்குக் கச்

பொங்கல் வாழ்த்துக்கள்!
மூட்டைப்பூச்சி மருந்துகளில்
சிறந்தது
பக்ராஜ்
மூட்டைப்பூச்சி
பவுடர் & தைலம்
வாங்கி உபயோகியுங்கள்.
ஏஜண்ட் இல்லாத ஊர்களுக்கு
ஏஜண்ட் தேவை.
உரிமையாளர்:
சி. மு. சி. செல்லேயா
191, பெரியகடை வீதி,
திண்டுக்கல்.

சேரிகள் ஏற்பாடு செய்தவன் தான்...எனக்கும் தெரியும்...எல்லாம்...ஆமாம் இதோடு விட்டுத் தொலை...போதும்.

[கண்ணாயிரம் வேகமாக வெளியே செல்கிறான். முகத்திலே கோபக்குறியும், பழய குப்பையைக் கிளறி, தகப்பனாரை மடக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சிக் குறியும் கலந்து தெரிகிறது. வேலையாளை வரச் சொல்லி ஜாடை காட்டியபடி அன்னபூரணி அம்மாள் வேறு பக்கம் போகிறாள். சிங்கார வேலர், அறைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு, முணுமுணுத்தபடி, கீழ்க்கூடம் செல்கிறார்.

கூடத்தில் ஏற்கனவே காத்துக்கொண்டிருக்கும்-கனவான் ஆகிக்கொண்டிருக்கும் நிலையில் உள்ள ஒருவர், வணக்கம் கூறிவிட்டு, உட்காருகிறார்.

அலட்சியமாகவே சிங்கார வேலர் பதில் வணக்கம் கூறிவிட்டு, சுழல் நாற்காலியில் அமருகிறார்]

வந்தவர்:- நம்ம தம்பி, வியாபாரத்தைக் கவனிக்கிறதில்லே போலிருக்குதுங்களே...

சி:- இல்லிங்க.........அவனோட போக்கே ஒரு தனி விதமா...

வ:- அதைத்தான் சொல்றேன்..... பாட்டு, கூத்து, நாட்டியம் நாடகம் இப்படி...

[வேலையாள் வந்து நிற்கிறான் பணிவாக]

சி:- (கோபம் காட்டியபடி)....ஆடிக் கெட்டுப்போகிறான் என் மகன்னு பேசும் விவரம் தெரியாததுங்க...

[வந்தவர் திகைப்படைகிறார்]

அவன் நல்ல காரியத்துக்காக, ஏழைப் பிள்ளைகளுக்காக விழா நடத்தறான்...நாமதான் பணமோ பணம்னு அலையறோம்......அவன் அப்படி அல்லய்யா.......ஊருக்கு உபகாரம் செய்யணும் என்கிற நோக்கம் இருக்குது.......நல்லது தானே அது...

[வந்தவர் தலை அசைக்கிறார், மகனைச் சிறிது நேரத்திற்கு முன்பு கண்டித்தவர் இப்போது பாராட்டுகிறாரே; இது என்ன விந்தை என்று எண்ணி ஆச்சரியப்படுகிறான் வேலையாள்]

பணமா பெரிசு..........கூடவேவா கொண்டுகிட்டுப் போயிடப் போறோம் மூட்டைகட்டி......பத்துப் பேருக்கு உபகாரம் செய்து நல்ல பேர் எடுக்கணுமய்யா...... ஏதோ நமக்கெல்லாம் அந்த நினைப்பும் இல்லே.........நேரமும் இல்லே மகனாவது ஊருக்கு உபகாரம் செய்கிறானேன்னு எனக்கு மகிழ்ச்சி...

வ:- அது சரிங்க... ஆமாங்க...

சி:- அதனாலேதான் நானும் அவன் நாலு காசு செலவழித்தாலும் பரவாயில்லேன்னு இருக்கறேன் ...கேட்டதைத் தட்டாத கொடுக்கிறேன்...இதோ பாருங்க, பணம் சேரச்சேர குணம் வளரணும்... ஊருக்கு உபகாரம் செய்யணும் ...உமக்கெங்கே அதெல்லாம் பிடிக்கப்போவுது...

வ:- அப்படிச் சொல்லிவிடலாமுங்களா...ஏதோ என் சக்தியானுசாரம் நானும் செய்துகிட்டுத் தான் வர்றேன்... .இந்த வருஷம் செல்லியம்மன் கோயில் சேவற் காவடி உற்சவச் செலவு பூரா நான்தானுங்க...

சி; அதைச் செய்வே; தாயே! என்னை மன்னித்துவிடு, பாவத்தைக் கழுவிவிடுன்னு ...அதுவும் ஒருவிதமான வியாபாரந்தான்யா ...இதோ பாரய்யா, அதிலே எல்லாம் பலன் இல்லே...இதோ நம்ம மகன் ஈடுபட்டு இருக்கற காரியம் இருக்கு பாரு, அது சிலாக்கியமானது...

வ:- உண்மை தானுங்க, ஏழை எளியவங்களோட கண்ணைத் திறந்து வைக்கறது புண்ய காரியந்தானுங்க...

சி:- அப்படிப்பட்ட காரியத்துக்குக் கொடுங்களேன் ஒரு ஆயிரம்...

வ:- (திடுக்கிட்டு) ஒரு ஆயிரமுங்களா...

சி:- (கேலிச் சிரிப்புடன்) சொன்ன உடனே முகமே மாறிவிட்டதே... சரிய்யா இந்தா, இதோ பாரு...

[ஒரு குறிப்பேட்டை அவர் எதிரில் வீசி)

உமக்கு இஷ்டமானதைக் கொடும்.

[வந்தவர் தயக்கமடைகிறார் சமாளித்துக் கொண்டு 500 ரூபாய் என்று கை எழுத்துப் போடுகிறார். குறிப்பேட்டை மரியாதையாக சிங்கார வேலரிடம் தருகிறார்]

சி:- சபிச்சிக் கொட்டாதய்யா...... இது சிங்காரவேலு வீட்டுக்கு



அல்ல....ஏழைகளுக்கு ...சரீ...., வந்த விஷயத்தைக் கவனிக்காமலே என்னன்னு கேட்காமலே இருந்து விட்டேனே......என்ன விஷயமா வந்திங்க.

வ:- ஒண்ணுமில்லிங்க ஒரு புது வியாபாரத்தைப் பத்தி உங்களோட யோசனையைக் கேட்கலாம்னு...

சி:- இருக்கிற வியாபாரம் போதல்லே, புதுசா வேறே வேணுமா ...சரி ஆசை யாரை விடுது... சொல்லுங்க என்ன வியாபாரம் அது.

வ:- சிலோனுக்கு வெங்காய ஏற்றுமதி செய்தா எதோ கொஞ்சம் கிடைக்கும்னு தெரியுது...

சி:- கொஞ்சம் என்னய்யா நல்லாவே கிடைக்குது, அதனாலே தானே பேயா அலையறானுங்க பலபேர். பர்மிட்டுக்கு...

வங்:- நமக்கு அந்தக் கஷ்டம் இல்லிங்க...ஆறுகொடுத்து 'பர்மிட்' நம்ம பேருக்கு வருகிறபடிசெய்து கிட்டேன். நம்ம சத்தார் சாயபு வோட பர்மிட்...

சிங்:- (ஒரு கணம் தீவிரமாகச் சிந்தித்து முடிவுக்கு வந்தவராகி ஒருவெடிச்சிரிப்பைஉதிர்க்கிறார்.) பைத்யக்கார மனுஷன்யாநீர். ஆசை கண்ணை மறைக்குது. சத்தார் சாயபு பர்மிட்டையா வாங்கி விட்டீர், ஆறும்...ரொக்கமாகவே கொடுத்தாச்சா...... போறாத வேளை...

வ:- என்னதுங்க...என்ன சொல்றிங்க...ஆறு அதிகம்னு சொல்

றீங்களா ஆதாயம் கிடைக்கும்னு கணக்கு சொல்லுதே...

சி:- கூட்டல் கழித்தல் கணக்கு லாபத்தைக் குவிச்சிக்காட்டும் யா......யார் இல்லேன்னு சொல்றது...

வ:- சிரிச்சிங்களே..........போருத வேலேன்று சொன்னிங்களே...

சி:- போருத வேலேதான்......ஐயா! பர்மிட்டு இப்படித் தாறுமாரு கைமாறுவது தவறுன்னு சட்டம் சொல்லுது, தெரியுதா......உன் விஷயமாகத்தான் மோப்பம் பிடிக்கருங்கன்னு எனக்குத்தெரியாது, நேத்துத்தான் பெரிய அதிகாரி ஒருத்தர் வந்து தகவல் கேட்டாரு இதுவிஷயமா......நான் சத்தார் சாயபுவிடம் பர்மிட்டு இருக்குது, ஆனு வியாபாரம் செய்யப் போதுமான பணம் இல்லே, யாருக்காவது விற்றுவிடுவான்னு சொன்னேன். முன்கூட்டி என்னிடம் ஒருபேச்சு, இப்படி ஒரு பர்மிட்டு இருக்குது வாங்கட்டுமான்னு கேட்டிருந்தா நான் அதிகாரிக்கு வேறே போக்குக் காட்டி இருப்பேன். நான் என்னத்தைக் கண்டேன். தெரிந்ததை, உண்மையைச் சொல்லிவிட்டேன். அவரு அப்பவே தந்தி கொடுத்துட்டாரே டில்லிக்கு. பர்மிட்டு பறிமுதலாயிடுமே...

வ:- (பதறி) பாதிப் பணம் அட்வான்சு கொடுத்துவிட்டனே...

சி:- பணம் கிடக்கட்டும்...ஏதாவது ரசீது, ஒப்பந்தம் இதிலே கை எழுத்து உண்டா?

வ:- இல்லிங்க...

சி:- தப்பிச்சிகிட்டே போ! பணம் போனு போகுதய்யா, கம்பி எண்ணுமை இருந்தாப் போதும்...இப்பவே, சத்தாருகிட்டச் சொல்லி விடு நமக்கு வேண்டாம்யா பர்மிட்டுன்னு...

வ:- ஆகட்டுங்க.....பர்மிட்டுக்காக நான் முயற்சி செய்தது குற்றமில்லிங்களே...

சி:- மூச்சு விடாதேய்யா யாரிடமும்......அய்யோவ்! ஒரு வேலே செய்......அந்த அதிகாரி ஊரை விட்டுப் போறவரைக்கும், நீ இங்கே இல்லாமலிருந்தா நல்லது. ஏன்னு, ஏதாவது அவன் கேட்டு, நீ எதையாவது உளறி வைத்தா, ஆபத்தாயிடும். பேசாம ஒரு நாலு நாளேக்கு வெளியூர் போய் இரு...

வ:- காரைக்காலிலே சொந்தக்காரர் வீட்டிலே கலியாணம்...... அங்கு போய்...

சி:- நல்ல யோசனே, புறப்படு புறப்படு...

[வந்தவர் வணக்கம் கூறி விட்டுச் செல்கிருர்.]

[சிங்காரவேலர் வெற்றிப் புன்னகையுடன் வேலேயாளேப் பார்த்து]

டேய்! ஓடிப்போயி, சத்தார் சாயபுவை கையோட அழைச்சிக்கிட்டு வா! அவசரம், முக்கியம்னு சொல்லு...

[வேலேயாள் விரைந்து செல்கிருன்.]

## காட்சி 2

இடம்: கடற்கரைச் சாலே.

நிலேமை: நள்ளிரவு வளரும் நேரம் போதை மிகுந்த நிலேயில் கண்ணுயிரம் தன் நண்பர்களுடன் காரில் கடற்கரைச் சாலேயில் சென்றுகொண்டிருக்கிருன்.

கைகளேத் தட்டிக்கொண்டும், பாடிக்கொண்டும், காருக்குள் நாட்டியமாடுகிருன் கண்ணுயிரம். உடனிருக்கும் நண்பர்கள் அடக்கப் பார்க்கிருர்கள்; முடியவில்லே.

கண்ணுயிரம் மோடார் ஓட்டுபவனின் முதுகில் தட்டி, குளறியபடி...

கண்ணுயிரம்:- டிரைவர்! காரை பீச் ரோடுக்கு விடு...

டிரைவர்:- (திகைத்து) பீச்ரோடிலே தானுங்கபோய்க்கிட்டு இருக்குது வண்டி...

க:- (மீண்டும் டிரைவர் முதுகில் அடித்தபடி) இடியட்! யாரை ஏமாத்தப் பார்க்கறே இதுதான் பீச் ரோடா!

[உடனிருக்கும் நண்பன் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி] பிரதர்! நம்மை மடயன் என்றே எண்ணிக் கொண்டான் போல இருக்குது இந்த டிரைவர்.

[டிரைவரை அடித்து] ஓட்டு பீச்சுக்கு, நாடியா காத்துகிட்டு இருப்பா.

நண்பர்:- நாடியாவை வீட்டிலே விட்டுவிட்டுத் தானே பிரதர் நாம புறப்பட்டோம்......

க:- ஆமாம்......நாடியா ஓடியா! ஓடியா நாடியா! எப்படி நம்ம பாட்டு. புது ட்யூன்......டிரைவர்! ஓட்டமாட்டே பீச்சு பக்கம்...

டி:- புதுசா நான் ஒரு பீச்சு போட வேண்டியதுதான்...

[கண்ணுயிரம் கண்களே மூடிக் கொள்கிருன்.

மோடார், சிங்காரவேலர் மாளிகை வாயற்படியில் வந்து நிற்கிறது. கண்ணுயிரத்தை எழுப்பிவிடுகிருன் நண்பன். கண்ணுயிரம் தள்ளாடுகிருன்.

நண்பன், என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிருன்.

கண்ணுயிரம் தன் கையில் இருக்கும் அலங்காரப் பையை ஆட்டிக்கொண்டு, இடுப்பை வளேத்துக்கொண்டு நடக்கிருன், ஓடியா! நாடியா!— நாடியா! ஓடியா! — என்று பாடியபடி.



### சொத்து என்ருல்?....

சொத்து, சொத்து என்று அங்கலாய்த்துக் கொள்கிருேமே, அப்படியென்ருல் என்ன தெரியுமா?

மற்றவர்களுடைய உழைப்பையும், நம்முடைய பணமாக மாற்றிக்கொள்ளும் ஒரு திருட்டுத்தனம்தான் அது.

—டால்ஸ்டாய்.

கண்ணுயிரம் கூச்சலிட்டு வீட்டுக்குள்ளே உள்ளவர்களை எங்கே எழுப்பிவிட்டு விடுகிருனே என்ற பயம் நண்பனுக்கு.

அங்கு அப்போது மாளிகைப் பணியாட்களில் ஒருவனை கருப்பன் வருகிருன்.)

ந:- நல்லவேளை, கருப்பா! கண்ணுயிரத்தை ஜாக்ரதையாக அழைத்துக் கொண்டுபோய் படுக்க வை ...ஐயா கண்லே படாதபடி...

(கருப்பன், கண்ணுயிரத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு மெள்ள மாளிகையின் தோட்டப் பக்கமாக அழைத்துச் செல்கிருன்.

தோட்டப் பக்கம் உள்ள படிக்கட்டு வழியாக, யாருக்கும் தெரியாமல் கண்ணுயிரத்தை அவன் அறைக்கு அழைத்துச் சென்று, படுக்கையில் சாயச் செய்கிருன்.

மின்விளக்கைப் போடுகிருன், கருப்பன்.

போதையில், ஆள் அடையாளம் தெரியவில்லை, கண்ணுயிரத்துக்கு.

எழுந்து நிற்கிருன், தள்ளாடியபடி.

கருப்பனைப் பார்த்து மரியாதையாகக் கும்பிடுகிருன்.

க:- (குளறியபடி)

வரணும்! வரணும்! ஏது இந்தப் பககம்...இந்த நேரத்திலே ...சௌக்கியந்தானு..குழந்தை குட்டிகளெல்லாம் சுகந்தானே ...எப்படி உங்களோட யோக க்ஷேமம்...கலியாணமெல்லாம் ஆயிட்டுதா...

[கருப்பன் திகைக்கிருன். கண்ணுயிரத்தை படுக்க வைக்க முயற்சிக்கிருன். கண்ணுயிரம், கருப்பனைக் கும்பிடுவதும், உட்காருவதும், குளறுவதுமாகவே இருக்கிருன்]

கரு:-எஜமான்! நான்...நான் கருப்பனுங்க...

[கருப்பனுக்குத் திகைப்பு மேலிட்டு நாவுலர்ந்து விடுகிறது. மேஜை மீதிருந்த கூஜாவிலிருந்து டமளரில் தண்ணீர் ஊற்றிக் குடிக்க முயற்சிக்கிருன். கண்ணுயிரம் அதைத் தடுத்துவிட்டு, குழைவாக]

க:- என்ன பிரதர்! நம்மை இப்படியா அவமானப்படுத்துவது. இரு, பிரதர்!

[என்று கூறி, அலமாரியைத் திறந்து ஒரு பாட்டிலை எடுத்துத் திறந்து டமளரில் ஊற்றிகருப்பனிடம்கொடுத்து]

சாப்பிடுங்க பிரதர்! ஏ. ஒன்! சாப்பிடுங்க...

[கருப்பன் தயக்கமடையக் கண்டு]

இதிலே என்ன பிரதர் கூச்சம்! சும்மா சாப்பிடுங்க...

[பாட்டிலில் இருப்பதைக் குடித்துக்கொண்டே]

நானும் இப்படித்தான் கூச்சப்பட்டேன், முதல் நாள். என்ன செய்தா தெரியுமா, மைலேடி... மைலேடி தெரியுமேல்லோ பிரதர் நாடியா! நாடியா! ஓடியா! ஓடியா நாடியா!...(பாடுகிருன்)

[கருப்பன், பின்புறம் திரும்பியபடி குடிக்கிருன். அவனை இழுத்துத் தன் பக்கம் திருப்பி மேலும் தருகிருன். போதை ஏற ஏற கருப்பனுக்கும் கூச்சம் போய்விடுகிறது. தாராளமாகக் குடிக்கிருன். குடிவெறியில், கண்ணுயிரம், அலங்காரப் பையைக கருப்பன் கையில் மாட்டிவிட்டு, நாடியா போல நடக்கச் செய்கிருன். தங்கச் செயின் போட்ட கைகடிகாரத்தை எடுத்து, கருப்பன் கையில் கட்டிவிடுகிருன்.

மேலும் குடிக்கிருன். மயங்கிப் படுக்கையில் வழுகிருன், மயக்கம் மேலிட்டு.

கருப்பன், சிறிது சிறிதாக நிதானமடைகிருன்.

மெள்ளத் தள்ளாடியபடி வீடு நோக்கிச் செல்கிருன்.

## காட்சி 3

இடம்: கண்ணுயிரத்தின் அறை.

நிலைமை: சூரிய வெளிச்சம் அடிக்க ஆரம்பிக்கிறது.

கதவு திறந்தே கிடக்கிறது.

கண்ணுயிரம் அலங்கோலமாகப் படுத்து உறங்கிக்கொண்டிருக்கிருன்.

பாட்டில் கீழே உருண்டு கிடக்கிறது.

வீடு கூட்டும் வீராயி வருகிருள்.

விளக்கை அணைத்துவிட்டு, உருண்டு கிடந்த பாட்டிலைக் கட்டிலுக்கு அடியில் வைத்துவிட்டு, கதவை மூடிவிட்டுச் செல்கிருள், வேறு வேலைகளைக் கவனிக்க.

## காட்சி 4

இடம்: மாளிகை மாடிக் கூடம்.

இருப்போர்: சிங்காரவேலர் கணக்கெழுதுவோர்.

நிலைமை: சிங்காரவேலர், காலைக் கடனை முடித்துவிட்டு, பேப்பர் படித்துக்கொண்டிருக்கிருர். வேலையாள், தயங்கித் தயங்கிவந்து நிற்கிருன். என்னடா என்று கேட்பதுபோல அவனைப் பார்க்கிருர்.

வேலையாள்:- ஐயாவைப் பார்க்க வேணும்னு ஒரு பொண்ணு...

சிங்காரவேலர்:- (வியப்படைந்து) என்னைப் பார்க்கவா...பொண்ணு ...யார்டா அது.

[கீழே இறங்கிப் போகிருர்.]

கூடத்தில் இருபத்தைந்து வயதுள்ள பெண், நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கிருள்.

முகத்தில் பவுடரும் உதட்டில் சாயமும் காலில் பூட்சும் இருக்கிறது.

சிங்காரவேலரைப் பார்த்ததும், பயந்து எழுந்து நின்று கும்பிடுகிருள்.

[சோபாவில் உட்காருகிருர்.]

சி:- யார் நீ? யாரைப் பார்க்கணும்...

பெண்:- இந்த வீட்டுக்கார ஐயா வைத்தான...

சி:- அது நான்தான்...என்ன விஷயமா...என்னைப் பார்க்க...

திண்டுக்கல்லில்
பிரியாணி & சாப்பாட்டிற்கு
சிறந்த இடம்
செண்பக
அரசு பாண்டியன்
உணவு நிலையம்
உரிமையாளர்: P. கணேசன்
45, கச்சேரி ரோடு, திண்டுக்கல்.
மேற்பார்வை:
க. வே. விக்ரமாதித்தராசன்.

பெ:- உங்களைப் பார்க்க இல்லீங்க. இந்த வீட்டுக்கார ஐயா...வேறே ஒருவர் வாலிபமா...

சி:- (புன்சிரிப்புடன்) நம்ம மகன் தான்...கண்ணுயிரம்...

பெ:- அவரைத்தானுங்க... அவசர மாப் பார்க்கணும்...

சி:- நீ யாரு? அவனே எப்படித் தெரியும்? அவனிடம் என்ன பேச்சு?

பெ:- (வெட்கத்துடன்) அவரோட அப்பான்னு சொல்லி விட்டிங்க... நான் எப்படிங்க விவரமெல்லாம் சொல்றது......நான் அவரிடமே பேசிக்கொள்றேன்...

சி:- (கண்டிப்புடன்) இப்படிப்பட்ட சினேகமெல்லாம் அவனுக்கு இருக்காதே ... இருக்கக்கூடாதே .....

பெ:- (தலை குனிந்தபடி) இரண்டு மூன்று வருஷமாகவே தெரியுமுங்க, பழக்கம் உண்டுங்க...

சி:- நீ, நாட்டியமாடுவயா...

பெ:- (சிறிது குதூகலத்துடன்) ஆமாங்க! பார்த்திருக்கிறிங்களா .....

சி:- (குத்தலாக) இல்லே இல்லே! இப்பப் பார்த்துத்தான் தெரிஞ்சிக்கிட்டேன். சரி. அவன் உன்னைப் பார்க்கமாட்டான்...விஷயம் என்னுன்னு என்னிடம் சொல்லு.

பெ:- (பதைப்புடன்) பார்த்தாகணுமுங்க. நேற்றுஇராத்திரி அவரு என் பையை எடுத்துக்கிட்டு வந்துவிட்டாரு. பணம் இருக்குது பையிலே. ஐம்பது ரூபா.

சி:- (கோபமாக) ஏய்! என்ன கதை அளக்கறே. உன்னிடமிருந்து ஐம்பது ரூபாயும் பையும் எடுத்துக்கொண்டானு ...... நீ எந்தக் காவாலிப் பயலிடமோ பணத்தைப் பறிகொடுத்துவிட்டு, பழியைக் கண்ணுயிரத்தின் பேர்லே போட்றே...

பெ:- (படபடத்து) உங்களுக்கு ஒரு விவரமும் தெரியாதுங்க. நீங்க ஒரு நிமிஷம் அவரை இங்கே வரச் சொல்லுங்களேன்...நான் பேசிக்கொள்கிறேன். பணம் இப்ப அவசரமா வேணும்...

சி:- (ஆத்திரத்துடன்) தா! செச்சே! போ, வெளியே. பழி போட்டுப் பணம் பறிக்கிறவளா நீ. போ வெளியே.

பெ:- (கோபம் பொங்கும் நிலையில்) பெரிய மனிதராச்சேன்னு மட்டு மரியாதையோடப் பேசறேன், ஒரே அடியா விரட்டறியே என்னய்யா! குடிவெறி ராத்திரி உன் மகனுக்கு. பணப் பையைத் தூக்கிக்கிட்டுவந்துவிட்டான். அதைத் திருப்பி வாங்காம இந்த இடத்தை விட்டு ஒரு அடிகூட நகரமாட்டேன். தெரியுதா...

[நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிருள்.]

என்னமோ வீட்டுக்குள்ளே வந்துட்டாளே என்ன வேணுமானு செய்யலாம்னு விரட்டறியா...... இப்பக் கூச்சல் போட்டுக் கும்பலைச் சேர்த்து...பார். உன்னை...

சி:- (சிறிது பயந்து) தா! சும்மா இரு. ஆர்ப்பாட்டத்தைக் குறைச்சிக்க......அவனேயே கூப்பிட்டுக் கேட்கறேன்.........கண்ணுயிரம்! கண்ணுயிரம்...

[கண்ணுயிரம் மாடிப் படியில் இறங்கி வருகிருன். கீழே பெண் இருக்கக்கண்டு பயந்து போ! போ! என்று அவளுக்கு ஜாடை காட்டுகிருன்.

சிங்காரவேலர் திரும்பிப் பார்த்துவிடுகிருர். வேறு வழியின்றிக் கீழே வருகிருன்.

சி:- (கோபமாக) என்னடா இது? இந்தப் பெண்ணு என்னென்னமோ சொல்லுதே...

க:- (தடுமாற்றத்துடன்) என்ன... என்ன...இங்கே ஏன் வந்தே......

பெ:- (கோபம் குறையாத நிலையில்) நீ செய்துவிட்டு வந்த காரியத்துக்கு நான் வேறே எங்கே போவேன்...

சி:- பணப் பையை எடுத்துக்கிட்டு வந்தயாமே...

க:- (திணறியபடி) நானு! பணப் பையா......இந்தப் பெண்ணே எனக்குத் தெரியாதே...

பெ:- (பதறி) இவர் மகன்தானே, நீ. நீ வேறே எப்படி இருப்பே? என்னைத் தெரியாதா உனக்கு?

சி:- அவன்தான் சொல்ருனே உன்னைத் தெரியாதுன்னு...

பெ:- இவரோட அப்பன்தானே நீ. நீ வேறே எப்படிப் பேசுவே. மரியாதையா பணத்தைக்கொடுத்து அனுப்பி வையுங்க. உங்களோட உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் நான் பயந்து போயிடுவேன்னு மட்டும் எண்ணிக்கொள்ளாதிங்க. ஊர் சிரிப்பா சிரிக்கும், அவமானத்தைத் தாங்க மாட்டிங்க....பெரிய இடம்......பெரிய இடம்...தெரியுதே இலட்சணம்... என்னை வம்புக்கு இழுத்து வீணு அவமானப்படாதிங்க.

[கண்ணுயிரம் தலைகவிழ்ந்து கொண்டு நிற்கிருன்.

சிங்காரவேலர் பொறி பறக்கும் கண்களுடன் அவனைப் பார்க்கிருர்.)

சி:- கண்டபடி சுத்துவதாலே வருகிற வினைடா இது வினை...

[கண்ணுயிரம் மாடிக்குச் செல்ல முனைகிருன். பெண் அவனைத் தடுத்து நிறுத்தி)

பெ:- உன் யோக்யதை தெரியுது இப்ப. அப்ப கொஞ்சினே, கெஞ்சினே, கூத்தாடினே......பாட்டு வேறே (கேலிக் குரலில்) நாடியா! ஓடியா நாடியா! பாட்டு அப்ப! இப்ப நான் அவனைப் பார்த்ததே கிடையாதே...

சி:- (கோபத்துடன்) போதும் உன் பேச்சை நிறுத்திக் கொள்ளு. ஐம்பது ரூபாயா வேணும்...

பெ:- தரனுமல்ல, இனுமல்ல...என் பையிலே இருந்த பணம்...

சி:- (சலிப்புடன்) போடா, போய் ஐம்பது கொண்டா, அலமாரியிலே இருக்குது.

பெ:- (கண்டிப்புடன்) மேலே ஒரு அஞ்சு கொண்டு வாங்க சார்! பை வாங்க......பெரிய மனிதர்களாம், பெரிய மனிதர்கள்! எதிலேன்னுதான் தெரியல்லே. நாங்க

PHONE: 359 & 359-A.

**K. T. O. T. Paulraj**

Iron & Paint Merchants,

190, Big Bazaar Street,

**DINDIGUL.**

★

STOCKIST FOR:

SHALIMAR PAINT

SANKAR BRAND CEMENT

"LAXMI ASBESTOS"

CEMENT PRODUCTS

AND

"PARRY WARE"

CLOSETS.

வயத்துச் சோத்துக்கு வேறே வழி இல்லாததாலே கெட்டு அலையறாம். கொட்டிக் கிடக்குதே பணம், குணம் பாரு எப்படி இருக்குதுன்னு...

சி:- வாயை மூடிக்கிட்டுக் கிட...

பெ:- (குத்தலாக) கொஞ்சம் பேசேன், கொஞ்சம் பேசேன்னு கூத்தாடினான் உன் மகன் ராத்திரி...

(கண்ணாயிரம் பணம் கொண்டு வந்து தருகிறான், கண் கலக்கத்துடன். வந்தவள் அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் போகிறாள். சிங்காரவேலர் சோகமாக நாற்காலியில் அமருகிறார்.

சில விநாடிகள் இருவரும் மௌனமாக இருக்கிறார்கள். பிறகு பெருமூச்செறிந்தபடி,

சி:-கண்ணாயிரம்! நல்லா இருக்குதா நீ செய்த காரியம். ஊர் மெச்ச வாழற குடும்பம்டா இது. ... நம்மைப் பார்த்து மற்றவங்க, நீதி நியாயம், அன்பு பண்பு இதையெல்லாம் தெரிந்துகொள்ளணும். அந்த அர்த்தத்திலேதான் நம்ம இடத்தைப் பெரிய இடம்னு ஊரார் சொல்றாங்க. நீ செய்த இந்தக் காரியம், நினைத்தாலே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் ... அப்படிப்பட்ட காரியம். யாரு செய்கிற காரியம் இதெல்லாம். வக்கு வழியத்ததுக் கண்டபடி திரியும், கண்டவளோடு சேர்ந்து கூத்தாடும். அதுகளுக்கு நல்லது கெட்டது தெரியாது. மான அவமானத்தைப்பத்தின அக்கறை இருக்காது. எப்படி நடந்தாலும் யாரும் எதுவும் கேட்க மாட்டாங்க. நாம அப்படியா? நமக்கு அடுக்குமாடா கண்ணாயிரம், இப்படிப்பட்ட காரியம்...

[கண்ணாயிரத்தின் மனம் நெகிழுகிறது. மறுகணம் கல்லாக்கிக் கொள்கிறான்]

க:- நான்தான் சொல்றனே எனக்கு அந்தப் பெண்ணையே தெரியாதுன்னு...

சி:- (ஆத்திரத்துடன்) என்னிடமே சொல்றயா அந்த அண்டப் புளுகை. ஏண்டா! என்னை என்ன ஏமாளின்னே தீர்மானித்து விட்டாயா...

க:- அண்டப்புளுகு, ஆகாசப்புளுகுன்னு என்ன வேணுமானாலும் சொல்லிக் கொள்ளுங்க, எனக்குத் தெரியாதுன்னு சொன்னா, மூச்சுவிடாமே பேசிக் கொண்டே இருக்கறிங்களே...



சி:- (உருக்கமாக) ஏண்டா உனக்கு இப்படிப் புத்தி கெட்டுப் போச்சு? சிங்காரவேல்னா, நாலுபேருக்கு உபகாரி, நம்பினவர்களைக் கெடுக்காதவன், உண்மைக்குப் பாடுபடுகிறவன் என்கிற நல்ல பேர் இருக்குதடா! ஊரார் மெச்ச வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கறேன்...நீ பொறந்தே, அதைக் கொடுக்க ... கூசாமே பயப்படாமே பொய் பேசறே என்னிடமே.

[கண்ணாயிரம் சோகமாக மாடி செல்கிறான். சிங்காரவேலரும் செல்கிறார். கண்ணாயிரம் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்கிறான். கவலையுடன சிங்காரவேலர், அங்குள்ள சோபாவில் உட்காருகிறார். அன்னபூரணி வருகிறாள் ]

அ:- யார் வந்திருந்தது கீழே...

சி:- யாரோ பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மா...... தர்மம் கேட்க...

[அறைக்குள்ளே இருந்து கண்ணாயிரம் வெளியே வந்து...]

க:- என் ரிஸ்ட்வாட்சை யார் எடுத்தது?

சி:- ரிஸ்ட்வாட்ச் காணோமா...

அ:- தங்கச் செயினாச்சே எங்கே தொலைத்து விட்டே...

க:- (சலிப்புடன்) உம்! நான் அஞ்சு வயசு அறியாப்பாலகன், தொலைத்துவிட. உள்ளே மேஜையின் பேரிலேதான் வைத்திருந்தேன்...

அ:- மேஜையின் பேர்லே வைத்தா எங்கே போயிருக்கும்...

[உள்ளே செல்கிறார்கள்]

அ:- அறை முழுவதும் தேடிப் பார்த்தாச்சு...

சி:- என்னடா இது நிஜமாத்தான் சொல்றயா...

அ:- கொழந்தை எதுக்காகப் பொய் சொல்லப் போகுது...... நல்லா கவனமிருக்குதேல்லோ...

சி:- அறைக்குள்ளே யாரார் போனது...காலையிலே...

அ:- யாரும் இல்லையே......வீராயி போயிருந்தா...கூட்ட

சி:- வீராயி போனுளா...

அ:- (பதறி) அவரொம்ப நல்லவடா தம்பி! திருட்டு புரட்டு கிடையாது.

சி:- அட சும்மா இரு. அவன்தான் சொல்ருனே மேஜை மேலே வைத்ததா. இறக்க முளைச்சிப் பறந்தாபோயிடும், கைகடியாரம். வீராயிதான் செய்திருக்கனும் அந்த வேலையை......எங்கே அந்தக் கழுதே...

க:- வீட்டுக்குப் போயிருப்பா...

சி:- (பதறி) அய்யய்யோ! ஊரை விட்டே ஓடிடப்போகுது—வீராயி புருஷன் வேலை வெட்டி இல்லாம கிடக்கிருன். என்ன செய்வா, குடும்பச் செலவுக்கு...திருட்டுக் கை வந்து விட்டுது...

அ:- (சாந்தமாக) இருக்காதுடா தம்பி! ஏழையா இருந்தாலும், அவ, சத்தியத்துக்கு கட்டுப்பட்டு நடக்கறவ...

சி:- (தீர்மானமாக) ஏழையாக இருந்தாலே கெட்டபுத்தி, கேடு கெட்ட நினைப்பு தன்னுலே வந்து விடும். தரித்திரம் அதுகளைப் பிடுங்கித் திங்கறது எதனுலே......இந்தக் கேடு கெட்ட புத்தி இருக்கிறதாலேதான்...அய்யோவ் கணக்கப் பிள்ளே...

[கணக்கப்பிள்ளைவருகிருன்]

போயி, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, வீராயி வீட்டிலே போய்ச் சோதனைச் போடச் சொல்லு உடனே...

[கணக்கப்பிள்ளை விரைந்து செல்கிருன்]

அ:- தம்பி! தம்பி! நாமே கூப்பிட்டுக் கேட்கலாம்டா........போலீசிலே பாவம், அடி அடிச்சுடப்போருங்க ......நம்ம வீட்லே மாடா உழைக்கறவ வீராயி...

[கண்ணுயிரம்கலங்குகிருன். அறைக்குள் சென்றுவிடுகிருன். மனதிலே ஏதோ ஒரு குமுறல், போராட்டம் இருப்பது தெரிகிறது.]

[கண்ணுயிரம் உள்ளே செல்வது கண்டு]

சி:- துளியாவது கவலை இருக்குதா பாரேன் இவனுக்கு........நானூறு ரூபா இருக்கும்.........காணுமப் போயிட்டுது.........கவலையத்து இருக்கிருன்.

## காட்சி 5

இடம்:- வீராயி வீடு

இருப்போர்:- வீராயி, கருப்பன்.

நிலைமை:- கருப்பன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிருன். அவனைத் தட்டி எழுப்புகிருள் வீராயி.

வீராயி:- துளியாவதுகவலை இருந்தா இப்படியா தூக்கம் வரும். காலங்காத்தாலே எழுந்து போயி நாலு இடம் சுத்தி பிழைப்புக்குவழி தேடுவோம் என்கிற எண்ணம் இருக்குதா. நாய் படாத பாடுபடறேன், ஈவு இரக்கம் இருக்குதா துளியாவது.

[தட்டி எழுப்பியபடி]

எழுந்திரு, எழுந்திரு; விடிஞ்சி வேணநேரமாகுது.

[கருப்பன் புரண்டு புரண்டு படுக்கிருன். மீண்டும் வீராயி தட்டி எழுப்புகிருள். கோபத்துடன் எழுந்து படுக்கையில் உட்கார்ந்துகொண்டு]

கரு:- வீடா இது? அடா, அடா! அடா! ஏண்டி இப்படி உயிரை வாங்கறே.........இப்ப எந்த ரயிலுக்கு நேரமாகுதுன்னு எழுப்பித் தொலைக்கறே. என்னமோ கடியாரத்தைப் பார்த்து வேலைக்குப்போயி காலண்டரைப் பார்த்துச் சம்பளம் வாங்கற உத்யோகம் கெட்டுவிடப்போகுதா...

வீராயி:- (ஆத்திரமும் கேலியும் கலந்த குரலில்) உங்களுக்கு ஏங்க வேலை வெட்டி......நான் இல்லே உழைக்க! நீங்க படுத்துத் தூங்குங்க.....வித்துவிசாரம் துளியாவது இருந்தா இப்படியா இருப்பிங்க....ராத்திரிக்கெல்லாம் சுத்தறது, பகலெல்லாம் படுத்துத் தூங்கறது. குடும்பம் உருப்பட்டு விடுமேல்லோ...

கரு:- ஏண்டி இப்படிச் சபிச்சிக் கொட்டறே...உன் இழவுக்காகத்தான் ஆலாப்பறந்து பார்க்கறேன்......வேலை கிடைச்சாத் தானே...போயி எங்காவது திருடவா...சொல்லு...அதையாவது.

வீ:- (அழுகுரலில்) என் மனசை வேகவைக்காதே......



[தலையணை அடியில் இருந்த அலங்காரப் பையைப் பார்த்து விட்டு]

இது என்னது?

[கருப்பன் பையைப் பிரித்துப் பார்க்கிருன். பணம் இருக்கக்கண்டு மகிழ்ச்சிஅடைகிருன். அந்த நேரத்தில் கருப்பன் குடிஇருக்கும் வீட்டுச் சொந்தக்காரன் வந்து சேருகிருன்.]

வீட்டுக்காரன்:- வீராயி! எப்பவந்து கேட்டாலும் அவருவரட்டும்னு


MSX 1143

சொல்லி நாளே ஓட்டினயே...... இப்ப அவனும் இருக்கிருன்....... எடு வாடகைப் பணத்தை. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாச்சி...இனி பணம் வாங்காமெ இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன். ஆமாம்.

கரு:- (அலட்சியமாக) எவ்வளவய்யா வாடகை பாக்கி?

வீட்:- பதினெட்டு ரூபா...

(கருப்பன் அலங்காரப் பையை ஒருபுறம் வைத்து விட்டு, எழுந்திருக்கிருன்; மடியிலிருந்து கடிகாரம் கீழே விழுகிறது. வீராயி ஆச்சரியமடைகிருள். மறுகணம் திகிலடைகிருள்.)

வீ:- (திகிலுடன்) அடப்பாவி மனுஷா...இந்த வேலையும் ஆரம்பித்துவிட்டயா...கடியாரம் சின்ன எஜமானருடையதாச்சே...

[வாயைப் பொத்திக்கொள்கிருள், பயத்தால்.]

[அவள்பேசி வாய்மூடுமுன்பு போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைகிருர். கருப்பனிடமிருந்த கைகடியாரத்தை பறித்துக்கொள்கிருர். உடன் வந்திருந்த 'கான்ஸ்டபிளிடம்']

சப்:- 'கரெக்டா' சொன்னுர் வீராயி தான் திருடிஇருப்பான்னு. சரியான சமயத்திலே தான் வந்தோம்.



வீ:- (கலக்கத்துடன்) ஐயய்யோ! சாமி! நான் திருடலிங்க...சத்தியமாச் சொல்றேன்...

[வீட்டுக்காரர் மெள்ள நழுவி விடுகிருர்.[

சப்:- (மிரட்டும் குரலில்) கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பிறகுமா பொய் பேசறே......நட ஸ்டேஷனுக்கு...

[வீராயி பதறுகிருள். கருப்பன் கலங்குகிருன்.]

க:- சாமி! அவ அப்படிப்பட்ட நடத்தைக்காரி இல்லிங்க...எத்தனேயோ வருஷமா வேலை பார்க்கரு......தப்பு தண்டா கிடையாதுங்க...நடந்ததே வேறேங்க...

சப்:- ஏண்டா முழுப்பூசணிக்காயை சோத்திலே மறைக்கப்பார்க்கறே ......கண்ணுயிரம் ரூமிலே காலையிலே கூட்டப்போனவ வீராயி தானே...

கரு:- (கண் கலக்கத்துடன்) அவ ஒருபாவமும் அறியாதவ...இது, கடியாரம், நேத்து நடுராத்திரிலே இருந்து என்னிடம் இருக்குதுங்க ......

[பையை எடுத்துக்காட்டி] இதையும் கைக்கடியாரத்தையும் கண்ணுயிரத்தய்யாவே தானுங்க எனக்குக்கொடுத்தாரு...

[சப்-இன்ஸ்பெக்டர் கருப்பன் கழுத்தில் ஒரு அடி கொடுத்து]

சப்:- சன்மானம் கொடுத்தாரா உனக்கு.........ராஸ்கல்! தங்கச் செயின் போட்ட கடியாரத்தை...நீ பெரிய சீமான்....உனக்கு அவர் பரிசாகொடுத்தாரா...

[கான்ஸ்டபிளைப் பார்த்து] இழுத்துக் கொண்டு போ, வீராயியை...

கரு:- தொடாதே! தொடாதே! கையை ஒடித்துவிடுவேன்... அவ உத்தமி. படாத பாடுபட்டு குடும்பத்தை நடத்திச் செல்கிற குணவதி. தான் பட்டினி கிடந்தாவது இந்தப் பாவியை காப்பாத்தி வர்ர புண்யவதி. பிறர்சொத்துக்குஒரு நாளும் அவஆசைப் படமாட்டாஉழைப்பு. உழைப்பு, உழைப்பு...... என்னைக் கணவனுகக் கட்டிக் கொண்டநாளா ஓயாத உழைப்பு தான். ஒருசுகமும் கண்டதில்லே! ஐயா! என்பேச்சிலே உங்களுக்கு நம்பிக்கையில்லே....சரிய்யா...... நம்பவேண்டாம்....சொத்துக் கிடைச்சுப்போச்சி......திருட்டுப் பட்டத்தை ஏத்துக்கொள்ளவும் ஒரு ஆள்தானே தேவை. நான் இருக்கறேன், எடுத்துக்கிட்டுப் போயி, அடியுங்க உதையுங்க ஆறுமாசம் ஜெயிலிலே தள்ளுங்க...ஆனு அந்த உத்தமியை மட்டும் ஒண்ணும் செய்யாதிங்கய்யா......என்னலே அவ பட்ட கஷ்டம் போதும்யா...இந்த அவமானம் வேண்டாம்...அவளுக்கு வேண்டாமய்யா, அவளுக்கு வேண்டாம்...

[வீராயி கசிந்துருகி கணவன் காலைத்தொட்டுக் கும்பிடுகிருள். தன்னை உத்தமி என்றும் புண்யவதி என்றும் கொண்டாடும் அளவு தன்னிடம் பாசம் கொண்டவராக இருப்பது அவளுக்கு ஒரு பெருமிதம் தருகிறது. ஒரு அதிகாரி எதிரில், எத்தனை உருக்கத்துடன் தன்னைப்பற்றித் தன் கணவர் பேசினர் என்பதை எண்ணிஎண்ணி வீராயி பெருமிதம் கொண்டாள். சொத்து தேடிக் கொடுக்க வேண்டாம், சுகவாழ்வு அமைத்துதர வேண்டாம், இதயத்தில் ஏற்றமான ஒரு இடம் கொடுத்திருக்கிருரே அதுபோதும்; ஒரு மாதுக்கு இதைவிட மதிப்பும் மகிழ்ச்சியும் தரத்தக்கது வேறு என்ன இருக்கமுடியும் என்று எண்ணினுள். கேட்டீர்களா! கேட்டீர்களா! என் புருஷன் என்னைப்பற்றி என்னென்ன புகழ்ந்து பேசுகிருர் என்று கேட்டீர்களா. என்னை உத்தமி என்ருர்! குணவதி என்ருர்! புண்யவதி என்ருர். என்னைத் தொடுபவன் கையை ஒடித்து விடுவேன் என்ருர். என்னிடம் அவருக்கு அவ்வளவு அன்பு. பாசம்......நான் பாக்யசாலி! பாக்யசாலி! என்று ஊராரை அழைத்துக் கூறிடலாம் போல தோன்றிற்று. ஒருகணம், போலீஸ் வந்திருக்கிறதே, ஆபத்து தந்திருக்கிறதே என்பதைக்கூட மறந்துவிட்டாள் ......

வீ:- போதுமுங்க......உங்களோட் மனசு தெரிஞ்சி எம் மனம் பூரிச்சுப்போச்சிங்க...

[இன்ஸ்பெக்டரிடம்]

ஐயா! அவர் என்பேரிலே இருக்கற அன்பினுலே அப்படிப் பேசினுர்...நான்தான்யா திருடினேன்.

கரு:- (பதறி) வீராயி! வீராயி! வேண்டாம்! எனக்காக நீ செய்ததெல்லாம் போதும்...இது வேண்டாம்...

வீ:- நீங்க சும்மா இருங்க......நான்தான் திருடினேன்...நான்தான்...

[கருப்பன் தலையில் அடித்துக்கொள்கிருன்.]

[ஐயோ! ஐயோ! வீராயி! என்று கதறுகிருன்,]

[போலீஸ்காரர் வீராயியை நட! நட! என்று விரட்டக் கண்டு கருப்பன் ஆத்திரமடைந்து அவன்மீது பாய்ந்து]

கரு:- உயிரின்பேரிலே ஆசை இல்லேன்னுவா, கிட்டே...என் உயிர் போனுலும் சரி......இவளை நீங்க இழுத்துக்கொண்டு போகவிட மாட்டேன்.

[வீராயி, கருப்பன் இருவரையும் போலீஸ் அழைத்துச்செல்கிறது]

[சிறு கும்பல் கூடுகிறது]

[சிலர் பின்தொடருகிருர்கள்.]

[இருக்கும்! இருக்கும்! உண்ட வீட்டுக்கு இரண்டகமா! இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல இருந்தாளே! எந்தப் புத்திலே எந்தப் பாம்போ யார் கண்டது?

இல்லாமெ பொறக்காது அள்ளாம குறையாது.

போருத வேளை! பொல்லாத புத்திகொடுத்தது.

என்னென்ன இனி அம்பலமாகப்போகுதோ.

பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்கிற பழமொழி பொய்யா...

தடிக்கழுதே, உழைச்சிப் பிழைக்கறதைவிட்டுவிட்டு திருட்டுத் தொழிலேயா நடத்தத் துணிஞ்சா......

தீட்டிடுவாங்க பாரு, நாலு, அஞ்சுவருஷம்......

ஆமாமாம், இந்த மாதிரி ஆசாமிகளுக்கு ஈவு இரக்கம் காட்டவே கூடாது...

ஆயிரத்துக்குக் குறையாதாம், கடியாரத்தோட விலை...

இவ்விதம் ஆளுக்கொருவிதமாகப் பேசிக்கொள்கின்றனர்; கருப்பன் வீராயி நிலேயிலே உள்ள எளியோர்கள்! கருப்பன்மீதோ வீராயிமீதோ குற்றம் இருக்காது என்று கூறத் துணிவும் வரவில்லே, மனமும் எழவில்லே. இல்லாதவன், அகப்பட்டதை எடுத்துக்கொள்வான்! ஏழை திருடுவான்!! — இது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்ட உண்மை என்று ஏழையர் உலகினரே நம்பிக்கிடந்திடுவது கொடுமையினும் கொடுமை. அவர்களை அவ்விதம் நம்பும்படிச் செய்வதிலே செல்வர் உலகு வெற்றிபெற்றுவிட்டது.

இப்படித்தான் செகப்பன் கால் காப்பைத் திருடிவிட்டான்; போடு போடுன்னு போட்ட பிறகுதான் உண்மையை ஒப்புக்கொண்டான்.

காதோட சேத்துப் பறித்துக் கொண்டானே கம்மலே, காத்தான், போன வருஷம்...கண்டு பிடிக்க வெகு நாளாச்சே...

பாவம் கொழந்கை, அதன் கழுத்திலே இருந்த செயினை அறுத்துகிட்டானேல்லே...

இப்படிப் பல 'கதை'களைப் பேசிப் பேசி, ஆதாரம் தேடிக்கொண்டனர். கருப்பனும் வீராயியும் ஒரு சூழ்நிலே காரணமாக இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டனர் என்று எண்ணக் கூடப் பலருக்கு முடியவில்லே. கருப்பன் பதறுவதையும் வீராயி கதறுவதையும் பாசாங்கு பசப்பு, நடிப்பு வேஷம் என்று இப்படித்தான் கருதிக்கொண்டனர். சிலர், போலீஸ் இன்ஸ்பெக்டருடைய தைரியம் சுறுசுறுப்பு, கண்டிப்பு ஆகியவற்றைப்பற்றியும் பாராட்டினர்.

நெருப்பு என்ருன் ஒருவன்.

நியாயவான் என்ருன் இன்னெருவன்.

மேல் உத்தியோகம் நிச்சயம் என்ருன் மற்றெருவன்.]

## காட்சி 6

இடம்:- சிங்காரவேலர் மாளிகை—கூடம்.

இருப்போர்:- சிங்காரவேலர் கணக்காளர்.

நிலைமை:- சப்-இன்ஸ்பெக்டர் வெற்றிப் புன்னகையுடன் வருகிருர். சிங்காரவேலர், சோபாவிலிருந்து எழுந்திருக்காமலேயே, வாங்க! என்று மரியாதையாக அழைக்கிருர். சிங்காரவேலரிடம் கடியாரத்தைக் காட்டி, இதுதானே? என்று கேட்கிருர். மகிழ்ச்சியுடன் அதைக்கையிலே வாங்கிப்பார்த்தபடி, கண்ணுயிரத்தைக் கூப்பிடுகிருர். கண்ணுயிரம் அங்கு வருகிருன்; கடியாரத்தைத் தருகிருர்கள்.

க:- என்னுடையதுதான்...எங்கிருந்து...?

தொலைபேசி 328

உழைப்பிலும் உறுதியிலும் உயர்ந்தது!

திண்டுக்கல் பூட்டுகள்

தயாரிப்பாளர்கள்:

அ. கந்தசாமி நாடார் சன்ஸ்,

இரும்பு & வார்னிஷ் வியாபாரம்

திண்டுக்கல்.

சப்:- ஐயா சொன்னபடிதான்...... வீராயி வீட்டிலைதான்...

சி:- அவதான் திருடி இருக்கணும்னு எனக்குத் தெரியுமே... வேறே எப்படிப் போய்விடும்...

சப்:- ஒரே அடியா, நான் திருடலேன்னு சொன்னா. சத்தியம் கூடச் செய்தா...

சி:- (அலட்சியமாக) இந்தமாதிரிச் சத்தியமெல்லாம் அதுகளுக்குச் சக்கரைப் பொங்கலாச்சே......... செம்மையாககொடுத்தாலொழிய அதுகள் நிஜம் பேசாதே...

சப்:- கருப்பன், கடியாரத்தை கண்ணாயிரமே தனக்குக் கொடுத்ததாகச் சொன்னான்...

[கண்ணாயிரம் திடுக்கிடுகிறான். நடைபெற்ற சம்பவம் நினைவிற்கு வருகிறது. உண்மையைக் கூறினாலொழிய கருப்பனுக்கும் வீராயிக்கும் கடுமையான தண்டனை கிடைக்குமே என்ற எண்ணம் தோன்றுகிறது. பாவம் நம்மாலே அவர்கள் இம்சைப்படுவதா! நியாயமா! என்று ஒரு கணம் எண்ணுகிறான் ]

சி:- (ஒரு சிரிப்புச் சிரித்தபடி) பாருங்களேன் அண்டப்புளுகை.

சப்:- (அலங்காரப் பையைக்காட்டி) இந்தப் பையைக்கூட கண்ணாயிரம் கொடுத்தாராம்...

(கண்ணாயிரம் மேலும் திடுக்கிடுகிறான். உண்மையைக் கூறினால், நாடியாவுக்கும் தனக்கும் உள்ள தொடர்புகூட அம்பலமாகிவிடும். கேவலம் என்ற எண்ணம் தோன்றுகிறது. இரக்க உணர்ச்சியையும் நேர்மையையும் துரத்தி அடிக்கிறது.)

சப்:- இது ஒரு நாட்டியக்காரியுடையது.

சி:- (வக்கீல் போல விளக்கமாக) நாட்டியக்காரியுடைய பைக்கும் என் மகனுக்கும் என்ன சம்பந்தம்! வரவர, நானும் பார்க்கறேனுங்க, வயத்துச்சோத்துக்கு வழியத்ததுகளெல்லாம பழி பாவத்துக்கு அஞ்சாமத்தான் பொய் பேசுதுங்க...

சப்:- கருப்பன் கோர்ட்டிலேயே சொல்லப் போகிறேன் இந்தப் பை விஷயம் என்று மிரட்டுகிறான் ...எதை வேணுமானாலும் சொல்லு......காணாமல் போன பொருள் உன் வீட்டிலே இருந்தது...உன் மனைவி அந்த வீட்டிலே வேலை செய்கிற......இந்த இரண்டு போதும் எங்களுக்கு என்று சொன்னேன்...

சி:- பய பெட்டிப் பாம்பாகி விட்டிருப்பான்...

சப்:- இல்லிங்க, நான் பை விஷயமாச் சொல்லத்தான் போகிறேன் என்கிறான்.

சி:- (ஏதும் அறியாதவர் போல) நம்ம வீட்டு கடியாரம் களவு போனதற்கும் இந்தப் பைக்கும் என்ன சம்பந்தம். நீங்க இதை ஒரு அயிட்டமாகவே சேர்த்துக் கொள்ளத் தேவையில்லையே...

சப்:- இதுவும் கருப்பன் வீட்டிலே தானே கிடைச்சது. அதனாலே இதைப்பத்தின பேச்சும் வரத் தானே செய்யும்...

சி:- (கவலையை மறைத்தபடி) வராமலிருந்தா நல்லதுன்னு பார்க்கறேன்...

சப்:- கோர்ட்டோட விருப்பம் அதெல்லாம்...

சி:- (சிறிது குழைவாக) நீங்க நினைச்சா இது விஷயமா கோர்ட்டிலே எந்தப் பேச்சும் கிளம்பாதபடி செய்ய முடியாதா என்ன! அது கிடக்கட்டுங்க...நீங்க பசு மாடு வேணும்னு கேட்டிங்களாமே...

சப்:- ஒரு நூறு நூற்றைம்பது ரூபா விலையிலே வேணும்...

சி:- நான் நாளைக்கு அனுப்பி வைக்கறேன்.

சப்:- (குத்தலாக) புரியதுங்க...... அதுக்கு வேறே ஆளைப் பாருங்க, நானும் வேறே பசு பார்த்துக் கொள்றேன்...

[கண்ணாயிரம் சிங்கார வேலரைக் குறும்புத் தனமாகப் பார்த்துச் சிரிக்கிறான். சப் - இன்ஸ்பெக்டர் வணக்கம் கூறிவிட்டுச் செல்கிறார்.

கண்ணாயிரம் மாடிக்குச் செல்கிறான்.


முத்தையா

**ஸ்டீல் புராடக்ட்ஸ்,**

**174-B, கடலைக்காரத் தெரு, கோவில்பட்டி.**

உயர்தர குடை போல்ட்டுகள்,
ஆறு பட்டம் போல்ட்டுகள்,
நட்டுகள்,
வாலிகள்,
விவசாயக் கருவி பொருள்கள்

தயாரிப்பாளர்கள்.

தேவைக்கு எழுதுங்கள்.

உரிமையாளர்

மா. நாகரத்தினம்.

கவலையும் கோபமும் மாறி மாறி வருகிறது சிங்கார வேலருக்கு.

கணக்கப் பிள்ளையை அருகே அழைத்து எதையோ இரகசியமாகக் கூறி அனுப்புகிறார்.

அன்னபூரணி அம்மாள் வருகிறார்கள்.

அ:- என்னடா தம்பி! கிடைச்சு விட்டதாமே...

சி:- கிடைக்காமெ...

அ:- போகட்டும்...நமக்குப்பொருள் கிடைச்சுட்டுது.....போலீசுக்குச் சொல்லி வீராயியை விட்டுவிடச் சொல்லு...ஏழை...பாவம்... அவ உழைசசித்தான் குடும்பம் நடக்கணும்...

சி:- (கண்டிப்பானகுரலில்) உனக்கு ஒண்ணும் தெரியாதுக்கா! சும்மா இரு, ஏழையாச்சே, பாவமாச் சேன்னு பார்த்தா திருட்டும் புரட்டும, கொள்ளையும் கொலையுந் தான் வளரும்...அடக்கிவைக்கா விட்டா அதோகதியா போகும். நம்ம சொத்து போகுது, வருது. அதுக்காகக் கூட இல்லக்கா! ஊரிலே அக்ரமும் அநியாயமும் நடக்கவிடலாமா...தர்மம் நிலைக்குமா...ஆட்டுக்கும் அளவறிந்து தான் வால் வைத்திருக்காரு ஆண்டவன்......ஆனாலும் அடே அப்பா! இந்தமாதிரி ஆசாமிகளுக்கு வரவர எவ்வளவு வாய்த்துடுக்கு, நெஞ்சழுத்தம், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகிற முரட்டுத்தனம் வளர்ந்திருக்குது தெரியுமோ. போறான் பார்டா பொதிமாடு மாதிரின்று நம்மைப் போல ஆளுகளைக்கண்டா பேசறானுங்க......ஊரை அடிச்சு உலையிலே போட்டுத்தாண்டா சீமான் ஆனான் என்று நம்ம காதிலே விழறமாதிரியாவே பேசுதுங்க... திருட்டுப் பயல்களை விட்டுவைக்கலாமா...

அ:- ஐயோபாவம்னு இருக்குது தமபி!

சி:- நீதிநியாயம் இதெல்லாம் நிலைக்கணும்னா, சில வேளையிலே மனசைக் கல்லாக்கிக்க வேணும். உனக்குத் தெரியாது உலகம் போற போக்கு...

[அன்னபூரணி அம்மாள் சோகமாக சென்றுவிடுகிறார்கள்.

[கோட்டும் தலைப்பாகையும் அணிந்த ஒருவர் வருகிறார். சிங்காரவேலர் சிரித்த முகத்துடன்வரவேற்கிறார். இருவரும் ஒரு அறைக்குள் சென்று பேசிக் கொண்டிருந்துவிட்டு வெளியே வருகின்றனர்.]

வந்தவர்:- கோர்ட்டிலே நான் பார்த்துக்கொள்கிறேன். அந்த நாட்டியக்காரி விஷயம்...?

சி:- நான் பார்த்துக்கொள்கிறேன்.

வ:- தம்பியைக் கூப்பிடுங்க...சில 'பாயின்ட்' சொல்விட்டுப் போகிறேன்.

[சிங்காரவேலர் ஜாடை காட்ட பணியாள் ஓடிச்சென்று கண்ணாயிரத்தை அழைத்து வருகிறான்.]

வ:- உட்கார் தம்பி...

[கண்ணாயிரம் நின்று கொண்டிருக்கக்கண்டு]

சி:- சரி...சரி...உட்கார்...

[கண்ணாயிரம் உட்காருகிறான்.]

வ:- தம்பி! அந்தப் பை விஷயம் இருக்கிறதே அதை அந்தப்பயல் பெரிசுபடுத்தப் பார்க்கிறான். நாமும் கொஞ்சம் முன்ஜாக்ரதையாக இருக்கவேண்டும்...

இந்தப் பை யாருடையது?

எனக்குத் தெரியாது.

இதை இதற்குமுன் எப்போதாவது பார்த்ததுண்டா?

இல்லை.

நாட்டிக்காரி நீரடியாவை உனக்குத் தெரியுமா?

தெரியாது.

பார்த்ததுண்டா?

இல்லை!

இதை நாட்டியக்காரி நாடியாவிடமிருந்து நீ பறித்துக்கொண்டதாகக் கருப்பன் கூறுகிறானே அதற்கு என்ன சொல்லுகிறாய்?

பச்சைப்புளுகு!

இந்தப் பையையும் கடியாரத்தையும் நீயே கொடுத்ததாகக் கருப்பன் கூறுகிறானே அதற்கு என்ன சொல்லுகிறாய்?

அண்டப்புளுகு!

இவ்வளவுதான்! அழுத்தந் திருத்தமாக, தயங்காமல், இப்படி கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். பயம் துளியும் வேண்டாம். நான் அங்குதானே இருப்பேன். என்ன?

[கண்ணாயிரம் வெறுப்புடன் கூடிய புனசிரிப்புடன்]

க:- கருப்பன் கூறும் உண்மை அவ்வளவும் அண்டப் புளுகு என்று நான் சொல்லவேணடும் ......

வ:- (சிரித்தபடி) தம்பி வேடிக்கையாகப் பேசுதே...

சி:- டேய்......வேடிக்கை இருக்கட்டும். அங்கே போயும் ஏதாவது குளறித் தொலைத்துவிடாதே...... தெளிவாக...


சூடான அரசியல் விமர்சனங்களை உடனுக்குடன் தருவது "சமநீதி"

"சமநீதி" கழகத் தோழர்கள் அனைவரும் படிக்கவேண்டியது!

தி. மு. கழகக் கொள்கைகளை, இலட்சியங்களைப் பரப்புவது. "சமநீதி"

"சமநீதி"

தி. மு. கழக அரசியல் வார ஏடு.

கதை, கட்டுரை, கவிதைகள் நிறைந்தது!

[ ஆசிரியர் ]

ஈரோடு சின்னச்சாமி

தமிழ்நாடெங்கும் விற்பனையாளர்கள் தேவை.

சமநீதி, 125, வெங்கடாசல முதலி தெரு, சென்னை-14.

க:- அழுத்தந்திருத்தமாகச் சொல்ல வேண்டும்...

சி:- ஆமாம்...ஆமாம்...

க:- அண்டப் புளுகுகளே...அப்பா! நாமெல்லாமா அண்டப் புளுகு பேசுவது...வயிற்றுச்சோற்றுக்கு வகையற்றவர்கள் செயல் அல்லவா அது. நீங்கள்தானே சொன்னீர்கள். (குத்தலாக) நான் பயந்தேபோனேன். நமது அப்பா இவ்வளவு அருமையாக உபதேசம் செய்கிறாரே பொய் பேசுவது தகாது என்று கூறுகிறாரே, இனி அவர் வியாபாரம் என்ன ஆகும் என்று பயந்துபோனேன். இப்போது அந்தப் பயம் போய்விட்டது...

சி:- போதும், போதும் உன் குறும்புத்தனம்.

க:- பொய் பேசச்சொல்லி நீங்களே பள்ளிக்கூடம் நடத்துகிறீர்கள்; அழுத்தந்திருத்தமாகப் பொய் பேசுவது எப்படி என்று இவர் கற்றுக்கொடுக்கிறார். நல்ல உலகமப்பா இது...நல்ல உலகம்...

[வந்தவர் அசடு வழியும் முகத்துடன் விடைபெற்றுச் செல்கிறார்.]

[கண்ணாயிரமும் மாடி செல்கிறான்]

[சிங்காரவேலர் ஏதோ எண்ணிக்கொண்டு உலவுகிறார்.

சில்க் சட்டையும், 'கர்ல்' கிராப்பும் உள்ள தோற்றமுள்ள ஒருவன் வருகிறான்.

அவனை அழைத்துக் கொண்டு தனி அறை சென்று பேசுகிறார்.]

சி:- நாட்டியமாடும் நாடியா பழக்கந்தானே...?

அவன்:- அது ஏனுங்க......வேறே புதுமுகம்? சிட்டுப்போல பலது இருக்கு...

சி:- இதோ பாரய்யா, நான் என்ன கேட்கறேன், எதுக்குஎன்பதைத் தெரிந்துகொள்ளாமே...

அ:- நல்லா தெரியுதுங்க, நாடியா கொஞ்சம் படபடன்னு பேசும்,...

சி:- கொஞ்சமென்ன! நல்லாவே (குத்தலாக) பேசறா...

அ:- அது சிலருக்குப் பிடிக்கும்..... பேச்சு...ஆனா நாட்டியமும் தெரியாது, நல்ல சுபாவமும் கிடையாது...நான் சொன்னேன் பாருங்க, சுட்டு அது இந்தமாதிரி இடத்துக்குப் பொருத்தம். பார்த்தா நீங்களே 'சபாஷ்' போடுவிங்க...

சி:-கர்மம்! கர்மம்! நாட்டியத்துக்கு அல்ல அய்யா. இது ஒரு கோர்ட் விவகாரம். அந்தப் பொண்ணு இருக்காளே நாடியா, அவ சாட்சி சொல்லணும் நம்மபக்கம்.....முடியுமா உன்னாலே, சரிப்படுத்த.

அ:- (யோசித்தபடி) கொஞ்சம் கஷ்டம்தானுங்க, பிடிவாதக்காரி.

சி:- செலவுபற்றிய கவலை வேண்டாம்...

அவ:- பார்ப்போம்ங்க.......இங்கே அழைத்துக்கொண்டு வரட்டுமா ...அல்லது நீங்களே அங்கே வாரிங்களா?

சி:- இரண்டும் வேண்டாம். நீயே பேசி, அதாவது நீயே அவளுக்கு புத்தி சொல்வது போலப் பேசி, நம்ம பக்கம் சாட்சி சொல்ல சம்மதிக்கவைக்கணும். அதெல்லாம் பெரிய இடம். அந்த இடத்துப் பகையெல்லாம் கூடாது, பல மாதிரி தொல்லையெல்லாம் வரும் ........அதனாலே அவர்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லி ஆபத்திலே மாட்டிக்கொள்ளாதே...அவர்கள் பக்கம் சாட்சி சொன்னா பணமும் கிடைக்கும், ஆதரவும் தருவாங்க, அப்படி இப்படின்னு சொல்லணும். ஏன்யா, இதையெல்லாமா விளக்கவேணும். நீ என்ன அனுபவமில்லாத ஆளா...

அவ:- கோர்ட் விவகாரமான அனுபவம் ஏதுங்க. பார்க்கிறேனுங்க. என்னாலே முடிந்ததை...

[சிங்காரவேலர் பணம் தருகிறார். பெற்றுக்கொண்டு போகிறான்,]

### காட்சி 7

இடம்:- நாடியா வீடு

இருப்போர்:- நாடியா மூதாட்டி

நிலைமை:- மூதாட்டி இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்துக் கொண்டிருக்கிறாள்.

நாடியா, ஒரு பழைய ஆர்மோனியத்தை வாசித்துக் கொண்டிருக்கிறாள்.

'மேக்கப்' அதிகம் இல்லாததால் முகத்திலே சோர்வு படந்திருப்பது நன்றாகத் தெரிகிறது.

பளபளப்பு போய் விட்ட புடவை.

கலைந்து போயுள்ள தலை.

சிறிது கிழிந்து கிடக்கும் விரிப்பின் மீது உட்


வியாபார அன்பர்கள் அனைவர்க்கும்
எங்களது உள்ளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்



லாடம், லாட ஆணி, மண்வெட்டி.
குதிரை மார்க் ஸ்டீல் கொழு தயாரிப்பவர்கள்
தங்கள் ஆதரவை என்றும் விரும்பும்,

**சுப்புராமன் அன் கோ.,**

62, சந்தை ரோடு, :: திண்டுக்கல்-3

காத்து கொண்டிருக்கிருள்.

சுவற்றிலே, சினிமா நட்சததிரங்களின் படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

நாடியாவின் நடனக் கோலத்தைக் காட்டும் படம், மாட்டப்பட்டிருக்கிறது ]

சிங்கார வேலரால் அனுப்பப்பட்ட ஆசாமி உள்ளே நுழையக்கண்டு ஆர்மோனியம வாசிப்பதை நிறுத்திவிட்டு, எழுந்திருக்காமலே...?

நாடியா:- வாங்கண்ணேன்! ஏது அத்தி பூத்தது போல...

அவ:- வரணும் வரணும்னு. ஆனு வெறுங் கையோட வரப்படாது பாரு, அதனுலே வாவில்லே...

நாடி:- அப்படின்னு இப்ப ஏதோ கச்சேரி கிராக்கியோட வந்திருக்கிறிங்கன்னு அர்த்தம்; இல்லேயா?......

அவ:- ஒரு வேலேயாத்தான் வந்திருக்கறேன்......அதை முடித்துக் கொடுத்தயானு, ஒரு கச்சேரி என்ன, பல கச்சேரிகளே ஏற்பாடு செய்ய முடியும்...

நாடி: என்னண்ணேன், பீடிகை பலமாப் போடறிங்க......என்ன வேலே அது...

அவ:- ஒரு ஐந்து நிமிஷ வேலே... கோர்ட்டிலே சாட்சி சொல்லனும்......

நாடி:- எந்த டிராமா, 'காண்ராக்ட்' டரோடே தகருறு...

அவ:- அடடே! இது அந்த விதமான விஷயமல்லா ... பெரிய இடத்து விவகாரம்......சிங்கார வேலர்னு ஒரு சீமான...

நாடி:- ஆமாம், தெரியும் அந்த ஆசாமி, சீமான தான். ஆனு பெரிய மனுஷன்னு சொல்லாதே......நான் ஒத்துக கொள்ளமாட்டேன் எனக்குத தெரியும்.

அவ:- உனக்குத் தெரியுமா...... எப்படி...

நாடி:- அது பெரிய கதை அண்ணேன. இப்ப அவரு சொல்லித் தான் வந்திருக்கறியா...

அவ:- நீபாகப் பேசிற மாதிரி பேய்வான்னு சொல்லி என்னே அனுப்பினுரு......நாடியா! காப்பி பலகாரம வாங்கிவரச் சொல்லேன...

[ பணத்தை எடுக்கிருன் ]



நாடி:- வேண்டாமண்ணேன்! காபி வேலே யெல்லாம் முடிந்தது. வந்த விவரம் சொல்லு...

அவ:- விவரம் என்னிடம் சொல்ல வில்லே: ஏதோ கோர்ட்டிலே கேசாம்...நீ அவருக்காக சாட்சி சொல்ல வேணுமாம்...

நாடி:- என்ன கேசுன்னு உனக்குத் தெரியாது அண்ணேன். தெரிந்திருந்தா வந்திருக்க மாட்டே. நம்மைப்போல ஒரு ஏழையைக் கெடுக்கறதுக்கு என்னே உடந்தையாக இருக்கச் சொல்ருரு. காலையிலே பூக்கடைக்காரர் விவரம் சொன்னுரு அண்ணேன்! நான் கோர்ட்டுக்குப்போகத்தான் போறேன், சாட்சி சொல்லத் தான் போறேன், ஆனு உண்மையைச் சொல்லப் போறேன்...... இந்த ஆள் விழுங்கிப் பக்கம் பேச மாட்டேன்...

அவ:- நாடியா! அப்படிப்பட்டவர்களே விரோதிச்சிக்கக் கூடாதம்மா......நான் சொல்லறதைக் கேளு...

நாடி:- வேறே வேலேயைப் பாரு வகையா வந்து மாட்டிக் கொண்டாங்க. பெரிய மனுஷனுங்க. சாயம்வெளுக்க வேணுமேல்லோ ...விடுவனு!

அவ:- எல்லா நம்ம சாயமுந்தான் வெளுத்துப்போகும்...

நா:- விட்டுத்தள்ளு அண்ணேன்! நம்ம சாயம் இனிமேலா வெளுக்கப்போவுது...

அவ:- என்ன வேண்டுமானுலும் தருவாரு...

நா:- ஏன் தரமாட்டாரு எங்க மாமனுரு...

அவ:- என்னது; என்னது...

நா:- அப்படித்தான் கோர்ட் பதறப் போகுது......கொல்லுன்னு சிரிக்கப்போகுது......அப்பொ அந்தப் பெரிய மனுஷன் தலேயைத் தொங்கப் போட்டுக்கொள்றதைப் பார்க்கணும்...

அவ:- பெரிய கதையே நடந்திருக்குதுபோல இருக்குதே...

நா:- ஆமா........கோர்ட்டிலேதான் சம்பூர்ண பட்டாபிஷேகம்...(சிரிக்கிருள்)

[ஆர்மோனியத்தை வாசித்தபடி பாடுகிருள்.]

[அவன் காரியம் நடக்காது என்பதைத் தெரிந்துகொண்டு வெளியே செல்கிருன்.]

## காட்சி 8

இடம்:- மாளிகைக் கூடம்.

இருப்போர்:- சிங்காரவேலர்.

நிலைமை:- சிங்காரவேலர் கணக்குப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கிருர்.

அவர் அனுப்பிவைத்த ஆசாமி வருகிருன். தலையைச் சொரிந்தபடி நிற்கிருன்.

அவனைக் கண்டதும் போன காரியம் முடியவில்லை என்பதைப் புரிந்து கொள்கிருர்.

[வெறுப்பும் அலட்சியமும் கலந்த குரலில்]

சி:- சரி...சரி...போ! போ! கையாலாகாதவன்...

[வேலையாளைப் பார்த்து]

காரை எடுக்கச் சொல்லு—பழசு—போர்டு...

[ஆசாமியைப் போகச் சொல்லி கையை அசைக்கிருர். அவன் கவலையுடன் செல்லுகிருன்.]

## காட்சி 9

இடம்:- நாடியா வீடு.

இருப்போர்:-நாடியா, சிங்காரவேலர்

நிலைமை:- சிங்காரவேலர், ஒரு பழைய நாற்காலியில்உட்கார்ந்து கொண்டிருக்கிருர். எதிர்புறம் நின்றுகொண்டிருக்கிருள் நாடியா. அவள் பார்வையில் வெறுப்பும் அலட்சியமும் கலந்திருக்கிறது.

நாடியா நின்றுகொண்டிருக்கும் போக்கு, சிங்காரவேலரை எழுந்து போகலாம் என்று எடுத்துக்கூறுவது போலிருக்கிறது.

அவள் போக்கைக் கண்டு சிங்காரவேலர் கோபமோ வெறுப்போ கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அங்கு தெரிந்த ஏழ்மைக்கோலத்தைக்கண்டு பரிதாப உணர்ச்சிக் கொண்டவர் போலாகிருர்.

நின்றுகொண்டிருக்கும் நாடியாவைப் பரிவுடன் பார்த்தபடி...

சி:- உட்கார்...

[நாடியா வெறுப்புடன் கீழே உட்காருகிருள், சிங்காரவேலரை ஏறெடுத்தும் பார்க்காமல்]

நா:- பெரிய மனிதர்கள் இப்படிப் பட்ட இடமெல்லாம் வரக் கூடாதே...

சி:- (துளியும் பதருமல்) அப்படி ஒரு சட்டமா என்ன?

நா:- (சலிப்புடன்) சரி-சரி...என்ன பேசவேண்டுமோ அதைப் பேசி விட்டுப் போங்கள்...

சி:- நாடியா! உனக்கு அன்று மூண்ட கோபம் இன்னும் தணியவில்லை...

நா:- இன்றும் உம்முடைய ஆள் வந்து நெருப்பைக் கிளறிவிட்டுத் தான் போனுன்.

சி:- (பொய்க் கோபம் காட்டி) முட்டாள் நாடியா அவன். என்ன சொன்னுன் உன்னிடம்.

நா:- உங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றச்சொன்னுன்... பொய்ச் சாட்சி சொல்லி...

சி:- நினைத்தேன்......அப்படித்தான் வகையில்லாமல் பேசியிருப்பான் என்று...

நா:- (ஆத்திரத்துடன்) பொய்சாட்சி சொல்லச் சொல்லவில்லையா...

சி:- (அமைதியாக) சொன்னேன் நாடியா...சொன்னேன்....நானே அதைச் சொல்லத்தான் நேரில் வந்திருக்கிறேன்.

நா:- (மேலும் ஆத்திரம் கொண்டு) முடியாது! முடியவே முடியாது! பொய்ச் சாட்சி சொல்லி ஒரு ஏழைக் குடும்பத்துக்குக் கேடு செய்யமாட்டேன்......நான் இழிவான நிலையில் தான் இருக்கிறேன்......

சி:- (உருக்கம் காட்டி) இழிவான நிலையில் நீ இருப்பதற்கு, உன் குற்றமல்ல, சமூகம் செய்யும் குற்றம்தான் காரணம். உன்னைக் காப்பாற்றி நல்வழிப்படுத்த என்னைப்போல ஒருவன் இருந்தால் நீ ஏன் பாவம் இந்தக் கதிக்கு ஆளாகப்போகிருய்...

நா:- (கேலிக்குரலில்) உருக்கமாகக் கூடப் பேசத் தெரிகிறதே......... அன்று உருட்டல்மிரட்டல் அபாரமாக இருந்தது...

சி:- அப்போதும் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றத்தான்...

நா:- (வெறுப்படைந்து) குடும்ப கௌரவம்! நாசமாகட்டுமே எனக்கென்ன...


ஸ்தாபிதம்: 1929 போன்: 51302

ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

பெரிய உணவு விடுதிகள், ரயில்வே கேண்டீன்கள், ஸ்டோர்கள் முதலியனவற்றிற்குத் தரமான பருப்பு, மற்றும் அரிசி விநியோகிப்பவர்கள்



S. V. S. ரிஜிஸ்டர்டு டிரேட்மார்க்

**S. V. சுப்பையா நாடார்,**

2, மணிகண்ட முதலி 6-வது தெரு, :: சென்னை-21

சி:- உனக்கும் ஒன்றும் இல்லை...... எனக்குக்கூட அதனாலே கஷ்டமோ நஷ்டமோ இல்லை...கருப்பன் குடும்பம் கெடக்கூடாது என்று நினைக்கிறாயே, அது சிலாக்கியமான குணம். பலருக்கு இருப்பதில்லை அந்த இளகிய மனம். உனக்கு இருக்கிறது. ஆனால் நாடியா! கோர்ட்டிலே உன் சாட்சியத்தால் எங்கள் குடும்ப கௌரவம் பாழானால்... ஆயிரக்கணக்கான ஏழைகளின் குடும்பம் நாசமாகிவிடும்...

நா:- என்னய்யா, மிரட்டிப் பார்க்கிறீர்?...

சி:- குடும்ப கௌரவம் கெட்டால் தொழில் கெடும், தொழில் கெட்டால் அதை நம்பிப் பிழைக்கும் ஆயிரம் குடும்பம் வேலையின்றி அலையும், அழியும்......வா, என்னோடு...நேரிலேயே பார்க்கலாம் ...பயப்படாமல் வா...என் மகள் போல...நீ...

[நாடியா அவருடைய பேச்சு வெறும் நடிப்பு என்பதை எப்படி உணரமுடியும்; அவ்வளவு இயற்கையான உயர்தரமான நடிப்பை அவள் கண்டதே இல்லை.

நாடியா படபடப்பாகப் பேசுவாள். அதிலே சுவையிருப்பதாகப் பலர் கூறியதால் அவ்விதமான பேச்சினைப் பழகிக் கொண்டாள். பிறகு அது பாதிச் சுபாவமாகிவிட்டது.

ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வரும், உள்ளத்தில் எழுவதை அடக்கிக்கொள்ளத் தெரியாததால், அந்த ஆத்திரம் பொறி பறக்கும் சொற்களாகவோ, பொலபொலவென உதிரும் கண்ணீராகவோ மாறும். சிரிப்பாள் கலகலப்பாக; மிகச்சாதாரண வெற்றியிலேகூட மிகப் பெரிய சுவை காண்பாள். இவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். சிங்காரவேலர் போன்ற 'பிறவி நடிகர்களை' அவள் எங்கே கண்டிருக்கிறாள். அந்த நடிப்பு அவள் மனதைத் தொட்டுவிட்டது. அதிலும் அவர், தன்னைப் பார்த்து, 'நீ என் மகள் போல!' என்று சொன்னதுநாடியாவைத்திக்கு முக்காடச் செய்துவிட்டது. தழதழத்த குரலில்...]

நா:- ஆ! என்ன...என்ன....மகள் போல...மகள்போல...

சி:- ஓஹோ! மருமகள் என்று சொல்லியிருக்க வேண்டுமா...... குடும்ப கௌரவத்துக்காகத் தான் உன்னை மருமகளாக்கிக் கொள்ள முடியவில்லை.........வா, நாடியா.

[சிங்காரவேலர் நாடியாவைத் தன் மோட்டாரிலேயே அழைத்துக்கொண்டு செல்கிறார்; ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தைக் கடக்கிறார்கள்.

அங்கு 'சிங்காரபுரி' என்ற பெயர்ப் பலகை அமைந்த நுழைவு வாயில் தெரிகிறது.

உட்பக்கத்தில் சில நூற்றுக் கணக்கான குடிசைகள் உள்ளன.

எங்கும் குப்பையும் கூளமும் நிரம்பி இருக்கிறது.

நாய்களும் பன்றிகளும் தாராளமாக நடமாடுகின்றன.

சிறுவர்கள் அலங்கோலமான நிலையில் இருக்கிறார்கள்.

பல இடங்களில் சேறு நிரம்பிய பள்ளங்கள்.

வண்டி இழுப்பவர்களும், விறகு பிளப்பவர்களுமான பாட்டாளிகள் அங்கு காணப்படுகிறார்கள்.

குடிசைகளுக்கு வெளியே வயோதிகர்கள் சிலர் இருமிக் கொண்டும் சிலர் முடக்கிப் படுத்துக் கொண்டும் இருக்கின்றனர்.

வாலிபர்கள் சிலர் காட்டுக் கூச்சல் போடுவதும் கலகச் சண்டையிடுவதுமாக உள்ளனர்.

ஒரு புறத்தில் நாலைந்து பெரிய கற்கள் நடப்பட்டு விபூதி குங்குமம் பூசப்பட்டு வேல் கம்புகள் செருகி வைக்கப்பட்டுள்ளன.

பலர் பலவிதமானபேச்சுகளை ஒரே சமயத்தில் கிளப்புவதால், விளக்கமற்ற ஒரு பேரொலி பரவி நிற்கிறது.

ஒருபுறம் பலகாரக் கடை இருக்கிறது. அதற்குப் பக்கத்திலேயே சாணி பிசைந்து வரட்டி தட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈ மொய்த்துக் கிடக்கும் 'மிட்டாய்' விற்கிறான் ஒருவன்.

சிலர் காலிரிக்ஷாவை இழுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்தக் காட்சியைக் கண்டதால் நாடியாவுக்கு மனவேதனை தான் அதிகமாகிறது.

இதுபோன்ற ஒரு குப்பத்திலேதான் அவள் பிறந்தது, வளர்ந்தது.

குட்டி தளுக்குக்காரி! நடையே நாட்டியமாக இருக்கு, பாரு ஆளை மயக்கிச் சுருட்டி விரலிலே போட்டுக் கொள்வா மோதிரமாக! என்று பலர் பல

போன்: 226 தந்தி: SHEIK

ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

ஷேக் ஷூ மார்ட்,
பழநி.

உயர்தர மிதியடிகள், ஷூஸ் ரகங்கள், கைகெடிகாரங்கள், டைம்பீஸ்கள், ஷூட் கேஸ்கள், குடைகள் மற்றும் பேன்ஸி சாமான்கள் வாங்குவதற்குத் தகுதிமிக்க ஒரே இடம்!

**SHEIK SHOE MART,**
Bata & Flex Dealers
**PALANI.**

விதமான பரிகாசப் பேச்சு பேசு வார்கள், சிறுமியாக இருந்த போது.

அங்கிருந்து, எங்கெங்கோ சென்று, கடைசியில் நாடியா ஆகி இருக்கிருள்.

வாழ்க்கையின் பல நிகழ்ச்சி கள் அவள் மனத்திரையிலே வேகமாக, மாறி மாறி ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு பெரிய வியப்பு நாடியா வுக்கு! உலகம் எவ்வளவோ மாறி விட்டிருக்கிறது. ஆனல் இந்த 'குப்பங்கள்' மட்டும், அன்று இருந்தது போலவே தான் இன்றும் இருந்து வரு கின்றன.

ஆட்கள் மாறுகிருர்கள், ஆனல் 'குப்பம்' என்ற அமைப்பு—அமைப்பா அது? அலங்கோலம் அப்படியே இருந்து வருகிறது.

இங்கிருந்து எத்தனை நாடி யாக்கள் கிளம்புகிருர்களோ— யார் கண்டார்கள்.

செ! கிளம்பும்போது என் னென்ன இன்பக் கனவுகள்! பாதையிலே செல்லச் செல்ல என்னென்ன இடர்கள், இழிவுகள்!

நாடியா, ஏதும் பேசவில்லை யே தவிர அவள் மனதிலே ஓராயிரம் எண்ணங்கள் குமு றியபடி இருந்தன.

சிங்காரவேலர், அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தார்; கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

வறுமைப்பிணியிலே சிக்கித் தவிப்பவர்களைக் கண்டால் அவளுக்குக் கண்ணீர் தளும்பு கிறது மனம் அப்படி!!—இது புரிந்தது அவருக்கு.

குப்பம்! அதைக் காண மோடார் சவாரி! — விசித்திரம் என்று எண்ணினுள் நாடியா, அவளையும் அறியாமல் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

நாலைந்து கல் தொலைவில், சிறு காடடர்ந்த இடத்தை நோக்கி மோடார் செல்கிறது. 'நாடியா' வுக்கு இலேசாகத்திகில் பிறக்கிறது. காட்டிலே அடித்துப் போட்டுவிட்டு விடுவார்களோ என்ற பயம்.

தொலைவிலிருந்து ஓசை கேட் கிறது; கல்லைப்பிளப்பது போன்ற ஓசை.

சிறிது நேரத்தில், மோடார் ஒரு வெளியில் சென்று நிற்கிறது கீழே இறங்குகிருர்கள் இருவரும். ஒரு புதிய கோயில் எழும்பிக் கொண்டி ருக்கிறது. சிங்காரவேலர் உருக்க மாகப் பேசுகிருர்; "இந்தத் திருப் பணியிலேதானம்மா நான் ஈடுபட்டி ருக்கிறேன். நெடுங்காலத்துச்கு முன்பு இது ஒரு கீர்த்திமிக்கஸ்தலம். காலக் கொடுமையால், இடிபாடாகி விட்டது இந்த ஆலயம். இதனைப் புதுப்பித்துக் கட்டி முடிக்க வேண்டும். ஆண்டவன் கருணையும் தயவும் இருந்தால்தான் முடியும். நாடியா! இங்குள்ள மூர்த்தியின் பெயர் அனுதரட்சகர் என்பது. பகவான் எடுத்த அவதாரங்கள் பத்து அல்லவா? அந்த பத்து அவதாரங்களிலும் செய்து முடிக் காத காரியம், ஏழைகள் படும் துயரைப் போக்காமலிருந்து விட்டது.

அதற்காகவே பகவான் இங்கு அனுதரட்சகர் என்ற திருநாமத் துடன் அவதரித்தார் என்பது ஐதீகம். பழய செப்பேடு, ஓலைச் சுவடி மூலம் இது தெரிகிறது. ஒரு புலவர்குழு தலபுராணம் தயாரித்துக் கொண்டிருக்கிறது. வெளியீட்டு விழாவும் விமரிசையாக நடந்திடும்.

நாடியா! இந்த ஆலயம் புதுப்பிக் கப்பட்டுவிட்டால், இங்கு சாஸ்திர முறைப்பட்ட பூஜைகள் நடக்கத் தொடங்கி விட்டால், ஏழைகளுக்கு இன்பமான வாழ்வு கிடைத்திடும்.

நோய் நொடியால் அவதிப்படுப வர்கள் இந்தத் திருக்குளத்தில் ஒன்பது வேளை மூழ்கினுல் போதும்.

கண்பார்வை இழந்தவர்கள் இங்கு அழைத்து வரப்பட்டு, அதோ அந்த மரத்தடியில் — ஒரு மேடை அமைக்கப் போகிருேம்; அங்கு— படுத்துக்கொள்ள வேண்டும். நடு இரவில், நாகசர்ப்பம் வரும்! கண் இருக்கும் இடத்தைத் தன் நாவால் தீண்டி விட்டுப்போகும்; காலையில் குருடன் விழி பெறுவான். இது பற்றிய கல்வெட்டே கிடைத்திருக கிறது.

இந்த ஆலயம் சம்பந்தப்பட்ட அற்புதம் ஆயிரம் என்று சொல்ல லாம்.

இந்தக்காடு ஒரு பெரிய ஜெமீன் தாருடையது. மான் வேட்டை ஆடு வதற்காக இதை வைத்துக் கொண் டிருந்தார். இரண்டு இலட்ச ரூபாய் விலைக்குக் கொடுத்திருக்கிருர்; பாதிப் பணம் தந்திருக்கிறேன். எட்டு இலட்சம் விலைக்கு மற்றொரு ஜெமீன்தார் கேட்டார், கொடுக்க வில்லை. கோயில் திருப்பணிக்கு என்றதும், கொடுத்ததைக் கொடு என்ருர், புண்ணிய காரியம் என் பதால்.

இது வெறும் கோயில் மட்டுமல்ல, நாடியா! இது ஏழைகளின் சுவர்க்கம்-இங்கு அனுதை விடுதலை பள்ளிக்கூடம், தர்ம சத்திரம், மருத்துவ மனை...என்னென்னமோ திட்டம் என்மனதில். ஆண்டவன்

வாடிக்கைக்காரர்கள் அனைவர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

ஆடவர், பெண்டிர் அனைவர்க்கும் ஏற்ற

நவீன-நாகரிக ஆடைகளுக்கு

ஏற்ற இடம்

பாலாஜி டெக்ஸ்டைல்ஸ்,

உரிமையாளர்கள்:

P. சச்சிதானந்தம் & பிரதர்ஸ்,

5, மெயின் பஜார், :: வேலூர். (N. A.)

அருளால் உன் உதவி கிடைத்துவிட்டால், என் எண்ணம் ஈடேறிவிடும்.

மொத்தத்தில் பத்து இலட்சம் செலவிடத் திட்டம். ஆமாம், நாடியா! அவ்வளவும் என் ஒருவனுலே ஆகுமா? அதனுல் இதற்கு பல புண்ணியவான்களின் பணமும் தேவை; கிடைத்துக்கொண்டிருக்கிறது; அரசாங்க உதவியும் கிடைக்கிறது.

அதோ பார்! ஒரு சிற்பி, நந்திசிலையைச் செதுக்கிக்கொண்டிருக்கிருனே, அவனுக்கு மட்டும், மாதம் மூன்றுநூறு ரூபாய். அவனுககுத் துணையாகப் பதினெட்டுபேர்கள்.

மொத்தத்தில் இந்தத் தர்ம காரியத்தில், நாடியா! ஐநூறு பேர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். இவ்வளவு பெருஞ்செலவும் நான் பார்த்துக்கொள்ளவேண்டி இருக்கிறது.



சர்க்கார் உதவி, செல்வவான்களின் நன்கொடை, பக்தர்களின் காணிக்கை இவ்வளவும் திரண்டு கிடைத்தால்தான் இந்தக் காரியம் நடைபெறும். என்பெயர், என் குடும்பப்பெயர்மீது ஒரு துளியும் 'மாசு' விழாதிருந்தால்தான், மதிப்பு குறையாது இருந்தால்தான், இந்தப் புண்யகாரியம் பூர்த்தியாகும். ஒருசிறு கறை விழுந்தாலும் போதும், சிங்காரவேலர் இப்படிப்பட்டவர்தாஞ, அவர்மகன் கெட்ட நடத்தைக்காரன்தாஞ என்றபெயர் கிளம்பினுல் போதும், நாடியா! இவ்வளவும் பாழாகும். மனிதர்களின் காரியம்மட்டுமல்ல, மகேசன் காரியம் கூடநாசமாகிவிடும். குடும்ப கௌரவம் கெடக்கூடாது என்பதிலே எனக்கு ஏன் அவ்வளவு அக்கறை என்பது புரிகிறதா! மதிப்பு மங்காதிருக்கவேண்டும்; அந்த மதிப்பின்மீதுதான் நம்பிக்கை எழுகிறது; அந்த நம்பிக்கை நொறுங்கினுல், இந்தத் தேவாலயமே நொறுங்கிப் போகும். உன் ஒரு வார்த்தையில் இருக்கிறது இந்தப் புண்யஸ்தலத்தின் எதிர்காலம்.

நாடியாவின் மனம் ஓரளவு உருகிடத் தொடங்கிற்று; ஆனுல் மறுகணம் மனதைத் திடப்படுத்திக்கொண்டாள்.

தந்தி: வெண்சங்கு தொலைபேசி: 108

தமிழர் திருநாளில் எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

தமிழ்நாட்டில் தனிச் சிறப்புடையது

## வெண்சங்கு சீயக்காய்த் தூள்

மணத்தில் சிறந்தது

## செல்வம் ராணி & சேகர் பத்திகள்



உருசியில் சிறந்த

## வெண்சங்கு மார்க் சேமியாவை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

**S. பெத்தண்ண நாடார்,**

வெண்சங்கு தொழிற்சாலை,

கீழவாசல், தஞ்சாவூர்.

## சர்குலேஷன்ஸ்

உங்களுக்குத் தேவையான கவர்ச்சிகரமான

துணிகள்! எவர்சில்வர் பாத்திரங்கள்!!

ரூ. 2 முதலீடு செய்து, நீங்கள்

பெறமுடியும்! உடன்

**M. O.** செய்யுங்கள்.

விபரங்களுக்கு:

## பூமாலை பேன்ஸி சர்குலேஷன்ஸ்

செம்பனார்கோயில் P. O.

தஞ்சை மாவட்டம்.

ஆலயம் இங்கு! அலங்கோலம் அங்கு — வழியில் பார்த்தோமே; பெயர் என்ன, சிங்காரபுரி! அந்த மக்கள் சேற்றிலே புரளவேண்டியது; இங்கு சந்தன அபிஷேகம் நடத்த ஏற்பாடாகிறது. அதற்கு நான் 'பொய்ச் சாட்சி' சொல்ல வேண்டும், நியாயம் வெகுநேர்த்தி, ஐயா! வெகு நேர்த்தி!—என்று வேதனையை அடக்கிக்கொண்டு நாடியா கூறினாள்.

சிங்காரவேலர் திடுக்கிடவில்லை.

“உண்மையான பேச்சு, நாடியா! குப்பம்அங்கே, கோலாகலம்இங்கே! இது என்ன நியாயம்? என்று கேட்கிறாய், நாடியா!

நான் சொல்ல வந்ததில் ஒரு பாதி மட்டுமே சொல்லி முடித்தேன். இந்தத் தேவாலயத் திருப்பணியுடன் இணைந்தது குப்பத்தைத் திருத்தி அமைப்பதும். பார்த்திருப்பாயே, 'சிங்காரபுரி' என்ற பெயர்ப் பலகையை...என் பெயரைச் சூட்டி விட்டார்கள் ஊர்ப் பெரியவர்கள். அந்தக் குப்பத்தை உண்மையிலேயே சிங்காரபுரி ஆக்கத் திட்டமிட்டிருக்கிறேன். அந்த சிங்காரபுரிக்குத்தான் இந்தக் கோயில் வருமானம் அவ்வளவும், புரிகிறதா! தேவாலயப் பணி முடிந்தால்தான், குப்பம் சீராகும்...பெயர் சிங்காரபுரி என்கிறார்கள்...ஊர்ப் பெரியவர்கள் ஒத்துக்கொண்டால் நாடியாபுரி என்றே நான் பெயரிடுவேன்—உன் கையில்தான் இருக்கிறது அதன் எதிர்காலமும். அந்தக் குப்பத்தார்தான் இந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை உழப் போகிறார்கள் ...கூலிக்கு அல்ல...குத்தகைக்கும் அல்ல...குடும்பம் ஒன்றுக்கு ஐந்து ஏக்கர், இந்தக் கோயில் நிலத்திலிருந்து”...என்றார் சிங்காரவேலர்.

நாடியாவின் மனக் கண்முன், குப்பம் புது சீரூராகத் தெரியலாயிற்று; குப்பை மேட்டில் புரண்டு கொண்டிருந்த சிறுவர்கள் பள்ளிகளில் படிக்கும் காட்சி தெரிந்தது. பள்ளம், சேறு, எல்லாம் மறைந்து வரிசை வரிசையாக வீடுகள், வீடுகளில் விளக்கொளி, மக்கள் முகத்தில் மகிழ்ச்சி ஒளி தென்பட்டது.

நாடியா, சில ஆண்டுகள் நாடகத்தில் இருந்தவள்; ஏழையர் வாழ்வு சீர்பட வேண்டும் என்பது பற்றிய 'வசனம்' பல, பாடம் அவளுக்கு.

“உண்மையாகவா...” என்று தழதழத்த குரலில் கேட்டாள்.

சிங்காரவேலர் ஒரு வசீகரமான புன்னகையை காட்டியபடி தலை அசைத்தார்; நாடியா தலை கவிழ்ந்து கொண்டாள்.

“நாடியா! எனக்குத் தெரியும். நீ, படபடவென்று பேசுபவளே தவிர நல்ல மனம், இளகிய மனம் உனக்கு என்று. கருப்பனைப் பற்றிக் கவலைப்படாதே...மேல் கோர்ட்டில் அவனுக்காக வாதாட வேறு ஏற்பாடு செய்து விடுதலை வாங்கித் தர முடியும். இப்போது என் குடும்பப் பெயர் காப்பாற்றப்பட வேண்டும்...இத்தனை ஏழைக் குடும்பங்களின் நல்வாழ்வுக்காக. என்ன சொல்கிறாய்?” என்று கேட்டார். “ஆகட்டும் உங்கள் இஷ்டம்போல” என்றாள் நாடியா.

## காட்சி 10

இடம்:- வழக்கு மன்றம்.

இருப்போர்:- சிங்காரவேலர், கண்ணாயிரம் நாடியா, கருப்பன், வீராயி, வழக்கறிஞர்கள்.

நிலைமை:- [கருப்பன் கூண்டில் நிறுத்தப் பட்டிருக்கிறான். சாட்சிக் கூண்டில் கண்ணாயிரம் நிற்கிறான்.]

கண்ணாயிரம சார்பில் வந்துள்ள
வழக்கறிஞர்:- (நாடியாவின் அலங்காரப் பையைக் காட்டி)
இது யாருடையது என்று தெரியுமா?

கண்:- (சிங்காரவேலரைப் பார்த்து விட்டு) தெரியாது...

வ:- இது நாடியா என்கிற நாட்டியக்காரியுடையது. அவளிடமிருந்து இதைப்பறித்துக்கொண்டீர். கருப்பனுக்கு இதையும் கைகடியாரத்தையும் இனும் கொடுத்தீர் என்று கருப்பன் கூறுகிறான். என்ன சொல்கிறீர்?

க:- (தயக்கத்துடன் சிங்காரவேலரைப் பார்க்கிறான். அவர், வாயை அசைத்துக் காட்டுகிறார். வெறுப்புடன்)

க:- அண்டப் புளுகு.

[சிங்காரவேலர் முகம் மலருகிறது.]

[நாடியாவைச் சாட்சிக் கூண்டில் ஏற்றுகிறார்கள்.]

வ:- (பையைக் காட்டி) இது உன்னுடையதா?

நா:- இல்லை.

வ:- கண்ணாயிரம்என்பவரை உனக்குத் தெரியுமா?

நா:- தெரியாது.

(சிங்காரவேலர் மகிழ்ச்சிப் புன்னகை கொள்கிறார்)

வ:- கண்ணாயிரத்தைப் பார்த்திருக்கிறீர்களா ?

நா:- ஓ !

[சிங்காரவேலர் திகைக்கிறார்]

வ:- பார்த்திருக்கிறாயா? எப்போது? எங்கே?

நா:- இப்போது! இங்கே! கோர்ட்டில்

[சிங்காரவேலர் முகம் மலருகிறது.

இலேசாகக் கோர்ட்டில் சிரிப்பொலி கிளம்புகிறது. மேஜையைத்தட்டி ஒழுங்கை ஏற்படுத்தி விட்டு, வழக்கு மன்றத்தலைவர் தமது தீர்ப்பைப் படிக்கிறார்]

வ:- நேற்றும் இன்றும் நடைபெற்ற இந்த வழக்கு சம்பந்தமான சகல பிரச்சனைகளையும் சீர் தூக்கிப் பார்த்ததில், வீராயி, கருப்பன் இருவருமே குற்றவாளிகள் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். வீராயிக்கு மூன்று மாத வெறுங்காவல் தண்டனையும், கருபபனுக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கிறேன்.

அண்டப்புளுகு பேசுவது, ஆளை அடிப்பது, அகப்பட்டதைத் திருடுவது போன்ற குற்றம் புரிவோர்கள், சமூக விரோதிகள். அவர்களால்நாட்டுக்கேஆபத்து. ஆகவே அப்படிபபட்டவர்களுக்குக கடுமையான தண்டனை தந்தால் மட்டும் போதாது. சமூகம் அப்படிப்பட்டவர்களைக் காரித்துப்பவேண்டும்.

(கோர்ட் கலைகிறது.)

## காட்சி 11

இடம்:- மாளிகைக் கூடம்

இருப்போர்:- சிங்காரவேலர்
அன்னபூரணி
கண்ணாயிரம்

நிலைமை:- சிங்காரவேலரும் கண்ணாயிரமும் வந்தது கண்டு, அன்னபூரணி ஆவலாக வருகிறாகள்-

அ:- என்ன தம்பி! ஆச்சி...

சி:- ஆகவேண்டியது ஆச்சி...... ஆறு மாசம் அந்தப் பயலுக்கு மூனறு மாசம் அவளுக்கு...

# யுனைடெட் இந்தியா ரோலர் பிளவர் மில்ஸ்

## பிரைவேட் லிமிடெட்டின்

## உளமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

உயர்தரமான

கோபுரம் மார்க் மைதா      கோபுரம் மார்க் சூஜி

மற்றும்

## "கப்பல் மார்க்" ஆட்டா, தவிடு

முதலானவைகளின் தயாரிப்பாளர்கள்.

| அலுவலகம்: | தொழிற்சாலை: |
| --- | --- |
| நெ. 1, அண்ணுபிள்ளைத் தெரு, | தண்டையார்பேட்டை, |
| சென்னை-1. (போன்: 21149) | சென்னை-21. (போன்: 51340) |

## அனைவர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!



இந்தக் குழந்தையின் தாய்க்குத் தெரியும், குழந்தைக்கு எந்த பிஸ்கெட் கொடுக்கவேண்டும் என்று!

அதனுல்தான் அதன் தாய்

**'D. V. P.' பிஸ்கட்டுகளையே**

தேர்ந்தெடுக்கிருர்!

உயர்தரமான பிஸ்கெட்டுகள், ரொட்டிகள், பன், ரஸ்க், கேக்குகள், ஸ்லேஸ், மற்றும் எல்லாவிதமான பிஸ்கெட்டுகளும்

தயாரிப்பாளர்கள்:

# D. V. P. BAKERY,

*(Phone No. 746)*

**8I, LONG BAZAAR, :: VELLORE. (N. A.)**

அ:- பாவம்! போறுத வேளே என்ன செய்வது. அததன்விதிப்படிநடக்குது......இரு தம்பி! காப்பி கொண்டு வர்ரேன்...

(உள்ளே போகிருர்கள்)

க:- (குத்தலாக) காரித்துப்ப வேண்டுமாம் அப்பா! கேட்டீர்களா தீர்ப்பை. அண்டப்புளுகு பேசுபவர்கள் சமூக விரோதிகள், நாட்டுக்கே ஆபத்து......காரித்துப்ப வேண்டும் என்கிருர் நீதிபதி ......

சி:- (சலிப்புடன்) சரி, சரி சும்மா விடு...போய்ப்படு...

க:- (பதறியபடி) கோழை! நான் ஓர் கோழை. அக்ரமத்துக்கு உடந்தையாக இருந்தேன்....... சுயநலம், சுகபோகம் என்னைப் பிடித்தாட்டுகிறது......விடுபட முடியவில்லே......அந்த ஏழைக் குடும்பம் என்னுல் அல்லவா இந்தக் கதியாயிற்று......அந்த நாடியா! அவளுமா பச்சைப் புளுகு பேசுவது...எனக்குத்தான் கற்றுக் கொடுத்தீர்கள் வக்கீல் வைத்து...அவள்...

சி:- (கேலிச் சிரிப்புடன்) அவளுக்கு நான் கற்றுக் கொடுத்தேன்...... போடா மடப்பயலே! விவரம் தெரியாமல் போய் இப்படியெல்லாம் சிக்கிக் கொள்ளாதே...... எத்தனே காலம் நான் இருக்க முடியும், கல்லுப்பிள்ளேயார் போல......புத்தியோடு நடந்து கொள்......உன் அந்தஸ்துக்கு ஏற்றபடியான நடவடிக்கை இருக்கவேண்டும்...

[கண்ணுயிரம் கண்களில் நீர் துளிர்த்திடும் நிலையினுக மாடி செல்கிருன் ]

[அன்றிரவு பத்து மணிக்கு மேல் சிங்காரவேலர் ஏதோ குறிப்பு எழுதிக் கொண்டிருக்கிருர். வெளியே பெருமழை பெய்து கொண்டிருக்கிறது. பேய்க் காற்றுல் மரங்கள் சாய்கின்றன; குடிசைகள் பிய்த்தெறியபபடுகின்றன. நடைபாதை வாசிகள ஒண்ட இடமின்றித் திண்டாடுகிருர்கள்.

இடியும் மின்னலும் பயங்கரமாகிறது.

ஏழை எளியவர்கள் கோணிகளைப் போர்த்துக்கொண்டு, வீடு நோக்கி ஓடுகிருர்கள்.

ஊர்க் கோடியில் பரவலான பெரிய பள்ளததை நோக்கிப் பல பக்கமிருந்தும் மழைத் தண்ணீர் புரண்டோடி விழுகிறது.

அந்தப் பள்ளத்துக்கு ஒரு புறம், சிங்காரபுரி; மற்ருேர் புறம் கரும்புத் தோட்டம்.

பள்ளம் நிரம்பி வழிய ஆரம்பிக்கிறது.

தண்ணீர் கரும்புத் தோட்டத்துப் பக்கம் பாய்ந்துவிடுவது போலிருக்கிறது.

மழையிலே நனேந்து கொண்டே, வெள்ளம் கரும்புத் தோட்டத்தின் பக்கம் பாயாதபடி, மண்ணுல் கரை அமைத்துப் பார்க்கிருர்கள் சிலர்.

கரையைக் கரைத்துக் கொண்டு செல்கிறது வெள்ளம்.

திகைக்கிருர்கள் என்ன நேரிடுமோ என்பதை எண்ணி.

ஆடையில் தண்ணீர் சொட்டச் சொட்ட மாளிகையை நோக்கி ஓடிவருகிருன் ஒரு உழவன்.

அவன் கதவைத் தட்டுகிருன்.

வேலையாள் கதவைத் திறந்து விடுகிருன்.

பதறியபடி கூடத்திற்கு வருகிருன், உழவன்.

கூடத்திலே விரிப்பு மீது, தண்ணீர் சொட்டச் சொட்ட நிற்கிருன் அவன் உடல் வெடவெடுக்கிறது. சிங்காரவேலரின் முகம் கடுகடுக்கிறது.

சி:- மடப்பயலே! துணியைப் பிழிந்து போட்டு விட்டு வரப்படாதோ....,கூடத்தைச் சேருக்கி விட்டயே! கடாமாடு! எதுக்காக தலே தெறிக்க ஓடிவந்தே...

உ:- மழை நிற்கறதா காணுேமுங்க ...ஒரே வெள்ளக் காடாயிருக்கு, ஊரு...

சி:- (கேலியாக) வந்து 'குடை' பிடிக்கச் சொல்றயா, ஊராருக்கு.

உ:- இல்லிங்க......நம்ம கரும்புத் தோட்டப்பக்கம் இருக்குதுங்களே பள்ளம்..காத்தான் குட்டை ரொம்பி வழியுதுங்க...

சி:- கல்லே மண்ணேப் போட்டு அடைக்கறது...

உ:- நிற்கலிங்க....தண்ணி பொத்துக்கிட்டு வருதுங்க கரும்புத் தோட்டப்பக்கமா...

சி:- (பதறி) கரும்புத் தோட்டப் பக்கமா?

உ:- ஆமாங்க......., வெள்ளக்காடு ஆயிடுங்க, கரும்புத் தோட்டம் அழிந்து விடும்ங்க.....உழைப்பு அவ்வளவும் வீணுயிடும்ங்க...

சி:- இலட்ச ரூபா அல்லவா போயிடும்...கரும்பு தரமா வந்திருக்குது. ஆலேக்காரன் அட்வான்சு கூடக் கொடுத்து விட்டான்...

உ:- என்ன செய்யறதுன்னு தெரியலிங்க......ஒரே திகிலா இருக்குது...

சி:- ஏலே...தண்ணியை வேறே பக்கம் திருப்பி விட்டா என்ன... கரும்புத் தோட்டப் பக்கம் கரை போடுங்க......வேறே பக்கம் இருக்கிற கரையை வெட்டி விடுங்க...

உ:- செய்யலாமுங்க...ஆனு...

சி:- ஏன் அப்பவும் தண்ணி கரும்புத் தோட்டத்துப் பக்கமா கத்தான் பாயும் என்கிறயா...

உ:- இல்லிங்க......ஒரு மணி நேரத்திலே தண்ணி முச்சூடும் வேறே பக்கம் போயிடும்...ஆனு அந்தப் பக்கம்தான் 'குப்பம்' இருக்குதுங்க......நம்ம பேர்லே இருக்குதுங்களே அது...

சி:- இந்தப்பக்கம் கரும்புத் தோட்டமல்ல இருக்குது......டேய்! ஒரு பத்து ஆளேப்பிடிச்சி, கரையை வெட்டி, தண்ணியைத் திருப்பி விடு......மளமளன்னு ஆகட்டும் வேலே...பெரிய மழை மறுபடியும் வர்ரதுக்குள்ளே.....சோம்பேறித்தனம் காட்டாதிங்க...பயிர் அழிஞ்சுது, அவ்வளவுதான் நீங்க தொலேஞ்சிங்க கூண்டோட...... தெரியுதா...ஓடு! ஓடு! கடாமாடு ...குப்பத்து ஆட்களேக் கூப்பிடாதேஇந்தவேலேக்கு..தெரியுதா?

[உழவன் ஓடுகிருன்)

காத்தான் குட்டை பக்கம் உழவன் பத்து ஆட்களுடன் சென்று, சிங்காரவேலர் சொன்னபடி செய்து விடுகிருன்.

சிங்காரபுரி என்ற குப்பம், வெள்ளக் காடாகி விடுகிறது.

குப்பத்தில் ஒரே கூக்குரல்!

குழந்தை குட்டிகளேத் தூககிக் கொண்டு ஓடுகிருர்கள்.

வெள்ளம் 'குபுகுபு' வெனப் புகுந்து விடுகிறது; குடிசைகள் விழுகின்றன.

முழங்கால் அளவு, இடுப்பளவு, கழுத்தளவு என்று வேகமாகஏறுகிறது தண்ணீர்.

கால்நடைகள் தத்தளிக்கின்றன.

நீந்தத் தெரிந்தவர்கள் மற்றவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கிருர்கள்.

குழந்தைகள் சில பிணமாகின்றன.

கூக்குரல் அதிகமாகிறது.

தொலைவிலுள்ள கரடு நோக்கி ஓடிவருகிருர்கள் குப்பத்து ஆட்கள். கரும்புத் தோட்டத்தில்வெள்ளம்இல்லை; அழிவு இல்லை.

குப்பம் அழிந்து விடுகிறது.

## காட்சி 12

இடம்:- மாளிகைக் கூடம் (சில நாட்களுக்குப் பிறகு)

இருப்போர்:- சிங்காரவேலர்
அன்னபூரணி
கண்ணுயிரம்.

நிலைமை:- குப்பம் வெள்ளத்தால் சேதமானபோது உதவி செய்து ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றியதற்காக பெரிய அதிகாரி, நேரிலேயே வந்து சிங்காரவேலருக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றிருப்பதை எண்ணி எண்ணிப் பெருமிதம் கொண்ட நிலையில் இருக்கிருர் சிங்காரவேலர்.

அன்:- தம்பி!வந்துபோனுரேபெரிய அதிகாரி, அவரிடம் ஏன் கண்ணுயிரத்தைப்பத்தி எதுவுமே சொல்லல்லே...உனக்குத் தெரிந்தவங்களை, கண்ணுக்குச் சினேகிதம் செய்து வைத்தாத்தானே நல்லது...

சி:- பெரிய அதிகாரியிடம் இவனைப் பத்திச் சொல்லணுமா...எதைக் குறித்துச் சொல்றேக்கா! எதை? (கோபமாக) வெளியே தலைகாட்ட முடியல்லே..கண்டபய கண்டபடி பேசருன்...... கூடத்தகாதவனோடெல்லாம் கூடிக்கொண்டு ஆட்டம் போடருன்...

அ:- ஏண்டா தம்பி! இல்லாதும் பொல்லாததும் சொல்றே. இப்பத்தான் கண்ணு, நாட்டியம் பாட்டுக்கச்சேரி இதுக்கெல்லாம் போறது கூட இல்லியே...

சி:- (வெறுப்புடன்)அந்த இழவுக்குப் போய்க் கொண்டிருந்தாக்கூடப் பரவாயில்லையே......இப்ப 'ஐயா' உலகத்தைத் திருத்தக் கிளம்பிட்டாரே உனக்குத் தெரியாதா? உழவனுக்கே நிலம்......கொடுக்கச் சொல்ருரே..இவங்க பாட்டன் சொத்து......பங்கு போட்டுக் கொடுக்கச் சொல்லி இவர் உத்திரவு போட்டு விட்டாரு...தெரியாதா உனக்கு...குடும்ப கௌரவமே நாசமாகுது....கேவலமாப் பேசருனுங்க...

க:- (கோபிக்காமல் மெல்லிய குரலில்) கேவலமாகப் பேசாமெ வாழ்த்துவாங்களா,நம்மசெய்யற காரியத்துக்கு...

சி:- (கோபமாக) என்னடா சொல்றே...என்ன சொல்றே?

அ:- சும்மா இருடா, தம்பி.

சி:- ஏண்டா முணுமுணுக்கறே. நம்மாலேதானே குடும்பமானமே போகுது என்கிற எண்ணம் இருந்தா இப்படியா நடந்துக் கொள்வே...

க:- என்னுலே ஒண்ணும் குடும்ப மானம் போகவில்லை......ஊரிலே கேவலமாப் பேசறவங்க ... என்னைப் பத்தி எதுவும் பேசல்லே...

சி:- அப்படின்னு...

அ:- (சலிப்புடன்) விட்டுத் தொலைடா தம்பி! கண்ணுயிரம், நீயும் ஏன்விதண்டாவாதம் பேசிக்கிட்டு இருக்கறே...

சி:- பேசட்டும்அக்கா! பேசட்டும்னு தான் நானும் சொல்றேன்... மூடி மூடி ஏன் வைக்கவேணும்...

[வேகமாகச் சென்று கவிழ்த்துக் கொண்டிருக்கும் முகத்தைத் தூக்கி நிறுத்தியபடி)

டேய்! என்னைப் பார்த்துப் பேசு! சொல்ல நினைக்கறதை தைரியமாச் சொல்லேண்டா ... ஊரிலே எவனுவது ஒரு வார்த்தைப் பேசியிருக்கிருனு என்னைப் பத்தி, கேவலமா...ஏண்டா! ஊமையா நிற்கறே ...... எந்தப் பயலாவது பேசுவானு...

க:- (தன்னை விடுவித்துக்கொண்டு) எப்படிப் பேசுவான் ... பேசினு தொலைத்து விடுவீர்களே என்ற பயம்...உடனே ஏவிவிட மாட்டீர்களா அடி, உதை, குத்து, வெட்டுன்னு ... வியாபாரியா இருந்தா தீர்ந்தது, 'திவாலா'வான் ... விவசாயியா இருந்தா பயிரிலே மாடு மேயும், வைக்கப் போரிலே தீப்பிடிக்கும், களஞ்சியத்திலே கொள்ளை நடக்கும்...தெரியுமே எல்லோருக்கும்...தெரிஞ்சிஎவன் உங்க எதிரிலே துணிஞ்சிப் பேசுவான்...

சி:- அக்கா! கேட்டயா அவன் பேசறதை ... கேட்டயான்னேன் ... ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு சொல்றயே...பார்த்தயா அவன் பேசியதை. ஊரிலே ஒரு பயலும் சொல்லத் துணியாததைச் சொல்ருன். ஏண்டா! நான் காலிகளை ஏவி, கொல்லச் சொல்றேன், கொளுத்தச் சொல்றேன் ... ஏண்டா! அப்படித்தானே...

[கண்ணுயிரம் பேசாதிருக்கக் கண்டு சிங்காரவேலர் மேலும் ஆத்திரம் கொண்டு அவன் அருகே செல்கிருர். பயந்துவிட்ட அன்னபூரணி தடுத்து நிறுத்துகிருர்கள்.)

அ:- எவனுவது உன்னை ஏதாவது ஏசி இருப்பான்...காதிலே விழுந்திருக்கும், அதைச்சொல்லவேண்டிய முறை தெரியாததாலே, எப்படியோ சொல்லிவிட்டான்...

சி:- ஓங்கி கன்னத்திலே அறையாமே அப்படிப்பட்டகழுதையை, இங்கே வந்து என்னைக் கேவலமாப் பேசறதா ... ஒரே மகனல்லவா, ஒரே மகன் ... உயிருக்கு உலையா வந்திருக்கருன்...கொஞ்சமான பணமா பாழாகுது இவனுலே...

க:- அந்தப் பணம் அப்படித்தான் பாழாகும்...

[சிங்காரவேலர் முறைக்கிருர்.]

என்று ஊரிலே பேசுகிருர்கள். ஏழை வயிறு எறிய எறியச் சேர்த்த பணம்தானே, அது இப்படித்தான் பாழாகும் என்கிருர்கள்...எனக்கே கேட்க வெட்கமாக இருக்கிறது ... சொல்ல அதைவிட வெட்கமாக இருக்கிறது.

[ஆத்திரம் தாங்காமல், சிங்காரவேலர் கண்ணுயிரத்தின் கன்னத்தில் பளார், பளார் என்று அறைகிருர்.)

சி:- இருக்காதே என் எதிரில்...... வெட்டிப் போட்டு விடுவேன்... எனக்கு ஒரு மகன் பிறக்கவில்லை என்று எண்ணிக் கொள்வேன்... ஏழைக்காகப்பரிந்து பேசுகிருயா, ஏழைக்காக! பெரிய மகான்! மடப்பயலே! என்னுல் எத்தனை ஏழைக் குடும்பங்கள் பிழைக்கின்றன, தெரியுமா...எத்தனை வீடுகளில் நான் விளக்கு ஏற்றி வைத்திருக்கிறேன் தெரியுமா... உனக்கு என்னடா தெரியும்... உல்லாச உலகில் உலவி வருகிருய், என் பணத்தைச் செலவழித்துக்கொண்டு. இதிலே உபதேசம் வேறு செய்கிருயா உபதேசம்...

[பாய்ந்து சென்று கண்ணு

யிரத்தின் சட்டையைப் பிடித்திழுத்து அவனைக் குலுக்கியபடி]

ஒரு ஏழையை வாழ வைத்ததுண்டா நீ? தொழில் கொடுத்ததுண்டா?

[கண்ணுயிரத்தை அலட்சியமாகத் தள்ளியபடி]

அரிசி மில்லிலே நூறு பேர்...... கட்டட வேலையிலே ஐநூறுபேர், கடைகளிலே இருநூறு......என்னுலே பிழைக்கிருர்கள், என்னுலே! ஏழை பங்காளா! உன்னுலே அல்ல!! சொல்லேன்க்கா! உனக்குத் தெரியாதா. என்னுலே எத்தனைப் பேர் பிழைக்கிருர்கள் என்பதை. விரலை மடக்கடா பார்க்கலாம், வியாக்யானம் பேசுபவனே! விரலை மடக்கு, உன்னுலே ஒரு ஆளுக்காவது வேலையோ தொழிலோ, கிடைத்ததா? உனக்கே, நான் பாடு பட்டுத் தேடிய பணத்தைப்பாழாக்குவது தவிர வேறு என்ன வேலை தெரியும்...

அ:- (செல்லமாக) அவனுக்கென்னடா தலை எழுத்து உழைக்கணும்னு.

சி:- (கோபமாக) அக்கா! குறுக்கிட்டுப் பேசாதே...

க:- (அமைதியாக) பேசுங்களப்பா, பேசுங்கள். இம்சைக்கு ஆளான எத்தனையோ பேர் சொல்லத் துணியாததை நான் சொல்லி விட்டேன், கோபம் கொப்பளிக்கிறது ... உங்களுக்கு ...... பேசுகிறீர்கள்..உங்களாலா முடியாது முடுக்காகப் பேச......பேசுங்கள் உம்மிடம் கடன்பட்டு சொத்தை இழந்தவன் சபிக்கிருன் உம்மை ...உம்மை மட்டுமல்ல...நம்மை! காதிலோ விழுகிறது. முதலிலே கடுங்கோபம்தான் பிறந்தது...... எனக்கும்...உண்மை பிறகு தெரிந்தது...வெட்கமும் வேதனையும் பிய்த்துத் தின்கிறது இதயத்தை...

அ:- (விளங்காமல்) கடனைத்திருப்பி வாங்குவதிலே கண்டிப்பாக இருப்பது பெரிய பாபமாடா அப்பா! அப்படியும் எத்தனையோ பேருக்கு வட்டிதள்ளிக்கொடுத்திருக்கிருனே, தம்பி.

க:- உங்களுக்கென்ன தெரியும். வெளுத்தது பால் உங்களுக்கு... மற்ருெரு பயங்கர உண்மையைச் சொல்லட்டுமா ... குப்பம் வெள்ளத்திலே மூழ்கி அழிந்ததே, மூன்று குழந்தைகள் பிணமாகி மிதந்தனவே, மக்கள் வீடிழந்து தவித்தார்களே, யாரால்...

அ:- பைத்யக்காரப்பிள்ளையா இருக்கறியே......அந்த மக்களுக்குக் கஞ்சி வார்க்கப் பணம் கொடுத்ததே உன் அப்பாதானே...

க:- கஞ்சி வார்த்தார் கதறிய மக்களுக்கு, கதியற்ற மக்களுக்கு என் அப்பா! எப்படிப்பட்ட கருணை ... கோயில் கட்டி அல்லவா கும்பிட வேண்டும்...என்னை நேருக்கு நேர் பார்த்துச் சொல்லச் சொல்லுங்கள் ... குப்பம் அழிந்ததற்குக் காரணம் யார்? கொலை பாதகத்துக்குக் காரணம் யார்? அழிவுக்குக் காரணம் யார்? கஞ்சி வார்த்த கனவானைச் சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம்...

[சிங்காரவேலர் திகைத்து உட்காருகிருர். அன்னபூரணி ஏதும் விளங்காத நிலையில் இருவரையும் மாறி மாறிப் பார்க்கிருர்கள், கண்களைத் துடைத்துக் கொள்கிருர்கள்.

கண்ணுயிரம் கோப மிகுதியால், சிங்காரவேலர் அருகே சென்று உரத்த குரலில்...]

க:- என்ன பதில்? ஏன் வாயை மூடிக்கொண்டீர்...

[ஆவேசம் பிடித்தவர் போலாகி]

சி:- குப்பம் அழிந்தது யாரால் என்றுதானே கேட்கிருய்...(குரூரமான பார்வையுடன்) என்னுல்தானடா! என்னுல்தான்! கரும்புத் தோட்டம் அழியக்கூடாது என்பதற்காகத்தான்...கரும்புத் தோட்டம் யாருக்காக? உனக்காக... நான் வேட்டையாடுகிறேன்...நீ விருந்து சாப்பிடுகிருய் ... நான் ஊரைக் கெடுக்கிறேன், என்கிருயே, ஆமடா! ஆம்! நான் ஊரைக்கெடுக்கிறேன், நீ உல்லாசத்தில் புரள்கிருய் ... நியாயம் பேசுகிருயா, நியாயம்! எப்போது பேசுகிருய் உன் நியாயத்தை? வாழ்க்கையைப் பூந்தோட்டமாக்கிக்கொண்டு, வகை வகையான இன்பத்தைச் சுவைத்துக் கொண்டு, சீமான் மகன் என்ற அந்தஸ்த்தில் புரண்டு கொண்டு, தெவிட்டும் அளவு இரத்தத்தைக் குடித்துவிட்டு, இப்போது எனக்கே உபதேசம் செய்கிருய் ...போதனை செய்யும் துணிவு வருகிறது உனக்கு...

(மேலே பாய்ந்து தாக்குகிறுர்.]

[அன்னபூரணி துடிக்கிருர்கள்.]

[அடிவாங்கிக் கொண்டு]

க:- (ஆத்திரமும் அழுகுரலும் கொண்ட நிலையில்) அப்பா!

சி:- (பற்களைக் கடித்தபடி) அப்பா! ஆமடா! ஆம்! அந்த ஒரு சொல் தான் நீ எனக்குத் தந்தது... அதற்காக நான் உனக்கு இந்த மாளிகையைத் தருகிறேன், மாந்தோப்பு தருகிறேன். கடைகள்; வீடுகள், நகைகள், மோடார்கள், என் உழைப்பு முழுவதும் தருகிறேன். சிறுவிரல் அசைத்ததில்லை நீ. பெருநிதி கிடைக்கிறது உனக்கு. சின்ன மீன்களைத் தின்றுத் தின்று பெரிய மீன் கொழுக்கிறது. அந்தப் பெரிய மீனைத் தின்பதற்கு நீ பிறந்திருக்கிருய். நியாயமாபேசுகிருய், நியாயம்—என்னிடம்—நீ – இப்போது! அப்பா! புதிய மாடல் மோடார் வேண்டும். இப்போது இருப்பதற்கு என்ன? அது அறுபது மைல் வேகத்துக்கு மேல் போகவில்லை அப்பா. ஆமைபோல நகருகிறது. வேறே ஸ்போர்ட்ஸ் மாடல் வேண்டும். ஆகட்டும் பார்க்கலாம். ஆர்டர் கொடுத்தாகி விட்டதப்பா! சரி, சரி...... இப்படி அல்லவா உனக்கு வேண்டிய பொருளை எல்லாம் கேட்டுப் பெறுவாய். முட்டாளே! இது எப்படிக் கிடைத்தது என்று அப்போது யோசித்ததுண்டா? இவ்வளவு சுகபோகம் ஏன் என்ற எண்ணம் பிறந்ததா? இவ்வளவு நமக்குத் தருகிருரே நாம் அவருக்கு என்ன தருகிருேம் என்ற எண்ணம் பிறந்ததா? அதுதான் தருகிருயே ஒரு சொல்...அப்பா ...! அது ஒன்றுதானே நீ தருவது ...அவ்வளவுதானே உன்னுல் முடிந்தது.

[அவ்வளவுதான் அவரால் பேச முடிந்தது.

மயக்கம் அவரைத் தாக்கிற்று.

அன்னபூரணி அம்மாள் டாக்டர்! டாக்டர்! என்று அலறிஞர்கள். வேலையாட்கள் பதறிஞர்கள்.

கண்ணுயிரம் கண்களிலே நீர் கொப்பளித்துக் கொண்டு வந்தது.

அவ்வளவுதான் அவனுல் முடிந்தது!]

O

# இருட்டில் மறைந்த கீதம்



அரங்கண்ணல் M.L.A.

புட்லீ!— இப்பெயர் கேட்டு, மருண்டன சில மாநிலங்கள், வட இந்தியாவில். வளைத்துப் பிடிக்க வேண்டுமென்று முயன்றனர் போலீஸ் படைகள் பல்லாண்டுகள், பாயும் குதிரையேறி! பத்ரகாளி! அதோ!! என்று பார்த்தோர் பயந்து மிரள, பவனி வந்தாள், அவள். கையில் துப்பாக்கி! கக்கத்திலோ கட்டாரி! தொடர்ந்து வரத் தோழர்கள்!! கலியாண கூடம், சீமான்கள் மாளிகை, சிற்றரசர் மண்டபம், திருவிழாக் கூட்டம்—திடீரென்று அவள் கும்பல் முளைக்கும்! வெட்டு! குத்து! அடி! உதை! இலட்சக் கணக்கான ரூபாய்கள் — நகைகள் — ஆடை அணிகள் அனைத்தோடும், மறைந்து விடுவாள், அவள்.

புலியென அலறுவார்கள் புட்லீ எனும் பெயர் சொன்னால்! சனியன் — சமுதாயப்புண் — இரத்த வாடையிலே புரளும் அட்டகாசக்காரி — அக்கிரமத்துக்கு அஞ்சாதவள்-அயோக்கியத்தனத்தின் மொத்த உருவம்—என்றெல்லாம், அவளைக் காணும்போது, கண்டபடி சபிப்பர்! "எப்போது ஒழிவாளோ! என்று நமக்கு நிம்மதியோ!! " என்று பெருமூச்சுவிடுவர்!!

அவளைக் கண்டு விட்டாலோ, 'கதி நீயேயம்மா!' 'கையெடுத்துக் கும்பிடுகிறேன், விட்டு விடு!' கண் கண்ட தெய்வம்' நீயன்றோ? என்று காலில் விழுந்து கும்பிடுவர். அவள் சாட்டையைச் சொடுக்கினால் சரணடைவர்! அவளே, சட்டை செய்யாள், எதனையும். பாயும் குதிரையோடு அவர்களை இடித்துத் தள்ளியும், அடித்துக் காயப்படுத்தியும், அட்டகாசச் சிரிப்போடு, செல்வாள்!!

ஆண்களைவிட அவளுக்குப் பெண்களைக் கண்டால்தான் பேரானந்தம். அவளும்பெண்தான்! எனினும் ஆண்களைவிடப் பெண்களிடம்தான் அவளுக்குக் குரோதமும் விரோதமும்!!

O

இராட்சசி! என்று எந்த வாய்கள் அவளைச் சபித்தனவோ, அதே வாய்கள் இனியகனி!! என்று போற்றிய காலமும் இருந்ததுண்டு.

அக்கிரமக்காரி! என்று அவளைக் காணுதபோது தூற்றியோர் அழகின் சின்னம் என்று அவளைக்கண்டு கண்டு மகிழ்ந்ததுமுண்டு, ஒரு சமயம்.

திருட்டு ராணியானதும் புட்லீயைக்கண்டு மிரண்டோர், அவள் இருட்டு ராணியாகயிருந்தபோது எப்படியெல்லாம் 'பயன்' படுத்தினர், தெரியுமா?

மானுகயிருந்தபோது அவளை 'மாடு' போல நடாத்தினர் சீமான்கள்! அவள் புலியாக உருவெடுத்த போது அவள் காலடியிலே தூசாகத் தொங்கலானார்கள்!!

வேசி—வி ,சாரி—ஆள் மயக்கி—ஆயிரம் ரூபாயாமே இரவுக்கு—உடலை விற்கும் கேவலமான வியாபாரி—இப்படியெல்லாம் அவளைத் தூற்றிய பெண்கள், அவள் வேங்கையானதும் 'விட்டுடம்மா தாயே!' என்று காலடி பணிந்து கைகட்டித் தொழுதனர்.

'வருகிறேன் இன்றிரவு' வரம் தரமாட்டாயா, வடிவழகி!;-என்று அவள் புன் சிரிப்புக்காகக் காததிருந்தோரும் உண்டு! 'வரமாட்டேன் இன்றிரவு உங்கள் 'வீட்டுக்கு' என்று அபயம் தந்து இரட்சிக்க மாட்டாயா என்று அதே பிரபுக்கள் அலறியபடி அவளின் 'கருணை'க் காகக் கைகட்டிக் காத்திருந்ததும் உண்டு!!

புட்லீ! பாடுகிறுள்! புட்லீ ஆடுகிறுள்! ஆகா புட்லீ! ஆகா! ஆகா!! என்று அவளுடைய இசையையும் நடனத்தையும் கேட்டு, ஒரு சமயம், எண்ணற்றோர் தேன் குடித்த வண்டாகியதும் உண்டு. அதே மக்கள் அவள் பெயரைக் கேட்டதும் 'கொட்டி விடுமோ இக் குழவி?' என்று மிரண்டு மிரண்டு ஓடியதும் உண்டு.

புட்லீ—அழகி! அதனுல் இருட்டு ராணியாக்கப் பட்டாள்!!

புட்லீ!—அடிப்பட்ட மான், அதனுல் திருட்டு ராணியானுள்!!

O

சில பெண்களைக் கண்டதும் "ஆகா! அழகாக இருக்கிருளே!!" என்போம். நெருங்கிப்பழகும் போது, அழகுதான் இருக்கிறதே ஒழிய அதற்கேற்ற அறிவு கொஞ்சமும் இல்லையே என்று சொல்வோம். அழகும் அறிவும் இருந்துவிட்டால் அவளிடம் ஆடம்பரமும் அட்டகாசமும்தான் இருக்கும்; நளினமோ, லளிதமோ தென்படாது.

புட்லீ—அழகி! அகற்கேற்ற அறிவு பெற்றவள். அதற்கேற்ற அடக்கமும் சாதுர்யமும் உடையவள்!!

எழிலில் அவள் ஒரு பொழில்! இசையில் அவள் ஓர் அருவி! குரலில் குயில்! பழகுவதில் பால்! ஆடுவதிலோ அரசி!!

பாடத் தெரியும்-ஆடத்தெரியும்--அதனுல், அவள் புகழ்பெற்ற 'நாட்டியக்காரியாகத் திகழ்ந்தாள் முதலில்.

இப்போதுதானே 'நாட்டியம்' ஒரு கலையம்சமாகக் கருதப்பட்டு, போற்றப்படுகிறது! புட்லீயின் குடும்பம்

ஏழை. ஏழை வீட்டில் பிறந்த அழகியென்றால் எல்லோரும் தொடக்கூடிய மலர் என்றுதானே சீமான்கள் நினைப்பர்! அதிலும், புட்லீ, பலர்மத்தியில் சுழன்றாடும் சுந்தரி!! பிறகு, கேட்கவேண்டுமா?

எத்தனையெத்தனை இரவுகள், எத்தனையெத்தனை சிற்றரசர்களும் சீமான்களும், அவள் 'உடலை'க் கொத்தினரோ! அத்தனைக்கும் அவள் பதில் தந்தாள் பிறகு — உடலால் அல்ல — சாட்டையால்! துப்பாக்கிகளால்!!

அங்கரிபாய் என்பது அவளுடைய அன்னையின் பெயர். தந்தை கிடையாது! ஒரேஒரு தங்கை தாராபாய் எனும் பெயருடன். மொத்தத்தில் ஆண் அனுசரணையில்லாத குடும்பம்! அன்னைதான் சொத்து,சுகம் யாவும்!!

அப்படிப்பட்ட அன்னைக்குப் பிறகு, அந்தக்குடும்பத்துக்கு மகள்தானே, கழனி—தோட்டம்—எல்லாம்!!

அவளும் 'மனுஷி' யானாள் — தன் குடும்பத்தின் பசியையும் பட்டினியையும் போக்க அவள் 'வயலா'னாள். பலன் பெற்று தாயையும் தங்கையையும் காப்பாற்றினாள்.

அந்த வட்டாரத்தில் எங்கே திருமணம் நடந்தாலும் புட்லீயின் நாட்டியம் இருக்கும்! திருவிழா — செல்வந்தர்களின் விருந்துகள் — சிற்றரசுகளின் தனியறைகள் — ஊர் மேடைகள் — எங்கும் ஆடுவாள்! பாடுவாள்!!

புட்லீயின் பாட்டு — புட்லீயின் ஆட்டம் — புட்லீயின் புகைப்படம் — புட்லீயின் சிரிப்பு — புட்லீயின் அசைவு — புட்லீ, அந்த வட்டாரத்து வாலிபர்களுக்கோர் இலட்சிய நட்சத்திரம்! சீமான்களுக்கோர் சிறந்த பொழுதுபோக்குச் சாதனம்! பெண்களுக்கோர் அழகுச் சின்னம்! அவளைப்பற்றிப் பேசுவது, அவளைச் சந்தித்தேன் என்று சொல்வது, பஞ்சணையில் அவளோடு படுத்திருந்தேன் என்று பேசுவது 'பெருமை'யாகக் கருதப்பட்டது அப்போது

புட்லீ, புண்ணுகவராளியாக யிருந்தாள் அன்று, உல்லாசிகளுக்கு! ஆனால், பிறகு, ஒவ்வொரு இரவும் தன் உடம்பு பெற்ற புண்களுக்குப் பதில் பெறும் பாம்பாக மாறினாள்!!

O

சம்பல் நதிப் பள்ளத்தாக்கு கொள்ளைக் கூட்டத்தினருக்கு ஒரு 'சுவர்க்கமாகும்'. அங்கே புகழ்போன கொள்ளைக்காரனாக விளங்கிய சுல்தான் சிங் ஒரு நாட்டியத்தின்போது இவளைக் கண்டான். மதுபோதையும், மாதுபோதையும் நிரம்பி வழிந்த சீமான்கள் மத்தியில் ஆடிக்கொண்டிருந்தாள் புட்லீ. திடீரென ஒரு வேட்டுச்சத்தம்! சுல்தான் சிங் தோன்றினான். எல்லோரும் அலறினர். புட்லீ மறைந்துவிட்டாள். நல்லவர்கள்போல் வேடமிட்டு வெளியே உலவும் கொள்ளைக்காரர்களைவிட உண்மையான திருடர்கள் மேல் என்று உணர்ந்தாள் அவள்! வெளியில் அவள்பட்ட கொடுமைகள் அந்த முடிவுக்கு அவளை வரச்செய்தனவோ, என்னவோ? சுல்தான் சிங்கின் காதலியானாள். காதல் என்றால் என்ன என்பதற்கான விளக்கம் அத்திருடர்களின் குகையில்தான் அவளுக்குக் கிடைத்தது!!

சில மாதங்களுக்குப் பிறகு அவளுடைய விருப்பத்தின்பேரில் சொந்த வீட்டுக்கு அனுப்பப்பட்டாள். போலீசார் உடன் அவளை வேட்டையாடினர். திருடர்களைப்பற்றி விசாரித்தனர். அவள் வாயைத் திறக்கவில்லை. 'கணவனை' எப்படிக் காட்டிக்கொடுப்பாள்? கொஞ்ச நாளைக்கெல்லாம் அழகான பெண் குழந்தை பிறந்தது அவளுக்கு. மறுபடியும் அவள் மறைந்துவிட்டாள்! கொள்ளைக் கூட்டத்தினரோடு ஒரு பெண்ணும் குதிரையில் வருகிறாள், துப்பாக்கியால் சுடுகிறாள் என்கிற பரபரப்பான பேச்சுக் கிளம்பலாயிற்று. ஒரு சமயம் போலீசாரிடம் சிக்கினாள்! அவர்கள் செய்த சித்திரவதைகள் அவளை 'மிருகமாக'வே ஆக்கிவிட்டன. தந்திரமாகத் தப்பி மறுபடியும் கொள்ளையர் கும்பலைச் சேர்ந்தாள். அதுமுதற்கொண்டு அவளும் ஒரு முதல்தர கொள்ளைக்காரியானாள்!!

ஒரு காக்குதலின்போது சுல்தான் சிங் குண்டடிப்பட்டு வீழ்ந்தான். அவன் உடலைப் போலீசாரிடம் சிக்காமல் செய்ய முயன்றாள், அவள். ஆனால் கூடவந்த லகான், கள்ளா, பகத்சிங், பாபுலுகாரி முதலியோர் தாங்கள் தப்பினால் போதும் என்று ஓடிவிட்டனர். போலீசார் மிகவும் ஆடம்பரமாக சுல்தான் சிங்கின் உடலை ஊருக்கெல்லாம் காட்டித் தங்கள் வெற்றியைக் கொண்டாடினர்! இது, அவள் வெறியைத் தூண்டியது அந்தக் கூட்டத்தின் தலைவியான அவளது காதலைப்பெற ஒவ்வொருவரும் முயன்றனர். பாபுலுகாரி போலீசால் சுடப்பட்டு மாண்டான். அடுத்து பகத்சிங்கிடம் உறவுகொண்டாள். அவனும் மாண்டான். கள்ளாவின் மனைவியானாள். ஒரு மகன் பிறந்தான்! சுரேந்திரன் என்று பெயரிட்டு மகிழ்ந்தாள்!! 1956 டிசம்பரில் மஞ்ரேகர் என்கிற சப்-இன்ஸ்பெக்டர் எப்படியும் இந்தக் கும்பலைப் பிடித்துவிடுவது என்கிற முயற்சியிலீடுபட்டபோது, புட்லீயின் கையில் பலத்த குண்டடிப்பட்டது. அவளுடைய கையை ஒரு பிரபலமான டாக்டர் துண்டித்துவிட்டார்! கொள்ளைக் கும்பலுக்குப் பெரியபெரிய டாக்டர்கள் எல்லாம் இருந்தனர். தன் கையை இழக்கச்செய்த அந்தப் போலீஸ் அதிகாரியைப் பழிக்குப் பழிவாங்கத் துடித்தாள் புட்லீ. அதுபோலச் செய்தும் முடித்தாள். அதுவே, அவளுடைய கடைசி வெற்றியாகும்!!

கொள்ளைக் கூட்டத்தினரைப் பிடிக்கப் பெரிய பெரிய முயற்சிகள் எல்லாம் செய்யப்பட்டன. அவள் இருந்த இடத்தை வளைத்துக்கொண்டு சுட்டனர். அவளும் தன் கூட்டத்தோடு பதிலுக்குச் சுட்டாள். தப்பியோடுவதற்காக ஒரு ஆற்றில் குதித்தாள்! நீந்தினாள்!! ஆனால் ஒரு போலீசின் குண்டு அந்த ஆற்றிலேயே அவளைப் பிணமாக்கியது.

O

எந்த மண்டபத்தில் முன்பொரு காலத்தில் காலில் சதங்கை கொஞ்ச, 'ஜல்ஜல்' என்று நாட்டியமாடினாளோ அதே மொரினு கிராம மண்டபத்தில் அவளுடைய பிரேதம் ஊராரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. அவள் உடலைப் பார்க்கப் பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் திரண்டனர், சிலர் மூர்ச்சித்தும் விழுந்தனராம்! அதில் எத்தனைப்பேர் அவளுடைய பழைய ரட்சகர்களோ!! அவளுடைய முடிவுக்குப்பிறகு, மத்யப் பிரதேசப் போலீசார் எழுதிய குறிப்பு இது:

"மத்திய இந்தியாவையே மருட்டிய ஒரு அரக்கி அழிந்தாள். ஆனால் அவள் அழகியாயிருந்தபோது பாடிய பாட்டுக்களை மத்திய இந்திய மக்களுடைய இதயத்திலிருந்து யாரும் அழித்துவிட முடியாது. 29 வயதுக்குள் புகழையும் பெற்றாள்; எரிச்சலையும் பெற்றாள். திறமைசாலி அவள். ஆனால் திறமை, வீண்வழியில் போய்விட்டது."

யார் காரணம், அவள் வீண் வழியில் செல்ல! எது காரணம் அவள் பலாத்காரவாதியாக!! அதை எழுதுவது போலீசார் வேலையல்லவே — சமுதாயச் சிற்பிகள்தானே அதற்குக் காரணம் கண்டு, போக்க வேண்டும்.

❀




தார்வேந்தன் போர்வேந்த னாகிக் கண்ணில்
தணல்காட்டிக் கரம்நீட்டி ஆணை யிட்டான்,
போர்வீரர் வெறியோடும் வேகத் தோடும்
புறப்பட்டார் புண்பகைவர் நாட்டை நோக்கி,
ஊர்தோறும் மண்புழுதி எழுப்பிக் கொண்டே
ஓடிற்றுப் பெருங்குதிரைக் கூட்டம். நல்ல
நீர்தோன்றும் ஊற்றோரம் ஆற்றின் ஓரம்
நின்றிருந்த பெண்டிரெலாம் அதனைக் கண்டார்.

ஓசந்துவரும் செங்கரும்பின் கணுக்கள் தோறும்
உறங்கிவரும் முத்தேபோல் சிறந்த பொன்னி,
அசைந்துவரும் தென்றலிலே அசைந்து நின்றாள்.
அங்குவந்த மருதப்பன் அவனை நோக்கிக்
கசிந்துவரும் தேன்மதுர மொழியி னாலே,
"கற்கண்டே!" என்றழைத்தான். அவளோ, நெஞ்சைப்
பிசைந்துவரும் ஆசையொடு திரும்பிப் பார்த்தாள்.
போழகன் ஆரணங்கை விரும்பிப் பார்த்தான்.

மேடையில்போய் அவளமர்ந்தாள். தொட்டான். வார்த்தை
வேலியிட்டாள். பிணக்கென்று புரிந்து கொண்டு,
"நாடகமேன் நடத்துகின்றாய்? இப்போ திங்கே
நாம்தானே இருக்கின்றோம் அன்பே!" என்றான்.
கோடிநிலாப் போன்றநங்கை அவனை நோக்கிக்
"குதிரைகளைப் பார்த்தீரா?" என்று கேட்டாள்.
"ஓடியபோர்ப் பரிகளையும் பார்த்தேன்; என்னை
உன்கண்ணின் மணிகளிலும் பார்த்தேன் பார்த்தேன்!

பத்தினியே! இதனைக்கேள்; நாகப் பாம்பின்
படம்போன்று விரிந்தமைந்த கழுத்தும் மார்பும்
சித்திரம்போல் ஒழுங்கான உடலும் செக்கச்
சிவந்திருக்கும் மாந்தளிர்போல் நீண்ட நாக்கும்
கத்துகடல் சங்கைப்போல் நிறமும் நல்ல
கருநெய்தல் பூப்போன்ற கண்களோட
ஒத்தபல சுழிகொண்ட குதிரை யைத்தான்
உலகத்தார் பாடலமென் றுரைப்பர் கண்டாய்.

கத்திகொண்டு முகத்தினிலே வெட்டி னாலும்
கனைத்தெழுந்து பகைவர்தமை எதிர்த்து வெல்லும்
சத்திகொண்ட குதிரையைத்தான் இவுளி என்பர்.
தமிழ்க்குயிலே! அதன்நிறமோ, சலவை செய்த
வத்திரத்தை நினைவூட்டும். வாழைப் பூவின்
மடல்போலும் அதன்செவிகள் அமைந்திருக்கும்.
உத்தமியே! மிகச்சிறந்த குதிரை எல்லாம்
ஒருநூறு விரலுயரம் இருக்கும் என்பர்.

தொடுங்காதற் சுவையறிந்த மாதே! தோளில்
தொத்துகின்ற பைங்கிளியே பெண்டி ரெல்லாம்,
மடங்காமல் வளர்கின்ற நீண்ட தாழை
மடலதனைக் கைவிரலால் மடக்கல் போலே
அடங்காத குதிரைகளை அந்த நாளில்
அடக்கிவந்தான் தேசிங்கு ராசன் என்பான்.
நடுங்காத நெஞ்சத்தான் ரஞ்சித் சிங்கன்
நல்லபல குதிரைகளை வளர்த்தான்" என்றான்.

புதுக்காதல் மாதரசி கொல்லை முல்லைப்
பூப்போன்று சிரித்தபடி அவனை நோக்கி;
"எதற்காக இவ்விலங்கைக் குதிரை என்றே
இந்நாட்டார் அழைக்கின்றார்?" என்று கேட்டாள்.
குதித்தோடும் காரணத்தால் மொழிநூல் வல்லார்
குதிரையென்று பெயரிட்டார் பெண்ணே!" என்றான்.
"இதைப்போன்ற சொல்விளக்கம் இந்த நாட்டின்
ஏடுகளில் வெளிவருதல் வேண்டும்" என்றாள்.

கவிஞர் சுரதா

வாடிக்கையாளர், ஆதரவாளர் அனைவர்க்கும் எமது உளமார்ந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

போக்குவரத்து சேவையில்

என்றென்றும் உங்களுடன் ஒத்துழைப்பது

# பழநியப்பா லாரி சர்வீஸ்

(போன் 88640)

உரிமையாளர்:

**G. சுப்பிரமணியம்**

இல்லம்:
14, வாணியர் தெரு,
இராயப்பேட்டை,
**சென்னை-14.**

அலுவலகம்:
16, ஜானிபாட்சா சாகிப் தெரு,
**சென்னை-14.**

தமிழர் திருநாளில்
ஆதரவாளர்
அனைவருக்கும்
எங்கள்
உளங்கனிந்த
**வாழ்த்துக்கள் !**

## ராதாகிருஷ்ண

## மோட்டார் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்

நெ. 20, நைனியப்பன் மேஸ்திரி தெரு,

சென்னை-14.



ஆழ்கடலில் செல்லும் மரக் கலத்திற்கு (Ship) கலங்கரை விளக்கம் (Light House)—மரக் கலத்தை இயக்கிச் செலலும் மாலுமிக்கு, சேரிடம் அறிந்து சேர திசை காட்டும் கருவி (Mariner's Compass) மாலுமியிடம் தம் இன்னுயிர்களை ஒப்படைத்துள்ள பிரயாணிகளுக்கு, சமயத்தில் உயிர்தபப காக்கும் படகுகள் (life-boats) எவவளவு அவசியமோ, உலகினரோடு தொடர்பு கொள்ள ஆஙகில மொழி அவ்வளவு அவசியம்.

வீட்டிற்கோர் நூல் நிலையம்...

இலக்கண ரீதியாக

**ஆங்கிலம்**

தபால் மூலம்

**ஒரே வருடத்தில்**

அடிப்படையிலிருந்து

**கற்கலாம்**

சேர கடைசி நாள் :

**29-1-66**

பயிற்சிகள் ஆரம்பம் :

**2-2-66**

குறிப்பு :

- 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இத் தபால் பயிற்சியில் சேரலாம்
- ஓரளவு ஆங்கிலம் கற்றவர்களுககும எழுத்து முதல் கற்க விரும்புகிறவர்களும் தனித்தனியான முறையில் பயிற்சியளிக்கப்படுவார்கள்
- அச்சிட்ட மனுவிற்கும் முழு விவரங்களுக்கும் 10 பைசா பில்லையுடன் உடனே எழுதுக

**THE SCHOOL OF ENGLISH LEARNING**

**ஆங்கிலக் கல்வி நிலையம்,**

60, பிராட்வே, சென்னை - 1.

**...எங்கள் ஆங்கில மொழிப் பாடங்கள்**



# உடையார் உள்ளம்



“உனக்கேதுடா ரோஷம் கீஷம் எல்லாம். அதெல்லாம் போயி வெகுநாளாயிட்டுதே. ஒருத்தன் என் காலை மிதிச்சா அவனோட தலையை மிதிக்காமநான் விட மாட்டேன்னு முன்னே சொல்லுவே; அப்படியே செய்யவும் செய்வே. இப்ப எவனாவது உன் தலையை மிதிச்சா, நீ அவன் காலைப் பிடிச்சிவிடறே, வலியைப் போக்க. அவ்வளவுதான் உன்னோட முடுக்கு. மீசை மட்டுந்தான் இருக்குது, முறுங்கேறி. மற்றப்படி வீரம் ஒடிந்து மடிந்துபோய் வெகு காலமாகுது. உனக்கு மட்டுமில்ல டோய்.........நம்ம ‘குத்துக் கொம்பனை’க் கண்டால் ஊரே அலறும் முன்னாலே. ஒரே வருஷத்திலே நாலுபேர், நம்மாலே முடியாது சாமியோய்னு சொல்லிவிட்டு ஓட்டம் எடுத்தாங்க. அப்படி இருந்துது கானை. இப்ப? மூக்கணாங்கயிறே வேணும் போல இருக்குதே...சில ‘சுழி’ அப்படித்தான்......ஆனா இவ்வளவு சீக்கிரமா ‘தொடைநடுங்கி’ ஆகிவிடுவேன்னு நினைக்கவே இல்லை. இத்தனைக்கும் என்னை மாதிரி உள்ளவங்க — நோஞ்சான உள்ளவங்க—பயப்படலாம், சகஜம். உன் உடம்பு மட்டும் எனக்கு இருந்தா......உம்! அதைச் சொல்லி என்ன ஆகப்போகுது ...... மூங்கக் காடெல்லாம் கரும்பா மாறிவிட்டா, பெட்டி வழியும் பணம். ஆகப்போகுதா..அதுபோலத்தான், உனக்கு இருக்கற உடம்பு எனக்கு இருந்தா ஒருபய வாலாட்டுவானா என்னிடம்னு நான் எண்ணிக்கொள்றது...”

கலகத்தை மூட்டிவிடாதே, மனதைக் கெடுக்காதே என்று சொல்லவே தோன்றுது யாருக்கும், ‘ஒண்டிக்கட்டை’ உலகப்பன் பேச்சைக் கேட்கும்போது. வாழைப்பழத்திலே ஊசி இறக்குவது என்பார்களே அப்படிப் பேசுவான்.

அவன் மனதிலே திட்டமிட்டால், வரப்பு தகருறு, வாய்க்கால் தகருறு, வாய்ச்சண்டை வெட்டுகுத்து, எல்லாம கிளம்பிவிடும் எந்தச்சமயததில் யாரை யார்மீது ஏவி விடுவான், என்ன காரணம் காட்டி என்பதைத் தெரிந்துகொள்ளவே முடியாது. மோதுதல், வழக்கு மனறம் போகவைத்துவிடும். அப்போது வக்கீல் ஏற்பாடு செய்வது, வக்கீலுக்கு ‘பாயின்டுகள்’ காட்டுவது, சாட்சிகள் தயாரிப்பது, நிலத்தை ஈடுவைக்க அல்லது விற்க ஏற்பாடு செய்வது — மொத்தமாகச் சொல்லுவதென்றால், ஊரிலே மற்றும் ஒரு உலகப்பனை உண்டாக்கிவிடுவது அவன் வேலை. வேலையா! கலை

ஐயா! கலே!! அந்தக் கலேயில் உலகப்பன் காணிக்கை கொடுக்காமல் வல்லவன் ஆகிவிடவில்லே. ஆறு ஏக்கர் அயன் நஞ்சையும் எட்டு ஏக்கர் புஞ்சையும் விற்று விற்று, காணிக்கை செலுத்திய பிறகுதான் 'வல்லவன்' ஆகமுடிந்தது. வம்பு வல்லடி வழக்கிலேயே அதிகமான சுவை தேடிக்கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்து விட்டதால், கலியாணம் செய்து கொள்ளக்கூட அவனுக்கு எண்ணம் எழவில்லே. பெண்ணேப் பெற்றவர்களோ, ஒரு பாழுங்கிணற்றிலே தள்ளினுல்கூடப் பரவாயில்லே, இந்த வம்புக்காரனுக்குப் பெண்ணேக் கொடுத்தால், வாழ்க்கை முழுவதும் பேரிடி விழுமே என்று பயந்தே ஒதுங்கிக்கொண்டார்கள். உலகப்பன் 'ஒண்டிக்கட்டை'யாகவே இருந்து வந்தது அதனுல்தான். சில அனுபவமுள்ள பெரியவர்கள் மட்டும், உலகப்பன் இப்படி ஆகிவிட்டதற்குக் காரணமே அவன் 'ஒண்டிக்கட்டை'யாக இருப்பது தான்; அவனுக்கும் ஒரு 'கால்கட்டு' காலாகாலத்திலே போட்டுவைத்திருந்தால், இப்படி ஆகியிருக்கமாட்டான்; ஊருக்கே அடங்காமல் திரிந்துவந்த பேர்வழிகளே, உங்களேத்தான்...இது நல்லா இருக்கா......உங்களேக் கட்டிக்கொண்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்... ஊரிலே குளம் குட்டையா இல்லே......என்றவிதமான பேச்சை அடிமூச்சுக் குரலாலே பேசி, அடக்கிவிட்டிருக்கிருர்கள். இவன்மட்டும் என்ன அசகாயச் சூரனு! ஒண்டிக்கட்டையாக இருப்பதாலேதான் சண்டிமாடு போலச் சுத்தித் திரியருன் என்று பேசிக்கொண்டனர்.

❀

ஒண்டிக்கட்டை உலகப்பன் தனக்கு இருந்த நிலபுலத்தை விற்றுத் தீர்த்தானபிறகு, கிராமத்திலே மிட்டா பாத்யதை பெற்றிருந்த மாணிக்கம் பிள்ளேக்கு 'ஆலோசகராக' தன்னே ஆக்கிக்கொண்டான்.

மாணிக்கம் பிள்ளே தனது பூர்வீகச் சொத்தாக இருந்த முப்பது ஏக்கரை 'வேழமுகன் அருளாலே' நூற்று ஐம்பது ஏக்கராக வளர்த்துக்கொண்டவர். நிலத்தை நீச்சைக் கவனித்துக்கொண்டு, கிராமத்தோடு இருந்துவா, நமது குடும்பத்துக்குத் தலேமுறை தலேமுறையாக இருந்துவரும் 'பெயரை'க் காப்பாற்று என்று மாணிக்கத்தின் தந்தை சதாசிவம் பிள்ளே 'தலேப்பாடாக' அடித்துக்கொண்டிருந்தார். என் பேச்சைத் தட்டிநடக்காத பய, இப்ப கிராமத்திலே இருக்க இஷ்டமில்லேன்னு சொல்லிவிட்டு, டவுனுக்குப் போய்விட்டான்; அவனு என்பேச்சைத் தட்டி நடக்கறவன்...அவனேப் பிடித்து ஆட்டுதே ஒரு 'மோகினி' — அவனுேட வீட்டுக்காரி — அது செய்துவிட்ட வேலே என்று சதாசிவம் பிள்ளே பலவருஷங்கள் குறைபட்டுக் கொண்டார். டவுனுக்குப் போனதாலேதான் 'நாலு காசு' பார்க்கமுடிந்துது கண்ணு லே, கொஞ்ச நிலத்தையும் வாங்கிப்போட முடிந்துது. அப்பா சுத்தக் கருநாடகம்...அவர் பேச்சைக் கேட்டிருந்தா, முப்பது பத்தா குறைந்திருக்குமே தவிர, வளர்ந்தா இருக்கும் என்று, 'வெற்றிசன்' பெற்றபிறகு, சதாசிவம் பிள்ளே காதில் விழுகிறமாதிரியாகவே பேசினுர் மாணிக்கம். வயதான காலம், காதும் கேட்கல்லே, கண்ணும் தெரியவில்லே, என்னமோ பேசருன் என் மகன், விளங்கவில்லே என்று சதாசிவம் முணுமுணுத்தார். ஆனுல், மகன் பேசுவது அப்பாவுக்குத் தெளிவாகத் தான் காதிலே விழுந்தது; மறுத்துப்பேச முடியவில்லே; அதனுல் காது மந்தத்தைக் காரணமாக்கிக் கொண்டார்.



❀

அந்தக்கிராமத்தை 'முப்போனூர்' என்று சொல்லுவார்கள்; முப்போகனூர் — மூன்று போகம் விளேயும் ஊர் — என்ற பொருளுள்ள பெயர், அப்படிக் கொச்சையாக்கப் பட்டுவிட்டது. அந்தக் கிராமத்திலிருந்து நாற்பதுகல்தொலேவிலிருந்த காடானூர்,பருத்தி ஆலே அமைக்கப்பட்டு வேகமாக வளர்ந்து 'காடானூர் டவுன்' ஆகிவிட்டிருந்தது. அங்குதான் மிட்டா மாணிக்கம் பிள்ளேக்கு ஆலேக்குத் தேவைப்படும் சிறு சிறு யந்திரப் பகுதிகள் தயாரிக்கும் தொழிற்சாலே.

காடானூர் டவுனில், அவர் மிட்டா மாணிக்கம்!

முப்போனூர் வருகிறபோது, அவர் ஆலே முதலாளி மாணிக்கம்!

மிட்டா மாணிக்கம் பிள்ளே, கிராமத்திற்கு வருகிற போதெல்லாம், ஒண்டிக்கட்டை உலகப்பன்தான் பொழுதுபோக்குக்கு!

பொழுதுபோக்கு என்ருல் அவ எப்படி? இவனுக்கு எது தொடர்பு? முடியுமா முடியாதா! மாந்தோப்பு பக்கம் வரச்சொல்லேன்! — என்ற இந்தவிதமான விளேயாட்டுப் பொழுதுபோக்கு அல்ல.

எந்த நிலம் தரமானது, யாருடைய கை நொடித்துக்கொண்டுவருகிறது, கடன் சுமை யாருக்கு அதிகமாகிக்கொண்டு வருகிறது, கரும்பு போட்டால் 'தரமாக' வருமா, காட்டாற்றுக் கால்வாய் வெட்டும் காண்ட்ராக்ட் யாருக்குக் கிடைக்கும், கூட்டுறவு பாங்க் டைரக்டர்களின் குணுதிசயம் என்ன, அதிலே ஒருவர் கொஞ்சம் 'போடுவாராமே' உண்மையா? என்ற இந்த விதமான தகவல் கேட்டுக்கொள்ளும் பொழுதுபோக்கு.

ஓய்வாக ஒரு பத்துநாள் கிராமத்துக்குப் போய் விட்டு வரப்போகிறேன் என்று 'டவுனில்' சொல்லி விட்டு வருவார் மாணிக்கம்; அந்தப் பத்து நாளும் ஓய்வே இருக்காது; தோட்டமோ வயலோ, மாடோ வண்டியோ, ஏதாவது வாங்குவதோ விற்பதோ நடைபெறும்.

சதாசிவம் பிள்ளே கண்ணே மூடும்போது, முப்போனூரில் ஒரே சதுரம் அயன் நஞ்சை நம்முடையதுதான் என்ற மகிழ்ச்சியுடன்தான் இருந்தார்.

அந்த நிலேயைக் கெடுத்திடத் துணிந்தான், ஒரு புதுப் பணக்காரன். மிட்டா மாணிக்கம் பிள்ளே வாங்க மறுத்த நிலத்தை எல்லாம் சிறிது சிறிதாக அதிகவிலே கொடுத்து வாங்கி, வாங்கி, ஒரு புள்ளியாகி பெரிய புள்ளியாகவும் வளரலானுன்.

தெற்கே வெகுதூரத்திலிருந்து வந்தான், பூர்வீகச் சொத்து ஒருபைசா கிடையாது. அவன் முப்போனூரில் முப்பாட்டனுர் கால முதற்கொண்டு எங்களுக்கு மிராசு பாத்யதை உள்ள ஊர்—நூறு ஏக்கரை மடக்கிப் போட்டு விட்டானே! மடப்பயல்கள் நம்ம கிராமத்துக் காரனுங்க, பேராசை பெரு நஷ்டம் என்பதை மறந்து போய் அவன் 'நாலுகாசு' அதிகம் தருகிருனே என்று ஆசைப்பட்டு, ஒரு வெளியூரானுக்கு இடம் கொடுத்து விட்டானுங்களே...என்று மிட்டா மாணிக்கம் பிள்ளே, தம்மிடம் மாரியம்மன் பண்டிகைக்குப் பணம் தண்ட வந்த பெரியவர்களிடம் சொல்லிக் குறைபட்டுக் கொண்டார்.

ஏனுங்க தம்பி! எதிலே சம்பாதனே அந்த
ஆளுக்கு; கண்ணே மூடிக்கொண்டு கேட்ட
விலே தர்ரானே...



சம்பாதனையா! எதிலேன்னு கேட்கறிங்களா... அவனுக்கு சம்பாதனை கரண்டியிலே ...கரண்டு கம்பெனியா...

கரண்ட் கம்பெனியுமில்லே, சிமென்ட்டு கம்பெனியுமில்லே, கரண்டி, கரண்டி, சமயல் கரண்டி.

ஓட்டல்காரரா?

ஓட்டல்காரரு! பேரைப்பாரு! பட்டைச் சோறு வித்துக்கிட்டு இருந்தான்...மில்லிலே இல்லே ஆளுக அவங்ககிட்டே; பொட்டலம் எட்டணா! தட்டினான் அதிலே சரியான இலாபம்...இப்ப ஓட்டல்காரர்...

வியாபாரம் வலுத்துப் போச்சுன்னு சொல்லுங்க...

இப்பத்தான் காப்பி குடிக்காவிட்டா ஒரு பயலுக்கும் எழுந்து நடமாடவே முடியறதில்லே. ஒரு கப் காப்பி நாலணா-ஸ்பெஷல்... எவ்வளவு நிற்கும் தெரியுமா இலாபம் ஒரு கப்புக்கு; மூணணாவுக்குக் குறையாது...... காப்பித்தூள் கால், மரத்தூள் முக்கால் பாகம்! சக்கரை எங்கே போடறான்! ஷாகரீன் தான்...ஆட்டுப்பால்தான் அசல் பசும்பால் ஆகுது. ஒரே மோசம்...

பாரேன் தம்பி! அவனோடராசியை... ஆயிரமாயிரமாப் புரளுது...

இப்படி உரையாடல்; மிட்டா மாணிக்கம், புதிய புள்ளியைக்கேவலப்படுத்த எடுத்தமுயற்சி நேர்மாறான பலன் கொடுத்தது; பலரும் ஓட்டல் முதலாளி தாண்டவ மூர்த்தியைப் பாராட்டத் தலைப்பட்டனர்; தொடர்பு கொள்ளத் துடித்தனர்.

அந்தத் தாண்டவமூர்த்தி களஞ்சியத்திற்குத் தீ வைத்துவிடச் சொல்லித்தான் ஒண்டிக்கட்டை உலகப்பன் தூண்டிக் கொண்டிருந்தான், 'அக்கரை' பக்கிரியப்பனை.

பக்கிரியப்பன், சில வருஷம் சிலோன் தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பியவன்; அதனால் 'அக்கரை' என்ற பட்டம். ஆறு குழந்தைகளுக்குத் தகப்பன்; சொந்தத்தில் அரை ஏக்கர்! பிழைப்புக்கு வழி மிட்டாவிடம் கைகட்டி நிற்பது, தோப்பு குத்தகை எடுப்பது, சந்தைக்குச் சென்று மாடு பிடித்து வருவது,யாராவது மிட்டா மாணிக்கத்தை எதிர்க்கத் துணிந்தால், அவர்களுக்குப் 'பாடம்' புகட்டுவது.

'பட்டா' தூக்கின பய, பட்டாளமே வந்தாக்கூட பயப்படமாட்டான்; போலீசிலே சிக்கிக் கொண்டா என்ன? மாமியார் வீட்டுக்குப் போய் வந்தா போச்சி என்கிறான். அப்படிப்பட்ட நெஞ்சழுத்தக்காரன் அக்கரை பக்கிரி' என்று கிராமம் பேசுகிறது; ஆனால் பம்பரம் ஆடிக் கீழே தலை சாய்த்துவிட்டது என்று கேலி செய்கிறான் ஒண்டிக்கட்டை.

வெளியூரான்களை விட்டு வைக்கமாட்டானுங்க என்று தெரிந்தா, ஓட்டல்காரன், ஒண்ணுக்குப் பாதி விலைக்கு நிலத்தை விற்றுவிட்டுப் போய் விடுவான் என்பது மாணிக்கத்தின் எண்ணம். அதற்காகத்தான் ஒண்டிக் கட்டையிடம் சொல்லி வைத்தார்; அவர் பெயரை எக்காரணம் கொண்டும் இழுக்கவே கூடாது என்று கண்டிப்பான எச்சரிக்கையுடன். கேஸ் வந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றும் வாக்களித்திருந்தார். இதை தனக்கே உரித்தான தனித்திறமையுடன், பக்குவத்துடன், 'ஒண்டிக்கட்டை' பக்கிரியப்பனிடம் சொல்லிப்பார்த்தான்; பக்கிரி, இது ஆபத்தான வேலைங்க என்றும், பாவமுங்க என்றும் சாக்குப் போக்குச் சொல்லிக் காலத்தை ஓட்டிக்கொண்டே இருந்தான். இதற்குள் ஐநூறு ரூபாய் அளவுக்கு மிட்டாவிடமிருந்து ஒண்டிக்கட்டைக்குச் சேர்ந்தது, அதிலே கால் பங்கு பக்கிரிக்குச் சேர்ந்தது. காரியம் மட்டும் முடியவில்லை. தாண்டவமூர்த்தியின் களஞ்சியம் நிறைய கிச்சிலிச் சம்பா! மிட்டா மாணிக்கத்தால் இந்த நிலைமையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

❋

ஒண்டிக்கட்டைக்கு வெற்றி கிடைக்காமற் போகவில்லை; பக்கிரியின் கடைக்குட்டி மகனுக்கு விஷக் காய்ச்சல் வந்தபோது, கை எடுத்துக் கும்பிட்டான், காலைப் பிடித்துக்கொண்டான், கடன் கொடுத்தான் உலகப்பன். அவ்வளவும் இனும், சொன்னதை முடித்துவிட்டால் என்றான்.

சொன்னதை முடிக்கச் சென்றான், பக்கிரி, நல்ல கருக்கல் இருக்கும் வேலையாகப் பார்த்து. களஞ்சியக் காவல் வேலை பார்த்து வந்த கன்னி விழித்துக் கொண்டான்; அடிதடி; அரிவாள் வெட்டு; கன்னியின் மகன் பட்டாளத்தில் வேலை பார்ப்பவன் லீவுக்கு வந்திருந்தான்; பக்கிரியை அவன் 'புரட்டிப் புரட்டி' எடுத்துவிட்டான். தலை தப்பினுல் போதும் என்று ஓடிவிட்டான் பக்கிரி, ஊரை விட்டே. களஞ்சியத்துக்கு ஒரு சேதமும் இல்லை. ஒண்டிக்கட்டையை வெட்கம் பிய்த்துத் தின்றது.

கிராமத்தை விட்டு ஓடிய பக்கிரி, எங்கெங்கோ அலைந்து கிடந்தான். குடும்பம் வறுமையாலே தாக்குண்டது.

எப்பவாவது எனக்கு எதாச்சும் ஆபத்து ஏற்பட்டா, புள்ளே! மாணிக்கத்தய்யா காலிலே விழுந்து கேள்; அவரு கைவிடமாட்டாரு என்று பக்கிரி சொன்னதை நினைவிலே வைத்துக்கொண்டு, அவன் மனைவி சொர்ணம், தனக்கு வந்த கஷ்டத்தைச்சொல்லி அழுதாள்.



மாணிக்கம், கடும் கோபத்துடன், "உன் புருஷன் செய்த காரியத்துக்கு, உதவி வேறே செய்யணுமா. நம்ம ஊர் மிராசுதாரர்லே ஒருத்தர், நம்ம ஊரை நம்பிப் பணத்தைக் கொட்டி நிலம் வாங்கி, நம்ம ஊர் ஆளுங்களுக்குப் பிழைப்புக் கொடுத்துக்கொண்டு வருகிறார்... அவருடைய களஞ்சியத்தைக் கொள்ளை அடிக்கத் துணிந்தானே பக்கிரி! அடுக்குமா! அவருக்கு நடப்பது தான் நாளைக்கு எனக்கு! களஞ்சியத்தைக் கன்னி காப்பாத்தி விட்டான்; நம்ம கிராமத்தோட பெயர் மானம் காப்பாத்தப்பட்டுது. எதாச்சும் நடந்து போயிருந்தா, டவுன்லே, மிட்டாதாரே! உங்க கிராமத்திலேயா இப்படிப்பட்ட அக்ரமம் நடக்கறது! இப்படியா கிராமத்தைப் பரிபாலித்துக்கொண்டு வர்ரிங்கண்ணு நாலுபேர் கேட்டா நான் என் முகத்தை எங்கே கொண்டுபோய் ஒளிய வைத்துக் கொள்றது. போ! போ!! உனக்கு உதவி செய்தா, நாலுபேர் என்னைப் பத்தி தப்பா நினைத்துக் கொள்வாங்க-என்று கண்டிப்



பாகச் சொல்லி அனுப்பி விட்டார். ஒண்டிக்கட்டை எதோ குறுக்கிட்டுச் சொல்ல முயற்சித்தா ர், ஒரே பார் வையில் அவனை அடக்கிவிட்டார்.

❁

'ஒரே ஒரு முறைதான் பார்த்தானும். அவனோட மனசிலே அவளைத்தான் கட்டிக்கொள்ளணும்னு தோனிப்போச்சி. பொண்ணு நல்ல அழகுன்னு சொல் ருன்; அடக்கமானதாம்; படிச்சிருக்குதாம்; வேலே பார்க்குதாம் வாத்தியாரா' என்று கன்னியிடம் மகிழ்ச்சி பொங்கப் பொங்கக் கூறினுள். அவனுக்கு வாழ்க்கைப்பட்ட கோவிந்தம்மாள்.

"அவனுக்குச் சம்மதம்னு எனக்கு என்னடிதடை! இந்தக் காலத்திலே, கட்டிக்கொள்ளப் போறவனோட மனசுக்குப் பிடித்திருந்தாதான் நல்லபடி வாழ்க்கை நடக்கும். அது அந்தக்காலம் பெரியவங்க பார்த்து பேயாட்டம் ஒருத்தியைக் கட்டிவைத்தாலும், சரின்னு சம்மதிக்கிறகாலம், நான் சம்மதிச்சன்பாரு அந்தக் காலத்திலே, உன்னே என் தலேயிலே கட்டினபோது" என்று கன்னி பழமையைக் குழைத்துக் கொஞ்சினுன்.

"ஏன் என்னவாம் என்னேக் கட்டிக்கிட்டதிலே..." என்று கேட்கலானுள் செல்லக் கோபத்துடன் கோவிந் தம்மாள். 'இப்ப யோசனே செய்து என்னடி பலன்?' என்று கேலிபேசிக்கொண்டே சுருட்டுபற்றவைத்தான் கன்னி.

❁

பட்டாளத்து வேலேயை முடித்துக்கொண்டு, பஸ் டிரைவர் வேலே தேடிக்கொண்டு 'நல்லபடி' இருந்த தங் கள் மகன், தன் மனதுக்குப் பிடித்தமான பெண், பட்டூரில் இருப்பதாகச் சேதிசொல்லி அனுப்பியதைத் தொடர்ந்து அந்தப்பேச்சு நடைபெற்றது.

பட்டூர் சென்றனர் கன்னியும் கோவிந்தம்மாளும் பெண்பார்க்க. வாத்தியார்வேலே பார்க்கிற வள்ளிவீடு எது என்று விசாரித்துக் கண்டுபிடிப்பது எளிதாகவே இருந்தது. ஆனல் உள்ளே காலடி எடுத்துவைத்ததும், "இந்த வீட்டுக்குள்ளாலே நுழைய உனக்கு எம்மாங் துணிவுடா கிழட்டுப்பயலே...நீதானு, இங்கே சம்பந்தம் செய்துகொள்ள நினேக்கறே! நடக்காது. என் உடம் பிலே ஒரு துளி உயிர் இருக்கறவரையிலே, நடக்கவே நடக்காது. ஆமாம்..." என்று காட்டுக் கூச்சலிட்டபடி பாய்ந்துவந்தான் பக்கிரி.

தங்கள் மகன், தன் மனதுக்குப் பிடித்த பெண் என்று சொன்னது கடைசியிலே பாவி பக்கிரியோட மகதானு! புத்திகெட்டப் பயலுக்கு, எப்படிப்பட்ட நடத் தைக்காரன் இந்த பக்கிரி, எப்படிப்பட்ட தீராதபகை நம்ம குடும்பத்தோட மூட்டிக்கொண்டான் என்பது கவனமில்லேயா.. மூக்கும்முழியும் அழகா இருந்துவிட் டால் போதுமா; இந்த இடத்திலே சம்பந்தம் செய்து கொண்டா, கிராமமே காரித்துப்பாதா! எஜமானர் காதிலே கேட்டா எவ்வளவு ஆத்திரப்படுவார் "ஏண்டா கன்னி! என் களஞ்சியத்தைக் கொள்ளே அடிக்கவும் கொளுத்தவும் துணிஞ்சு வந்தவன்தானு கிடைத்தான் உனக்கு சம்பந்தியாக!! என்றுசீறுவாரே. நமக்கே அது நியாயம்னு படாதே. சே! தெரியாம வந்துவிட்டமே அவ சரப்பட்டு" என்று எண்ணிக்கொண்டான்.

அந்த நேரத்தில், பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்தாள் வள்ளி! முகத்திலேதான் எத்தனே சாந்தி! கண்களிலே என்ன கனிவு! புன்னகை! அடக்கம்! பார்த்த கோவிந்தம்மாள், இப்படிப்பட்ட தங்கச்சிலே நமக்கு மருமகளாக நாம் கொடுத்து வைக்கவேண்டுமே என்று மனதிலே எண்ணிக் கொண்டாள். கன்னி ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான்.

❁

அதை ஏன் கேக்கறிங்க சம்பந்தி! கிராமத் தானுங்க வரவர எந்த விதமான கட்டு திட்டத்துக்கும்

## தெளிவு வேண்டும்

"சிக்கனமாக இருக்கவேண்டும் என்பதையே நான் முக்கியமாகக் கருதுகிறேன். இல்லாவிடில் கடன்காரர்களாக நேரிடும். தனிமனிதன் கடன் காரனுவதைவிட ஒரு நாடு கடனாளியாக்கப்படு வது, ஆபத்து, ஆபத்து, பேராபத்தானதாகும். நம்முடைய சுதந்திரத்தை நாம் காக்கவேண்டு மானல், ஆள்வோர் நம்மைக் கடன்காரர்களாக் காமல் விழிப்புடனிருக்கவேண்டும். எதுவேண்டும்?- சிக்கனமா! விடுதலேயா! அடிமை வாழ்வா! ஆடம் பரமா!!--என்பதில் நமக்குத் தெளிவு ஏற்பட வேண்டும்.

கடன்மேல் கடன் ஒரு நாட்டுக்குப் பெருகு மானல், வரிமேல்வரி போடவேண்டிய அவசியம் ஒரு ஆட்சிக்கு ஏற்பட்டுவிடும். சாப்பிடும் ரொட்டி, குடிக்கும் பானம், உடுக்கும் உடை, எல்லாவற்றுக் கும் வரி வந்துவிடும்....மக்களேக் காப்பாற்றுகிறோம் என்கிற பெயரில் மக்களுடைய உழைப்பை ஒரு அரசாங்கம் வீணுக்காமலிருந்தால்போதும், மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்."

—தாம்ஸ்ஜெபர்சன்.

அடங்க மறுக்கருங்க. பொன்னைக் கொட்டி மண்ணை வாங்கி, இதுகளோட மாரடிக்க வேண்டிவருது.

நானும் அவசரப்பட்டுத்தான் கொஞ்சம் அதிக மாகவே வாங்கிப்போட்டு விட்டேன் நிலத்தை.

ஆமாமாம்! பலபேரு சம்மந்தி! அப்ப என்கிட்ட வந்து தூபம் போடுவாங்க; மிட்டாதார் நீங்க இருக் கறப்ப, யாரோ வெளியூர்க்காரர் நம்ம ஊர் நிலத்தை வாங்கிவிடலாமா அப்படி இப்படின்னு...

நான் வந்துங்க, எந்த நிலம் விலைக்கு வந்தாலும், உங்களுக்கு ஏதாச்சும் அதன் பேர்லே கண் விழுந் திருச்சான்னு கேட்டுவிட்டு, இல்லே அவருக்கு விருப்பம் இல்லேன்னு தகுதியானவங்க சொன்ன பிறகு தான் 'பிடி' கொடுக்கறது...

ஆண்டவனோட அற்புதத்தைப் பாருங்க, எப்படி நம்ம ரெண்டுபேரையும் ஒண்ணுசேர்த்து வைத்தார் பார்த்திங்களா. கிராமத்திலே பலபேர் நம்ம ரெண்டு பேருக்குள்ளே 'பகை' மூண்டுகிடக்குதுன்னு கூடப் பேசிக்கொண்டாங்க...

களஞ்சியத்தைக் கொள்ளை அடிக்கவந்தானே ஒரு காவாலிப்பய, அப்பத்தானே! அதை ஏன் சொல்றீங்க போங்க, சிலபேர் என்னிடம் வந்து கலகமே செய் தாங்க; உங்களோட தூண்டுதலாலேதான் அந்தப்பய பக்கிரி அந்தக் காரியம் செய்யத் துணிஞ்சான் என்ப தாக.

நம்ம ரெண்டுபேரையும் பிரித்துவைத்தாத்தானே 'தலைகாஞ்சதுகளுக்கு' இலாபம், இரண்டு இடத்திலே யும் தின்கலாம்.

பக்கிரியை ஊரைவிட்டு விரட்டியதே நீங்கதான்னு எனக்குத் தெரியாதா என்ன......பய, இந்தப்பக்கமே தலைகாட்டமாட்டான்! அவன் தலைதெரிந்தாப் போதும் நம்ம கன்னி இருக்கிறான் பாருங்க, சீவிடுவான் சீவி! தீராத பகை இரண்டு பேருக்கும். என்னை நம்பிக் களஞ்சியத்தை ஒப்படைச்சாரு எஜமானரு; என் பேரைக் கெடுக்கறமாதிரி, இங்கேயே கைவரிசையைக் காட்டினானே அந்தப் பக்கிரி, அவனைக் கண்டா; வெட்டி வெட்டிப்போட்டுவிடுவேன் என்று இப்பக்கூட ஆத்திரம் தணியாமதான் பேசறான் நம்ம கன்னி.

✻

முப்போனூர் கிராமமே விழாக்கோலம் பூண்டது, மிட்டா மாணிக்கம் பிள்ளையின் திருமகள் கீதாவுக்கும் மாடர்ன் லாட்ஜ் உரிமையாளர் தாண்டவமூர்த்தியின் ஏகபுத்திரன் ரவிக்கும் நடைபெற்ற திருமண வைபவத் தின்போது.

✻

மணமக்கள் படம் நாளிதழில் வெளியிடப்பட்டிருந் தது. அதைப் பார்த்து சம்பந்தியிடம் காட்டினார் மாணிக்கம். பூரித்துப்போன தாண்டவமூர்த்தி, நாளிதழின் வேறோர் பக்கத்தில் ஒரு செய்தியைக் கண்டு பதறி இதைப் பார்த்தீர்களா சம்பந்தி என்று கூவினார். மிட்டா மாணிக்கம் வாங்கிப் பார்த்தார்.

கொலை! கொலை!

படுகொலை!

"பழைய விரோதம் காரணமாக பக்கிரி என்பவன், முப்போனூர் விவசாயத் தொழிலாளி கன்னி என்பவனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். போலீஸ் புலன் விசாரிக்கிறது" என்று செய்தி இருந்தது.

●


# Asha ARC & Gas Welding Works,

**Pro: G. S. RAJ.**

**Specialist in Automobile & Steel Fabrications.**

**6, Bobegam St.,** *(Behind Midland Theatre)* **Madras-2.**

| ARC | GAS |
|---|---|
| GATES | ALUMINIUM |
| GRILLS | ALLOY |
| TRUSSES | BRASS |
| TANKS | BRONZE |
| Etc., | CAST IRON |
| | COPPER |
| | SILVER BRACING |
| | STAINLESS STEEL |

**Gas Cutting and Surface Grinding.**

**27, Mount Road,** Opp: Y.M.C.A. **Madras-35.**

அனைவர்க்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

# பெருமாள் எலெக்டிரிகல்ஸ்

ஜானிபாட்சா வீதி,

புதுப்பாக்கம், :: சென்னை.

ஆர்மிச்சூர்,
பேட்ரி
போன்றவைகளை
உத்திரவாதத்துடன்
தயாரித்து
அளிக்கப்படும்

உழவர் திருநாளில் எங்கள் உளமார்ந்த வாழ்த்துக்கள்!

# அசோகா ஆப்டிகல்ஸ்

சுபேதார் ஹசேன் தெருவு,

புதுப்பாக்கம், :: சென்னை.

சர்க்கார் சிறப்புப் பெற்ற உயர்ந்த ரக

## மூக்குக் கண்ணாடிகள்

கிடைக்கும்.


கள்வன் மகன்
(கலித்தொகைக் காட்சிகள்)
என்னம்மா? இன்றைக்கு இப்படி பூரித்துப் போய் விட்டீர்கள் யாராவது....
அடியே! நான் எதைச் சொல்லி புரிய வைப்பேன்? நீயும் நானும் சிறுமியாய் இருந்த போது
தெருவில் மணல் வீடு கட்டி விளையாடுவோமே... அப்போது ஒரு போக்கிரி வந்து அதனை சிதைப்பானே.....
ஏன் என்று கேட்பால் சடையைப் பற்றி இழுத்து விட்டு சிரிப்பானே.... நினைவிருக்கிறதா.
கோபமாகப் பேசினால் நம் வரிப்பந்தை பிடுங்கிக் கொண்டு ஓடுவானே ஒரு நாள் நீ கூட அதிக்காக அழுதாயே அவன் அந்தப் போக்கிரி
அந்தப் போக்கிரி
நேற்று வந்திருந்தானடி! வந்து


தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணி...
யாரோ தண்ணீர் கேட்கிறார்கள். போய்க் கொடுத்து வாம்மா...
ஐயோ அம்மா! இங்கே வாயேன்...
அம்மா.. தண்ணீர் குடிக்கும் போது, விக்கி விட்டதம்மா இவருக்கு
இதற்கா பயந்து விட்டாய்.. ஏம்பா கொஞ்சம் நிதானமாகப் பருகக்கூடாதா...? நீ வாம்மா.
தண்ணீரைக் கொடுத்தபோது நீ ஏன் அன்னையை அழைத்தாய்?
ஐயோ அவன் என்ன செய்தான் தெரியுமா? செம்பை வாங்குவது போல் என் கைபற்றி இழுத்துவிட்டான்
பதற்றத்தில் அம்மாவையும் அழைத்து விட்டேனு? பொய் சொன்னேன். அந்தக் கள்வன் மகன், அப்போது கூட தன் கடைக் கண்ணால் என்னைக் கொல்பவன் போல பார்த்துக் கொண்டே இருந்தான்
ஓஹோ அதனால்தான் இந்த பூரிப்பா? நானே அம்மாவிடம் சொல்லி 'ஏறு தழுவ' ஏற்பாடு செய்கிறேன்

# நட்சத்திரம்

## சபரி



சிங்காரப்பட்டி சமீன் அன்றும் விழாக்கோலம் பூண்டிருந்தது. பத்து நாட்களாகவே இப்படித்தான் இருக்கிறது தமிழ் நாட்டின் தலை சிறந்த நடிகை கமலாதேவி சமீன் மாளிகையில் தங்கியிருந்தாள். வெளிப்புறப் படப்பிடிப்புக்காக அவளும், மற்றும் சினிமா சம்பந்தப்பட்ட அத்தனைப் பரிவாரங்களும் அங்குதான் தங்கியிருந்தன. சிங்காரப்பட்டி சமீன்தார் கோபால் ராஜா, அவர்களைக் கவனிப்பதில் கண்ணாக இருந்தார் அவருக்கு கமலாதேவி தன் வீட்டில் வந்து தங்கியிருப்பதே பெருமையாக இருந்தது.

சமீன்தார் ஒழிப்புச் சட்டம் வந்த பிறகு சமீன்கள் நொடித்து விட்டன என்ற பேச்சு நாட்டில் இருந்த போதும் சமீன்தார்கள் பழைய வாழ்க்கையைத்தான் நடத்தி வந்தார்கள். ஆனால் ஒரே ஒரு வேற்றுமை; அந்நாளில் அவர்களிடம் உள்ள பணத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இந்நாளில் கடன் வாங்கி அதே ஆடம்பர வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். வில் வண்டியில் சென்று கொண்டிருந்தவர்கள் இன்று காரில் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்றும் வேட்டைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் அன்று தங்களைப் போன்ற சமீன்தாரர்களுடன்பட்டும் சென்று கொண்டிருந்தவர்கள் இன்று பெரிய பஸ் முதலாளிகளுடனும் சினிமா சம்மந்தப்பட்ட பெரிய புள்ளிகளுடனும்சென்று கொண்டிருக்கிறார்கள். அன்றைய சமீன் பரம்பரையினர் செய்யாத ஒன்றை இன்றைய பரம்பரையினர் செய்கிறார்கள் என்றால், அது சினிமாப் படம் எடுப்பது தான்!

கோபால் ராஜாவுக்குத் தெரியாத பெரிய மனிதர்களோ, சினிமாக்காரர்களோ இல்லையென்றே சொல்லலாம். ஆனால் கமலா தேவியைப் பற்றிஇவருக்கு தெரியாது. காரணம் கமலாதேவிக்கு இது இரண்டாவது படம். முதல் படத்திலேயே பெயர் வாங்கி விட்டவள். ரசிகர்களின் உள்ளத்தில் கனவுக் கன்னி ஆகி விட்டவள்! இரண்டாவது படத்திற்கே ஒரு இலட்சம்வாங்குவதாகக் கேள்வி. கோபால் ராஜாவுக்கு இவை யாவும் தெரியும். கமலாதேவி தன் வீட்டில் வந்து தங்கியதில் அவருக்கு மிக்க மகிழ்ச்சி-காரணம் அவளின் அறிமுகம் கிடைத்ததே என்று!

படப்பிடிப்பு முடிந்து எல்லோரும் இன்று ஊருக்குக் கிளம்பப் போகிறார்கள். எல்லோரும்ராஜாவுக்காகக் காத்திருந்தார்கள். அவரும் வந்து சேர்ந்தார்.

டைரெக்டர் பேச ஆரம்பித்தார்.

“ராஜாவுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம் உங்களின் உதவியின்றி எங்களால் இவ்வளவு வெற்றிகரமாக இந்தப்படப்பிடிப்பை முடித்திருக்க முடியாது. உங்களுக்கு எங்கள் நன்றி”

“நீங்கள் நன்றி சொல்லும் அளவுக்கு நாங்கள் ஒன்றும் செய்து விடவில்லை. “ராஜாவுக்கு கலையின் மேல் உள்ள ஆர்வம் சொல்லி முடியாது” என்றார் ராமலிங்கம்.

“உங்களைப் போன்றவர்கள் வந்து தங்குவது எங்களுக்கு ஒரு பெருமைதானே” என்றார் ராஜா, கமலாதேவியைப் பார்த்து

கமலாதேவியும் நன்றி தெரிவித்து விட்டுக் கிளம்பிவிட்டாள். செல்லும் போது ராஜாவைப்பார்த்து ஒரு புன்முறுவல் பூத்துவிட்டுச் சென்றாள். அவள் அசைந்து மெள்ள நடந்து செல்வதை ராஜாவும், ராமலிங்கமும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

“மேனேஜர், நாம் அடுத்த வாரம் ......”

“சென்னைக்குச் செல்கிறோம்” என்று ராமலிங்கம் முடித்தார்.

“ஒருவேடிக்கை பாருங்க, அந்தக் காலத்திலே ‘அந்த’ வம்சத்திலே ஒரு பெண் தோன்றியதும், முதலில் அவர்கள் நம்மிடத்தில் வருவார்கள். நம் ஏவலுக்குக் காத்திருப்பார்கள். நாமாக வெறுத்து ஒதுக்கிய பிறகுதான் செல்வார்கள் இந்தக் காலத்தில் என்னடான்னா, நாம் அவர்களைத் தேடிப்போக வேண்டியதாய் இருக்குது. அதுவும் சினிமாவில் இருப்பவர் என்றால் சொல்லவே வேண்டாம்; கொஞ்சம் பெரிய நடிகை ஆகி விட்டாலோ......”

ராஜாவின் பார்வை, அவர் பேச்சைப் பாதியில் நிறுத்தியது.

ராமலிங்கத்தின் பேச்சு அவ்வளவும் அனுபவத்தின் பிரதிபலிப்பு அது தேவையா, தேவையற்ற அனுபவமா என்பது வேறு. ஆனால் அதுவும் அனுபவம் தானே! ராம

லிங்கத்திற்குத் தெரியும், அடுத்த் வாரம் சென்னை சென்றதும், முதல் தூது செல்ல வேண்டியது அவர் தான் என்று. ஆனல் அவருக்கு இந்த மாதிரி 'பெரிய விஷய'ங்களில் மகிழ்ச்சிதான். ஏனென்றல் இதெல்லாம் ஒரே தூதில் முடிந்து விடாது என்பது அவருக்குத் தெரியும். 'தூது' செல்லும் எண்ணிக்கை உயர, உயர அவருடைய வரவும் உயரும் என்பதும் தெரியும்.

நானும் பணத்திற்குத்தானே இதைச் செய்யப்போகிறேன்!

அவளும் பணத்திற்கு தானே இதைச் செய்யப்போகிறுள்!!

ராஜாவும் பணம் தன்னிடம் இருப்பதால்தானே இதைச் செய்கிருர்!!!

கைகட்டி வேலை செய்யும் ஜன்மத்திற்கு வேதாந்தம் எதற்கு? இதையும் அவரே நினைத்துக் கொண்டார்.

○

கோபால் ராஜா சென்னை வந்து ஒரு வாரத்திற்குமேல் ஆகிவிட்டது. இன்னமும் கமலாதேவியை அவரால் சந்திக்க முடியவில்லை. இன்றிரவு அவர் ஊருக்குக் கிளம்ப வேண்டும்.

மாலை அவராகவே சென்றுவிட்டார் அவள் வீட்டிற்கு. கமலாதேவி வீட்டில் இல்லை. அவள் அக்கா ஒருத்தி இருந்தாள்.

"வாருங்கள். உங்களைப் பற்றி 'பாப்பா' என்னிடம் நிறைய சொல்லியிருக்கிருள். அவளுக்கும் உங்களைப் பார்க்கவேண்டும் என்று ஆவல்தான். பாவம், அவள் என்ன செய்வாள். அவளுக்கு ஓயாத படப்பிடிப்பு. இன்றுகூட அவள், இரவு ஒருமணிக்கு மேல்தான் வருவாள்."

"பரவாயில்லை. நான் இன்று ஊருக்குப் போகிறேன். அடுத்த முறை வரும்போது பார்க்கிறேன். இதை நான் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுத்துவிடுங்கள்"

ராஜா காரில் ஏறும்போது ராமலிங்கம் பெட்டியிருக்கிறதா என்று கவனித்தார். பெட்டியைக் காணவில்லை. கமலாதேவி வீட்டில் இல்லை என்றலும் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய வைர 'நெக்லஸ்' அச்சாரமாகப் போய்விட்டதே என்று நினைத்தார். ஆனல் கவலைப் படவில்லை.

அவர் ஏன் கவலைப்படவேண்டும்!

ராஜா கவலையாகத்தான் இருந்தார்! வைர 'நெக்லஸ்' போனதைப் பற்றி அல்ல! கமலாதேவியைப் பார்க்க முடியவில்லையே என்ற கவலை!!

○

ஆறு மாதமாக இதுவே நடந்து கொண்டிருந்தது. சென்னை வருவதும், ஓட்டலில் தங்குவதும், கமலாதேவியைப் பார்ப்பதும்தான். இந்த ஆறு மாதத்தில் மூன்றுமுறைதான் கமலாதேவியைச் சந்தித்திருப்பார். ஆனல் தனியாக அல்ல, அவள் அக்காவின் முன்னிலையில்.

கமலாதேவிக்காக மட்டும், அவர் ஐம்பதினயிரம் ரூபாய்க்குமேல் செலவு செய்திருப்பார். அது மட்டுமா? சென்னைக்கு வந்ததும் ரேஸ், மதுவகைகள், சூது. இந்தச் செலவுகள் ரூபாய் இரண்டு லட்சத்துக்குமேல், ஆறு மாதத்தில்.

இவ்வளவு செலவாகியும் அவர் எண்ணம் ஈடேறவில்லை. பணம் படைத்தவர்கட்கு வருமே ஒருவெறி, அந்த வெறி இவருக்கும் வந்துவிட்டது. எவ்வளவு செலவானலும் சரி, இதற்கு முடிவு தெரிந்தாகவேண்டும் என்று மனதிற்குள் அவர் ஓர் முடிவெடுத்துக்கொண்டார். இந்த முறையும் அவருக்கு ஏமாற்றம்!

அடுத்தமுறை எப்படியும் கேட்டு விடுவது என்று உறுதி எடுத்துக் கொணடு ஊருக்குக் கிளம்பிவிட்டார்!

○



### ஏன் இல்லை?

ஐந்து ரூபாயைத் திருடிய குற்றத்திற்காக ஐந்து மாதசி சிறைத் தண்டனை கிடைத்துவிடுகிறது; ஆனல், அறிவும் அங்கமும் துரும்பளவும் தேயாமல், ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் லாபம் சம்பாதிப்பவர்கள், பெரிய பெரிய பக்காத்திருடர்கள்தானே! அவர்களுக்கு ஏன் உரிய தண்டனை கிடைப்பதில்லை?

—காண்டேகர்.

ராமலிங்கம் கொண்டுவந்து கொடுத்த கடிதத்தின்மேல் இருந்த கையெழுத்தைப் பார்த்ததும், ராஜாவுக்குப் புரிந்துவிட்டது. கமலாதேவியின் கையெழுததுதான். ஒருவேளை தன்னை வரச்சொல்லி எழுதியிருக்கிருளோ?

கடிதத்தைப் பிரிப்பதற்குள் அவர் மனதைக் கட்டுப்படுத்த அவரால் முடியவில்லை.

கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினர்.

உயர்திரு,

ராஜா அவர்கட்கு வணக்கங்கள். இந்த கடிதத்தை என்னிடம்இருந்து எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். ஆறு மாதத்திற்கு முன் என்னைச் சந்தித்ததில் இருந்து என் நினைவாகவே இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். பலமுறை என் வீட்டில் எனக்காகக்காத்திருந்தீர்கள் அதையும் அறிவேன். என்னை மன்னிக்கவும் சிங்காரப்பட்டி ராஜா என்றல், இன்னமும் பலர் கைகட்டி, வாய் பொத்தி நிற்பார்கள், அதுவும் நான் அறிந்ததே. உங்கள் ஊரில் உண்மையிலேயே நீங்கள் ராஜா தான். ஆனல் அந்த ராஜாவுககு என்வீட்டில் ஏற்பட்ட சிலஅனுபவங்கள் எனக்கேகூடப் பரிதாபமாக இருக்கிறது ஒருமுறை, உங்களை நிற்கவைத்தே, என் அக்காள் பேசி அனுப்பிவிட்டாளாம். மற்றெரு முறை நானே பொய் சொல்லி அனுப்பினேன், வீட்டில் இல்லை என்று-வீட்டில் இருந்துகொண்டே! மற்றொரு முறை நாளெல்லாம் நீங்கள் என்வீட்டில் காத்திருந்தீர்கள். இரவு சுமார் 7-மணிக்கு மாடியிலிருந்து டைரெக்டர் சதாசிவத்துடன் இறங்கிவந்த நான், உங்களை நோக்கிஇன்று எனக்குப்படப்பிடிப்பு இருக்கிறது. நாளை வாருங்கள் என்று சொல்லிப் போய்விட்டேன். உண்மையிலே அன்று எனக்கு ஒரு படப்பிடிப்பும் இல்லை. டைரகடருடன் சுற்றிக்கொண்டிருந்துவிட்டு இரவு வீடு திரும்பினேன். பலமுறை என் அக்காள்உங்களுக்குச்சொல்லியிருப்பாள், நான் படப்பிடிப்பில் இருக்கிறேன் என்று. அதிலும் உண்மை பாதிதான்!

ஒருமுறை எங்கள் வீட்டில் நன்ருகக் குடித்துவிட்டு நீங்கள் காரில் செல்லும்போது ஏதோ விபத்தில் சிக்கி, போலீஸ் உங்களைக் கைது செய்து அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். உங்கள், ராமலிங்கம் எவ்வளவோ முயற்சி

செய்துப் பார்த்துவிட்டார்—முடியவில்லை. காரணம் கையில் பணமில்லை.

அப்போது கமலாதேவி, ஜாமீனில் உங்களை அழைத்து வந்தாள்.

பாவம் சிங்காரப்பட்டி ராஜாவுக்கு ஏற்பட்ட கதியைப் பாருங்கள்!

மற்றொருமுறை நீங்கள் ரேஸில் பணத்தை இழந்துவிட்டுக் கலங்கிப் போய் இருந்தீர்கள். அப்போது இந்த கமலாதேவியின் மேனேஜர் சுப்பு, ஓட்டலுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையும் கொடுத்துவிட்டு, இரயிலுக்கும் டிக்கட் எடுத்துக் கொடுத்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

நினைவிருக்கிறதா என்று ஏன் கேட்கிறேன் என்றால், அந்த நேரத்தில் எல்லாம் நீங்கள் 'நினைவு தப்பி' இருந்தீர்கள்.

ராஜாவுக்கு இரயில் டிக்கட் எடுத்துக் கொடுத்தது இந்த கமலாதேவி!

ராஜாவுக்கு வந்த அவல நிலையைப் பாருங்கள். என்னடா இவள் இதையெல்லாம் எழுதுகிறாளே என்று நினைக்கிறீர்களா? இவ்வளவையும் நான் ஏன் எழுதுகிறேன்? உங்களைத் துன்பப்படுத்துவதிலும், நீங்கள் துன்பப்படுவதைக் காண்பதிலும் எனக்கென்ன மகிழ்ச்சி?

எனக்கு மகிழ்ச்சி இருக்கிறது! காரணம் பழிக்குப்பழி வாங்கிவிட்டோமே என்ற மகிழ்ச்சி!!

ஒன்றும் புரியவில்லையா? என்னடா இந்த கமலாதேவிக்குப் பைத்தியமா என்று நினைக்கிறீர்களா? எனக்குப் பைத்தியமில்லை. நல்ல நிலையில்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

என்னைப்பற்றி உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னைப்பற்றி நீங்கள் அறிந்தது சினிமா நடிகை கமலாதேவி என்பதுதானே?

பதினைந்து வருடங்களுக்கு முன்னமே நீங்கள் என்னை அறிவீர்கள். அப்போது நான் கமலாதேவியல்ல. வெறும் கமலாதான். நினைவுக்கு வரவில்லையா? சிங்காரப்பட்டியில் வாழ்ந்தவள்தான் நானும்.

காசிநாதத் தெரு கோடி வீட்டு சொர்ணம்பாளை, நீங்கள் அறிவீர்கள். அவளின் மகள் கமலாதான் நான்-தெருக்கூத்து ஆடும் கமலாதான். அப்போது இவளுக்கு அக்கா கிடையாது. இப்போது எப்படி முளைத்தாள் என்று சிந்திக்கிறீர்களா, இதெல்லாம் சினிமா உலகில் சாதாரணம்!

நான் சிறு பெண்ணாக இருக்கும்போது, ஒருநாள் நான் ஆடும்கூத்து உங்கள் மாளிகைக்கு எதிரில் நடந்தது. அன்று நீங்கள் என்கூத்தைப் பார்த்து ரசித்து வாழ்த்துவீர்கள் என்று நினைத்தேன். ஆட்கள் வந்து உங்களை அழைத்தபோது எங்களைப்பற்றித் தவறாகப்பேசினீர்கள் என்று அறிந்தேன்.

அதே கமலா பெரியவளாகி, மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்தபோது, ஒருநாள் என்னை உங்கள் கட்டிலறைக்கு அழைத்தீர்கள். நான் உங்கள் அழைப்புக்கு இணங்க மறுத்தேன்.

மறுநாளே ஊரைக்கூட்டி என்னை அழைத்து என்மேல், பல அபாண்டங்களைச் சுமத்தினீர்கள். உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்—அன்று நீங்கள் என்னை ஏசிய பேச்சுக்கள்.

"நீ வேசி என்றீர்கள்; நீ நடத்துவது ஒரு வாழ்க்கையா, இதைவிட குளம், குட்டையில் விழுந்து சாகலாமே" என்றீர்கள். ஆனால் நான் குளம் குட்டையில் விழவில்லை. ஆனால், அதே 'வாழ்க்கை' வாழ என்னைத் தேடி இன்று நீங்களே வருகிறீர்கள். உபதேசம்கூட செய்தீர்கள்.

கமலா, கற்பு என்பதுதான் பெண்ணின் உயிர். ஆனால் நீ நடத்தும் வியாபாரத்தில் 'கற்பு' தான் முதல். இந்த 'முதலை' ஒருதடவைப் போட்டால் போட்டதுதான். வேறு வியாபாரம் போல் 'முதலை' எடுக்கமுடியாது. போட்ட 'முதல்' போட்டதுதான். 'வட்டி' ஒன்றுதான், 'வாலிபம்' உள்ளவரையில் உனக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும், என்றெல்லாம் 'வியாபாரப்புத்தியுடன்' பேசி, ஊர் பெரிய மனிதர்களை நம்பவைத்தீர்கள்.

நீங்களும், உங்கள் ஊர்ப்பெரிய மனிதர்களும் என்னை வேசி என்று முடிவுசெய்து, "இந்த ஊரைவிட்டே ஓடிவிடு. உன்னால் இந்த ஊருக்கு அவமானம்" என்றீர்கள். ஊரும் அன்று உங்களுடன் இருந்து என்னை விரட்டியது.

நான் சென்னை வந்தேன். என் அன்னை இறந்தாள். நான் நடிகை ஆனேன். பணம் என்னைத் தேடி



வந்தது. பணம் என்னை வந்தடைந்ததும் சமூகம் என்னை மதிக்க ஆரம்பித்துவிட்டது. பணமில்லாமல், உண்மையிலேயே நான் வயிற்றுப் பிழைப்புக்காகக் கூத்தாடிக்கொண்டிருந்தபோது இதேசமூகம் என்னைத் தூற்றியது. ஆனால் இன்றோ முக்கியமான விழாக்கள், ஏன் திருமணங்களுக்குக்கூட நான் அழைக்கப்படுகிறேன். அநாதைப் பெண்கள் விடுதிகளுக்குக்கூட நான் பணம் தருகிறேன்!

நானும் அதே கமலாதான்!

சமூகமும் அதே சமூகம்தான்!!

என் நிலைமை உயர்ந்திருக்கிறது, பணத்தால்! பணம், பகட்டு இவை உள்ள மனிதனின் முன் சமூகம் ஒரு விளையாட்டுப் பொம்மை!

சிறிதுகாலம் நான் விளையாட்டுப் பொம்மையாக இருந்தேன், இந்த சமூகத்திற்கு!

இன்று இந்த சமூகம் எனக்கு விளையாட்டுப் பொம்மை!!

இதையெல்லாம் உங்களுக்கு நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் நீங்களும் இந்த சமூகத்தில் ஓர் அங்கம்.

என்னை ஓடஓட விரட்டினீர்கள் அன்று. நான் ஓடி ஒளிந்துகொண்டேன்.

இன்றும் என்னை ஓடஓட விரட்டித் தேடுகிறீர்கள். இன்றும் நான் ஒளிந்துகொள்கிறேன்.

ஆனால் ஒரேஒரு வேற்றுமை. அன்று நான் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தேன் இன்று உங்களைச் சிறுகச் சிறுக சாக அடிக்கிறேன். அன்று உங்கள் பக்கத்தில் இருந்த சமூகம், இன்று என் பக்கத்தில் இருக்கிறது. இல்லை, அது என்றுமே பணத்தின பக்கத்தில்தான் இருக்கிறது!

நீ செய்வது ஈனத்தொழில் என்று சொல்லி விரட்டினீர்கள். அதே தொழிலுக்காக இன்று என்னைத் தேடி அலைகிறீர்கள்.

அன்று உங்களால் ஊரைவிட்டு ஓட்டப்பட்ட கமலாதான், ஒருநாள் உங்களைப்போலீசிலிருந்துமீட்டாள். இரயில் டிக்கட் வாங்கிக்கொடுத்து ஊருக்கு அனுப்பினாள்!

உங்கள் வீட்டில் நான் நடிகையாக வந்து தங்கியபோது நீங்களே எனக்கு வேலைகள் செய்தீர்கள். உங்கள் சமீனையே வாங்கக்கூடிய அளவுக்கு இன்று நான் வசதி படைத்தவள் ஆகிவிட்டேன். அன்று உங்களுடன் சேர்ந்துகொண்டு என்னை விரட்டிய, ஊர் மக்கள், சில நாட்களுக்குமுன் என்னைப் பார்கக வரிசையாக உங்கள் வீட்டின்முன் நின்றதையும் நீங்கள் அறிவீர்கள். இப்போது சொல்லுங்கள், "நான் உங்களைப் பழிக்குப்பழி வாங்கிவிட்டேனா இல்லையா?"

நட்சத்திரம் வானில் இருக்கும் போது ஜொலிக்கும்-குளுமையாகக் கூட இருக்கும் கண்களுக்கு. ஆனால் நெருங்கிப்போகமுடியாது. நெருங்கினால் நம்மையே அழித்துவிடும் என்பார்கள். நான் இப்போது ஒரு சினிமா நட்சத்திரம்!

என்னை நெருங்கி வரமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

இப்படிக்கு,

கமலாதேவி என்னும்

கமலா.


## செம்மீன்

மீனவர் சமூகத்துக் கதை. கடற்கரைக் கன்னி கறுத்தம்மாவின் தூய காதல் கதை. தனது செயல் ஒரு தியாகம் என்பதை உணராத தியாகி பரீக் குட்டியின் கதை. ஆண்மையும் ரோஷமும் மிகுந்த இளைஞன் பழனியின் கதை. மலையாளக் கடற்கரையில் வாழும் மீனவர் சமூக வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் அருமையான கதை.

தகழி சிவசங்கரம் பிள்ளை எழுதிய இந்நாவல் சாகித்திய அகடமியின் ஐயாயிரம் ரூபாய் பரிசு பெற்றது. 20-ம் நூற்றுண்டின் சிறந்த இலக்கியப் படைப்புகளில் ஒன்று எனக் கருதப்படும் இந்நூல் ஆங்கிலம், ரஷ்யன், செக் முதலிய உலக மொழிகள் பலவற்றிலும் இந்தி, தெலுங்கு, வங்கம், குஜராத்தி முதலிய இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலப் பத்திரிகையான இல்லஸ்டிரேடட் வீக்லி (**Illustrated Weekly**) பத்திரிகையிலும் தொடர்ந்து வெளிவந்தது.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பின் முதல் பதிப்பு வெளிவந்த சில மாதங்களிலேயே விற்பனை ஆனது, இதன் சிறப்புக்குச் சான்று.

**விலை ரூ. 4-00**

**பாரி நிலையம்,**

59, பிராட்வே, :: சென்னை-1.

# ஹாமர்ஷீல்ட்

1961-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாள், இரவு மணி 10-15. பதினொருயிரம் அடி உயரத்தில் மணிக்கு 1500 மைல் வேகத்தில் பதினறு பேர்களைச் சுமந்துகொண்டு ஆப்பிரிக்காவிலுள்ள ரொடிஷியாவுக்கும் காங்கோவுக்கும் இடையில் பறந்து சென்று கொண்டிருந்தது ஆல் பெர்டினு என்ற விமானம். விமானத்திலிருந்த முக்கியமானவர்களில் முன்னுள் ஐக்கிய நாடுகள் சபையின் காரியதரிசி டாக் ஹாமர்ஷீல்ட் குறிப்பிடத்தகுந்தவர். விமானம் சென்றுகொண்டிருந்த காரியம் காங்கோவின் ஷோம்பேயைச் சந்திப்பதற்காக!

இன்றுவரை நீடித்து வரும் காங்கோப் பிரச்சனை அப்போதுதான் ஆரம்பித்து கொந்தளித்துக்கொண்டிருந்த நேரம். அரசியல் முதிர்ச்சியடையாத காங்கோ தனது புதிய சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்க முடியாமல் அடிப்படை இடையூறுகளைப் பெற்றிருந்த சமயம். பெரும் நாடுகளின் சதுரங்கக் காயாக மாற இருந்த காங்கோ அப்போது ஐ. நா. வசம் ஒப்படைக்கப்பட்டது.

—இந்தப் பின்னணியில், உள்நாட்டிலும் குழப்பம் விளைவித்துவந்த ஷோம்பேயைச் சந்தித்து சமரசம் செய்து வைப்பதற்காகத்தான் ஹாமர்ஷீல்ட் மேலே குறிப்பிடப்பட்ட பயணத்தை மேற்கொண்டார்.

ஆனல் அந்தப் பயணம் காங்கோவின் சரித்திரத்தில் மட்டுமல்லாது உலக சரித்திரத்திலேயே ஒரு மறைக்க முடியாத துயர சம்பவத்தை ஏற்படுத்தி விட்டது.

இரவு 10-10 மணிவரை ஆகாய விமானத்துக்கும் தொடர்புள்ள விமான நிலையத்துக்கும் செய்திப் போக்குவரத்து இருந்தது. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் மூன்றுதடவை பேரிரைச்சல் கேட்டது; விண்ணில் விழிகளைப் பறிக்கும் ஒளி தோன்றி மறைந்தது. அவ்வளவுதான். விமானத்தின் ஐந்தில் நான்கு பகுதி தூள்களாக வெடித்துச் சிதறியது. அதில் பயணம் சென்ற அறுவரில் ஐந்து பேர்களது உடல் சின்னபின்னமாகியது. பிழைத்த ஒரே உயிர் ஹெரால்ட் ஜூலியன் என்னும் ஐ நா. பாதுகாப்பு அதிகாரியினுடையதுதான். அதுவும் ஐந்து நாட்கள் உயிர்வாழ மட்டுமே அப்போதைக்கு அவர் உயிர் தப்பினர்!

ஹாமர்ஷீல்ட் சென்ற கடைசிப் பயணம், பெரும் பயணம் எல்லாமே அதுதான். ஐ. நா.வின் காரியதரிசி என்ற முறையில் உலகின முதல் குடிமகன் என்ற சிறப்பைப்பெற்ற அவரது முடிவு மனித அனுதாபம் அனைத்தையும் பெற்று அழியாத நிலையை அடைந்து விட்டது.

அடுத்த நாள், உலகின் நாளிதழ்கள் அனைத்தும் "ஹாமர்ஷீல்ட் விபத்தில் இறந்தார்" என்ற செய்தியைச் சுமந்து வந்தன. படித்தவர்கள் நம்பவில்லை; படிக்கக் கேட்டவர்கள் ஏற்கவல்லை.

காரணம் ஒன்றே ஒன்றுதான்; எதிர்பாராதது நடந்துவிட்டது; நடக்கக்கூடாதது நம்பமுடியாத வகையில் நடந்துவிட்டது!

வாழ்க்கையில் தனி மனிதன் கவனிக்கப்படுவதற்கும் பொதுமனிதன் கவனிக்கப்படுவதற்கும் உள்ள வேறுபாடுகூட இந்த அடிப்படையில் அமைந்தது தான்.

ஹாமர்ஷீல்ட் அப்போது சாதாரண பொது மனிதன் மட்டுமல்ல; உலகின் முதல் பொதுமனிதன்!

இட்லர் மறைவு குறித்தும், ஸ்டாலின் மரணம்பற்றியும் சுபாஷ் இறப்புபற்றியும் இன்னும் சந்தேகங்களும் யூகங்களும் எழுந்துவருவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

எனவே, எதிர்பாராத வகையில் எதிர்பாராத முறையில் சர்ச்சைகள் சூழ்ந்த ஒரு பயணத்தின் போது மரணமடைந்த ஹாமர்ஷீல்ட் முடிவு குறித்தும் கேள்விக்குறிகள் தோன்றின. ஐயப்பாடுகள் நாளடைவில் வலுத்தன. அதன் பயனுக இரண்டு விசாரணைக் குழுக்கள் அவரது விபத்துபற்றி ஆராய ஏற்படுத்தப் பட்டன.

ஒன்று ரொடிஷிய அரசினல் நிறுவப்பட்டது. விமானத்தை இயக்கிச் சென்ற பைலட்டினல் ஏற்பட்ட தவறு காரணமாக விபத்து நேர்ந்தது என்ற முடிவுக்கு வந்தது இந்த குழு.

மற்றொரு விசாரணைக்குழு ஐக்கிய நாடுகள் சபையினலேயே ஏற்படுத்தப்பட்டது. ஹாமர்ஷீல்டின் மரணததுக்குக் காரணம் விமான விபத்துதானெனினும் அந்த விபத்துக்குக் காரணம் மறைமுக சூழ்ச்சிவேலை என்பதை ஒப்புக்கொள்ளாமலிருக்கமுடியாது என்ற எண்ணத்தைத் தெரிவித்தது இககுழு.

உலகின் பொது அமைப்பான ஐ. நா. குழுவின் முடிவிலேயே "சூழ்ச்சித் திட்டமும்" காரணமாக இருக்கலாம் என்ற யூகம் வெளியானவுடன் பல்வேறு அரசியல் வட்டாரங்களில் அதை உறுதிப்படுத்தியும் எதிர்ப்புத் தெரிவித்தும் கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. ஆனல் அவை அனைத்தும் மரணத்துக்குக் காரணம் விமானக் கோளாறு அல்லது சூழ்ச்சிவேலை என்ற இரண்டைப்பற்றியதாகவே இருந்துவந்தன.

ஆனல் இவையிரண்டுக்கும் முற்றிலும் வேறுபட்ட முறையிலும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் தரத்தக்க மூன்ருவது ஒரு காரணத்தை ஐ. நா. சபையே அமைந்திருக்கும் நியூயார்க் நகரத்து பேக்ட் (Fact) என்னும் பத்திரிகை ஒன்று வெளிப்படுத்துகிறது.

ஹாமர்ஷீல்ட் இறந்தது விமானக் கோளாறினல் ஏற்பட்ட விபத்தினலும் அல்ல; சூழ்ச்சி வேலையாலுமல்ல. மாருக தற்கொலை முயற்சியால் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறது, இந்தப்பத்திரிகை. அவர் இறந்தார் என்ற செய்தி எந்த அளவு வியப்பையும் அதிர்ச்சியையும் அளித்ததோ அதே அளவு வியப்பும் அதிர்ச்சியும் இப்பத்திரிகைக்கூறும் இறப்பின் காரணத்தைக் கேட்கும்போதும் அடைய நேரிடுகிறது.

நான்கு காரணங்களை வகைப்படுத்தி அந்த அடிப்படையில் ஹாமர்ஷீல்ட் மரணம் தற்கொலைமுயற்சியின் விளைவுதான் என்று வாதாடுகிறது இந்த இதழ்.



## நீட்டலும், மழித்தலும்...?

'நீட்டலும் மழித்தலும் வேண்டா' என்றார் திருவள்ளுவர். இதற்குப் பிண்டமான பொருள், போலிநாகரிகம் என்று கூறலாம், இதன் விளைவுகள் வள்ளுவர் காலத்தில் எப்படி இருந்ததோ?

ஆனால் இன்று. நீட்டலும் மழித்தலும் தலை சிறந்த நாகரிகமாகிவிட்டது. விதவிதமான முறைகள்! விதவிதமான கருவிகள்!

முதன் முதலாக, மக்கள் எப்போது சவரம் செய்துகொள்ளத் தொடங்கினர்?

இக்கேள்விக்கு பதிலளித்திருக்கிறது, அண்மையில் காகசசில், செக்னோ-- இங்குஷ் சுயாட்சிக் குடியரசின் புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டிருக்கும் ஒரு புதை பொருள்.

கி. மு. 10 ஆம் நூற்றுண்டுக்கும் 7-ஆம் நூற்ருண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் --- தயாரிக்கப்பட்ட வெண்கல சவரக் கத்தி ஒன்றை, அகழ்வு வேலையின்போது கண்டெடுத்திருக்கிறார்கள்.

இந்த கத்தியின் வயது சுமார் 2800 இருக்கலாமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்களாம்.

எனவே, கற்காலம் கழிந்த சில நூற்றுண்டுகளுக்குப் பின் இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நம்பலாமல்லவா!

---

முதலாவதான காரணம்: நினைவு தெரிந்தமுதல் தான் இறப்பதற்குச் சிலநாட்கள் முன்னதாகவரையில் அன்றாடச் சிந்தனைகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்ட ஹாமர்ஷீல்டின் நாட்குறிப்பு—(Markings) "குறிப்புகள்" என்ற பெயரில் வெளிவந்துள்ள புத்தகம்.

இரண்டாவது: பேக்ட் என்னும் இச்சப்பத்திரிகையின் கவனத்துக்கும் அப்பாற்பட்ட சில செய்திஸ்தாபன அறிக்கைகள்; எழுத்து பூர்வமான நடப்புகள்.

மூன்ருவது: உலக அரங்கில் காங்கோ அரசியல் அன்றையதினம் பெற்றிருந்த முக்கியத்துவம்; அந்தப் பிரச்சனைகளில் பொறுப்பேற்றிருந்த ஐ. நா. காரியதரிசியின் ஈடுபாடுகள்.

நான்காவது காரணம்: மரணம் நிகழக் காரணமாயிருந்த விமான விபத்து; அதைப்பற்றிய இரு வேறுபட்ட முடிவுகள். இயந்திரக் கோளாறு என்று ரொடிஷிய ஆய்வுக்குழுவின் கருத்து; சூழ்ச்சி வேலையாகவும் இருக்கக்கூடும் என்ற ஐ. நா. குழுவின் யூகம்.

மேற்கண்ட நான்கினைப் பற்றியும் சிறிது ஆழ்ந்து கவனிக்கும்போது "விமான விபத்து ஏன் அரசியல் எதிரிகளின் சூழ்ச்சி வேலைகளாக இருக்கக்கூடாது?" என்று ஐ. நா. குழு முடிவுக்கு வந்ததுபோல அனைத்தையும் படித்து முடிக்கும் ஒருவர், "மரணம் ஏன் தற்கொலை முயற்சியாக இருக்கக்கூடாது?" என்றும் கேட்கநேரிடும். அந்த அளவு நம்பும் வகையில் ஆதாரங்களைத் திரட்டித் தருகிறது "பேக்ட்" ஏடு.

ஹாமர்ஷீல்டே தனது "குறிப்புகள்" என்னும் நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அவரது எழுத்துக்கள் அவர் மனோ நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுவனவாய் உள்ளன. ஸ்விட்சர்லாந்தின் புகழ் மிக்க பிரதமருக்கு மகனாகப்பிறந்து உலகின் பெருமை மிக்க ஐ. நா. காரியதரிசி பதவி வகித்தபோதிலும் அவர் வாழ்க்கையில் எப்போதும் "தனிமை" என்னும் போக்கிலேயே உழன்றிருக்கிறார். உளநூல்வாதிகளின் கருத்துப்படி இதுகூட ஒரு நோய்தான். ஆனால் "தனிமை"தான் உண்மையான தோழன் என்று எழுதியுள்ளார் தனது நாட்குறிப்பில்!

அவரது உணர்வில் ஊறிப்போயிருந்த இந்தத் தனிமைப் போக்குதான் அவரது தற்கொலை முயற்சிக்கும் ஒரு காரணம் என்று உளநூல் முறைப்படி வாதடுகிறது இந்தப் பத்திரிகை. இதற்கு ஆதாரம் போல அவரே எழுதியுள்ள சில வரிகள் உள்ளன: புகழுக்கும் பதவிக்கும் இடைவிடாத போட்டி, சச்சரவுகள் நடைபெற்றவண்ணம் உள்ளன. இதிலிருந்து தப்புவிப்பது—தப்புவிக்கும் ஒரேவழி மரணத்தை நாமே ஏற்றுக்கொள்வதுதான். வாழ்க்கையின் கடைசிப்பரிசு மரணம்தான். அதை நாமே ஏற்றுக்கொள்வதால் பெரும்பயணத்தின் வெற்றியை வலுவில் அடைந்தவர்களாவோம். மரணம் என்பது ஒரு முழுமைப்பாடு." அவரது நாட்குறிப்பில் காணப்படுகின்ற இந்த வரிகளை மறுக்க முடியாத ஆதாரங்களாகக் கொண்டு "மரணத்தைப் பற்றிய அவரது இந்தக் கருத்துக்கள் 1961-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஏன் அவரை ஆட்கொண்டு முடிவை வலுவில் தேடிக் கொடுத்திருக்கக்கூடாது?" என்று நமக்கு நாமே கேட்டுக்கொள்வது ஓரளவு அடிப்படையுடையதாகத்தான் தோன்றுகிறது.

இந்த ஒரு ஐயப்பாட்டுக்கு வலிவு கூட்டும் வகையில் மேலும் இரு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவர் மரணத்துக்குச் சரியாக ஆறு நாட்கள் முன்னதாக தனது நாட்டைச்சேர்ந்த ஐ. நா. அதிகாரி ஒருவரை அழைத்து தனது "நாட்குறிப்பை"ப் புத்தகமாக வெளியிடும் உரிமையை அளித்ததோடு, தனது, மரண சாசனத்தையும் எழுதி அவரிடம் ஒப்படைத்திருக்கிறார். மேலும் மொழி பெயர்ப்புமூலம் தனது புத்தகம் ஒன்றுக்கு வரவேண்டிய ஊதியத்தை நன்கொடையாக வழங்கி அறநிலையங்களுக்குப் பயன்படுத்தி வருமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார். மேற்கண்ட சம்பவங்களெல்லாம் ஏன் அந்த தருணத்தில் நிகழவேண்டும்? மரணப் படுக்கையில் அல்லது தள்ளாடிய வயதில் செய்து முடிக்கப்படவேண்டியவைகள், அப்போது நடத்தப்படுவானேன்?

இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டும் மேலும் ஐ. நா. வட்டார நிலைமைகளை ஆதாரம் காட்டியும், 1961-ம் ஆண்டு அக்டோர் 12-ந் தேதியிட்ட ராய்ட்டர் செய்தி அறிக்கை ஒன்று "மேற்கண்ட காரணங்களினால் ஹாமர்ஷீல்ட் தனது மரணத்தைப் பற்றி முன்கூட்டியே முடிவு செய்திருந்தார்; எனவே மரணம் விபத்தின் காரணமாக அல்ல, தானே தேடிக் கொண்டது" என்று கூறுகிறது.

அடுத்து அரசியல் சூழ்நிலைகளை ஆராயலாம்.

1961-ம் ஆண்டு காங்கோவில் தோன்றிய அரசியல் கொந்தளிப்பின் வெப்பத்தை ஐ. நா.

உள்ளிட்ட எல்லா உலக நாடுகளும் அணிவகுத்து வந்தன. ஷோம்பே காங்கோவுக்கு மட்டும் அப்போது தலைவலியைக் கொடுக்கவில்லை, ஐ. நா. வின் இயக்கத்துக்கே கேள்விக்குறியாக இருந்தார். காங்கோவில் ஐ. நா. ஆற்றிய பணியை இங்கிலாந்து வன்மையாகக் கண்டித்துக்கொண்டிருந்தது. அமைதியை ஏற்படுத்தச் சென்ற ஐ. நா. படைக்கு ஆயுத மேந்திப்போரிட வேண்டிய நிலையைக் கொடுத்துக் கொண்டிருந்தார் ஷோம்பே. ஷோம்பேயின் படையும் ஐ. நா. படையும் மோதித்தான் ஆகவேண்டும் என்ற நிலை.

இதைத் தவிர்ப்பதற்காகத்தான் 1961-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம்நாள் ஷோம்பேயைச் சந்திப்பதற்காக ரொடிஷியாவின் டோலா விமான நிலயத்திலிருந்துப் புறப்பட்டு காங்கோ நோக்கிப்போய்க்கொண்டிருந்தார் ஹாமர்ஷீல்ட்.

காங்கோ அரசியலில் அமைதியை ஏற்படுத்த முடியாத இக்கட்டான நிலை; சரிந்து வரும் ஐ. நா வின் செல்வாக்கு; பெரும் நாடுகளிடமிருந்து ஐ நா. வுக்கு உதவியும் பக்க பலமும் கிடைக்காத போக்கு காங்கோவில் ஏற்பட இருக்கும் தோல்வி காரணமாகத் தனக்கு எழக்கூடிய கெட்டபெயர்; புகழின் அழிவு ஆகிய அனைத்தையும் ஹாமர்ஷீல்ட் முன் கூட்டிக் கணக்குப்பார்த்துத் தற்கொலை செய்துகொண்டுமறைவதுதான் இவையனைத்தையும் தவிர்ப்பதற்கான ஒரே வழி என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகின்றது முன்னர் குறிப்பிட்ட ஏடு. இதற்கு ஆதாரமாக ஹாமர்ஷீல்டின் நாட்குறிப்பு, அவரது மனப்பாங்கு, அவர் மரணம்பற்றிக் கொண்டிருந்த கருத்து முதலியன காட்டப்படுகின்றன.

"ஹாமர்ஷீல்டின் கடைசி நாட்கள்" என்ற புத்தகத்தை 1963-ம் ஆண்டு எழுதிய அசோசியேடட் பிரஸ் என்னும் செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிருபர் ஆர்தர் கவ்ஷன் என்பார்கூட "ஹாமர் ஷீல்டின் மரணம் தற்கொலை முயற்சியாகவும் இருக்கலாம்" என்ற முடிவையும் வெளியிட்டுள்ளார். இதே கருத்துக்கு மேலும் ஒரு ஆதாரமாக இருக்கிறது அவரது சொந்த நாட்டுக்காரரான டாக்டர் ஜான் லாண்ட் பர்க் என்பவர் கூறியிருக்கும் உண்மை; இவர் ஹாமர் ஷீல்டின் நணபர் மட்டுமலல, ஆசானும் கூட புகழ் மிக்க வழக்கறிஞர்; பெருமை வாய்ந்த பொருளாதார நிபுணர். "ஹாமர்ஷீல்ட் தற்கொலையின் மூலமாகத்தான் அந்த விபத்தைத் தேடிக் கொண்டிருக்கவேண்டும் என்பது தான் அப்போதே நினைத்ததுதான். அவ்வளவு பொறுப்பும் புகழும் உடைய பதவி வகித்த அவருக்கு காங்கோவில் தோல்வி ஏற்பட்டிருக்குமானால் அது மரணத்தை விட மோசமானதாயிற்றே!" எனகிறார் அந்த நண்பர்.

மரணம் தற்கொலை முயற்சியின் காரணமாகத்தான் என்பதற்குக் காட்டப்படும் கடைசி ஆதாரம் விமான விபத்து.

விமானம் வீழ்ந்து நொறுங்கிய நேரம் இரவு மணி 10-15. ஆனால் விமானத்துக்கும் நிலையதுக்கும் கடைசி ஐந்து நிமிடங்களில் எவ்வித தொடர்புமே வழக்கத்துக்குமாறாக இல்லை. அதோடு விமானம் வீழ்ந்து பதினைந்து மணி நேரங்கள் வரை காப்பாற்றும் முயற்சியோ, தேடும் முயற்சியோ மேற்கொள்ளப்படவில்லை. மறுநாள் காலை 8-மணிக்குத்தான விமானம் என்ன ஆயிற்று என்ற கேள்வியே பிறந்தது.

விபத்தில் பிழைத்து ஐந்து நாட்கள் மட்டும் உயிர் வாழ்ந்த ஹெரால்ட் ஜூலியன் என்பார் இறக்குமுன் மருத்துவ மனையில் போலீசாரிடம் கொடுத்த வாக்கு மூலம் சந்தேகங்களை இன்னும் பன்மடங்கு அதிகப்படுத்துகிறது.

போலீசு அதிகாரிக்கும் அவருக்கும் நடந்த வாக்குமூல உரையாடல் இதுதான்.

அதிகாரி: விமானம் டோலா நிலையத்திலிருந்து புறப்பட்டதாகச் சொன்னீர்கள்......?"

ஜூலியன்: ஆம்! அதற்குப்பின் அது வெடித்துச் சிதறியது!

அதிகாரி: அதற்குப்பின்?

ஜூலியன்; 'பயங்கரமான வேகம்: பேரிரைச்சல்; கதவைத் திறந்துகொண்டு நான்வெளியே குதித்தேன்.

அதிகாரி: மற்றவர்கள்?

ஜூலியன்: அவர்கள் விபத்தில் சிக்குண்டு நொறுங்கினார்கள்.

இந்த உரையாடலுக்கு முத்தாய்ப்பு வைப்பது போல் மருத்துவமனை நர்ஸ் ஒருவர்,

"மயக்கத்தில் ஜூலியன் பிதற்றிக்கொண்டிருந்தார். ஹாமர்ஷீல்ட் விமானத்தைத் திரும்பிப் போகச் சொன்னதாகவும் மீண்டும் மீண்டும் அவ்வாறே கட்டளையிட்டதாகவும் அதற்குப் பின்னரே விமானம் வீழ்ந்து நொறுங்கியது என்றும் உளறுகிறார்" என்று கூறுகிறார்.

இதைக் கவனத்தில் கொண்டு மேற்கொண்டு பின்வரும் திடுக்கிடும் தகவல்களைப் படியுங்கள்.

விபத்தில் இறந்த மூன்று ஐ. நா. பாதுகாப்பு அதிகாரிகளின் உடலிலிருந்து துப்பாக்கிக் குண்டுகள் பதிந்திருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. விமானம் வெடித்து இறந்தவர்கள் உடலில் துப்பாக்கிக் குண்டுகள் காணப்படுவானேன்?



H.O. பெரியகுளம். பாக்டரி: திண்டுக்கல்.

இந்தக் கேள்விக்குப் பின்வரும் பின்னணி சித்திரிக்கப்படுகிறது.

அந்த குறிப்பிட்ட நாளில் விமானத்தில் செல்லும் போதே தற்கொலையைத் தேடிக் கொள்ளவேண்டும் என்ற முடிவுடன் வெடிகுண்டுகளைத் தன்னுடன் சுமந்து சென்றிருக்கிறார் ஹாமர்ஷீல்ட். ஏதோ காரணமாக வெடிகுண்டு வெடிக்காமல் போய் விடவே குழப்பமடைந்த ஹாமர்ஷீல்ட் விமானத்தைத் திருப்ப உத்திரவிட்டிருக்கிறார். இதைத்தான் விபத்தில் உயிர் தப்பிய மற்றொருவர் மயக்கநிலையில் உளறியிருக்கிறார். விமானத்தை விபத்துக்குள்ளாக்கி அதன் மூலம் தனது முடிவைத் தேடிக்கொள்ள முயன்ற ஹாமர்ஷீல்டின் திட்டம் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரிந்து விடவே, அதைத் தடுக்கமுயன்ற அவர்களுக்கும் பீதியில் உழன்ற ஹாமர்ஷீல்டுக்கும் கைகலப்பு நடந்திருக்கிறது. கட்டாயச்சூழ்நிலையில்ஹாமர்ஷீல்ட் அவர்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார். இடையில்—இந்த குழப்பத்தினால் வெடிகுண்டுகளும் வேலை செய்துவிட்டன. விமானம் வெடித்தது; வீழ்ந்து நொறுங்கியது. ஹாமர்ஷீல்ட் எண்ணமும் நிறைவேறிவிட்டது.

— இப்படி ஆதாரங்களை அடுக்கிக் காட்டுகிறது "பேக்ட்" இதழ். மேற்கண்ட மூன்று காரணங்களையும் படித்தவர்கள் நான்காவதாகக் கூறப்பட்ட விபத்து பற்றிய விவரத்தையும் நோக்கும்போது "இப்படியும் இருக்கலாம்!" என்ற முடிவுக்கு வருவது நியாயமே. ஏனெனில் ரொடிஷிய ஆய்வுக்குழு அவரது மரணம் முற்றிலும் இயற்கையால் நடந்த விபத்தின் விளைவு என்ற முடிவுக்குவந்த அதேவேளையில் ஐ.நா. குழுவோ விபத்தின் காரணம் அரசியல் சூழ்ச்சியின் விளைவாகவும் இருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளதே!!

டாக் ஹாமர்ஷீல்ட் ஒரு சாதாரண மனிதனாக இருந்து இறக்கவில்லை; உலகின் முதல் குடிமகனாக இருந்து மறைந்திருக்கிறார். எனவே அவரது மறைவுக்கான காரண காரியங்களை இதுபோலெல்லாம் பல கோணங்களில் இருந்து ஆராய்வதில் தவறு கிடையாது.

எத்துணையோ பல ஆய்வுகள், கருத்துப் பரிமாற்றங்கள், சந்தேக விளக்கங்கள் ஆகிய அனைத்துக்கும் பின்னர் அவரது மரணம் இயற்கையில்நேர்ந்த விபத்தின் காரணமாக அல்ல என்பது மிகத்தெளிவாக அனைவராலும் உணரப்பட்டுவிட்டது.

எனவே சூழ்ச்சியின் விளைவாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் அல்லது தற்கொலை முயற்சியின் காரணமாக விபத்து நேர்ந்திருக்கலாம் என்ற இரு சந்தேகங்கள்தான் வலிவுடன் உலவிவருகின்றன.

அரசியல் கண்ணோட்டத்தில் நோக்குமிடத்து இரண்டு சந்தேகங்களுமே விரும்பத்தகாதவைதான்.

உலகுக்கே பொதுவானதும் உயர்வானதுமான ஐ. நா. சபையின் தலைவர் சூழ்ச்சித் திட்டங்களுக்கு ஆளாகி — அதுவும் தொண்டாற்றிகொண்டிருக்கும் தருணத்தில் — இறந்துபட்டிருக்கிறார் என்றால் அது வளர்ந்துவந்துள்ள அரசியல் மேம்பாடுகளுக்கு ஏற்பட்ட ஒரு போக்க முடியாத கறை.

அல்லதுஇத்துணைப் பெரியபொறுப்பும் கடமையும் பெற்று உலகின் முதல் குடிமகன் என்ற சிறப்பு விருதையும் உடைய ஒரு மனிதர், தற்கொலையைத தேடிக் கொள்ளும் அளவுககு மன பலவீனமும் உளப்பாங்கும் கொண்டிருந்திருக்கிறார் என்றால் ஐ. நா. சபை காரியதரிசி எனற புகழில் உலகுக்கு அறிமுகமான அவரது குணாதிசயங்கள் பெற்றிருந்த ஒரு பெரும் குறைபாட்டைத்தான் காட்டும்.

—அரசியல் மாணவன்

எல்லாவித எலெக்ட்ரிக் சாமான்கள், பைப் பிட்டிங்கள், ஆயில் எஞ்சின் ஸ்பேர் சாமான்கள், அரிசி மாவுமில் ஸ்பேர் சாமான்கள், கார் சாமான்கள், எல்லா ரக பால் & ரோலர் பேரிங்குகள், பெல்ட்டுகள் மற்றும் ஆயில், கிரீஸ் வகையருக்கள் ஆகியவற்றின் விற்பனையாளர்கள்:

ஆற்காடு சைகிள் மார்ட்

உரிமையாளர்:

எம். விநாயகம்

(Phone 124)

20, பஜார் வீதி, :: ஆற்காடு. (வ.ஆ.)




மதிப்புமிகு முதலாளி அவர்களுக்கு,

தங்களுக்கு உள்ள பலவிதமான வேலைத் தொநதிரவுகள், வியாபாரம் சம்பந்தமான வேலைகள் இவைகளுக்கிடையில இந்தக் கடிதம் எழுதி அனுபபுவதற்காக மனனிக்கககேட்டுககொள்கிறேன. எனக்கு ஏறபட்டுவிட்டிருககிற சிக்கலைப் போக்கிட வேறு வழியோ, துணையோ, இடமோ இல்லாததாலதான் தங்களிடம் முறையிட்டுக் கொள்கிறேன்!

சென்ற மாதம், அலுவலகத்தின் செலவினத்தில் சிக்கனம் ஏறபடுதத வேண்டும் எனற திட்டததின்படி, வெளியூர்க் கடிதஙகளையும கணககுகளையும் கவனிதது வந்த வரை நிறுத்திவிட்டு அந்த வேலையையும் நானே பாாததுக்கொள்ள வேணடுமெனப் பணித்தீர்கள. அப்போது என வேலை தஙகள் மனதிற்குத திருபதி அளித்திடுமானல், பொஙகல இனும கணிசமான அளவு தருவதாகக கூறி எனனை மகிழ்வித்தீாகள. நான் தஙகளுடைய பெருந்தனமை பறறியும், கொடுதத வாககை எபபடியும் நிறைவேற்றும உயர் குணம படைததவர் எனபதுபறறியும் விரிவாகவும பெருமையுடனும என் மனைவிக்கு எழுதினேன. அவளுககுக் கடிதம எழுதவேணடிய அவசியம் வநததற்குக காரணம, எனககு அவளிடமிருநதுவந்த கடிதமேயாகும. அது இது:

அன்புள்ள அப்பாவுக்குக் கமலி வணககம கூறுவதாகத தெரிவிக்கச் சொனனள. சென்ற வருஷம பொஙகலுக்கு எபபடியும் வருவீாகள் எனறு எதிாபார்ததிருநது ஏமாற்றம அடைநததுபோல இநத வருஷம ஏற்படாது அலலவா அமமா எனறு என்னைக கேட்டாள். இந்த வருஷம எப்படியும அபபா வருவாா எனறு சொல்லிச் சமாதானம செய்துவைததேன, நாலு



வருஷத்துக்கு முன்பு வாங்கிய சந்தனக்கலர் பட்டுப்புடவையை எலி கடித்து நாசமாக்கி விட்டது. அந்தச் சேலையை நீ கட்டிக் கொண்டால் அழகாக இருப்பதாக அப்பா சொன்னாரே அம்மா, கவனமிருக்கிறதா என்று கமலி கேட்டாள். எனக்குக் கவனம் இருந்தால் என்ன பிரயோஜனம், அப்பாவுக் கல்லவா கவனம் இருக்கவேண்டும் என்று சொன்னேன். எலி செய்த வேலையை நீ அப்பாவுக்குத் தெரிவித்தால் கட்டாயம் சந்தனக்கலர் பட்டுப் புடவையை வாங்கி வருவார் என்று சொல்லி, அந்தப் புடவை பற்றி வந்த விளம்பரத்தை இத்துடன் அனுப்பச் சொன்னாள். அந்த விளம்பரம் இதோ.

விலை மலிவு! கண்கவர் வனப்பு!

பொன்னிற மேனிக்கு ஏற்ற

சந்தன நிற பட்டுச் சேலை.

அழுத்தம்! பளபளப்பு! அற்புத வேலைப்பாடு!

அஜந்தா-எல்லோரா ஸ்டோர்.

சென்னை.

கமலி எனக்கு எது பிடிக்கும் என்று அப்பாவுக்கே தெரியும், அவர் இஷ்டம்போல் வாங்கிக்கொண்டு வரட்டும். ஆனால் அத்தோடு, பள்ளிக்கூடத்தில் நடைபெறும் பொங்கல் விழா நடனத்தின்போது, நான் என்ன உடுத்திக்கொள்ள வேண்டுமென்று எட்-மாஸ்டர் ஆர்டர் போட்டிருக்கிறார்கள் என்பதை எழுதி, வாங்கிவரச் சொல்ல வேண்டும் என்றாள். பள்ளிக்கூட எட்-மாஸ்டர், கமலிக்காக,

(1) பச்சைப் பட்டுச் சட்டை, சரிகை புட்டா போட்டது.

(2) சிகப்புப் பட்டில் பாவாடை.

(3) இடுப்பிலே கட்டுவதற்காக சரிகைப் பட்டைத் துணி.

(4) காலில் போட்டுக்கொள்ள வெள்ளை நிறத்தில் 'லேஸ் ஷூ'

வேண்டும் என்று எழுதி அனுப்பி இருக்கிறார்கள். பெரிய கம்பெனியில் மானேஜர் வேலை பார்க்கிறவருக்கு இது ஒரு பிரமாதமா என்று பத்துப் பிள்ளைகள் எதிரில்வேறு அந்த அம்மாள் பேசிவிட்டிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு கண்டிப்பாக இருப்பதற்குக் காரணம் பள்ளிக்கூடத்திற்கு வரும் மேலதிகாரி ஒரு உத்திரவு அனுப்பி இருக்கிறார்.

"காஞ்சி"

மலர்: 2.] [இதழ்: 24, 25.

பொங்கல் திருநாளை முன்னிட்டு நமது 'காஞ்சி' அலுவலகத்திற்கு விடுமுறையாதலால், அடுத்த இரு கிழமை இதழ்களும் வெளிவராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்,

அந்த உத்திரவில்
பள்ளிக்கூட ஒழுங்கு

எட்-மாஸ்டர் பொறுப்பு

கல்விக்கூடம் சரஸ்வதிதேவி கொலுவீற்றிருக்கும் இடம். அங்கு கண்ணுக்கு அருவருப்பான காட்சி இருக்கவே கூடாது. அதிலும் பொங்கல் விழாவின்போது 'தங்க விக்ரஹங்கள்' போல ஜொலிக்கவேண்டும். இதைக் கவனித்தாகவேண்டும். இலவசக் கல்வியும், இலவச மதிய உணவும் தருகிறோம். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல துணியாவது தரவேண்டாமா? அதிலும் பொங்கல் திருவிழாவின்போது. இந்த வருஷம் பொங்கல் திருவிழாவைப் படம் (சினிமா) பிடிக்க ஏற்பாடாகி இருக்கிறது. ஆகையால், அழகான குழந்தைகளுக்கு நடனம், பாடல் கற்றுக் கொடுத்து அலங்காரமான தோற்றத்துடன் கலந்துகொள்ளச் செய்யவேண்டும்.

இது முக்கியம்.
இது அவசரம்.

-மேலதிகாரி.

மேலதிகாரி இதுபற்றிய பின்குறிப்பும் அனுப்பி இருக்கிறார். அதிலே அவருக்குக் கல்வி அமைச்சர் இலாகா அனுப்பியுள்ள முக்கிய அறிவிப்பைத் தெரிவித்திருக்கிறார். அந்த அறிவிபபு என்ன என்றால்,

கல்வி

சடடசபையில் கேள்வி

கல்வி மான்ய விவாதத்தின்போது சட்ட மன்ற உறுப்பினர் சவுரியப்பா, நமதுநாட்டுக் குழந்தைகள் விழாவைப் படமாக்கி (சினிமா) வெளிநாடுகளுக்கு அனுப்ப உத்தேசம் உண்டா? என்று கேட்டார்.

அமைச்சர் அரிமாநாதர் "ஆம்!" என்று பதில் அளித்தார்.

சட்டசபையில் கூறப்பட்டதை மெய்ப்பித்தாகவேணடிய பொறுப்பில் கல்விக்கூடங்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது வேண்டுகோள் வடிவத்தில் வெளியிடப்படும் உத்திரவாகக் கொள்ளலாம்.

சர்க்காரை ஒரு பொறுப்பிலே சிக்க வைக்கும் கேள்வியைச் சவுரியப்பன் கிளப்பியதற்குக் காரணம் அவர் சென்ற வருஷம் தமது அமெரிக்கப் பயணத்தைப்பற்றி சினிமாவும் சிறுவர் சிறுமியரும் என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரையை அமெரிக்க இதழ்கள் வெகுவாகப் பாராட்டியதேயாகும். அமெரிக்க இதழ்கள் பாராட்டியதற்குக் காரணம், சோவியத் அரசாங்கம் அமெரிக்காவுக்கு வெறும் வியாபார நோக்கந்தான் முக்கியம் என்று குற்றம் சாட்டியதாகத் தெரிகிறது. சோவியத அரசாங்கம், அமெரிக்காவின் வியாபார நோக்கத்தைப் பற்றி எழுதுகையில்:-

ஒவ்வொரு துறையிலும் அமெரிக்கா நுழைந்து இலாபவேட்டை ஆட புதுப்புது (தொழில்) கம்பெனி நடத்துகிறது. அமெரிக்காவுக்கு இந்தியாவின் கலை-கலாச்சாரம்-

கல்வி — குழந்தைகள் நிலைமை ஆகிய வைபற்றிய அக்கறை துளியும் இல்லை. தங்கள் நாட்டுச் சரக்கை இந்தியாவில் விற்கும் நோக்கம்தான் அதிகமாகி விட்டிருக்கிறது. போன மாதத்திலேகூட, சென்னையில் உள்ள சென்ட்டினரி கம்பெனியாருடன் அமெரிக்காவிலுள்ள ஜான் அண்டு சன் அண்டு ஜான் கம்பெனியார் கூட்டாகச் சேர்ந்து எலக்ட்ரிக் குத்து விளக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க ஏழு கோடி ரூபாய் மூலதனப் பங்குபோட முன் வந்திருக்கிறது. இந்த சென்ட்டினரி கம்பெனி அமெரிக்க எண்ணெய்க்கு ஏஜன்சி எடுத்துள்ள எம்பெருமான் அவர்களுடையது என்பது தெரிந்ததே.

இந்தச் 'சேதி' சோவியத்துக்கு எட்டியதற்கும், அதைத் தொடர்ந்து பரபரப்பு ஏற்பட்டதற்கும் காரணம், சென்ட்டினரி எம்பெருமான் கம்பெனியில் ஆள் குறைப்புச் செய்தது பற்றிய கண்டனக் கூட்டத்தில் 'பேத ஒழிப்பு' ஆசிரியர் முழுமதி அவர்களின் முழக்கம் என்று கூறப்படுகிறது. முழுமதி தமது பேச்சில், இந்த வருஷம் கூட எம்பெருமான் பொங்கல் போனஸ் கொடுக்காவிட்டால், உள்ளிருப்பு வேலை நடைபெறும் என்று தெரிவித்திருப்பதால், எம்பெருமான் போனஸ் கொடுக்கத் தவறமாட்டார் என்று 'பொறி' என்ற தினசரி தலையங்கம் எழுதியிருக்கிறது. எனவே, கம்பெனியில் போனஸ் கிடைக்கும் என்று தெரிவதால்

(1) அம்மாவுக்கு (எங்க) நார்ப்பட்டு சேலை—மஞ்சள் நிறம்—

(2) உங்க மச்சினன் (இங்கே தான் வந்திருக்கிறார்) பிரியமாக போட்டுக்கொள்ளும் 'ஸ்லாக்'

(3) குழந்தைக்குக் கக்குவான் மருந்து.

(4) எனக்கு டானிக் (முன்பு டாக்டர் முரளி எழுதிக்கொடுத்தது)

இவைகளை வாங்கிக் கொண்டு வரச்சொல்லி எழுதம்மா என்று கமலி கிட்டி போட்டாள். எழுதி விட்டேன். உங்கள் இஷ்டம். நாங்கள் இங்கே இருக்கிறோம் என்ற நினைப்பாவது இருக்கிறதோ என்று எனக்குச் சந்தேகம். அப்பாவை அப்படி 'அல்ப சொல்பமாக, எண்ணாதே என்று கமலி அடித்துச் சொல்கிறாள். பார்ப்போம், யார் ஜோதிடம் பலிக்கிறது என்பதை.

இப்படிக்குத் தங்கள் பார்யாள்

இ. சுந்தரி (இன்ட்டர்)

Phone: 26079

**S. S. S. BROTHERS**

LINE HALFTONE & TRI-COLOUR BLOCK MAKERS

9, Mclean St, (Opp. Loane Square)

MADRAS-1.

Pro: G. SUNDARAM.



இந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட முதலாளியின் அந்தரங்கக் காரியதரிசி கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பினார்.

மனு-போனஸ்!

கடிதத்தின் விரிவையும்

(1) அதில் உள்ள பல விஷயங்களையும் பார்க்கும்போது மனுதாரர் ஆபீஸ் வேலையை ஒழுங்காகக் கவனிக்காமல், தமது சொந்த வேலைகளையேபெரிதும் கவனிப்பது தெரிகிறது.

(2) மனுதாரர் தமது நீண்ட கடிதத்திற்கு ஆபீஸ் காகிதத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார். இது கம்பெனி சொத்தை துர்விநியோகம் செய்வதாக ஆகிறது.

இந்தக் குற்றங்களுக்காக ஏன் அவர்மீது (கம்பெனீ ஒழுங்குவிதி 76ன் படி) நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான பதிலை மூன்று மணி நேரத்திற்குள் தெரிவிக்க உத்திரவிடப்பட்டிருக்கிறது.

முதலாளி எம்பெருமான்
அவர்களுக்காக
மோதி (அந்தரங்கக் காரியதரிசி
—டெம்பரரி—)

O

இந்தக் கடிதம் கிடைத்த இரண்டுமணி நேரத்திற்கெல்லாம், கீழ்க்கண்ட தந்தி இ. சுந்தரி (இன்ட்டர்)க்கு சென்னை இலவச மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டது.

கணவர் பிளட் பிரஷர் பெரிய டாக்டர்
லீவ்-உடனே வேறு இடம் ஏற்பாடுசெய்யவும்.

அசிஸ்ட்டெண்டு டாக்டர்,

# ஒன்றாக நல்லது

[ மா. கி. தசரதன் ]

குறள் முழுவதையும் கற்றோம் என்று கூறுவதற்கு யாராலும் இயலுவது இல்லை. கற்றோரின் அறிவின் திறனுக்கு ஏற்ப அகன்று ஆழ்ந்து பொருள் விளக்கம் காட்டவல்லதாக அப்பெரு நூல் விளங்குகின்றது. கற்றோர்க்குக் களிப்பூட்டும் அந்நிலை மற்றோர்க்கு மலைப்பூட்டக் கூடும் அல்லவா? ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்! அப்பா! எத்தனைப் பாடல்கள்! எத்தனை அறங்கள்! இத்தனையும் படித்தறிவதோ, பயன் கொள்ளுவதோ எப்படி இயலும் என்று கருதினார் போலும் வள்ளுவர். அதனால் குறளின் சுருக்கத்தையும் தாமே கூறவேண்டும் என்று எண்ணினார் போலும்!

ஒன்றே ஒன்று சொல்லுகின்றேன், அதையாவது கேட்டுக் கொள்ளுங்கள் என்று நம்மைப் பார்த்து வேண்டிக் கொள்ளுகின்றார் அவர். தம் மகனுக்குப் பல நீதிகளைச் சொல்லுகின்றார் தந்தை. மகனோ எதையும் கேட்டதாகத் தெரியவில்லை. கடைசியில் அத்தந்தை ஒன்றே ஒன்று சொல்லுகின்றேன் அதையாவது கேள் என்று கெஞ்சுகின்றார் அல்லவா? அதுபோல் சமுதாயத்தின் தந்தையாகிய திருவள்ளுவர் ஒன்றாகச் சொல்லுகின்றேன் என்று ஒருகருத்தைக் கூறுகின்றார்.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

கொல்லாமை இணையில்லாத ஓர் அறம் ஆகும் என்றும் அக்கொல்லாமைக்குஅடுத்த நிலையில் வைத்து எண்ணக்கூடிய சிறப்புடையது பொய்யாமை என்பதும் குறளுக்குப் பொருள்.

இருக்கின்ற பிறஅறங்களை விட்டுவிட்டு ஏன் திருவள்ளுவர் கொல்லாமைக்குத் தலைமையிடம் தருகின்றார்? அடக்கமுடைமை, அவா அறுத்தல் அருளுடைமை, அழுக்காறாமை, என்று பலப்பல கூறி அறன் வலியுறுத்திய வள்ளுவர் அவையெல்லாம் கொல்லாமையைக் கொலு ஏற்றியது ஏன்? கொடியவரை வேந்தன் ஒறுத்தல் வேண்டும்—அச்செயல் பயிரினின்றும் களை எடுத்தல் போல்தான் என்று கூறியவர் திருவள்ளுவர்தாம். நல்வாழ்வு வாழாதவனைச் சாக வழி காட்டுகின்றவர் வள்ளுவர்! இருந்தும் கொல்லாமையே நல்லறம் என்று கூறக்காரணம் என்ன?

வள்ளுவரை அறிய முயன்றால் இந்த விடை எளிதில் கிடைக்கும்.

திருவள்ளுவர் தமிழ் மொழியில் தேர்ந்த புலமையுடையவர்; இலக்கண இலக்கியங்களிலும் துறை போயவர். அவர் நூலே அதற்குச் சான்று. அரிய இலக்கண முடிவுகளை, உரையாசிரியர் பலர் அப்பெரு நூலில் கண்டுகளிப்பர். எனினும் வள்ளுவர் மொழி பற்றிய நூல் எழுதவில்லை. மொழியாராய்ச்சி செய்யவில்லை. எண்ணிப்பார்த்தால் வியப்பாக இருக்கும்; ஆனால் உண்மை—அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல்-தமிழ்மொழியில் உலகப் பெருநூல் எழுதிய அந்தத் தமிழ் மகன் தமிழ்பற்றி ஏதும் தம் நூலில் குறிப்பிடவில்லை! ஏன்? என்ன காரணமாக இருக்கும்? மொழியும் இனமும் நிலைத்த வாழ்வுடையன அல்ல என்று எண்ணினாரோ அல்லது அவைபற்றி எழுதப் பிறர் உளர் என்று விட்டாரோ நமக்குத் தெரியவில்லை.

ஆனால் வள்ளுவர் நூலில் உட்கோள் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்பதுதான். இலட்சிய மனிதன் ஒருவனைத்தான் திருவள்ளுவர் காண விரும்பினார். அதற்காக அவர் தேவன் 'மனிதனாக' அவதரிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. பிறந்திருப்பவனை உடலால் மட்டும் அல்லாமல் உள்ளத்தாலும் மனிதனாக்க வேண்டும் என்று கனவு கண்டார். பள்ளத்தில் வீழ்ந்து கிடப்பவனைக் கரையேற்றி அவனுக்கு வாழ்வு தரவேண்டும் என்பது அவர் தீட்டிய திட்டம். கொஞ்சம கொஞ்சமாக ஒருவன் உயர்ந்து விளங்குவதற்கான படிக்கட்டுகளை அமைத்துத் தந்தவர் திருவள்ளுவர். ஆசை, கோபம் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆட்படுகின்ற மனிதன் அவற்றையெல்லாம் விட்டு மேல் நிலைக்குச் செல்லவேண்டும் என்று விரும்பியவர் அவர். இன்னா செய்தற்கு இனிய செய்து 'தண்டிக்க' வேண்டும் என்று கூறி மனிதனுக்கு மன்னிக்கும மனப்பான்மையை யூட்டுகின்றார். வெறி கொண்டலைந்த மனத்தை நெறிப்படுத்திய பின்னர் அம்மனம் நாகரிகம் உடைய நன்மனம் ஆகவேண்டும் என்பதே அவர் விரும்பியது உடையால், உரையால், உறையுளால் நாகரிகத்தை அளப்பதற்கு அவர் விரும்பவில்லை. உள்ளத்தால் நாகரிகம் அடைவதையே அவர் வேண்டி நின்றார். கண் எதிரே ஒருவன் உண்ணும் உணவில் நஞ்சு கலப்பதைக் கண்டும் கலங்காமல் அந்நஞ்சுக் கலவையை உண்ணும் திண்மையை,—மனத்திண்மையை—அவர் நாகரிகம் என்றார்; அது விரும்பத் தக்கது ஆகும் என்கிறார்!

பெயக்கண்டும் நஞ்சுண்(டு) அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இந்நிலை எல்லார்க்கும் இயலக்கூடியது அன்று; எளிதில் வாய்க்கக்கூடியது அன்று. முயன்றால், அரும்பாடுபட்டு முயன்றால் ஒருகால் எங்கோ ஒருவர்க்கு—ஆயிரத்தில், அல்ல, கோடியில்—அல்ல எப்போதோ ஒரு தலைமுறையில் ஒருவர்க்கு-இயலக்கூடியது ஆகும். அந்நிலையைக் காட்டித்தான் இந்நாகரிகம் பற்றி வள்ளுவர் கூறுகின்றார்.

"நீ உழைப்பது, தேடுவது சேர்ப்பது அத்தனையும் பிறர்க்கு வேளாண்மை செய்வதற்கு என்று வைத்துக் கொள்" என்கிறார். "அப்படிப் பிறர்க்கென்றே வாழ்ந்தால் கேடு (அழவு) வருமே" என்றால், "அந்தக் கேட்டை உன்னை விற்றாவது கொள்ளலாம், தப்பு இல்லை" (விற்றுக்கோள் தக்கது உடைத்து) என்று கூறுகின்றவர் ஆயிற்றே அவர்! இந்த உலகம் இருப்பதற்குக் காரணம் தமக்கு என முயலாது பிறர்க்காகவே உழைக்கின்றவர்கள்தாம் என்பது தமிழர்தம் கருத்து அன்றோ? அக்கருத்தை உலகத்தின் சொத்தாக்கிவிட வேண்டும, உலகத்தைத் தமிழர் நெறிக்குத் திருப்ப வேண்டும் என்ற பேரவா கொண்டமையால் வள்ளுவர் அதனைத் தம் நூலில் பாராட்டியுரைக்கக் காண்கின்றோம்.

அதனால் திருவள்ளுவர் தீமைகள் பலவற்றையும் கொலைதரும் என்று கருதி அக்கொலையை விடல வேண்டும் என்று கூறுகின்றார். அந்த ஓர் அறத்தை ஒருவன் பின்பற்றினால் போதும், பிற அறங்கள் எல்லாம் தாமே பின்தொடர்ந்து வரும் என்கிறார்.

மனம் அமைதி என்பது கிட்டிவிடுமானால் பிறகு இவ்வுலகம் இன்பமானதுதான். இருளிலும் வழிகாணும் ஆற்றல் வந்துவிடும் அப்படிப்பட்ட நன்மக்கள், நாகரிக மக்கள் நிறைந்த சமுதாயத்தைக் காண எழுந்த நூல் திருக்குறள். அதனால் அது ஒன்றாக நல்லது கொல்லாமை என்று கூறுகின்றது.



# பெரியார் யார்?

வழக்கறிஞர் தில்லை வில்லாளன்

பெரியார் யார் என்ற கேள்வி எழுந்தவுடன், கண்களை அகலவிரித்து, கழகத்தின் பழைய அரசியல் ஏட்டைப் புரட்டிடப் போகிறேன் என்று எண்ண வேண்டாம்.

நான் எடுத்துக்கொண்டது, ஆட்களைப் பற்றியதல்ல, அமைப்புகளைப் பற்றியது

அமைப்புகள் என்றால், சாதாரண அமைப்புகள் அல்ல, அரசியல் சட்டத்தில் அங்கம்பெறும், பேரமைப்புகள் இரண்டினைக் குறித்தது.

அந்த அமைப்புகள் யாவை? சட்ட மன்றம், நீதி மன்றம்.

அரசியல் சட்டத்தை அடிப்படையாக வைத்து, சட்டமன்ற உறுப்பினருக்கு, நீதிமன்றத் தலைவரைவிட அதிகாரமா, அல்லது, சட்டமன்ற உறுப்பினரைவிட நீதி மன்றத் தலைவருக்கு அதிகாரமா—இவர்களில் பெரியார் யார்? என்ற கருத்து விளக்கம் தரவேண்டியே இந்த தலைப்பு.

O

சென்ற ஆண்டு உத்தரப்பிரதேச சட்ட மன்றத்திற்கும், அலகாபாத் உயர்நீதி மன்றத்திற்கும், ஏற்பட்ட தகராறு நாம் அனைவரும் அறிந்ததே. கேஷவ சிங் என்பவரை, அந்த அவை காவலிலிட உத்தரவிட்டது, ஆனால் அவர், உயர்நீதி மன்றத்திற்கு மனுச் செய்து கொண்டதின் பேரில், இரண்டு நீதிபதிகள், பொறுப்பில் விட உத்தரவு செய்தனர். உடனே, 21—3—'64 அன்று உத்தரப்பிரதேசச் சட்டமன்றம் அந்த இரு நீதிபதிகளையும் கைது செய்து அவையின் முன் கொண்டு வர உத்தர விட்டது.

இது, நாடெங்கும் பரபரப்பூட்டி விட்டது. அரசியல் சட்ட வரலாற்றில், இது குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாகி விட்டது

மக்களாட்சி என்பது திரிசூலம் போன்றது—மக்கள் மன்றம் ஒருமுனை—சட்டமன்றம் நடுமுனை நீதிமன்றம் மற்றொரு முனை, இம்மூன்றும் அதனதன் இடத்திலிருந்து, ஒன்றையொன்று மோதிக் கொள்ளாமல் இருந்தாலே, ஜனநாயகம் நிலைக்கும் ஆகவேதான், இப்பிரச்சினை, பெரும் பிரச்சினையாகிவிட்டது.

ஜனதிபதி, சுப்ரீம் கோர்ட்டுக்கு, இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்திடக் கோரி, கருத்தினைத் தெரிவிக்க வேண்டினர்.

ஜனதிபதி, ஐந்து கேள்விகளை உருவாக்கி, அதற்குத் தக்க மாற்றம் தாருங்கள் என அனுப்பி வைத்தார்.

சட்ட மன்றத்தின் உத்தரவை, சட்ட மன்றத்திற்கு வெளியே மீறுபவர்களைப்பற்றி முடிவெடுக்க, சட்ட மன்றமே, தனியான நீதிபதியா, சட்டமன்றம் உத்தர விட்ட பிறகும், உயர்நீதி மன்றம், 'ஹேபியஸ் கார்பஸ்' மனு அங்கீகரிக்கலாமா, அப்படி அனுமதித்தால், அந்த நீதிபதிகள் மீது, சட்டமன்றம் நடவடிக்கை எடுக்கலாமா—அக் கேள்விகளின் சாரம் இதுவே.

சுப்ரீம் கோர்ட்டில் இதுபற்றிப் பெருத்த விவாதம் நடந்தது. இந்தியாவின் அர்ட்டர்னி ஜெனரல், ஆறு ராஜ்யங்களின் அட்வகேட் ஜெனரல்கள், ஏழு உயர்நீதி மன்றங்களின் தலைமை நீதிபதிகள், எட்டு சட்ட மன்றத் தலைவர்கள், மூன்று சட்ட மேலவைத் தலைவர்கள், நான்கு வழக்கறிஞர் பெருமன்றங்கள், இவைகளன்றி, பாதிக்கப் பட்ட இரண்டு அலகாபாத் நீதிபதிகள் கேஷவசிங்கின் வழக்கறிஞர், கேஷவசிங் ஆகியோரும். இந்தியாவிலேயே தலைசிறந்த வழக்கறிஞர்கள் நூறுபேர் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர். விவாத முடிவில் 30—9—'64ல் எழுவரில் அறுவர் ஒரு முகமாக முடிவு தெரிவித்தனர்.

நீதிமன்றம், ஹேபியஸ்கார்பஸ் மனுவை ஏற்கலாம். அப்படி உத்திரவிடுவதின் மூலம், சட்டமன்ற அதிகார வரம்பை மீறி நீதிமன்றம் நடந்து கொண்டதாகாது. அப்படி நடந்துகொள்ளும் நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்க சட்ட மன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. இப்படித் தீர்ப்பு வழங்கினர்.

*

ஆனல் இந்த முடிவு எல்லோருக்கும் திருப்தி யளித்ததா என்றல் இல்லை என்றே சொல்லவேண்டும்.

சட்டமன்றத்தினரோ, சல்லடமே கட்டி, சமருக்கு ஆயத்தமாகி விட்டனர். அரசியல் சட்டக் 194 (3) பிரிவுதான் சட்டமன்ற அதிகார வரம்பை வரையறுக்கிறது. அதன்படி நாம் நடப்போம். அது குறையுடையதானால், திருத்தம் செய்வோம் என்று கூறுகின்றனர்.

மக்கள் மன்றத்தினிடம், முடிவெடுக்கும் கடைசி அதிகாரம் இல்லாவிட்டால், ஜனநாயகம் பிழைக்காது என்று ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

சுப்ரீம் கோர்ட் முடிவிற்குப் பிறகும், பெரியார் யார் பிரச்சினை முடியவில்லை, தொடர்கிறது.

O

அரசியல் சட்டப்பிரிவு 194 (3) என்பது என்னதான் சொல்கிறது என்று பார்த்துவிட்டால், பெரியார் யார் என நாம் முடிவிற்கு வந்துவிடலாம். நாமும், பார்ப்போமே!

சட்டமன்றத்திற்கும், அதன் உறுப்பினர்களுக்கும், உரிய அதிகாரங்கள், உரிமைகள், விதிவிலக்குகள் அவ்வப்போது, சட்டமன்றத்தால் செய்யப்படும் சட்டங்கள் மூலம் வரையறுக்கப்படும். அப்படிச் செய்யப்படாதவரையில் இங்கிலாந்து பாராளுமன்ற மக்கள் அவை, அதன் உறுப்பினர்களுக்குரியவைகளைப் போன்றவைகளாகும்.

இப்படிச் சொல்லப்பட்டுள்ளது அந்தப் பிரிவில். இதன் கருத்து என்ன? இடைக்கால மாற்றத்திற்கான ஒரு ஏற்பாடுதான் அது என்பது விளங்குகிறதல்லவா? இங்கிலாந்துப் பாராளுமன்ற விதிமுறைகள், இங்கு நாம் விதிமுறைகள் வகுக்காத வரையில்தான். வரையறுத்து விட்டால், அந்த முறைகள் இங்கே செல்லாதெனத் தெரிகிறதல்லவா?

இங்கிலாந்துப் பாராளுமன்றம் என்றால், அதன் வரலாறு நம் நினைவிற்கு வரும். அது வளர்ந்த கதைவேறு. நம் பாராளுமன்றம் பிறந்ததும், வளர்ந்ததும், வளர்வதும் முற்றிலும் மாறானது.

முடியாட்சியும் மக்களாட்சியும் இணைந்து நடந்திட வழி செய்யப்பட்டுள்ளது அங்கு. பிரபுக்கள் அவைக்கு அதிகாரம் மிகக் குறைவு. மக்கள் அவைக்கு சகல துறைகளிலும் அதிகாரம் உண்டு. இப்படி இன்று வளர்ந்துள்ள இதன் பழைய வரலாறு அறிந்திட சுவை ததும்புவதாக இருக்கும்.

இங்கிலாந்து வரலாற்றில், ஒவ்வொரு பாராளுமன்றத்திற்கும். ஒவ்வொரு பெயருண்டு. சிலவற்றை இங்கு காண்போம்.

கி. பி. 1258ல் கூடிய பாராளுமன்றத்திற்கு 'பைத்தியக்காரப் பாராளுமன்றம்' என்பது பெயர். இதில். உறுப்பினர், வாளோடு வந்து, அந்நிய ஆளோடு போரிட்டு வீரட்டினர்.

கி. பி. 1295ல் ஒரு பாராளுமன்றம் கூடிற்று. இதற்கு மாதிரிப் பாராளுமன்றம் என்று பெயர்.

ஒரு பாராளுமன்றத்திற்கு நல்ல பாராளுமன்றம் என்று பெயர். இது கி. பி. 1376ல் கூடிற்று.

கி பி.1529ல் கூடிய பாராளுமன்றத்தை, சீர்திருத்தப் பாராளுமன்றம் என்று அழைக்கப்பட்டது. இதில் மதச் சீர்திருத்தச் சட்டங்கள் எட்டாம் ஹென்றியால் நிறைவேற்றப்பட்டன.

கி. பி. 1614ல் குழம்பிய பாராளுமன்றம் கூடிற்று.

கி. பி. 1621ல் தான், பேச்சுரிமை பற்றி உரிமைப் போர் நிகழ்ந்தது. முதலாம் ஜேம்ஸ், பாராளுமன்றம் வெளியிட்ட எதிர்ப்பினைத் தன்கையினாலேயே கிழித்தெறிந்தான்.

கி. பி. 1640, ஏப்ரலில், குறைந்த காலப் பாராளுமன்றம் கூடிற்று.

அதே ஆண்டு. நவம்பரில், நீண்டகாலப் பாராளுமன்றம் கூடிற்று, இதில்தான், முதலாம் சார்லஸ், பிம் உள்ளிட்ட ஐந்து பாராளுமன்ற உறுப்பினரைத் தானே கைதுசெய்திட உள்ளே நுழைந்தான். உறுப்பினர்களோ, 'உரிமை, உரிமை' என்று கூவினர். மன்னனோ, 'பறவைகள் தப்பிவிட்டன' என்று திரும்பினான்.

மிகுதியானோர் பாராளுமன்றம், கிராம்வெல் காலத்தில், கி. பி. 1649ல் கூடிற்று. இதன்போக்குப் பிடிக்காமல், கிராம்வெல், அவைத் தலைவரை கீழே உருட்டிவிட்டு, உறுப்பினர்களை வெளியேற்றி அவையைப் பூட்டிச் சென்றான்.

சின்னப் பாராளுமன்றம் என்றொரு மன்றத்தை அழைத்தனர்.

பிறகு கி. பி. 1654, 1656ல் கூடிய பாராளுமன்றங்களைப் பாதுகாவலர் பாராளுமன்றங்கள் என்றனர்.

அரச விசுவாசிப் பாராளுமன்றம் என்று ஒன்றை அழைத்தனர்.

இப்படி, இங்கிலாந்துப் பாராளுமன்றம், வாளோடு தொடங்கி, வாயோடு முடிய பல நூற்றாண்டுகள் ஆகியுள்ளன. ஆகவே, இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு இணையாக, நாம் இயங்க இயலாது.

இந்தியாவில், தலைமை அதிகாரம், அரசியல் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள எந்த அமைப்பினிடத்திலும் இருக்க முடியாது. அரசியல் சட்டத்தினிடமே உள்ளது.

அதனால்தான், இந்திய ஜனாதிபதியும், கவர்னர்களும் மற்ற அரசியல் சட்டத்தால் ஏற்படுத்தப்படும் அதிகாரிகளும், பிரமாணம் எடுத்துக்கொள்ளும்பொழுது, அரசியல் சட்டத்தை நிலைநிறுத்தவும், காக்கவும், பாதுகாவல் புரியவும் உறுதியெடுக்கின்றனர்.

இந்திய அரசியல் அமைப்பு, கூட்டாட்சி அமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது, இதிலுள்ள அமைப்புகள் ஒன்றுக்கொன்று. மோதுதல் ஏற்பட்டால், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அமைப்பு இருந்து, வழிசெய்ய வேண்டும். அது. அரசியல் சட்டமேதான் இந்தியாவைப் பொறுத்த அளவில்.

இங்கிலாந்தில், பாராளுமன்றம், அதாவது மக்கள் அவைதான் தலைமையானது. இந்தியாவில் அரசியல் சட்டம்தான் தலைமையானது.

இங்கு, சட்டமன்றங்கள், எதை வேண்டுமானாலும் சட்டமாக்கி, அமுல் செய்துவிட முடியாது. அரசியல் சட்ட 3ம் பாகமான அடிப்படையான உரிமைகள், 4ம் பாகமான அடிப்படைத் தத்துவங்கள் இவைகளை மீறி எதனையும் செய்ய அரசியல் சட்டம் விடாது!

ஜனநாயத்திற்குச் சட்டஆட்சி அச்சுபோன்றது. அது எதேச்சாதிகாரத்திற்கு எதிரிடையானது.

இங்கிலாந்தில், பாராளுமன்றம் இயற்றும் சட்டம் எதுவானாலும், அது இயற்றப்பட்டு விட்டால், அங்குள்ள நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இங்கு அந்த நிலையில்லை. இயற்றப்பட்ட சட்டத்தையே,

அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று ஏற்றுக் கொள்ளாது தள்ளிவிட நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

○

இப்பொழுது. நாம் கண்ட முடிவுகளின் அடிப்படையில், உத்தரப்பிரதேசச் சட்டமன்றம், கேஷவ சிங் மீது பிறப்பித்த உத்தரவு சரியானதா, அதன்பின் நீதிபதிகள் மீது அவர்கள் பிரயோகித்த அதிகாரம் ஏற்றதா என பார்ப்போம்.

இங்கிலாந்துப் பாராளுமன்ற வரலாற்றில், இதற்கு நேரிணையான சம்பவம் நடைபெறவில்லை. பாராளுமன்ற முறைபற்றி எழுதியுள்ள எர்ஸ்கின் மேயோ முதல் அனைவரும், இதற்கு முடிவான ஒரு கொள்கை பாராளுமன்ற நடவடிக்கையில் கிடைக்கவில்லை என்றே கூறுகினறனர். ஆகவே, நாம் அரசியல் சட்டப் பிரிவு 194(3)ன் கீழ், சட்டமன்றம், இப்படிப்பட்ட உரிமை பெற்றுள்ளது என்று எப்படிக் கூறமுடியும்?

இங்கிலாந்திலோ, மன்னரின் ஆதரவிலிருந்த நீதிமன்றத தலையீட்டைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்துப் போரிட்டுவந்தனர். பிறகோ, கி. பி. 1689ல் ஏற்பட்ட உரிமைச்சட்டம் 1701ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட் சட்டம் ஆகியவைகளுக்குப் பிறகு, நிலைமை மாறிற்று. முடிவு, இரண்டும் ஒன்றின் உரிமையில், ஒன்று தலையிடாத நிலை பொதுவாக நிலவிவருகிறது.

இங்கிலாந்தில், மக்கள் அவை, உத்திரவுகள் கோர்ட்டாரால், ஹேபியஸ் மனுமூலம் ஆராயாமல் விடப்பட்டு வருவது, சட்ட அடிப்படையில் அல்ல, சம்பிரதாய அடிப்படையிலாகும், அதுவும் சட்டமன்றம், ஆதாரங்களின் தொகுப்பு நீதிமன்றம் என்ற அடிப்படையில்தான் இப்படி நடந்துகொள்ளப்படுகிறது.

இந்த உரிமையை, இந்தியாவில் சட்ட மன்றம் கோர இயலாது. ஏனெனில், அது, ஆதாரத் தொகுப்பு நீதி மன்றம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆகவே, சட்ட மன்றத்தார் கோரும் உரிமைகளை, நீதி மன்றததார் பரிசீலிக்க அதிகாரம் பெற்றவர்கள், இங்கு. இந்திய அரசியல் சட்டம் அதற்கு வழிவகுக்கிறது,

194(3)ல் சொல்வது, 'இதில் சொல்லப்படாதவைகளில்' என்றே தொடங்குகிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைபற்றி (1) (2)களில் சொல்லப்பட்டுள்ளன. ஆகவே உத்தரப்பிரதேச சட்டமன்றம் கோரும் உரிமை, அரசியல் சட்டத்திற்கு முரணானது.

இந்தியாவில், நீதி மன்றம், சட்டமன்ற நடைமுறை விதிமுறைகளில் தவறு ஏற்பட்டால் விவாதிக்க முடியாது. பிரிவு 212 இப்படிச் சொல்கிறது, ஆனால நேர் எதிரிடையாக, நீதிபதிகளின் நடவடிக்கைபற்றிப பாராளும் அவைகளில் விவாதிக்கக்கூடாது என்று பிரிவு 121, 211 ஆகியவை திட்டவட்டமாகத் தடைவிதிக்கினறன. அதுவும், ஒரேஒரு சந்தர்ப்பத்தில் விவாதிக்கலாம். ராஜ்ய சட்டமன்றத்திற்குக்கூட அந்த அதிகாரம் இல்லை. பாராளுமன்றத்தில், ஒருநீதிபதியைப் பதவியைவிட்டு நீக்கவேண்டும் என்று ஜனதிபதிக்குக் கோரிக்கை விடுக்கும் தீர்மானத்தின்பேரில் விவாதிக்கலாம் என பிரிவுகள் 124, 127 கூறுகின்றன,

சட்ட மன்றம், நாட்டின் நிர்வாகத்தை, நன்முறையில் நடத்த, தடையில்லா உரிமை பெற்றதாக இருக்கவேண்டும். இது தவறு என்று கூறமுடியாது. ஆனால், அது, அரசியல் சட்ட விதிமுறைக்கே விரோதமான முறையில் உரிமை கோருவதை அனுமதிக்க முடியாது,

ஆகவேதான், அரசியல் சட்டம், சட்டமன்றம், சட்டம் செய்யவும், மந்திரிகள் நிர்வாக மன்றம், நிர்வாகம் புரியவும், நீதிமன்றம், சட்டங்களுக்கு மக்கள் மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு விரோதமாக எந்தச் சட்டமும் இயங்காமலிருக்க விளக்கம்தரவும் வழி செய்கிறது. இவை ஆற்றும் பணிகளில், எங்கேனும், சந்தேகம் ஏற்படுமானல் நீதிமன்றம் அரசியல் சட்டத்திற்கு விளக்கமளிக்கும் கடைசி அதிகாரத்தைப் பெற்று விளங்கும்.

பெரியார் யார் என்ற கேள்விக்கு, இப்பொழுது விடை கிடைத்துவிட்டது,

தனித்தனியே மக்கள் மன்றத்தார், சட்டமன்றத்தார் நீதி மன்றத்தார் மூவருமே பெரியார்தான்.

ஆனல் அவர்களை, அவரவர் இடத்தில், நிலையில், பணியாற்ற வைப்பவர், அரசியல் சட்டத்தை ஆக்கியோர், அதாவது மக்கள் மன்றத்தார்.

எனினும், அரசியல் சட்டம் பற்றியே ஐயம் எழுமானல், அதனைத் தெரிவிக்கும் பெரியார், நீதி மன்றத்தார் தான். ஆகவே, இந்தியச் சட்ட அமைப்புப்படி, பெரியாருக்கெல்லாம் பெரியார், நீதி மன்றத்தாரே!

●

குறைந்த கட்டணத்தில்
சிறந்த பயிற்சி!

★

அணுகவும்:

J. S. மணி
மோட்டார் டிரைவிங் ஸ்கூல்

★

பக்கிரி சாயபு தெரு,
சென்னை-5.

## ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை

உரிமையாளர்

**M. அமீர்பாட்சா**

மதறஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்

54, சோலைஹால்ரோடு * திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

**'கருங்குரங்கு ரஸாயனம்'**

மற்றும்

**'மதுகாசவம்'**

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

---

## வழக்கறிஞர்
## தில்லை வில்லாளன்
### நூல்கள்.

| | |
|---|---|
| காதல் சக்கரம் | 1—50 |
| GONE WITH THE WIND | 2—00 |
| பட்டமரம் | 1—50 |
| திரை | 1—00 |

வியாபாரிகளுக்கு 25 சதவீதம் கழிவு உண்டு.

விபரங்கட்கு:—

**தம்பி வெளியீடுகள்,**

சிதம்பரம்.

---

நமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

கலைகள் சிறந்த காஞ்சியில்!

கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்

**பட்டுச் சேலைகள், நூல் & மில்**

ஜவுளிகள் வாங்க சிறந்த இடம்

தொலைபேசி எண்: 259

இல்லம்: 65

# கற்பகம் & கோ,

பட்டு, நூல் & மில் ஜவுளி வியாபாரம்

**177, காந்திரோட், காஞ்சிபுரம்.**

# மொழியும் வாழ்க்கை வழியும்



முகஸ்துதி
ஸ்தோத்திரம்
அர்ச்சனை
ஆராதனை
அபிஷேகம்

இவை தமிழ்ச் சொற்கள் அல்ல, வடமொழிச் சொற்கள் என்று எடுத்துக் காட்டுவதே கூட தேவையற்றதாக, தீது பயப்பதாக உள்நோக்கம் கொண்டதாகக் கருதப்பட்டு வந்த நாட்களும் உண்டு இந்தப் போக்கு 'வகுப்பு வாதம்' என்று கண்டித்திடுவதில பலர் முனைந்துநின்றனர். அந்தப் போக்கினரே இன்று 'மருந்துக்'குககூட இல்லை என்று கூறிவிட முடியாது. அத்தகையோரின் தொகை குறைந்து விட்டிருக்கிறது. வேகம் மட்டுப்பட்டுப் போய்விட்டிருக்கிறது.

சுவாமி வேதாசலம் என்ற தமது பெயரை மறைமலை அடிகள் என்று தனித் தமிழாக்கிக் கொண்டபோது எழுந்ததுபோன்ற கசப்புணர்சசியும் கோபப் புயலும், 'அமைசசர்'—'மனறம்' — 'கழகம' — பொறியியல் — 'பல்கலைக் கழகம்'—வேட்பாளர்—என்ற தமிழ்ச் சொற்கள் தரப்பட்ட போது எழவில்லை.

சுவாமி வேதாசலம், மறைமலை அடிகளானது மட்டுமல்ல, நடைபெற்ற நிசழ்ச்சி, சூரியநாராயண சாஸ்திரியார் பரிதிமாற் கலைஞா ஆனதும நடைபெற்றது.

தனித் தமிழச் சொற்களைக் கண்டறிந்து பயன்படுத்தத் தொடங்கிய கட்டததிலிருந்து அதன் தொடர்பான அடுத்த கட்டம் சென்றிட முனைவதும், துவக்கத்தில் 'என்னமோ' போல தோன்றினாலும, நாளாவட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிடும் என்பதிலே எள்ளளவும் ஐயமில்லை.

தனித் தமிழ்ச் சொற்கள், சில பொருள்களுக்கு, சில நிலைமைகளுக்கு. சில முறைகளுக்கு இல்லை என்பது, தமிழ் மொழியின் வளமற்ற தன்மைக்கு எடுத்துக் காட்டு அல்ல, தமிழருடைய எணணக களஞ்சியத்தில், அந்தப் பொருள்கள், நிலைமைகள். முறைகள் இருந்திடவில்லை என்பதற்கான விளக்கமேயாகும. பெங்குவின் (Penguin) எனும் பிராணிக்குரிய சொல தமிழ் மொழியிலே இல்லை என்பதால், தமிழ் மொழியும் தாழ்ந்துவிடாது, பெங்குவினும் உயர்ந்துவிடாது.

தமிழர்க்கு உரியனவற்றினை உணர்த்தப் போதுமான சொலவளம் தமிழ் மொழிக்கு உண்டு என்பதற்குச் சான்றுகள் நிரம்ப.

தமிழ் மொழியிலே மற்ற மொழிகள் சிலவற்றிலே காணக் கிடக்கும் சில சொறகள் இல்லை என்பதற்குக் காரணம், தமிழர்க்கு அவை தேவைப்படவில்லை எனபதாக இருக்கக்கூடும; இருக்கவேண்டும என்றே கூறலாம்.

வேற்று மொழிகளில் உள்ள சில சொற்கள் என்ன பொருளை, அல்லது முறையை; அல்லது தன்மையைக் குறித்திடுகிறதோ அதே பொருள், முறை, தன்மை தமிழர்க்கும உரித்தானதாக இருந்திடுமபோதும், அவைகளுககான தனித் தமிழ்ச் சொற்கள இருந்துவந்திருக்கின்றன. ராஜாவுக்காக மனனன் இருப்பதும் சபைககாக அவை இருப்பதும் நட்சத்திரத்துக்காக விண்மீன் இருப்பதும், அறிகிறோம்.

ஆகவே தமிழ்ச் சொற்களால் குறிப்பிடப்பட முடியாதன யாவுமே தமிழகத்தில் இருந்ததில்லை என்றும் முடிவு செய்துவிட முடியாது. சில, தமிழர்க்கே உரியன எனற நிலையின! சில தமிழர்க்கும் பிற மொழியாளர்க்கும் உரியன. சில தமிழர்க்கு உரியன அல்ல, பிறமொழியாளர்க்கு உரியன!

'உரியன' என்று குறிப்பிடும்போது, தகுதி, பயன் ஆகிய எதனையும் குறிப்பிலே கொள்ளவில்லை.

தகுதி கருதியும் பயன் கருதியும், தமிழரல்லாதாரிடமிருந்து பெறபபடத தக்கனவற்றைத தள்ளிவிட வேண்டும் என்ற வரட்டுப் போக்கு தேவையிலலை. எங்கு கிடைப்பினும், எவரிடமிருந்து பெறப்படுவதாயினும், எம்மொழியில உளதெனினும், பயன தரத்தக்கதெனின் கொள்ள வேண்டும். ஊரகோடியில் உள்ளது, நமது இல்லத்துக் கொலலையிலே அலல என்பதாலே ஆறு சென்று நீராடா திருத்தல் அறிவாளர் மேற்கொள்ளத்தக்க போக்கு அல்ல. ஆனல் ஆறு அழகாக ஓடிககொணடிருக்கும் நிலையில், இலலத்திறகு ஆள அனுபபி கிணற்று நீரைக் கொண்டு வரச் செய்துதான குளிப்பேன்—எனஇல்லத்துக் கிணற்று நீரன்றி பிறிதோர் நீர் வேண்டேன் என்று கூறுவது அறியாமை.

மன்னன் என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'ராஜா' என்ற வடமொழிச் சொல் இருப்பதுபோல, வேறு பல தமிழ்ச் சொற்களுக்கு ஒப்ப வடமொழிச் சொறகள் உள்ளன எனபது, இரு வேறு மொழியினரும் ஒரு சேர அச்சொற்களுக்கு உரிய பொருளையோ. நிலையையோ, முறையையோ கொண்டிருந்தனர் என்பதனை விளக்கிக் காட்டுகிறது.

அந்த முறைப்படி, வடமொழிச் சொல்லான 'முகஸ்துதி' என்பதற்கு ஒப்பான தமிழ்ச் சொல் உண்டா என்று எண்ணிப் பார்ப்பது சுவையும், பயனும் தரத்தக்கது. மொழிப் புலவர்கள் இதுபற்றிய கருத்தறிவித்திடலே பொருத்தமாக இருக்கும்.

பொதுவாகப் பேசும்போது. அந்த முகஸ்துதி எல்லாம் என்னிடம் வேண்டாம் என்றும், உன் முகஸ்துதியிலே மயங்குபவன் நான் அல்ல என்றும், குறிப்பிடுகிறார்கள். 'முகஸ்துதி' என்பது வேண்டப்படாதது, தேவைப்படாதது, தரம் குறைந்தது என்ற எண்ணம் கொண்டே, 'இந்த முகஸ்துதி வேண்டாம்' என்று கூறுகிறார்கள்.

'முகஸ்துதி'—மயக்கமூட்டத் தக்கது, என்ற கருத்தும் அந்தப் பேச்சிலே தொக்கி நிற்கிறது.

இந்த 'முகஸ்துதி' என்பதும் புகழ்தல்—பாராட்டுதல்—என்பன போன்ற தமிழ்ச் சொற்களும் ஒரே பொருளுடையனவா என்பதுபற்றி எண்ணிப் பார்ப்பதும் சுவையும் பயனும் அளித்திட வல்லதே,

'முகஸ்துதி' எதையோ எதிர்பார்த்து மேற்கொள்ளப்படுகிறது என்பதும், முழு உண்மையை அடிப்படையாகக் கொண்டு கூறப்படுவது அல்ல, மகிழ்ச்சி ஊட்டிடத்தக்க இனிப்பினைக் கூட்டித் தந்திடும் முறை என்றும் அறிகிறோம்.

புகழ்தல்—பாராட்டுதல் — வியந்துரைத்தல்—என்று கூறிடும்போது, 'முகஸ்துதி' என்கிற சொல்லைக் கேட்டதும் எழுகிற விதமான எண்ணம் எழக் காணோம்.

ஏனப்பா புகழ்கிறாய்? என்று கேட்பது, எதற்காக இந்த முகஸ்துதி? என்று கேட்டிடுவதற்கு ஒப்பானதாகத் தோன்றவில்லை. ஏன் இந்த முகஸ்துதி? என்று கூறும்போது பெறப்படும் கருத்தின் முழு அளவினைப் பெற வேண்டுமானால் ஏன் புகழ்கிறாய் என்று அல்ல, ஏன் இந்த வீண் புகழ்ச்சி? எனறு கூறிடவேண்டி வருகிறது. இதிலிருந்து 'முகஸ்துதி' என்பதற்கு, வீண் புகழ்ச்சி என்று தமிழில் கூறிடலாம் என்று தோன்றுகிறது. ஒரு 'அடைமொழி' சேர்த்துக்கொள்ள வேண்டிவருகிறது.

ஒருவர் மற்றொருவரைப் பற்றி வேறொருவரிடம் புகழ்ந்து பேசலாம்; ஆனால் 'முகஸ்துதி' அவ்விதம் அல்ல; ஒருவர் மற்றொருவரிடம் அவரைப பற்றியே 'ஸ்துதி' பாடிட வேண்டும். இது ஒரு நுண்ணிய வேறுபாட்டினை எடுத்துக் காட்டுகிறது.

இது குறித்து இவ்வளவு ஏன் கிளறவேண்டும் என்று கூடத் தோன்றும். ஆனால் இதிலே தெளிவு ஏற்படுவது பயன் அளிக்கத்தக்கது.

தமிழ் மரபு புகழ் ஈட்டிடல்—இசைபட வாழ்ந்திடல். அஃது பண்புகளிலே ஒன்று; வாழ்க்கையில் கொள்ளத்தக்க குறிக்கோளில் ஒன்று. எனவே புகழ் பெற்றிட முனைவதும், பெறும்போது மகிழ்ச்சியில் திளைப்பதும், புகழ் ஈட்டிட வேண்டுமெனப் பிறர்க்கு உரைப்பதும், தமிழர் கொண்டிடத்தக்க நெறி.

அந்தப் 'புகழ்' பெறும்போது, 'முகஸ்துதி' என்பதும் 'புகழ்ச்சி' என்பதும் முழுக்க ஒன்றல்ல என்ற நினைவு இருந்திடவேண்டும் என்பதை வலியுறுத்தவே, புகழ்ந்துரைத்தல்—முகஸ்துதி எனும் இருவேறு மொழிச் சொற்களும், இருவேறு மொழிகளை மட்டுமல்ல, இருவேறு முறைகளைக் குறிக்கின்றன என்பதனை விளக்கவேண்டி வருகிறது.

புகழ் பெற்றிட வேண்டும், அந்த நோக்கத்துடன் வாழ்வின் முறை அமையவேண்டும்;

தோன்றிற் புகழொடு தோன்றுக!

என்றல்லவா வள்ளுவர் கூறியிருக்கிறார். தமிழர் முயன்று பெறவேண்டிய புகழ் என்பதற்கு உரிய தனித் தன்மையிலிருந்து, தரத்திலிருந்து இழிந்து 'முகஸ்துதி' எனும் நிலைக்குச் சென்றுவிடக்கூடாது என்பது குறித்து மறவாதிருக்க வேண்டியதும், புகழ்பெற முயற்சிப்பது போலவே தேவையானதாகும், முக்கியமானதாகும். நிலத்தைக் குடைந்திடுவது, நெளியும் புழுக்களைப் பெறவா? இல்லையல்லவா! அதுபோன்றே புகழ் ஈட்டிடும் பொறுப்பான முயற்சியில், 'முகஸ்துதி' எனும் நச்சு நிலை குறுக்கிடாதபடி பார்த்துக்கொண்டாக வேண்டும்.

பிறர் புகழ்ந்திடக் கேட்டிடல் என்பதற்கும் பிறருடைய 'முகஸ்துதி'யில் சுவை காண்பது என்பதற்கும் நிரம்ப வேறுபாடு இருந்திடினும், அது குறித்து கவலைப்படாமல், புகழ் பெறுவதாக எண்ணிக்கொண்டு, 'முகஸ்துதி'யைப் பெற்று மகிழ்வது, நலன் அளித்திடாது,

ஆனால் பிறர் தம்மைப் பாராட்ட வேண்டும், புகழ்ந்துரைத்திட வேண்டும் என்ற நினைப்பு கொள்ளாத மாந்தர் இல்லை என்று கூறிவிடலாம்; அஃது தவறானதுமல்ல; தேவைப்படுவதெல்லாம், புகழ்ந்துரைப்பது என்பதற்கும் 'முகஸ்துதி' என்பதற்கும் ஒரேவகையான பொருள் இல்லை என்பது பற்றிய தெளிவுதான்.

'புகழ்' மயக்கமூட்டாததாக, எதனையும் எதிர்பார்த்துச் சொல்லாததாக, எந்தவிதமான தொடர்பும் அற்ற நிலையிலேயும் கூட மகிழ்ந்து உள்ளுணர்வுடன் கூறப்படுவதாக அமைதல் வேண்டும். உள்ளத்தைத் தொடும் இசை, ஓவியம், கேட்டும் கண்டும் வியப்படைகிறோம். அந்தக் கலைஞர்களைப் புகழ்ந்து பேசுகிறோம், அவர்களிடம் நேசத் தொடர்பு அற்ற நிலையில்கூட, எந்த ஒரு பொருளையும் அவர்களிடம் பெறாமலே, எதிர்பார்க்காமலே கூடப் புகழ்ந்து பேசுகிறோம், ஏனெனில், அவர்கள் நமக்கு இனித் தரவேண்டியது என்று ஒன்று இல்லை, ஏற்கனவே அவர்கள் தமது திறனைக் காட்டி நமது உள்ளத்துக்கு 'உவகை' அளித்துள்ளனர்; அதிலே மலர்ந்த மகிழ்ச்சியில் நாம் அவர்களைப் பாராட்டுகிறோம், மகிழ்கிறோம்.

விண்வெளியை வட்டமிடும் வித்தகர் குறித்துப் புகழ் பாடுகிறோம்; நமக்கும் அவர்கட்கும் என்ன தொடர்பு! ஒன்றுமில்லை! எனினும் அவர்கள் பெற்ற ஆற்றல்மிகு வெற்றியால் அவனிக்குப் பயன் கிடைத்திட இருக்கிறது என்ற எண்ணம் நமக்கு ஓர் மகிழ்ச்சியைத் தருகிறது, புகழ்ந்திடத் தோன்றுகிறது.

மேலதிகாரியின் எழுத்துத் திறனைப் புகழ்ந்து அவருடைய 'புன்னகை'யை அச்சாரமாகப் பெற்றிடுவது, முகஸ்துதி.

மேலதிகாரியின் திறமையைப் பற்றி வேறோரிடத்தில் பேசி மகிழ்வது, புகழ்ந்துரைத்தல்— அந்த வேறோரிடம் மேலதிகாரிக்கு அஞ்சல் துறையாக இருத்தலாகாது!!

தனித் தமிழ் என்பதிலே ஆர்வம் காட்டுவதன் மூலம் மொழித் தூய்மை பெறுவது மட்டுமல்ல, தமிழரின் நெறியை அறிந்துகொள்ளவும் இயலும்; மொழி, எண்ணுவதை எடுத்துரைக்கும் கருவி மட்டுமல்ல, எண்ணத்தை உருவாக்கும் கருவியுமாகும். மொழி மூலம் அம்மொழியாளரின் வாழ்க்கை வழியையும் உணர்ந்திட முடியும். தமிழரின் நெறியை நன்கு உணரத் தமிழ்மொழி—தனித் தமிழ்—நிச்சயமாகப் பயன்படும்.

# சீரழித்த சிரிப்பு!

மு. கருணாநிதி



"இளவரசே! தங்களது கரம் பிடிக்கப்போகும் கரோலின் இளவரசி, கடல் மார்க்கமாய் ஜெர்மானியத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் கப்பல் கவிழ்ந்தது போல் கவலையாய்—மனமொடிந்துஉட்கார்ந்திருக்கிறீர்களே!'

"மனம் ஒடிந்துதான் போயிற்று! உடல் தளர்ந்துதான் போயிற்று; இளவரசியின் வருகை அறிந்து!"

"ஏன், கரோலின் இளவரசிக்கு அழகில்லையா?"

"இருக்கலாம். அவள் அழகு தேவதையாக இருக்கலாம். ஆனால் நண்பா, எப்போதுமே திணிக்கப்படுவது ஜீரணிக்கப்படுவதில்லை."

"என்ன: புரியவில்லையே"

"நான் தனிப்பட்ட முறையில் கடன்காரனும்; என் கடனைத் தீர்க்க ஜெர்மன் நாட்டுப் பணக்காரியான கரோலினை நான் ஏற்க வேண்டுமாம் குறையையும் சுட்டிக் காட்டி பளுவையும் சுமத்தும்போது மனம் ஒடிந்து விடுகிறது."

"கரோலின் உங்களுக்கு நெருங்கிய சொந்தம் என்கிறார்களே..."

"நெருங்கிய சொந்தத்திலிருந்து தானே மிகப் பெரிய தகராறுகள் முளைக்கின்றன."

வேல்ஸ் இளவரசரின் இந்தப் பதிலைக் கேட்டு அவர் நண்பன் இடிந்து போனான்.

"சரி; கரோலினை வரவேற்பதற்குரிய வேளை நெருங்கிவிட்டது. விழாவுக்குரிய ஆடைகளை அணிவிக்கட்டுமா?"

"ம்! உடல் இருக்கிறது; அழகுபடுத்து! உள்ளம் தனியாக இருக்கட்டும்; அதை அழவிடு!"

*

"சாரட்டு வண்டி வந்து நின்றது' வெள்ளையுடை அணிந்து அதற்கேற்ற வண்ண மேலாடை பூண்டு, அளவுக்கு மீறிய கலகலப்பான சிரிப்புடன் கரோலின் இறங்கினாள். வேல்ஸ் இளவரசருக்கு அருகில் வந்ததும் முழங்காலிட்டு வணங்கினாள்.

"எழுந்திரு அன்பே!" என்று உணர்ச்சியற்ற சொற்களை உதிர்த்த இளவரசர், அவளைத்தூக்கி மார்போடு அணைத்து வரவேற்றார். பிறகு, தனது தனியறை நோக்கி வேல்ஸ் இளவரசர் நடைபோட்டார்.

"எனக்குக் காட்டிய படத்தில் இருப்பதுபோல் இளவரசர் நேரில் பார்க்கும்போது அவ்வளவு அழகாக இல்லையே; பரவாயில்லை — அழகு இல்லாவிட்டால் என்ன? அவர் அன்பு செலுத்தினால் நான் அன்பு செலுத்துவேன். பிறகு சரியாகப் போய் விடும்...ஹி...ஹி...ஹி!"

என்று சிரித்தாள் கரோலின் இளவரசி. அரச குடும்பத்திற் கேற்ற சிரிப்பாக அது இல்லாதது கண்டு அரண்மனைத் தோழிகள் திகைத்தனர்.

"இளவரசி! இன்று இரவு விருந்துக்கு நீங்கள் தயாராக வேண்டும்" என்றாள் தோழி.

"விருந்தா? எனக்கு ரொம்பப் பிடிக்கும். சாப்பாட்டை நான்சொல்லவில்லை. அந்த பல்வேறு பெரிய மனிதர்கள் வருவார்கள் அல்லவா? அவர்களிடம் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்குமே! ஹி! ஹி! ஹி!"

"இளவரசியை விடப் பெரிய மனிதர்களா? இது என்ன விசித்திரமான பேச்சு!" திடுக்கிட்டுப்போன தோழி, கரோலினுக்கு விருந்து உடை அணிவித்துக்கொண்டே, மெள்ளச் சொன்னாள்;

"அரண்மனைப் பணிப் பெண்களே அதிகம் சிரிக்காமல் அடக்கமாகப் பழகும்போது, அரசாளப்போகும் வேல்ஸ்இளவரசரின் வருங்கால மனைவி, இப்படி எதற்கெடுத்தாலும் சிரிப்பது நல்லதல்லவே!" என்று!

அதற்கும் ஒரு ஹிஹிஹி...தான் கரோலின் இளவரசியின் பதிலாக இருந்தது.

வேல்ஸ் இளவரசர், மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் புதல்வர். கரோலின் தந்தை வழியில் சொந்தக்காரி. சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்தாள். அவளது நடையுடை பாவனைகளும் அர்த்தமற்ற பல் இளிப்பும், அரசருக்கும் அரசிக்கும் மனவேதனையைத் தந்தன. எனினும்; எப்படியும் மருமகளாகப் போகிறவள் என்ற ஆசையில் அவளைத் திருத்துவதற்கான எல்லா வழிகளையும் கையாண்டுப் பயிற்சிகளை அளித்தனர். முடிவில் திருமணமும் முடிந்தது. கரோலின், விரைவில் ஒரு குழந்தைக்கும் தாயானாள். குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டதும் வேல்ஸ் இளவரசர், மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார்.

"அப்பாடா! அவளை மணந்ததால் எனது தனிப்பட்ட கடன் தீர்ந்தது. குழந்தை பிறந்ததால் என் பெற்றோர்க்கு நான் செலுத்த வேண்டிய கடனும் தீர்ந்தது. இனி நான் பிரம்மச்சாரி" என்று தனது அருகிலிருந்த ஆசைநாயகியின் அதரபானம் அருந்திக் களித்தார் இளவரசர். கணவனும் கரோலினைக் காண்பதில்லை; குழந்தையையும் அரசி, தனிப்பட்ட முறையில் தன் பார்வையில் வளர்க்கத் தொடங்கிவிட்டாள். எடுத்ததற்கெல்லாம் சிரிப்பைக் கொட்டிக் கொண்டிருந்த கரோலின், வேதனைச்

## முகப்பில்:

செங்கரும்பைச் சுவைக்கின்ற சேயும் தாயும்
செய்திதரும் திரைக்காட்சி தன்னில், எல்லை
வெங்கொடுமை வீழ்த்துகிற வீரர்க் கெல்லாம்
விருந்திட்டு, வீரத்தை வித்தி விட்டுப்
பொங்கலிடும் இன்பத்தால் புன்மை போக்கும்
புதுக்காட்சிப் படைக்கின்ற ஓவி யத்தைப்
''பொங்கல் மலர்'' இவ்வாண்டு ஏந்தி, ''காஞ்சி''
பொலிகிறது! போற்றுதலும் கடமை யன்றோ!

சிலையானாள். ஒரு நாள், இளவரசர். "உன்னை எனக்குப் பிடிக்கவில்லை" என்று எழுதியே கொடுத்துவிட்டார். தனி மாளிகைக்குக் குடியேறினாள் கரோலின். அப்போது அந்தச் சிரிப்பும், அவளோடு சேர்ந்து அங்கு குடியேறிவிட்டது. அதன் காரணமாக அவள்மீது அபவாதங்கள் சுமத்தப்பட்டன. பிரபுக்கள் சிலருடன் கொஞ்சி மகிழ்கிறாள் என்று செய்தி பரவிற்று. அதுகேட்ட மன்னர், அதற்கான ரகசிய விசாரணை யொன்றை நடத்தினார். செய்திகள், வீண்பழிகள் என்று விசாரணையின்போது வெளியாயிற்று. மனம் நொந்த கரோலின், வெளிநாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டாள், ஆறுதலுக்காக! அப்போதாவது அந்தச் சிரிப்பை விட்டு விட்டுப் போகக் கூடாதா? அழைத்துக் கொண்டே போனாள். முன்போலவே பழிவீசும் படலங்கள் தொடர்ந்தன. அவள் வெளி நாட்டில் இருந்தபோது, மூன்றாம் ஜார்ஜ் மன்னர் மறைந்து விடவே, வேல்ஸ் இளவரசர், இங்கிலாந்தின் மன்னராக முடிசூட்டிக் கொள்ள, ஏற்பாடுகள்நடைபெற்றன. இதனைக் கேள்வியுற்ற கரோலின், இங்கிலாந்துக்குத் திரும்பினாள். தங்கள் வருங்கால ராணியை வரவேற்க மக்கள் தயாரானார்கள். அதிகாரிகள் சிலர், அதற்கான மரியாதை குண்டுகளைக்கூட வெடித்தனர்.

அன்று, பாராளுமன்றத்தில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர், ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்தார்...

"கரோலின் இளவரசி, வெளிநாடு சென்றிருந்தபோது, அவரது நடத்தைகள் நாட்டுக்கும் நமக்கும் வெட்கத்தை உண்டாக்கக் கூடியவைகள். எனவே கரோலின் அரசியாகாமல் தடுப்பதற்காக, அரசி பற்றிய உரிமைச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென அரசர் ஆணை பிறப்பித்திருக்கிறார்."

என்று அமைச்சர் விளக்க முறைத்தார். அதற்கு மறுப்பு எழவே, கரோலினை விசாரணை செய்யப் பாராளுமன்றத்திற்கு அழைத்தனர். டென்மான், என்ற வழக்கறிஞர் கரோலின் சார்பில் வாதாடினார். இளவரசியின் முன்னாள் சமையற்காரன் தியோடார் மசோச்சி என்பான், அவளுக்கெதிராக, அவள் இதாலியில் பெர்காமி என்பவனுடன் சல்லாபம் நடத்தினாள் என்று சாட்சியம் கூறினான். அதுபற்றிய பல கேள்விக்கணைகளுக்கு அவன் பதில் அளிக்க முடியாமல் "எனக்கு நினைவில்லை" என்று மழுப்பினான். புரோகாம் என்ற உறுப்பினரின் சொல்லாற்றலால் அரசாங்கச்சட்டத்திற்கு ஆதரவு குறைய ஆரம்பித்தது. நிலையைப் புரிந்துகொண்ட பிரதமர் லிவர்பூல், சட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

உடனே, கரோலின், பிரதமர் மூலமாக ஒரு கடிதம் எழுதினாள்.

"அரசர் பட்டம் சூடும் நேரத்தில், ராணி எந்த உடையில் வரவேண்டும்? அரசர் எந்த உடையை விரும்புகிறார்?" என்பதே அக்கடிதம். அரசர் சார்பாக ஒரு பதில் வந்தது "தற்போதுள்ள சூழ்நிலையில், விழாவில் அரசிக்கு எந்த இடமும் தருவதற்கில்லை" இதைக்கண்டும் கரோலின் சோர்ந்து விடவில்லை. தன் கணவன், மகுடம் புனையும் காட்சியை எப்படியும் பார்க்கிற பாக்கியமாவது தனக்குக் கிடைக்க வேண்டுமென அவள் துடித்தாள்.

1821—ஆம் ஆண்டு, ஜூலை 19-ஆம் நாள்! புத்தாடை அணிந்து, அரசி கரோலின், மகுடாபிஷேக மண்டபத்திற்கு, சாதாரண பார்வையாளர்கள் இருக்கும் இடம் நோக்கி வந்தாள்.

"அம்மையாரே! நுழைவுச் சீட்டு இருக்கிறதா?" காவலன், தடுத்துக் கேட்டான். திடுக்கிட்ட கரோலின் கலகலவெனச் சிரித்து விட்டாள். அப்போதும் இயல்பு போகவில்லை. "நான்யார் தெரியுமா?" என்றாள்.

"தெரியும்; நுழைவுச்சீட்டு இல்லாத பெண்!"

உடனே அங்கிருந்த ஒரு பிரபு: "ஏய்! வாயை அடக்கு! மன்னரின் மகுடாபிஷேகத்திற்கு அரசி, அனுமனுச்சீட்டு வாங்கியதைப்பற்றி எப்போது கேள்விப்பட்டிருக்கிறாய்?" என்று சினத்தைக் கக்கினார்.

தன் கதி இப்படி ஆகிவிட்டதே என்று வாய்விட்டுக் கோவென அழுது விட்டாள் கரோலின்! அவள் இத்தனை நாள் சிரித்த சிரிப்புக்கெல்லாம் சேர்த்து அழுதாள். இதற்குள் அரசனிடமிருந்து ஒரு ஆணைச்சீட்டு அங்கு வந்தது. அதில்; "அரசியை அனுமதிக்காதே!" என்று குறிப்பிட்டிருந்தது.

"என்னை எல்லோரும் வாழவிடாமல் செய்து விட்டார்களே!" எனப் புலம்பிக்கொண்டே, கரோலின் மாளிகைக்கு ஓடி, படுக்கையில் விழுந்தாள். பிறகு எழவே இல்லை. அவளை வாழவிடாமல் செய்த அந்த அர்த்தமற்ற சிரிப்பு; அவளுக்கு முன்பே அவளிடம் விடை பெற்றுக் கொண்டது.

o



# அடிமைகள்

சி. பி. சிற்றரசு

கணவனிடமிருந்து மனைவியையும், தாய்தந்தையர்களிடமிருந்து குழந்தைகளையும் பிரித்து மற்றவர்களுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கொண்டு போவதைக் கண்டு அவன் மனம் கொதித்தெழுந்தது.

‘எல்லோரும் பிறப்பால் சரிநிகர் சமானமானவர்கள் என்ற அடிப்படையிலேயே நம்முடைய நாடு எழுந்தது. ஆனால் இன்றோ, அடிமைகள், அன்னியர்கள், கத்தோலிக்கர்கள் ஆகியவர்களைத் தவிர்த்து மற்றவர்களெல்லாம் பிறப்பால் சரிநிகர் சமானமானவர்கள் என்று மாற்றிப் படிக்கின்றோம். இவ்வித நயவஞ்சகத் தன்மை நிலவக்கூடிய அமெரிக்காவைவிட்டு கலப்பற்ற கொடுங்கோன்மை நிலவும் ரஷ்யாவுக்கு நான் செல்ல விரும்புகின்றேன.

“ஜார் மன்னரிடம் அரசியல் அடிமைகளாயிருந்த நாம் நம்மை விடுதலை செய்துகொண்டபோது கூறினோம், ‘எல்லாரும பிறப்பால் சரிநிகர் சமானமானவர்கள்’ என்பது அசைக்க முடியாத ஆணித்தரமான உண்மையென்று; ஆனால் இன்றோ நாம் விடுதலை பெற்றபின், அடிமைகளாக்கப் படமாட்டோம் என்ற பயம் அற்றுப்போனபின் ஆதிக்க வெறியின் காரணமாக அந்தத் தததுவத்திற்கு எதிர்மாற்றமானது அசைக்க முடியாத ஆணித்தரமான உண்மை என்று கூறுகிறோம். ரஷ்ய ஜார்கூட முடிதிறந்து தன்னுடைய அடிமைகளை விடுதலை செய்தபோதிலும்கூட நம்முடைய கனதனவான்கள் அடிமைகளை விடுதலை செய்ய மாட்டார்கள் போலிருக்கிறது என்றதிலிருந்து தொடங்கி,

“எண்பத்தி ஏழு ஆண்டுகளுக்குமுன் நம்முடைய தந்தையர் சுதந்திரத்தில் திளைத்த எல்லோரும், சுகம் என்ற தத்துவத்திற்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தை இக்கண்டத்திற்குக் கொணர்ந்தனர். இப்பொழுது அந்த சமுதாயமோ, அவ்வித எண்ணங்கொண்ட, அல்லது அவ்விதம் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட வேறு எந்த சமுதாயமோ நீடித்து நிற்கமுடியுமா என்பதை சோதிப்பதற்கான ஒரு மகத்தான உள்நாட்டுப் போரில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த மாபெரும் போர்க்களத்தை நாம் சந்தித்திருக்கின்றோம். அந்த சமுதாயத்தை வாழ்விக்கத் தங்கள் உயிர்களைத் தியாகஞ் செய்தவர்களுக்கு அடக்க பூமியாக ஒரு நிலப்பகுதியை அர்ப்பணிப்பதற்காக இங்குக்கூடியுள்ளோம்; நாம் அதனைச் செய்வது தகுதியும் பொருத்தமுமான காரியமேயாகும்.

ஆனால் ‘பெரும்போக்’கில் பார்க்கும்போது நம்மால் அதனை அர்ப்பணிக்கவோ, புனிதப்படுத்தவோ அல்லது தூய்மைப்படுத்தவோ இயலாது. நம்முடைய அற்பசக்தியால் அதனுடைய தூய்மையைக்கூட்டவோ அல்லது குறைக்கவோ இயலாதபடி இங்கு போராடி உயிர் துறந்துக்கொண்டும், உயிர் வாழ்ந்துக்கொண்டும் இருக்கின்ற வீரர்கள் அதனைப் புனிதப்படுத்திவிட்டார்கள். இவ்வுலகமானது நாம் இங்கு கூறுபவைகளைக் கவனிக்கவோ அல்லது நீண்டகாலம் நினைவு கூறவோ செய்யாது ஆனால் அவர்கள் இங்கு செய்ததை ஒருபோதும் மறக்காது. இங்கு போராடிய அவர்கள் கண்ணியமான முறையில் செய்த அந்த முடிவுபெறாத வேலையை செய்து முடிப்பதற்கு உயிர் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம் நம்மையே அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். இறந்துபட்ட அந்த கௌரவமிக்க பெருமக்கள் எந்த லட்சியத்திற்காகத் தங்கள் கடைசி மூச்சையும் செலவழித்தார்களோ அந்த லட்சியத்தை அடைவதற்கு அவர்களைவிட நாம் அதிக அக்கறை செலுத்துவதற்காகவும், இறந்து போன அவர்கள் வீணாக இறந்துவிடவில்லை என்றும் இறைவனின்கீழுள்ள இந்த சமுதாயமானது சுதந்திரத்தின் புதுஜனனத்தைப் பெறுமென்றும், மக்களுடைய –மக்களுக்காக வேண்டி, மக்களால் நடத்தப்படும் இந்த அரசாங்கம் இம்மண்ணிலிருந்து ஒருபோதும் அழியாது என்றும் உறுதி எடுத்துக்கொண்டு நம்முன் நிற்கும் மகத்தான காரியத்தைச் செய்துமுடிக்க, நம்மை நாமே அர்ப்பணித்துக்கொள்வோமாக”

என்ற அளவில் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம்லிங்கன் வாழ்வு முடிந்தது.

அவர் வாழ்வு முடிவதற்கு ஒரு கொடியவன் வில்லியம் பூத் காரணமானான். அதன் காரணமென்ன?

ஆப்ரகாம் லிங்கன் தன் பத்தொன்பதாம் வயதில் ஒரு செய்தித்தாளைப் படிக்கிறார். அதில் ஒரு வழக்கு வருகிறது. அமெரிக்கன் ஒருவனால் அடிக்கப்பட்ட நீக்ரோ ஒருவன் வழக்குத் தொடுத்திருந்தான். அந்த வழக்கு நீண்ட நாட்கள் விசாரணைக்கு வராமல் போகவே ஒருநாள் நீதிபதியைப் பார்த்து, கனம் நீதிபதி அவர்களே! என் வழக்கு என்ன ஆயிற்று என்றுகேட்கிறான். நீதிபதி இவனைத் திரும்பிப் பார்த்து, நீயா! வழக்குக் கொடுத்திருக்கிறாயா. உன் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா. சட்டங்கள் இடங் கொடுக்கவில்லையே என்கிறார். காரணம் என்னவென்று கேட்கிறான் நீக்ரோ. அன்றிருந்த அமெரிக்கக் குடி உரிமை சட்டப்படி ஒருநீக்ரோ மனிதனல்ல என்ற முறை. இதைச் சுட்டிக்காட்டி, நீ மனிதனல்லவாகையால் வழக்குத் தொடர உனக்கு உரிமை இல்லை என்கிறார் நீதிபதி.

‘அப்படியானால் நான் யார்? என்று கேட்கிறான் நீக்ரோ? நீ அமெரிக்கச் சீமான்களின் மாளிகைகளிலே

இருக்கும் தட்டுமுட்டுச் சாமான்கள், அவர்கள் குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் என்கிறார் நீதிபதி. இதைக் கேட்ட நீக்ரோ கலங்கிய கண்களோடு வெளியே வந்துவிட்டான் என்ற செய்தியைப் படித்த உடனே, ஆவேசம் கொண்டெழுந்த ஆப்ரகாம்லிங்கன் ‘ஆண்டவா; இவ்வளவு கொடுமையா, எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் இந்தக் கொடுமையை ஒரே அடியாகத் தலையிலடித்து சுக்கு நூறாக நொறுக்கி விடுவேன்’ என்று சூளுரைத்துக் கொண்டான். அதன்படி தான் ஐக்கிய அமெரிக்காவின் தலைவர் என்ற நிலை வந்த பிறகு இந்தக் கொடுமையை ஒழிக்க வடக்கும் தெற்கும் போர்க்களத்தில் சந்தித்தன. நீக்ரோவுக்கு வாழ்வளிக்க இருதரப்பிலும் பல ஆயிரம் அமெரிக்கர் இறந்தனர். அவர்களின் சவக்குவியலுக்குமேலே நின்றுக்கொண்டு, நீக்ரோ அடிமைகள் விடுதலைப் பெற்றனர். அதற்குத் தன் உயிரையும் இரவு 10-மணிக்கு போர்ட்ஸ் நாடக அரங்கில் காணிக்கையாக்கினான். எனினும் மனிதனாகவே கருதப்படாத நீக்ரோ இன்று நீதிபதி, கலைஞன், பாடகன், நடிகன், வழக்கறிஞனாக எல்லா மேலிடங்களிலும் அமர்ந்திருக்கிறான். அவர்கள் இன்றும் “விடுதலைத் தந்தையே மனிதாபி மானியே! எங்கள் கை விலங்குகளை மிகத் தைரியமாக உடைத்தெறிந்த வீரனே! சமுதாயத்தின் மானத்தைக் காத்த தன்மானத் தந்தையே, நீ வாழ்க, இவ்வுலகம் உள்ளளவும் உன் திருநாமம் வாழ்க! என இன்றும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

ஆனால் அதன் வாடை இன்னும் அறவே ஒழிந்தபாடில்லை. ஜான் கென்னடியின் பரிதாப முடிவு மனிதாபிமானத்திற்குக் கொடுத்த பலியாயிற்று வாழ்க அவர்கள் திருநாமம் என்று வாழ்த்துவோம். ❋

எல்லாவிதமான

பருப்பு தினுசுகளும்

வறுகடலையும்

உயர்தரமான தயாரிப்பாளர்

அண்டு விற்பனையாளர்

**S. R. திருப்பதி அன் பிரதர்ஸ்**

(போன்: 52506)

**60-1, M. C. ரோட்,**

**வண்ணாரப்பேட்டை,**

**சென்னை-21.**

தோற்றம்
22—1—1960

பங்கு தொகை
ரூ. 30957—00

வியாபார கடன்
37809—00

நிகர இலாபம்

| 1960—’61 | 1961—’62 | 1962—’63 | 1963—’64 | 1964’—65 |
|---|---|---|---|---|
| ரூ. 9,800-00 | ரூ. 13,372-00 | ரூ 7,074-00 | ரூ. 15,000-00 | 17736-00 |

**தென்னகத்தின் தனிச்சிறப்புப் பெற்ற காஞ்சியில்**

அழகும் உன்னத
வேலைப்பாடும் கொண்ட
சிறந்த செப்பு, பித்தளைப்
பாத்திரங்களுக்கு

**காஞ்சிபுரம் பாத்திர உற்பத்தியாளர்**
**கூட்டுறவு சங்கம்**

IND No. 397

**437, காந்திரோட், :: காஞ்சிபுரம்.**

தந்தி: “மெட்டல் ஒர்க்ஸ்” போன்: 221

# அறிவிலே பிறந்த அன்பொளி!

[அன்பழகன்]

உலக மக்கள் அவரைப்பற்றி அதிகம் அறியக்கூடிய வகையில், விளம்பரமும் செல்வாக்கும் பெருதவர் எனினும், அறிஞர் தம் போற்று தலைப் பெற்ற ஓர் பேரறிஞராக, காலத்திற்கும் நிலை பெறத்தக்க புகழுடைய உத்தமராக இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற சிந்தனையாளராக விளங்கியவர் ஆல்பர்ட் சுவைட்சர்.

விஞ்ஞான வித்தகராகவும், பல்கலைச் செல்வராகவும், கவியரசராகவும், அரசியல் வழிகாட்டியாகவும் புரட்சித் தலைவராகவும் புகழ்பெற்று விளங்கியவர்கள் பலப்பலர். ஆனுல் மனித இனத்தின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான தொண்டை மேற்கொண்டு, ஓய்வு என்னும் சொல்லுக்கே இடமின்றி, தன்னையே ஓர் ஆராய்ச்சி நிலையமாக்கிக் கொண்டு தன் வாழ்வையே பரிசோதனைக் குரியதாகச் செயற்படுத்தி, மனித வாழ்வின் சிறந்த பயன் எதுவெனக் காண முனைந்த சுவைட்சரைப் போன்ற மற்ருெருவரைக் காணுதல் அரிதாகும்.

எண்ணம், சொல், செயல் மூன்றும் கருக்கொள்ளும் நிலையிலிருந்து கனிந்து பயன் தரும் நிலை வரை ஒன்றுக்கொன்று வேறுபட் டியங்க இடனின்றி தூய உள்ளத்தினின்று பிறக்கும் தீங்கற்ற சொற்களோடு உளதாகும் நல்ல செயலாகும் தொண்டிலே திளைத்தவர் சுவைட்சர், அகவை என்பதைத்கடந்த முதிர்ந்த நிலையிலும், நாற்பது வயது ஆடவரை ஒத்த மனநிலையில், ஆர்வத்தோடும், மகிழ்ச்சியோடும் செயலாற்றி வாழ்ந்தார்.

‘என் கடன் பணிசெய்து களிப்பது’ என்னும் எண்ணம் அவரிடத்திலே அரும்பி, சொல்லாக மலர்ந்து, செயலாகக் காய்த்து, தொண்டாகக் கனிந்து அதன் பயன் பெற்ருேர்க்கெல்லாம் இனிய சுவை வழங்கிக் கொண டிருந்தது.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப—எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் ”

என்னும் குறள் மணியின் கருத்துக்கு விளக்கமாக ஒளிர்ந்தார் அவர்.

அப்படிப்பட்ட பண்பாளரின் வாழ்க்கையில் பிறர் வியந்து காணத்தக்க நிகழ்ச்சிகள் பலவாக இல்லையெனினும், அவரது சிறப்பியல்பு உருவாவதற்குக் காரணமாக நின்ற நிகழ்ச்சிகள் நாம் அறிதற்குரியன. அவரது பண்பு மேம்பாட்டினையும், ஒப்பற்ற பெருமையையும் உணர அவை துணையாகும்.

அவர், ஐரோப்பாவில், பிரான்சுக்கும், செர்மானிக்கும எல்லைக்கோடு அமையும் அல்சாக் பகுதியில், 1875 ஆம் ஆண்டில் பிறந்தவர். அவ்விரு நாட்டு மக்களின் நாகரிகங்களும், பண்பாடுகளும் கலந்தே அவரது இளமைப்பருவ எண்ணங்கள் வளர்ந்தன.

அதனுல் அவரிடம் ஒரு நாட்டுப்பற்றும் அழுத்தமாகப் பதியவில்லை. அவர் தன்னைஒருபொது மனிதனுக நிறுத்திச் சிந்திப்பதற்கும், பிற்காலத்தில் ஓருலகக் குடிமகன் ஆகத் தன்னை உயர்த்திக்கொள்ளுதற்கும் அவர் பிறந்த இடத்தின் சூழலும் துணையாயிற்று.

தம்முடைய நண்பர்களிடத்தில் நீங்காத பற்றும், அளவளாவும் ஆர்வமும் உடையவராகவே வளர்ந்தார் அவர். அவர்களது மகிழ்ச்சியிலே தாம் இன்புறுவதும், அவர்தம் துன்பஙகண்டு இரங்குவகும் அவருக்கு இயல்பாகவே அமைந்தன. பிற்காலத்தில் மன்னுயிர் துன்பத்தை நீக்கும் தொண்டிலே மகிழ்ச்சியும், எல்லோரையும் இன்புற்றிருக்கச் செய்வதிலே உறுதியும் பிறக்க, அவரது நட்பு மனத்தின் வளர்ச்சியும் துணையாயிர் று.

இளமையிலே அவரது பெற்ருேர் அவரிடத்து கடவுட்பற்றும சமய உணர்ச்சியும் வளர்த்தனர். அவர் கடவுளை வழிபடும் போதும் ‘கடவுளே’ உயிருள்ள அனைத்தையும் துன்பம் நேராது காப்பாற்று! அவைகள் நல்ல உறக்கம்கொள்ள அருள்!’ என வேண்டுவாராம். இது அவரது இளமனம் எந்த அளவு இளகிய மனமாக இருந்தது என்பதைப் புலப்படுத்தும்.

அவரது சமயப்பற்று, சமயத்தின் அடிப்படை உண்மை எதுவெனக்காணும் ஆராய்ச்சியில் அவரை ஈடுபடுத்தியது. இயேசுவைப் பற்றியும, பால்முனிவரது வாழ்க்கையைப் பற்றியும் அவர் ஆராய்ந்து அவர் தம் கருத்துக்களினின்றும் ஒளிவிடும உயர்ந்த நெறியைத் தெளிந்தார். இது பின்னர் சமயக் கருத்துக்களையும், உலகில் வளர்ந்துள்ள தத்துவங்களையும் ஆராய்வதில் அவரை ஈடுபடச செய்தது.

பள்ளியில் படிக்கும் நாட்களிலேயே மற்ற எளிய குடும்பத்துப் பிள்ளைகளோடு தன்னை வேறுபடுத்திக் காட்டும் எடுப்பான உடுப்பணிவதை அவர் விருமபாமல் கைவிட்டார். மற்றவர்களிடமிருந்து தன்னைப் பிரித்துக்காட்டும் எதுவும் அவருககுப் பிடிப்பதில்லை. எலலோருடனும் ஒக்க ஒத்துப்பழகுவதிலே அவருக்கு மகிழ்ச்சிப் பிறந்தது.

பள்ளிப்படிப்பை முடித்த சுவைட்சர் சமயத் துறையிலும் தத்துவத் துறையிலும் உயர் கல்வி பெற்ருர். அதே காலதத்தில் இசைத் துறையிலும் மேதையானுர். அவரது அறிவு வேட்கை அளவிட முடியாது. புதிய புதிய உண்மைகளைக கண்டறிவதிலும, அவற்றின பயனைத் தெளிவதிலும், கண்டவற்றை முறைப்படுத்துவதிலும் ஆராய்ந்ததை வெளிப்படுத்துவதிலும் அயராத முயற்சி உடையவரானுர்.

இளமையில் ஒரு ஆப்பிரிக்க நீக்ரோவின் சிலை ஒன்றை இவர் கணடார். கருத்து அதிலே பதிந்தது. அந்தச் சிலை ஒரு உயர்ந்த சிற்பியால் செதுக்கப்பட்

## வருந்துகிறோம்

இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி 11—1—66 அன்று, தாஷ்கண்டில் மாரடைப்பால் மரணமடைந்த திடுக்கிடத்தக்க செய்தியினை இந்த இதழ் வெளியீட்டின் இறுதி நேரத்தில் கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

இந்தியத் துணைக்கண்டத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், இவ்விழப்பு எதிர்பாராத பேரிழப்பாகும்.

இவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொளகிறோம்.

டது. நீக்ரோ மக்களின் துன்பச் சூழலை அவர் அதன் மூலம் உள்ளங் கொண்டார்.

பின்னர், நீக்ரோக்கள் வாழும் இருட்கண்டத்தைப் பற்றியும், அவர்கள் வெள்ளையினத்தவரால் கொடுமைக்கு ஆளாக்கப்படும் நிலை பற்றியும், அவர்களது அறியாமை—மூட நம்பிக்கைகள் ஆகியவற்றால் தீராப் பிணிக்கும், கடுநோய்க்கும் ஆளாகி நாளும் படும் வேதனையைப் பற்றியும் அறிந்தார். அக் காலத்தில் அவரது உள்ளம், வாழ்க்கையின் சிறந்த பயன் யாது? அதன் ஈடேற்றம் என்பது என்ன? என்ற கேள்வியிலே தோய்ந்து நின்றது. அதன் பயனாக அவருக்குப் பிறந்த எண்ணந்தான் இது.

"இறைவனிடத்திலே கொள்ளும் பற்று, இந்த உயிரை மதிப்பதே. உயிரையும் வாழ்வையும் மதிப்பவன், பிற உயிர்கட்கு, மற்ற மக்கட்குத் தனனுடைய கடமையைச் செய்யவேண்டும். அவ்வாறு கடமையைச்செய்வதே வாழ்வின் உயர்ந்த பயனுள்ள குறிக்கோள் ஆகும்."

பல்வேறு வகையான இழிவுக்கும் நோய்த் துன்பங்கட்கும் ஆளாகியுள்ள மக்களான நீக்ரோக்களுக்கு—அவர்தம் பிணிபோக்கும் மருத்துவத் தொண்டிற்குத் தன்னை ஒப்படைப்பதே — தன் வாழ்வின் குறிக்கோள் நிறைவேறும் வழி" என்று உறுதிபூண்டார் சுவைட்சர்.

அதுகாறும் பிற துறைகளில் பெற்ற பயிற்சியில் புகழ் எய்தும் அளவுக்கு உயர்ந்திருந்த போதிலும், பேரும், புகழும், பெருவாழ்வும் அவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. தன்னைத் தகுதியாக்கிக் கொள்ள, பெறத்தக்க சிறப்புக்களை ஒதுக்கிவிட்டு, புதியதொரு துறையில் அடிவைத்து, மருத்துவக் கல்வி கற்கலானார். அவ்வாறு ஏழாண்டுகள் பயின்றார்.

நோய் நீக்கும் கல்வியிலே அவர் ஈடுபட்டிருந்த போதே, அவர் கற்றிருந்த இசை, தத்துவம், சமயம் முதலான துறைகளில் அவர் நிகழ்த்திய ஆராய்ச்சியின் பயனாக பல நூல்களையும் இயற்றி முடித்தார்.

தொண்டாற்ற அவர் தன்னைத் தயார்செய்து கொண்டு, அதற்குரிய இடம் ஆப்பிரிக்காவின் காடு செறிந்த உள்நாட்டுப்பகுதியில் அமைந்த 'லேம்பரேன்' என அவர் தீர்மானித்துக்கொண்டார்.

அவருடைய 38-வது வயதில், தம்முடைய அருமைத் துணைவியாரோடு அங்கு புறப்பட்டுச் சென்றவர், தம்முடைய வாழ்நாள் முழுவதும் ஐம்பது ஆண்டுக் காலம் அத் தொண்டிற்கே வழங்கினார்.

நீக்ரோ மக்களை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்தும் காலனி ஆட்சி முறையை அவர் வெறுத்தார்.

தம்முடைய இனத்தவர்கள், தாம் நடத்தும் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் அடிமைகளாகவே நீக்ரோக்களை நடத்திக்கொண்டு, அவரது ஆண்டைகளாகக் கூறிக் கொள்வதை அவர் கண்டித்ததோடு, அவர்கள் நல்வாழ்வு நடத்துவதற்கேற்ற, ஒரு புதிய சமுதாய வாழ்வை அமைத்துத் தருவது அன்றோ ஆட்சியாளர் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றி அவர்களுக்கு நன்மை தேட முடியாதவர்கட்கு, அவர்களை ஆளும் உரிமையும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

அறியாமைக்குப் பலியான நீக்ரோ மக்களின் பிணிநீக்கும் பெரும் பணியில் அவர் ஈடுபட்டிருந்த காலத்தில், ஓயாத தொண்டுக்கிடையிலும் அவரது சிந்தனை, அல்லும் பகலும் வாழ்க்கையின் குறிக்கோளைத் தெளிவதிலேயே முனைந்திருந்தது.

'நாகரிகத்தின் தத்துவம்' என்னும் நூலை 1900த்திலேயே எழுத முற்பட்டார் அவர். அதன் பின்னர் உலகத்தில் பிறந்து வளர்ந்துள்ள தத்துவங்கள் அனைத்தையும் தெளிந்து சில முடிவுகளையும் கண்டார். ஆனால் அவர் தான்கொண்ட முடிவுகளே — முடிவானவை என்று அறுதியிடவில்லை. மற்றவர்கள் சிந்தனைக்கு அவை உரியன என்று கொண்டார்.

1935-ஆம் ஆண்டில், அவர் 'இந்திய எண்ணமும் அதன் வளர்ச்சியும்' என்னும் ஒரு நூலையும் எழுதி முடித்தார். மேல்நாட்டவர் சிந்தனைக்குக் கீழ்நாட்டுத் தத்துவத்தை விருந்தாக்கும் அளவிலே மட்டுமன்றி, இந்தியாவின் நல்லறிவாளர்களே இந்திய எண்ண வளர்ச்சியின் உள்ளீடாக உள்ள உண்மைகளையும் — அதன் ஏற்றத்தாழ்வுகளையும், நன்மை தீமைகளையும் உணருதற்குக் கருவியாக அமைந்தது அந்நூல். அது மட்டுமேயன்றி, சமய ஏடுகள், தத்துவ நூல்கள் என்னும் பட்டியலிலே இடம்பெறுமலும், சமசுக்கிருதச் சாயல் இல்லாமலும் — இலக்கியமாகவே வழங்கும் தமிழ் அறநூலாகிய திருக்குறள் — தாங்கி நிற்கும் கருத்துக்களால், அது ஏற்றிருக்கும் உலகு உண்மைக் கொள்கையால், உலகோரை அறவழிச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்யும் கோட்பாட்டால், ஈடு இணையில்லாததொரு வாழ்க்கைத் தத்துவம் உடைய நூலாக விளங்கும் தனிப்பெருமை, அவரால் போற்றி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அத்தகு பண்பாளர் சிந்தனையில் பிறந்த ஒளி மணிகள் பல.

"மனிதன் தன்பிறப்பு, ஏதோ நிகழ்ந்துவிட்ட ஒன்று என்றுமட்டும் கருதாமல், அது ஏதோ விவரிக்க முடியாததும், திட்டவட்டமாகக் கூறமுடியாததுமான ஒரு மறைந்துள்ள ஏதுவைக் கொண்டது என்று எண்ணும்போதுதான (தத்துவம்) சிந்தனை பிறக்கிறது. அந்தச் சிந்தனைதான், உயிர் உண்மை என்று கொண்டபின், அவனை நினைத்தவாறு எல்லாம் நடக்க விடாமல் தடுத்து, தன்னுயிரின் உண்மையான மதிப்பைக் காணும் ஆர்வத்தால், ஒருநெறியில் நடக்கச் செய்கிறது."

"தன்னைத்தானே எண்ணிப்பார்க்கும்போதுதான், நன்னுயிர் மதிப்பு, வாழ்வின் நோக்கம் இவைபற்றிய சிந்தனையால, பிறர் உயிரை மதிக்கவும், உறவினராகக் கொள்ளவும், எல்லோரும் ஓர் சமம் என்று கருதவும் முற்படுகிறான்."

"இயேசுவின் உரையிலும், பால் துறவியாரின் உரையிலும் காணப்படுமாறு, மற்ற 'ஒவ்வொரு மனிதனுக்கும், மனிதன் ஒவ்வொருவனும் கடமைப்பட்டவனாகவே இருக்கிறான் என்பதே அடிப்படை உண்மையாகும்."

'மனிதன், மனித இனத்துக்கே உரியவன்'

'ஒவ்வொருவனும் மற்றவனுக்குக் கடமைப்பட்டவன்'

'நாம் கொண்டுள்ள இயல்பான அன்பைக்கூட வெளிப்படுத்தும் துணிவின்றிப பழக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய் உணர்ச்சி யற்றவர்களாகவே வாழ்கிறோம்.'

"உயிரிடத்து மதிப்புவைக்கும் நன்னெறி எந்த ஒரு வழியிலாவது, நாமெல்லாம் மற்றவர்களிடத்து மனிதத தன்மை (அன்பு) உடையவர்களாய் செயற்படவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது."

"உங்களுடைய ஒரு சிறுபொழுது, நல்லுரை, தோழமை, அன்புப் பார்வை, சிறு உழைப்பு தேவைப்படும் நிலையிலுள்ள யாரோ ஒருவனை மனந்திறந்து தேடுங்கள்! அருவெருக்கக்கூடிய நோய்க்காளான, வாழ்வினில் கசப்படைந்த, தனித்துக் கிடக்கும் யாரோ ஒருவனுக்கு, ஓருயிர்க்கு நீ ஒரு பொருட்டாகலாம். நீ உதவும் நிலை இருக்கலாம். ஒருவேளை உதவிவேண்டுவோர் ஒரு கிழவனாக அல்லது குழந்தையாக இருக்கலாம். உதவும் வாய்ப்பு நீ பெறலாம். இதற்காக ஒருவன் தன்னை எந்நாளும் தயாராக நிறுத்தவேண்டும்"

"நம்மிலே எவருக்கும், நாம் என்ன சாதிக்கிறோம், மனித குடும்பத்துக்கு நாம் என்ன வழங்குகிறோம் என்பது தெரியாது. நம்மிடமிருந்து அது மறைந்து நிற்கிறது. சிலவேளைகளில் அந்தப் புதைபொருளின் (அன்பொளியின்) சிறு பகுதியைத்தான் நாம் காண்கிறோம்."

இவ்வாறு அரும்பெரும் உண்மைகளை நாம் சிந்திக்குமாறு எடுத்துவைக்கின்றார் ஆல்பர்ட் சுவைட்சர்.

"அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணி, அரும்பசி எவர்க்கும் ஆற்றி, எதனையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர் அவர்உள்ளந்தான் தூய நல் அறிவு நடமிடும் உள்ளமென்பது" — தமிழ் நெறியன்றோ!

அறிவிலே பிறந்த அன்பொளி கண்டவரன்றோ சுவைட்சர்! வாழ்க அவர் நினைவு!


மாமல்ல பல்லவன் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த

காஞ்சியில்

## மாமல்லன் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்

| பங்கு தொகை | அங்கத்தினர்கள் | மனைகள் | உத்தேசிக்கப்பட்டுள்ள விஸ்தரிப்பு மனைகள் | வளர்ச்சி நகர் நிர்மாண அமைப்பு வேலை |
|---|---|---|---|---|
| ரூ. 1 லட்சம் | 160 | 134 | 100 | |

எமது பொங்கல் வாழ்த்துக்கள்

மாமல்லன் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் லிமிடெட்., காஞ்சிபுரம்.

# J. James & Co.,

(AERATED WATER MANUFACTURERS)

*10, Nanal Hospital Road,*

**MADRAS-3.**

Phone: 31623

# *L. Robert & Co.,*

(BRANCH OF J. JAMES & CO.)

(AERATED WATER MANUFACTURERS)

*65, 66, Srinivasaperumal Sannathi St.,*

**Royapattai, Madras-14.**

Phone: 86217

## Raju Aerated Water Works,

Our Special Cork Bottel Aerated Water Manufacturers,

*10, Nanal Hospital Road,*

**MADRAS-3**

Phone: 31623

WITH THE BEST COMPLIMENTS OF:—

## Madras-Crown-Cork Co.

(High class crown Cork Manufacturers)

*Factory: PALLAVARAM Phone: 89371*

*Office: 10, Nana Hospital Road,*

*MADRAS-3 Phone: 31262*

*WITH THE BEST COMPLIMENTS OF:*

# *A.S.A. Bakery,*

**H. O: Long Bazaar,**

**VELLORE.** (N. A.)

QUALITY BISCUITS & CAKES MANUFACTURERS.

B. O: All over North Arcot District.

*(Phone: 345)*

Grams "YESYES"

Phone No. 297

# S. பிரகாசம் & சன்ஸ்

சிறந்த பட்டு சேலைகள் தயாரிப்பாளர்கள்

27, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்.

## வீடு கட்டுவோரின் வெற்றிக்கு.........

★ தர நிர்ணயம்

★ உற்பத்தி திறன்

★ பாராட்டுக்குரிய அம்சம்

★ உபயோகிப்பாளர் நம்பிக்கை

ஆகியவை ஒருங்கமைந்த

உங்களுக்கு

உதவ

எங்களுக்கு

உதவுங்கள்.

உயர்தர

செங்கல், ஓடு

தயாரிப்பாளர்.

எம். எம். ஒர்க்ஸ், அலுவலகம்: 28-B, மேட்டு தெரு, காஞ்சிபுரம்.

தொழிலகம்: ஆர்ப்பாக்கம் கிராமம், செங்கற்பட்டு மாவட்டம்.

பொங்கல் புதுநாளில்

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்

அனைவர்க்கும்

எங்கள் உளமார்ந்த வாழ்த்துக்கள்!

அசோக்

ஆட்டோ எலக்டிரிக் ஒர்க்ஸ்

பேட்ரி, ரிபில்ட், அண்டு

சார்ஸிங் ஆர்மிச்சர்

ரீஒயிண்டிங்.

24, நைனியப்பன் மேஸ்திரி தெரு,

சென்னை-14.

THE

Sudar Match Workers'

Co-operative Society

No. Ind. 587

Kancheepuram.




PRODUCING

GOOD

QUALITY

SAFETY

MATCHES

Running Rate Contractors Under

DIRECTOR GENERAL OF

SUPPLIES & DISPOSALS

DELHI.

★

Please Contact

THE PRESIDENT FOR

FURTHER PARTICULARS.

# சித்தர் நவலோக கல்பம்

[Regd]

**இது ஆஸ்துமா, ஆனைக்கால் வெண்குஷ்டம், குழிப்புண், ரணம், பெருத்த சரீரம் சிறுக்க மற்றும் பல வியாதிகளையும் தீர்க்க உதவுகிறது, இந்த**

## சித்தர் நவலோக கல்பம்

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது. நாங்கள் சித்த சாஸ்திரப்படி பஸ்பம், செந்தூரம் சுண்ணம் மெழுகு கட்டுவகை எண்ணெய், தைலம், லேகியம், சூரணம் முதலியன தயாரிக்கிறோம். ஆகவே, தாங்கள் ஒருமுறை எங்கள் வைத்திய சாலைக்கு விஜயம் செய்யுங்கள்.

**கிளை வைத்தியசாலை:**

**G. S. T. ரோடு 39-வது மைல்**

**பாலாற்றங்கரை, மாமண்டூர் வடபாதி,** செங்கற்பட்டு ஜில்லா.

**மேற்கண்ட கிளை வைத்தியசாலையில்:- பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளிலும்**

**சென்னையில்: ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளிலும்**

நாமே வியாதியஸ்தர்களை கவனிக்கிறோம்.



**சித்த வைத்தியர்**

## சாது. வீ. நாராயணசாமி பிள்ளை

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

[Regd]

**5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, :: திருவல்லிக்கேணி, சென்னை-5.**

போன் நெ. **84786**

# பல்லவ மாளிகை

## தங்கும் விடுதி

காந்தி ரோடு, (ஆடிசன்பேட்டை போஸ்டாபீஸ் அருகில்) காஞ்சிபுரம்.

4-2-66ல்

அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால்
திறந்து வைக்கப்படும்.

★ நவீன முறையில் அமைந்த ஐம்பது அறைகளுக்கும் அதிகமுள்ள வசதி

★ பிரயாணிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தங்குவதற்கு வசதிவாய்ந்த இடம்

பல்லவ மாளிகை

**PALLAVA PALACE**
**LODGING HOUSE**

---

Phone: Works/84682 Resi/87898

## *The Paramount Electro Plating Works,*

WE UNDER TAKE

**Chromium, Nickle and Cadmium Platings.**

MANUFACTURERS OF:

**Emery and Polishing Mops.**

*No. 8, Begam Sahib Street, 4th Lane,*
*General Patters Road, Mount Road,*
**MADRAS-2.**

BRANCH AT:

**D/4, Industrial Estate, Guindy.**

Proprietor:
**C. H. KESAVA RAO.**




சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி, என். அண்ணுதுரை.

## “பில்கோ” கண்ணாடிகள்

**விற்பனையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்**
**உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்.**

PILCO
MIRRORS
FOREIGN PLATE GLASS
SUPERIOR SILVERED
COPPER PROTECTED

தற்போது மேனாட்டு நவீன இயந்திரங்களில்
மேனாட்டு தயாரிப்புகளுக்கு சமமானதாக தயாரிக்கப்படுகின்றன.

தயாரிப்பாளர்கள் :

## பில்கோ மிரர் இண்டஸ்ட்ரீஸ்

ஏற்றுமதியாளர்கள் & இறக்குமதியாளர்கள்,
எல்லாவிதமான சாதா கண்ணாடிகள், பிளைவுட், ஹார்டு போர்டு, படசட்ட வியாபாரிகள்.

சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட சப்ளையர்கள் :

ஷோரூம் & ஆபீஸ் :
**165-168, தேவராஜ முதலி தெரு,**
**சென்னை-3.**
போன் : 20964 தந்தி : PILCOMIRAR

தொழிற்சாலை :
**C-14, இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**கிண்டி, சென்னை-32.**
போன் : 80660

எங்களது துணை நிறுவனம் :
**K. நடராஜன் & கம்பெனி**
**255, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-3.**
போன் : 32505 தந்தி: KANNADI




ELEGANT

K. SRINIVASAN,
NEWS AGENT,
PATTUKKOTTAI.